தமிழாய்வு

சென்னைப் பல்கலைக் கழகத்தின்
ஆம் ஆண்டு நிறைவு மலர் (1857-1982)

பொதுப்பதிப்பாசிரியர்

சி. பாலசுப்பிரமணியன்

பதிப்பாசிரியர்

அ. மணவாளன்

கற்றனைத்தூறும் அறிவு
DOCTRINA VIM PROMOVET INSITAM

தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

1982—1983

தொகுதி 13

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1984
MADRAS

தமிழாய்வு

சென்னைப் பல்கலைக் கழகத்தின்
125-ஆம் ஆண்டு நிறைவு மலர் (1857-1982)

பொதுப்பதிப்பாசிரியர் :
சி. பாலசுப்பிரமணியன்
தலைவர்-பேராசிரியர்

பதிப்பாசிரியர்
அ. அ. மணவாளன்
தணைப்பேராசிரியர்

தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

1982—198'

முதற் பதிப்பு: 1983

© சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழாய்வு கிடைக்குமிடம் :

பதிவாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005.

நூல்களை மதிப்பீடு செய்வதற்கும்,
மாற்றிக்கொள்வதற்கும் (Exchange)
அனுப்ப வேண்டிய இடம்

பொதுப் பதிப்பாசிரியர்
"தமிழாய்வு"
தமிழ் மொழித்துறை
மெரினா வளாகம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005.

அச்சிட்டோர் :
இரத்தின[illegible]ஸ்

TAMIḺĀYVU

(Annals of Tamil Research)

Madras University Post-Centenary Silver Jubilee Special Number (1857-1982)

General Editor

C. BALASUBRAMANIAN

Prof. & Head

Editor

A. A. MANAVALAN

Reader

DEPARTMENT OF TAMIL LANGUAGE

UNIVERSITY OF MADRAS

ஆய்வுக் கட்டுரைகள்

CONNEMARA
14 FEB 1984
MADRAS

பொருளடக்கம்

பதிப்புரை	v–vii
தமிழ்த்துறை ஆசிரியர்கள்	xi–xii
தமிழ்த்துறை வெளியீடுகள்	xii–xiv
ஆய்வுக் கட்டுரைகள்	1–126
1. பாரதியாரின் சிறு கதைகள் —ஆறு. இராமநாதன்	1–8
2. சொற்பிறப்பியல் அகர முதலி —இரா. மதிவாணன்	9–28
3. பாரதி : பாரதிதாசன்—ஒரு பார்வை மா. செல்வராசன்	29–44
4. சொல்லாக்கம் —இ. மறைமலை	45–66
5. பாரதிதாசன் சிறு கதைகள் —கோ. கிருட்டிணமூர்த்தி	67–8
6. பாரதியின் தொலைநோக்கு —சி. பாலசுப்பிரமணியன்	83–91
7. மலேசியாவில் தமிழ்க் கல்வி —இரா. தண்டாயுதம்	93–105
8. பாரதியின் கடித இலக்கியம் —இ. சுந்தரமூர்த்தி	107–116
9. பாரதி நூற்றாண்டில் பாரதி இலக்கியங்கள் (தொகுப்பு) —இ. சுந்தரமூர்த்தி	117–1
மதிப்புரை மாலை	1–.

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1984
MADRAS

பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையின் சார்பில் வெளிவரும் தமிழாய்வு தொகுதி 13 சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125ஆம் ஆண்டு நிறைவு (1857—1982) மலராக வெளிவருகின்றது.

இவ் இதழும் வழக்கம் போன்று "ஆய்வுக் கட்டுரைகள்", "மதிப்புரை மாலை" என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆய்வுக் கட்டுரைப் பகுதி எட்டுக் கட்டுரைகளையும் ஒரு நூலடைவினையும் பெற்றுள்ளது. பெருங்கவிஞராக விளங்கியதோடன்றி ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியராகவும் பாரதியார் விளங்கினார் என்ற உண்மையை முதற் கட்டுரை விளக்குகிறது. பாரதியாரின் "ஆறில் ஒரு பங்கு" என்னும் சிறுகதை இதற்குரிய ஆய்வுப் பொருளாக அமைந்துள்ளது. "சொற்பிறப்பியல் அகரமுதலி" என்னும் இரண்டாவது கட்டுரை, அகர முதலிகளின் பல்வேறு வகைகள், அவற்றுள் ஒன்றாகிய சொற்பிறப்பியல் அகர முதலியைத் தொகுப்பதற்கான நெறி முறைகள், சொற்பிறப்பியல் அகர முதலியின் தனிக்கூறுகள், உலக மொழிகளில் தோன்றியுள்ள சொற்பிறப்பியல் அகர முதலிகள், தமிழில் சொற்பிறப்பியல் அகர முதலியைத் தயாரிப்பதற்கான முயற்சிகள், சொற்பிறப்பியல் அகரமுதலி தயாரிப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படும் செயற்பாட்டுக் கூறுகள் என்னும் அகரமுதலிச் செய்திகளை வண்ணனைப் பாங்கில் எடுத்துக் கூறிச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் மொழி வளர்ச்சிக்கு எவ்வாறு துணைநிற்கின்றன என்பதை விளக்குகிறது.

"பாரதி : பாரதிதாசன்—ஒரு பார்வை" என்னும் மூன்றாவது கட்டுரை இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகின் மாபெருங் கவிஞர்களாகிய பாரதியார்—பாரதிதாசன் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு நோக்கி, "பாரதப் புதல்வன் பாரதி; பகுத்தறிவு மகன் பாரதிதாசன். பாரதியே தமதுவழிகாட்டி எனப் பாரதிதாசன் பாடினாலும் முழுமையாக அதனை ஏற்பதற்கு இல்லை. ஒருவர் புதுமை செய்தார்; மற்றவர் புரட்சி செய்தார் என்பதே பொருந்துவது" என்ற வேறுபாட்டையும் காண்கிறது.

வளர்ந்துவரும் சமுதாயத்தின் பல்வேறு அமைப்புக்களிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்குத் தேவையான கலைச்சொற்களையும் புது மொழி வழக்குகளையும் எவ்வாறு ஆக்கிக் கொள்ளலாம் என்பதைச் "சொல்லாக்கம்" என்னும் நான்காவது கட்டுரை ஆராய்கிறது. கூட்டுப் பெயர்ச் சொல்லாக்கம், புதியவினைச் சொல்லாக்கம் என்ற இரண்டு சொல்லாக்க முறைகளை இக்கட்டுரை மிக விரிவாக விளக்கிக் காட்டுகிறது. "பாரதிதாசன் சிறுகதைகள்" என்ற தலைப்புடைய ஐந்தாவது கட்டுரை பாவேந்தர் பாரதிதாசனை ஒரு சிறுகதை எழுத்

தாளராகக் காண்கிறது. சிறுகதை வரலாற்றின் நெருக்கடிக கால மாகவும் இடைவெளியாகவும் கருதப்படும் (1927–32) காலகட்டத்தில், பாரதிதாசனின் "புதுவைமுரசுச்" சிறுகதைகள் (1930–31) தோன்றி வரலாற்றில் ஏற்படும் இடையறவினை ஓரளவிற்குத் தவிர்த்தன என்பதையும், இச் சிறுகதைகள் எந்த அளவிற்குச் சிறுகதை இலக்கணங் கட்குப் பொருந்தப் படைக்கப்பட்டுள்ளன என்பதையும் இக்கட்டுரை தெளிவாக்குகிறது.

மகாகவி பாரதி வெறும் மரபுக் கவிஞராக மட்டும் விளங்கவில்லை, உடன் காலச் சமுதாய, அரசியல் சூழ்நிலைகளுக்கேற்பத் தம் மக்களுடைய வாழ்க்கைக்கு மிக இன்றியமையாது வேண்டப்பெறும் ஒற்றுமையுணர்வு, சாதிமறுப்பு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, தொழில் முன்னேற்றம், பெண்ணுரிமை போன்ற வாழ்க்கைக் கருத்துக்கள் அமைந்த பாடல்களைப் பாடி மக்களுக்கு விழிப்புணர்ச்சியையும் தோற்றுவித்தார்.

பாரதியார் நம்மை விட்டகன்று அறுபதாண்டுகள் ஆகியும் அவர்தம் சமுதாய, அறக் கருத்துக்கள் இன்னும் செயல்வடிவம் பெறுமல் இருக்கும் அவலத்தை எடுத்துக் காட்டுவதாகப் **"பாரதியின் தொலைநோக்கு"** என்னும் ஆறாவது கட்டுரை அமைந்துள்ளது.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக மலேசியாவில் வாழ்ந்துவரும் தமிழ்மக்களின் வாழ்க்கையில் தமிழ்மொழிக் கல்வி என்னென்ன நிலைகளில் இருந்து வளர்ந்து வந்துள்ளது என்பதை **"மலேசியாவில் தமிழ்க் கல்வி"** என்னும் ஏழாவது கட்டுரை மிக விரிவாக விளக்குகிறது. 1816-இல் தொடங்கப் பெற்ற முதல் தமிழ்ப் பள்ளியாகிய பினாங்கு இலவசப் பள்ளியிலிருந்து இடை விட்டும் தொடர்ந்தும் வளர்ந்து வரும் மலேசிய தமிழ்க்கல்வி, இன்றைக்கு ஏறக்குறைய 538 பள்ளிகளையும் 74,000 மாணவர்களையும் கொண்டதாக விரிந்து வளர்ந்து வந்த வரலாற்றினை இக்கட்டுரை விளக்குகிறது. **"பாரதியின் கடித இலக்கியம்"** என்னும் எட்டாவது கட்டுரை பாரதியார் எவ்வாறு ஒரு சிறந்த கடித எழுத்தாளராகவும் விளங்கினார் என்பதையும், கவிஞர் பாரதி வெறும் கற்பனை பாரதியாக இருந்துவிடாமல் நடைமுறைப் பாங்கிலும் தமிழ்ப்பற்று, தமிழ்நாடு, தமிழ்மக்கள், நாட்டுணர்வு போன்ற தம் கவிதைச் செய்திகளைக் கடித வாயிலாக நண்பர்கட்கு அறிவுறுத்தி வந்தார் என்பதையும் தெளிவாக்குகிறது. இப்பகுதியின் இறுதியில் பாரதி நூற்றாண்டில் (1981–1982) வெளிவந்த நூல்கள் தொகுக்கப் பெற்று அடைவு செய்யப்பட்டுள்ளன.

மதிப்புரை மாலை என்னும் பகுதி அண்மையில் வெளிவந்த நூல்களின் அறிமுக மதிப்புரைகளைக் கொண்டுள்ளது.

...MARA PUBLIC L...
14 FEB 1984

இச் சிறப்பு மலரில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1927-ஆம் ஆண்டுமுதல் பணியாற்றிய துறைத் தலைவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பட்டியலும், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்த்துறை வெளியீடுகளின் பட்டியலும் தரப்பட்டுள்ளன.

இவ் இதழின் முதலாவது கட்டுரை சீர்திருத்த எழுத்தமைப்பிலும் ஏனையன மரபு வழியிலும் அச்சிடப் பெற்றுள்ளன. இனிவரும் இதழ்களில் சீர்திருத்த எழுத்தமைப்பு மேற்கொள்ளப்படும்.

—பதிப்பாசிரியர்

தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
22—8—1983

14 FEB 1981

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறைத் தலைவர்கள் 1927—1980

1.	திரு. கே. என். சிவராஜபிள்ளை	துணைப்பேராசிரியர் [Reader]	1927–30
2.	திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை	,,	1930–36
3.	திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை	,,	1936–46
4.	டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை	,,	1946–57
	,,	பேராசிரியர்	1957–61
5.	டாக்டர் மு. வரதராசன்	,,	1961–71
6.	டாக்டர் ந. சஞ்சீவி	துணைப்பேராசிரியர் பொறுப்பு	1971–72
	,,	பேராசிரியர்	1972–
7.	டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	,,	1976–

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறை ஆசிரியர்கள் 1927—1980

1.	இ. வி. அனந்தராம ஐயர்	முதுநிலை ஆய்வாளர்	1927–30
2.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	,,	1927–30
		இளநிலை விரிவுரையாளர்	1930–48
3.	கே. என். சிவராஜபிள்ளை	முதுநிலை விரிவுரையாளர்	1930–36
4.	ரா. பி. சேதுப்பிள்ளை	,,	1936–46
5.	மு. வரதராசன்	,,	1948–50
6.	பு. ரா. புருஷோத்தம நாயுடு	இளநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர், துணைப்பேராசிரியர்	1948–63
7.	மு. அ. துரை அரங்கசாமி	முதுநிலை விரிவுரையாளர், துணைப்பேராசிரியர்	1950–67
8.	மா. இராசமாணிக்கனார்	,,	1960–67
9.	ந. சஞ்சீவி	விரிவுரையாளர்	1960–65
		துணைப்பேராசிரியர்	1965–72
		பேராசிரியர்	1972–
10.	சி. பாலசுப்பிரமணியன்	விரிவுரையாளர்	1966–72
		துணைப்பேராசிரியர்	1972–76
		பேராசிரியர்	1976–
11.	மு. சண்முகம்பிள்ளை	விரிவுரையாளர்	1969–80
12.	க. த. திருநாவுக்கரசு	,,	1969–79

13.	இ. சுந்தரமூர்த்தி	ஆய்வாளர்	1969–71
		ஆராய்ச்சித்துணைவர்	1971–73
		விரிவுரையாளர்	1973-
14.	மு. பாலகிருஷ்ணன்	விரிவுரையாளர்	1971–72
15.	வ. ஜெயதேவன்	,,	1973–
16.	கு. மோகனராசு	ஆராய்ச்சித்துணைவர்	1973–74
		விரிவுரையாளர்	1974-
17.	தி. சு. சத்தியம்	ஆராய்ச்சித்துணைவர்	1974–79
18.	து. மூர்த்தி	தொழில்நுட்பத்துணைவர்	1974–79
19.	மா. செல்வராசன்	விரிவுரையாளர்	1976-
20.	பொன். கோதண்டராமன்	துணைப்பேராசிரியர்	1977–
21.	அ. அ. மணவாளன்	விரிவுரையாளர்	1978–80
		துணைப்பேராசிரியர்	1981-

தமிழ் மொழித்துறை ஆசிரியர்கள் 1980-

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் — பேராசிரியர்-தலைவர்
டாக்டர் அ. அ. மணவாளன் — துணைப்பேராசிரியர்
டாக்டர் வ. ஜெயதேவன் — விரிவுரையாளர்
டாக்டர் மா. செல்வராசன் — ,,
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி — ,,

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடுகள்

1.	K. N. Sivaraja Pillai	Agastiya in Tamil Land	
2.	K. N. சிவராஜபிள்ளை	'உந்து' என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழமை	1929
3.	K. N. Sivaraja Pillai	The Chronology of the Early Tamils	1932
4.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	பரணர்	1933
5.	உ. வே. சாமிநாதையர்	சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்	1934
6.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	கபிலர்	1936
7.	எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை. [ப. ஆ.]	நாநார்த்ததீபிகை முத்துசாமிப்பிள்ளை	1936
8.	,,	சிவநெறிப்பிரகாசம் சிவாக்கிரயோகி	1936

9.	டி. என். தானு அம்மாள்	பிற்காலச் சோழர்காலத் தமிழ் இலக்கியம்	1936
10.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	இலக்கணக்கட்டுரைகள்	1937
11.	எஸ். வையாபுரிப் பிள்ளை	புறத்திரட்டு	1938–39
12.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்	1939
13.	எஸ். வையாபுரிப் பிள்ளை [ப.ஆ.]	சுயாதரம்–சுயாதரர்	1939
14.	கி. வா. ஜகந்நாதன்	தமிழ்க்காப்பியங்கள்	1940
15.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார் [ப.ஆ.]	ஸ்ரீபுராணம்	1943
16.	எஸ். வையாபுரிப் பிள்ளை [ப.ஆ]	திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும்	1944
17.	வே. வேங்கடராஜுலு ரெட்டியார்	தொல்காப்பியம் எழுத்ததிகார ஆராய்ச்சி	1944
18.	எஸ். வையாபுரிப் பிள்ளை [ப.ஆ.]	இராமப்பய்யன் அம்மானை	1951
19.	பு. ரா. புருஷோத்தம நாயுடு	திருவாய்மொழி [ஈட்டின் தமிழாக்கம்] 10 தொகுதிகள்	1951–58
20.	R. P. Sethu Pillai [Ed]	Words and their Significance	1953
21.	,, ,,	Tirukkural Ellis Commentary	1956
22.	M. A. Dorai Arangaswami	Religion and Philosophy of Tevaram Vol. I & II.	1958–59
23.	R. P. Sethu Pillai [Ed]	Tiruvachagam-Dr. G.U. Pope	1960
24.	பு. ரா. புருஷோத்தம நாயுடு	ஆசார்ய ஹ்ருதய மூலம் [4 தொகுதிகள்]	1965
25.	M. A. Dorai Arangaswami	The Surnames of the Cankam Age, Literary and Tribal	1965
26.	மா. இராசமாணிக்கனார்	பத்துப்பாட்டு ஆராய்ச்சி	1970
27.	மு. சண்முகம்பிள்ளை	திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்	1971
28.	க. த. திருநாவுக்கரசு	திருக்குறள் நீதி இலக்கியம்	1971
29.	இ. சுந்தரமூர்த்தி	திருக்குறள் அணிநலம்	1971
30.	மு. சண்முகம்பிள்ளை	திருக்குறள் அமைப்பும் முறையும்	1972
31.	க. த. திருநாவுக்கரசு	திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்	1973

32.	ந. சஞ்சீவி	சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்	1973
33.	,, [ப.ஆ.]	First All India Tirukkural Research Seminar Papers-1972.	1973
34.	,, [,,]	பல்கலைப் பழந்தமிழ்	1974
35.	மு. சண்முகம்பிள்ளை [ப.ஆ.]	நாககுமாரகாவியம்	1974
36.	ந. சஞ்சீவி [ப.ஆ.]	இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்	1974
37.	மு. சண்முகம்பிள்ளை [ப.ஆ.]	அப்பாண்டை நாதர் உலா	1974
38.	K. Meenakshisundaram	The Contribution of European Scholars to Tamil	1974
39.	Mark Collins [Ed.]	Dravidic Studies	1974
40.	ந. சஞ்சீவி (ப.ஆ.)	தெய்வத்தமிழ்	1975
41.	,, (,,)	பெருந்தமிழ்	1975
42.	C. Balasubramanian	The Status of women in Tamil Nadu during the sangam Age	1976
43.	R. Dhandayudham	Study of the Sociological Novels in Tamil	1977
44.	மு. சண்முகம்பிள்ளை இ. சுந்தரமூர்த்தி	கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள்	1979
45.	மு. சண்முகம்பிள்ளை	பாரதி தீபம்	1980
46.	C. Balasubramanian	A Study of the Literature of the Cēra Country	1980
47.	மு. சண்முகம்பிள்ளை	அகப்பொருள் மரபும் திருக்குறளும்	1980
48.	K. Arumugam	A Critical study of Naccinarkkiniyar	1981
49.	கு. மோகனராசு	திருக்குறளில் மரபுகள்	1981
50.	கு. மோகனராசு	திருவள்ளுவரின் குறிக்கோளியலும் உலகப் பொதுமையியலும்	1983

*பாரதியாரின் சிறுகதைகள்

டாக்டர் ஆறு. இராமநாதன்

'அனைத்திந்திய தேசியத்தின் விடிவெள்ளி'[1] என்றும் 'தேசீய போராட்டத்தின் ஆஸ்தான கவி'[2] என்றும் 'சர்வதேசீயவாதி'[3] என்றும் இன்றைய ஆய்வறிஞர்களால் புகழப்படும் பாரதியார் அப்புகழ் மொழிக்கு ஏற்பவே வாழ்ந்து காட்டியவர். சொல்லொன்று செயலொன்று என்றில்லாமல் சொன்னதைச் செய்துகாட்டும் செயல்வீரராக அவர் வாழ்ந்தார். மனித குலத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றும் தாய்நாட்டின்மீது அவர் கொண்டிருந்த காதலும் அவர் எழுத்துக்களில் பளிச்சிடுகின்றன. நாடு விடுதலை பெற்றால்தான் மக்கள் மேன்மையடையமுடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை காரணமாக அவர் நாட்டு விடுதலைக்கு ஓயாமல் பாடுபட்டார். விடுதலைப் போராட்டத்திற்கு உழைப்பதற்காக மக்களை ஒற்றுமைப்படுத்தி வீறுகொண்டு எழச்செய்யும் முயற்சியில் தன் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தினார். எழுத்துக்கள் மக்களைச் சென்றடையும் நோக்கில் எளிய சொற்களையும் புதிய புதிய உத்திகளையும் கையாண்டார். கவிதையிலும் உரைநடையிலும் புதிய புதிய இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தினார். இலக்கியத்துறையில் அவர் செய்த மாற்றங்களும் அறிமுகங்களும் தமிழிலக்கிய வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

பாரதியாரை 'மகாகவி' என்ற அளவிலேயே மக்கள் அறிந்திருக்கின்றனர். அவர் சிறந்த உரைநடை எழுத்தாளர் என்பதை அறிந்திருக்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் அவர் கவிதைகளின் சிறப்பேயாகும். அவர் உரைநடைப் படைப்புகள் சிறப்பானவைதான் என்றாலும் அவர் கவிதைமுன் அவை தோற்றுவிட்டன. எனவேதான் அவர் உரைநடை மக்களிடம் செல்வாக்கு பெறாமல் போய்விட்டது. ஆனால் பாரதியாரை முழுமையாக அறிய வேண்டுமானால் அவர் உரைநடைகளைப் புறக்கணிக்கக் கூடாது. அவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பாரதியாரின் பங்கு மகத்தானது. பாரதியார் தாகூரின் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டதன் வாயிலாகவும் தாமே பல சிறுகதைகளை எழுதி வெளியிட்டதன் வாயிலாகவும் தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டார். இதனை ஆய்வாளர்கள் மனப்பூர்வமாக உணர்ந்து பாராட்டுகின்றனர்.[4] பாரதியார், சிறுகதைகளைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து வருமாறு:

---

*சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'பாரதியும் இந்தியக் கவிதையில் தேசியமும்' என்ற கருத்தரங்கில் 17-12-81 அன்று படிக்கப் பட்ட கட்டுரை.

> பொய்க்கட்டுக் கதைகளைக் காட்டிலும் உண்மையான கதை தான் அழகு............நம் சாதாரண வாழ்விலும் ஓர் அதிசயம் இருக்கிறது. தினசரி எழுதி வைத்தால் அதைவிட அழகான கதை கிடையாது.[5]

பாரதியார் கூறியதாக யதுகிரி அம்மாள் குறிப்பிட்டுள்ள குறிப்பு இது. பாரதியார் தம்முடைய கட்டுரையொன்றில் தாம் எழுதும் சிறுகதைகள் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார் :

> பொதுவாக நான் கதைகளெழுதும்போதும் வெறுமே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமேயன்றி ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. தர்மபோதனைக்கு வியாசங்களெழுதுவானேன்? கதையென்றெடுத்தால் கற்பனைப் புனைவையே அதில் நான் முக்கியமாகக் கருதுவேன். எனினும் என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன.

பாரதியாரின் கதைகளைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறும் கருத்துகளும் இங்கு நோக்கத் தக்கது.

> பாரதியார் எழுதிய சிறிய கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிப்பனவாக இருக்கின்றனவேயன்றிச் சம்பவங்களின் உணர்வு நிலையைக் காட்டுவனவாகவில்லை. மேலும், அவர் எழுதியுள்ள கதைகள் 'கட்டுக்கதைகள்' என்று வகுக்கப்படத் தக்க முறையிலமைந்தனவே[7]

என்று டாக்டர் க. சிவத்தம்பி அவர்களும்,

> அவை (பாரதியார் எழுதிய கதைகள்) சிறிய கதைகள் என்ற அளவில் நின்றுவிட்டனவே தவிரச் சிறுகதைகளாக உயரவில்லை[8]

என்று டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

பாரதியார் சுமார் நாற்பது சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை அனைத்துமே ஆய்வாளர்கள் குறிப்பிடுவதுபோல் வளர்ச்சி பெறாத கதைகள் என்று கூற இயலவில்லை. அவர் கதைகளில் வாழ்க்கைச் சம்பவங்களை உள்ளவாறே தொகுத்துக்கூறும் கட்டுரைகளையொத்த கதைகளும் காணப்படுகின்றன ; கற்பனைப் புனைவுடைய கட்டுக்கதைகளும் காணப்படுகின்றன ; பொருளமைப்பாலும் கலையம்சத்தாலும் முழுமை பெற்ற சிறந்த கதைகளும் காணப்படுகின்றன. அவருடைய சிறந்த சிறுகதைகளுக்கு காந்தாமணி, துளஸீபாயி, ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ணகுமாரி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் 'ஆறில் ஒரு பங்கு' மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

பாரத தேசத்தை அந்நியராட்சியிலிருந்து மீட்கும் போராட்டத்தில் சாதிமத பேதமின்றி அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதையும் விடுதலைப் போராட்டத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துவதற்காகவென்றே பாரதியாரால் எழுதப்பட்ட கதை இது. பாரதியாரின் கொள்கைகளையும் ஆவேசமான கருத்துக்களையும் இக்கதையில் காணலாம். மேலும் அவர் காலச் சமுதாயத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளவும் இக்கதை பயன்படுகிறது.

இக்கதையின் சுருக்கம் வருமாறு :

"போலீஸ் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற ராவ்பகதூர்' சுந்தரராஜுலு நாயுடு தன்னுடைய ஒரே மகளான மீனாம்பாளைத் தனது ஒன்று விட்ட சகோதரியின் மகன் கோவிந்தராஜனுக்கு மணமுடிக்க விரும்புகிறார். கோவிந்தராஜன் பிரம்மசமாஜத்தைச் சார்ந்தவன். பிரம்மசமாஜம் என்பது பாரதியார் குறிப்பிடுவதுபோல் 'ஜாதிபேதம் இல்லை, விக்ரஹாராதனை கூடாது, பெண்களும் ஆண்களும் சமானமாக ஒத்துப் பழகலாம்' என்பன போன்ற நவீன கோட்பாடுகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.[9] இந்த அமைப்பில் அவன் தொடர்பு கொண்டிருப்பதை நாயுடு விரும்பவில்லையானாலும் அவனைத் 'திருத்தி' விடலாம் என்பது அவர் நம்பிக்கை. அவர் எண்ணம் இவ்வாறு இருக்க கோவிந்தராஜனும் மீனாம்பாளும் மனமொத்த காதலர்களாகப் பழகுகின்றனர். ஆனால் அவன் நாட்டுப் பணியில் ஈடுபட முடிவுசெய்தபோது பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப் பிடிக்க முடிவு செய்கிறான்.

கோவிந்தராஜன் நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதை அறிந்த அவன் மாமா அவனுக்குப் பெண்தரும் எண்ணத்தை அடியோடு மாற்றிக்கொண்டு மீனாம்பாளை வேறொருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார். மீனாம்பாள் இத்திருமண ஏற்பாட்டை விரும்பாமல் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து தன் எண்ணத்தைக் காதலனுக்கு எழுதி விடுகிறாள்.

மீனாம்பாளின் இறுதிக் கடிதத்தைக் கண்ட கோவிந்தராஜன் அதிர்ச்சியுறுகிறான். அவள் பிரிவை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் இறந்ததாக முடிவு செய்து அவன் துறவுக்கோலம் பூண்டு வட இந்தியாவில் சுற்றுகிறான். அந்த நிலையிலும் அவன் விடுதலைப் பணியை மட்டும் மறக்கவில்லை. இறுதியில் மீனாம்பாள் இறக்கவில்லை என்றும் அவள் தந்தை இறந்துவிடவே அவளும் வடநாட்டில் தேசப்பணி செய்து கொண்டிருப்பதாகவும் அறிகிறான். இறுதியில் காதலர்கள் இணைகின்றனர்".

இதுவே கதைச் சுருக்கம்.

நம் நாடு அன்னியர்களிடம் அடிமைப்பட்டதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி சிந்திக்கிறார் பாரதி. நம்மிடையே காணப்படும் ஒற்றுமையின்மையே அடிப்படைக் காரணம் என்பதை உணர்கிறார்.

நம்மில் ஆறில் ஒரு பங்கு மக்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருக்கிறோம். அவர்களின் நன்மை தீமைகளில் மேல் சாதியினர் அக்கறை கொள்வதில்லை. பஞ்சத்தில் மடிந்து போகும் அவர்களுக்கு உதவுவதுமில்லை. அவர்களைப் புறக்கணிப்பதால் அவர்கள் நம் நாட்டிற்குள் நுழைய முயலும் அந்நிய எதிரிகளை வரவேற்று அவர்களோடு சேர்ந்து கொள்கின்றனர். தீண்டாமையை ஒழித்து, பொருளாதார நிலையில் அவர்களை உயர்த்தி அனைவரும் ஒற்றுமையுடன் போராடினால்தான் நாட்டுக்கு விடுதலை கிடைக்கும். இவற்றை எல்லாம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியே 'ஆறில் ஒரு பங்கு' என்ற இக்கதையைப் பாரதியார் எழுதியுள்ளார். கதைப்பெயரே அவர் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அவர் முகவுரை வருமாறு:

> ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்திலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.
>
> இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும்.

பாரதியார் இக்கதையை பள்ளர், பறையர் முதலியோர்க்கு அர்ப்பணம் செய்துள்ளதையும் ஈண்டு எண்ணிப் பார்த்தல் நலம்.

கதைத்தலைவன் கோவிந்தராஜன் பாரதியாரின் பிரதிநிதியாகவே காணப்படுகிறான். இப்பாத்திரத்தின் வாயிலாக பாரதியார் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார்.

முதலில் கதைத் தலைவன் நவீன கோட்பாடுகளைக் கொண்ட பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவன் என்று அறிமுகப்படுத்துகின்றார். அந்த அமைப்பில் சேர்ந்த காரணத்தால் அவனுடைய சாதியார் அவனுக்கு செய்த கொடுமைகளை அவன் துணிவோடு எதிர்கொள்வதாகக் கூறுகின்றார். இது அக்காலச் சமுதாயத்தைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

பிரம்மசாரிகளாலேயே விடுதலைப் போராட்டத்தில் சிறப்பாகப் பங்கேற்க முடியும் என்பது பாரதியார் கருத்து. இதனாலேயே கதைத் தலைவனை பிரம்மச்சரிய விரதம் மேற்கொள்பவனாகப் படைக்கின்றார். விடுதலைப் போருக்கு எத்தகையோர் வேண்டும் என்பதை,

> பாரத தேசத்தை இப்போது பிரம்மச்சாரிகளே ரக்ஷிக்க வேண்டும்.........பிரம்மசாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று, இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும் (ப-ம். 444)

என்று கூறுகின்றார். குடும்ப வாழ்க்கை கடமையாற்றுவதற்குத் தடையாக இருக்கும் என்பது அவர் கருத்து. அதே நேரத்தில் சுதந்திரப் போராட்டத்தில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் பக்குவம் பெற்ற ஆணும் பெண்ணும் மணந்துகொள்வது தவறல்ல என்பதை இக்கதை முடிவால் தெளிவு படுத்துகின்றார்.

> "நான்கு இதழ்கள் கூடின. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது" (ப-ம். 467).

என்று கூறிக் கதையை முடிப்பதைச் சான்றாகக் கூறலாம்.

> ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால்,
> ஸ்வதந்திரம் தானே சித்தியாகும் (ப-ம். 451)

என்ற கொள்கையைக் கதைத் தலைவன் வாயிலாகப் பிரகடனப்படுத்தும் பாரதியார், துறவியாக அலையும் அவனை அம்முயற்சியில் ஈடுபடுத்துகின்றார். கோசல நாட்டில் ஏற்படும் பஞ்சத்தைப் போக்கி மக்களுக்கு உதவிட லாலா லஜபதிராய் மேற்கொள்ளும் பஞ்ச நிவாரணப் பணியில் அவனைக் கலந்து கொள்ளச் செய்கிறார். தீண்டாமையை ஒழிக்க வங்க நாட்டில் அசுவினி குமார தத்தர் மேற்கொள்ளும் முயற்சியில் பங்கு கொள்ளும் ஆர்வமுள்ளவனாக அவனைப் படைத்துக் காட்டுகின்றார்.

> உன்னால் எனது தாய்நாட்டிற்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? எழுந்திருந்து வா பார்ப்போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப் போகிறீர்களோ? அட பாப ஜாதியே, பாப ஜாதியே (ப-ம். 453)

என்று மக்களைப் பார்த்துச் சீறச் செய்கிறார்.

கல்வி நிறுவனங்கள் வாயிலாகவும் பஞ்ச நிவாரணப் பணிகள் செய்வதன் வாயிலாகவும் தங்கள் மதத்தினைப் பரப்பும் பாதிரியார்களையும் ஏழைகளின் துயரங்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலையுறாத மடாதிபதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பாரதியார்,

> மடாதிபதிகளும் ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர்.
> ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்!
> நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்-ஹிந்து ஸ்தானத்து ஜனங்கள்—ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப் பிணியால் மாய்ந்து போகின்றனர் (ப-ம். 455)

என்று நெஞ்சு நெகிழ உள்ளக் குமுறலோடு கூறச் செய்கின்றார் கதைத் தலைவனை. சுதேசத்தலைவர்கள் மீது ரிப்போர்ட் எழுதி 'ராவ் பகதூர்' போன்ற பட்டங்களை எளிதில் வாங்கும் கீழ்த்தரமான போலீஸ் அதிகாரிகளைக் கேலி செய்யச் செய்கிறார். (ப-ம். 440)

இவ்வாறு கதைத் தலைவன் கோவிந்தராஜன் பாரதியாரின் பிரதிபிம்ப மாகவே படைக்கப்பட்டுள்ளான் என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் ஒருங்கிணைக்கும் பாரதியின் போக்கினை இக்கதையும் தெளிவுபடுத்துகின்றது. மீனாம்பாள் கோவிந்த ராஜனுக்கு எழுதும் கடிதத்தில் காளிதேவி, பாரதமாதா ஆகியன ஒரே பொருளில் கையாளப் பட்டிருப்பதைக் காணலாம். (ப-ம். 450)

'ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் (கதை) எழுதும் வழக்கமில்லை' என்று பாரதியாரே கூறியிருந்தாலுங்கூட, உறங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்பிச் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் செய்யும் மகத்தான நோக்கத்துடனேயே திட்டமிட்டு அவர் கதை எழுதியுள்ளதை 'ஆறில் ஒரு பங்கு' தெளிவுபடுத்துகிறது. இதே கதைக் கருத்தை—அதாவது நாம் ஆறில் ஒரு பங்கு மக்களைத் தீண்டத் தகாதவர்களாக வைத்திருப்பதாலேயே நம் நாட்டை அந்நியரிடம் இழந்து விட்டோம் என்ற கருத்தை—விளக்குவதற்காகப் பாரதியார் 'பஞ்ச கோணக்கோட்டை' என்ற கதையையும் எழுதியுள்ளார். மேலும், தான் உயிருக்கு உயிராகக் காதலித்த காதலனையே, திலகருக்கு எதிரான செயல் களில் ஈடுபட்டான் என்ற காரணத்திற்காகப் புறக்கணிக்கும் கதைத் தலைவியை 'ஸ்வர்ணகுமாரி' என்ற கதையில் படைத்துக் காட்டுகின்றார். பாரதியார் கதைகளின் சிறப்புக்களுள் ஒன்று அவர் காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற மனிதர்களோடு அவர் படைக்கும் பாத்திரங்களைத் தொடர்பு கொள்ளச் செய்வதாகும். லாலா லஜபதிராயோடு 'ஆறில் ஒரு பங்கு' கதைத் தலைவனைத் தொடர்பு கொள்ளச் செய்வதை இங்கு சான்றாகக் காட்டலாம்.

இவ்வாறு கவிதைகள், கட்டுரைகள் வாயிலாக மட்டுமல்லாது கதைகள் வாயிலாகவும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட மக்களைத் தயார்ப் படுத்தியவர் பாரதியார் என்பதை உணரலாம். அவர் கதைகளில் காணப் பட்ட தீவிரம் காரணமாகவே அவருடைய 'ஆறில் ஒரு பங்கு' கதையைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கி.பி. 1911-ல் தடை செய்தனர். தடை செய்த தற்கு அவர்கள் கூறிய காரணங்கள் என்ன என்பதை திரு பெ. சு. மணி தமது 'பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்' என்ற நூலில் எடுத்துக்காட்டு கின்றார். அவை வருமாறு :

> மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இதைப் படிப்போர் தொகை அதிகமாக உள்ளது.
>
> திருநெல்வேலி கொலை வழக்கில் (ஆஷ் கொலை வழக்கு) ஈடு பட்டோரின் கடிதப் போக்குவரத்தில் இக்கதையிலிருந்து மேற் கோள்கள் காட்டப்பட்டுள்ளன.[10]

இச்செய்திகள் அவருடைய கதைகள் மக்களிடையே பரவி எழுச்சியுறச் செய்தன என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இதுவரை கண்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது நாம் பின்வரும் முடிவுகளுக்கு வர முடிகிறது.

பாரதியார் தலைசிறந்த உரைநடை படைப்புகளைப் படைத்திருந்தாலும் அவற்றையும் விட ஆற்றல் வாய்ந்த கவிதைகளை அவர் படைத்ததன் வாயிலாக அவருடைய உரைநடை படைப்புகள் புகழ் பெறாமல் போய்விட்டன.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு பாரதியார் ஆற்றிய தொண்டினை நினைந்து போற்றும் ஆய்வாளர்கள் அவர் எழுதிய கதைகளை வளர்ச்சி பெறாத கதைகள் என்று சுட்டுகின்றனர். ஆனால் பாரதியார் கதைகளை ஆராயும்போது முழுமை பெற்ற சிறந்த சிறுகதைகளையும் அவர் எழுதியிருப்பதை உணர முடிகிறது.

தீண்டாமையை ஒழித்து சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும் மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கவும் உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்பி சுதந்திரப் போராட்டத்திற்கு அவர்களைத் தயார்ப்படுத்தவும் பாரதியார் திட்டமிட்டு சில சிறுகதைகளைப் படைத்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

அவர் கதைகளுள் சில மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி விடுதலைப்போரில் அவர்களை உற்சாகமாக ஈடுபடத் தூண்டின என்பதைச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

குறிப்புகள்

1. க. கைலாசபதி, அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை-1, 1970, ப—ம். 109.

2. கே. பாலதண்டாயுதம், இலக்கியத்தில் மனிதநேயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, 1975, ப—ம். 89.

3. க. கைலாசபதி, அடியும் முடியும், ப—ம். 109.
கே. பாலதண்டாயுதம், இலக்கியத்தில் மனிதநேயம், ப—ம். 91.

4. டாக்டர் இரா. தண்டாயுதம், தமிழ்ச்சிறுகதை முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975, ப—ம். 21.

டாக்டர் க. சிவத்தம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1980, ப—ம். 23.

5. யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள், அமுத நிலையம், சென்னை-14. 1980, ப—ம். 84.

6. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை-1, ப—ம் 183.

7. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப—ம். 23.

8 தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், ப—ம். 21.

9. பாரதியார் கதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை-1.

10. பெ. சு. மணி, பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும், பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, 1981, ப—ம். 63.

சொற்பிறப்பியல் அகரமுதலி

(Etymological Dictionary) *

இரா. மதிவாணன், தொகுப்பாளர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சென்னை-600 008.

மொழி வளர்ச்சியை அளந்து காட்டும் அளவுகோலாக அகராதிகள் அமைகின்றன. சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் விளக்கம் தரும் நூலை அகராதியென்றும் அகரமுதலியென்றும் குறிப்பிடுகிறோம். ஒரு மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகள், அம்மொழி எந்தெந்தத் துறையில் சொல்வளம் பெற்றிருக்கிறது; இன்னும் எந்தெந்தத் துறைகளில் சொல்வளம் பெறவில்லை என்பதைக் காட்டிவிடும். ஆங்கில மொழி எட்டு இலக்கம் சொற்களைப் பெற்றிருப்பதால் அம்மொழியில் பல்வேறு துறை தழுவிய பல்வகை அகரமுதலிகள் பெருகியுள்ளன.

சொல்லிற்குப் பொருள் கூறும் முயற்சியே முதன் முதல் அகரமுதலி தோன்றுதற்குக் காரணம். கி. மு. 700 அளவில் மெசபதோமியாவில் சில அக்கேடிய சொற்களுக்குப் பொருள் சுட்டிய எழுத்துச் சான்று கிடைத்திருப்பதாகவும் அதுவே உலக முதல் அகராதிக்கு வித்து எனவும் கூறுகின்றனர்.[1அ] அதற்குச் சமகாலத்திய தொல்காப்பியத்தில் உரிச்சொல் பகுதி அப்பொருள் சுட்டியதே என்பது போதரும். கி. பி. 1225இல் ‘Dictionarius’ என்ற சொல்லை இங்கிலாந்தைச் சேர்ந்த சோன்னசு தி கலந்தியா (Joannes de Galendia) என்பவர் இலத்தீனச் சொல்வரிசையைக் குறிக்கப்பயன்படுத்தினர். இலத்தீனச் சொல் மூலத்திலிருந்து தோன்றிய Dictionary என்பது கருவிநூல் என்னும் பொருளில் வழங்கியது. கிரேக்கச் சொல் மூலத்திலிருந்து பிறந்த Lexicon என்பது சொற் புத்தகம் (Word book) என்னும் பொருளில் வழங்கியது. நாளடைவில் இரண்டு சொற்களும் அகரமுதலியையே குறிக்கத் தொடங்கின.

ஆங்கிலத்தில் அகரவரிசைப்படுத்தப்படும் நூல் வரிசைகள் பின்வருமாறு:

Concordance	—	சொற்கோவை
Glossary	—	சொல்லடைவு
Vocabulary	—	அகரவரிசை
Index	—	சொற்பட்டி
Lexicon	—	அகரமுதலி
Dictionary	—	அகரமுதலி
Gazetteer	—	திணைக்களஞ்சியம்
Thesaurus	—	சொற்களஞ்சியம்
Encyclopaedia	—	கலைக்களஞ்சியம்

13—11—80 அன்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை நடத்திய சிறப்புக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற ஆய்வுக்கட்டுரை.

அகரமுதலி வகைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.[1ஆ]

1. சொல்லுக்குப் பொருள் கூறுவதோடு, அச்சொல் எந்த வேரி லிருந்து எப்படிப் பிறந்து உருவாயிற்று என்ற விவரமும், அது பேச்சு வழக்கிலோ அல்லது செய்யுள் வழக்கிலோ வந்துள்ள தொடரும், அஃது எடுத்தாளப்பட்டுள்ள நூலின் பெயரும், நூலில் அது வந்துள்ள உட் பிரிவின் பெயரும், இத்தனையாவது பாடல் எனப் பாடல் எண்ணும் இன்ன பிறவும் கொடுக்கப்பட்டிருக்கும் அகரமுதலிகள்.

2. மின்சாரம், பொறிகள் (இயந்திரங்கள்) என்பன போன்ற குறிப்பிட்ட பொருள்களைப் பற்றியும், உழவு, நெசவு போன்ற குறிப்பிட்ட தொழில்களைப் பற்றியும் உள்ள சொற்கள் மட்டும் அவற்றின் தோற்றத் துடன் பொருள் கூறப்பட்டிருக்கும் தனித்துறையகரமுதலிகள்.

3. சரியான இலக்கிய வழக்கிலிருந்தும் பொருத்தமான ஒலியி லிருந்தும் (உச்சரிப்பிலிருந்தும்) வேறுபட்டு, நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு வழங்கப்படும் வட்டார வழக்குச் சொற்கள் மட்டும் அகர வரிசையில் பொருள் கூறப்பட்டிருக்கும் வழக்கு அகரமுதலிகள் (Dialects).

4. ஒரு நூலின் இறுதியில் அல்லது முதலில், அந்நூலிலுள்ள செய்யுட்களின் முதலிலுள்ள சொற்களையெல்லாம் திரட்டி அகர வரிசையில் கொடுக்கும் செய்யுள் முதற்குறிப்பகராமுதலி; நூலின் உள்தலைப்புகளைக் கூறும் பொருளடக்க அகரமுதலி.

5. ஒரு நூலிலுள்ள அருஞ்சொற்களை மட்டும் பொருளுடன் அந் நூலிறுதியில் தந்திருக்கும் அருஞ்சொல்லகரமுதலி.

6. ஒரு நூலிலுள்ள சொற்கள் அனைத்தையும் நூலில் வந்துள்ள இடஞ்சுட்டும் தனிநூல் அகரமுதலி.

7. ஒரு நூலிலுள்ள இன்றியமையாச் சொற்களை மட்டுமோ அல்லது பொருள்களை (செய்திகளை) மட்டுமோ நூலில் வந்துள்ள அடி-இடம் சுட்டிக் கொடுத்துள்ள சிறப்பு அகரமுதலி (Concordance). இவ்விரு வகையுள் சொற்கள் கொடுக்கப்பட்டிருப்பது 'சொற்கோவை அகரமுதலி' (Verbal Concordance) எனவும், பொருள்கள் கொடுக்கப்பட்டிருப்பது 'பொருட்கோவை அகரமுதலி' (Real Concordance) எனவும் அழைக்கப்படும்.

8. பல்வகைக் கலைத்துறை—அறிவுத்துறை பற்றிய படங்களுடன் கூடிய அருஞ்சொல் விளக்க அகரமுதலிகள் (Glossary).

9. உலகச் செய்திகள்—பொருள்கள் அனைத்தும் விரிவாக விளக்கப் பட்டுள்ள கலைக்களஞ்சியம் (Encyclopaedia).

10. ஒரு மொழிச் சொல்லுக்கு நேரான வேறு ஒரு மொழிச் சொல்லோ—அல்லது—பலமொழிச் சொற்களோ கொடுக்கப்படும் மொழியகரமுதலி வகைகள்.

11. மேலுள்ளவையே யன்றி, ஒரு மொழியிலே வழங்கும் பழமொழி களையெல்லாம் அகர வரிசையில் தொகுத்த பழமொழியகரமுதலி.

12. ஒரு மொழி வல்ல புலவர்களின் (அறிஞர்களின்) வாழ்க்கைக் குறிப்புகளை அகர வரிசையில்தரும் புலவர் அகரமுதலி.

13. இருசுடர், முக்குணம், ஐம்பொறி எனத் தொகையெண்களால் சுட்டப்படுவனவற்றை விளக்கும் தொகையகரமுதலி.

14. அகம், முகம், மகம், இன்னல், கன்னல், தின்னல் என்பன போன்ற செய்யுட்கேற்ற எதுகைத்தொடைச் சொற்கள் தரப்படும் தொடையகரமுதலி.

15. அரம்—அறம், குலம்—குளம், மணம்—மனம் என்பன போல ஒப்புமையுடைய ஒரெழுத்து வேறுபாடுடைய சொற்கள் தரப்பட்டுள்ள எழுத்து வேறுபாட்டகரமுதலி.

இவையன்றி, ஒருமொழியகரமுதலி, இருமொழியகரமுதலி, பன் மொழியகரமுதலி, ஒலிப்பொழுங்கு (pronunciation) அகரமுதலி, சித்திர அகரமுதலி, குழந்தைகளின் அகரமுதலி, மாணவர் அகரமுதலி, புதிர்ச் சொல் அகரமுதலி, விடுகதை அகரமுதலி, கையடக்க அகரமுதலி என அகர முதலிகளில் பலவகைகள் உள்ளன. பொருள் தெரிந்து அதற்குரிய சொல் தெரியாதவர்களுக்காகப் பொருட்பாட்டு அகரமுதலி (Meaning Dictionary) கூட ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

மேற்கண்ட வகைகளுள் சொற்பிறப்பியல் அகரமுதலி சிறப்பு அகர முதலி (Specialised Dictionary) வகையைச் சார்ந்தது. சொற்பிறப் பியல் அகரமுதலியை ஆங்கிலத்தில் 'Etymological Dictionary' என்பர். Etymos என்பது 'உண்மை' என்று பொருள்படும் கிரேக்கச்சொல். Etymology என்னுஞ்சொல் 'சொல்லின் உண்மையான வரலாற்றைக் கூறுதல்' என்று பொருள் தருகிறது. ஒரு சொல்லுக்கு மூலங்காட்டி அச்சொல் பிறந்து வளர்ந்த வரலாற்றை விளக்குவது சொற்பிறப்பியல் அகரமுதலியின் நோக்கம். சொல்லின் வேரும் வரலாறும் (Origin and derivation) காண முடியாதவிடத்து மூலம் மட்டும் காட்டி அமைவர். காலத்தால் முந்திய சொல்வடிவத்தை மூலமாகக் காட்டினுல் போதும் என்று ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் சி. தி. ஆனியன்[2] கருதுகிருர். மற்ருெரு ஆங்கில அகரமுதலித் தொகுப்பாளரான வெஃப்புதர்[3] (Webster) என்பவர், ஒரு சொல்லின் மிகப்பழைய வடி வத்தின் விரிவான பொருள் வளர்ச்சி வரலாறு சொல்வதே சொற் பிறப்பியல் என்கிருர்.

வேரும் வரலாறும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே மெய்ம்மையான சொற்பிறப்பியல் அகரமுதலி. தமிழைப் போன்று ஒட்டுநிலை (Agglutinative) மொழியில் வேரும் வரலாறும் காண இயலும். மேலையாரிய மொழிகள் உட்பிணைப்பு (inflexional) மொழிகளாயிருப்பதால் அவற்றில் வேரும் வரலாறும் காண்பது அரிது. ஆதலால் மேலைநாட்டு வண்ணனை மொழியியலார் சொல்லின் பழைய வடிவம் அல்லது கிட்டிய மட்டில் மூலவடிவம் காண்பதே சொற்பிறப்பியல் என்கின்றனர். தொல்காப்பியர் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்கிறார். காலப்போக்கில் திரிபடைந்த சொற்களில் வேரும் வரலாறும் மறைந்திருக்கும்; மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு வெளிப்படத் தெரியாது என்பதை "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்கிறார்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன என்பதையும், ஒவ்வொரு சொல்லும் அதன் தோற்றக் காரணமான வேர்ப்பொருளைக் கொண்டிருக்கும் என்பதையும், மேலைநாட்டார் இன்னும் ஆய்ந்திலர். அதனாற்றான் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் இடுகுறித் தொகுதிகளாகக் கருதுகின்றனர். அவர்கள் தமிழைத் துறைபோகக் கற்பாராயின் உண்மை உணர்வர்.

மேனாட்டார் நோக்கிலும், நம் நோக்கிலும் காணப்படும் வரையறைக்கேற்ப சொற்பிறப்பியல் அகரமுதலி இருவகைப்படும்.

1. வேரும் வரலாறும் காட்டும் சொற்பிறப்பியல் அகரமுதலி. (Etymological Dictionary on genealogical basis.)

2. மூலச் சொற்காட்டும் இனச்சொல் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary on Comparative and Historical basis.)

இதுவரை உலக மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் அனைத்தும் இரண்டாம் வகையைச் சார்ந்தவை. மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் தொகுக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி முதல்வகையைச் சார்ந்தது. இம்முதல்வகை அகரமுதலியில் இரண்டாம் வகை அகரமுதலியிலுள்ள இனச் சொல் ஒப்பீட்டுக் கூறும் வரலாற்றடிப்படைச் சொல்லொழுங்கும் கூட இடம்பெறும்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு முதலில் வேண்டப்படுவது சொற்பிறப்பியல் நெறிமுறைகள். ஆங்கில மொழிக்கு முதன்முதல் சொற்பிறப்பியல் அகரமுதலியை நேரிய முறையில் தொகுத்தளித்த ஸ்கீற்று (W. W. Skeat) என்பவர் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் கவனிக்க வேண்டிய நெறிமுறைகளைப் (Canons for Etymology) பின்வருமாறு கூறுகிறார்.[4]

சொற்பிறப்பியல் நெறிமுறைகள்

1. காலத்தால் முந்திய பயன்படுத்தம் நோக்கிச் சொல்லின் தொல் வடிவத்தை முடிவு செய்ய வேண்டும்.

2. வரலாற்றடிப்படையிலும் நிலவியல் அடிப்படையிலும் ஒருமொழியில் புகுந்துள்ள கடன் சொற்களைக் கண்டறிய வேண்டும்.

3. குறைந்த அசைகளையுடைய சொல்லை அதே சொல்லின் மிக்க அசைகளையுடைய வடிவத்திற்கு மூலமாகக் கொள்க. (மரூஉமொழி, விகாரம் போன்ற சொற் சுருக்கங்கள் அல்லாதவிடத்து.)

4. ஒலிப்பியல் நெறியீடுகளைக் (Phonetic laws) கவனிக்க.

5. ஒரே அளவான அசைகளையுடைய இருசொற்களில் காலத்தால் முந்திய சொல்லை மூலமாகக் கொள்க.

6. ஆங்கிலத்தில் வல்வினைகளை (Strong Verbs) மூலமாகக் கொள்க.

7. ஒரு சொல்லின் முழுவடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்க. சொல்லின் ஒரு பகுதியை ஆய்வுக்குக் கொள்ளற்க.

8. சொல்லின் வடிவ ஒற்றுமை அல்லது மேம்போக்கான பொருளொப்புமை கருதி இருமொழிகளிலுள்ள சொற்களை (ஒலிப்பியல் நெறியீடு வேறுபடும் நிலையில்) ஒப்புமையுடையனவாகக் கொள்ளற்க.

9. இனச்சொற்கள் (Cognates) வடிவில் அல்லது ஒலிப்பில் முழுதும் ஒத்திருக்க வேண்டியதில்லை. ஒலிப்பியல் நெறியீடுகளுக்குப் புறம்பாக இரு மொழிகளிலும் இரு சொற்கள் ஒத்திருப்பின் (ஒலிப்பிலும் பொருளிலும்) ஒருமொழி மற்றொரு மொழியிடமிருந்து அச்சொல்லை கடன் பெற்றிருக்கிறது என்று நம்பலாம்.

10. ஒரு சொல்லுக்கு இனச் சொற்களைக் கூறமுடியாதவிடத்து அச் சொல்லை விளக்கிக் கூறும் முயற்சி மேற்கொள்ளலாகாது.

மேற்கண்ட பத்தும் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்குரிய பத்துக்கட்டளைகள் எனலாம். கீற்று ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகர முதலியை ஒரு மடலமாக வெளியிட்டார். ஆயின் ஆங்கிலச் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை (Principles of English Etymology) இரண்டு மடலங்களாக வெளியிட்டார்.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் தம் முயற்சியில் புரை படுதலும் உண்டு. சொல்லின் மூலங்காண முற்பட்டு சொல்லின் உண்மைப் பொருளுணராமல் ஏதோ ஒன்றைச் சொல்லி விடுவாரும் உளர்; உண்மைப் பொருளுணர்வாரும் உளர். அதனடிப்படையில் சொற்பிறப்பியலை ஆறு வகையாகப் பிரிப்பர்.

1. உன்னிப்புச் சொல்லியல் (guessing etymology) — அணில் (அழகு, வரி)

2. அறிவாகுலச் சொல்லியல் (pedantic etymology) — மண் (மணப்பது)

3. அடிப்படைச் சொல்லியல் (popular etymology) — நூல் (நூற்கப்படுவது, இழுக்கப்படுவது)

4. குறிக்கோட் சொல்லியல் (Tendentious etymology) — ஐயன் என்னும் தமிழ்ச் சொல்லை வேண்டுமென்றே 'ஆர்ய' என்னும் வடசொல்லி லிருந்து வந்ததாகக் கூறுவது.

5. வழுஉப்பகுப்புச் சொல்லியல் (Malanalytical etymology) — சாப்பாடு (சாதற்கேது வானது)

6. நகையாட்டுச் சொல்லியல் (playful etymology) — தோசை (தோ (இரண்டு) + சொய்ங்)

சொற்பிறப்பியல் அகரமுதலியின் தனிக் கூறுகள்

1. சொற்பிறப்பியல் அகரமுதலி ஏனை அகரமுதலிகளைப் போலன்றி சொல்லுக்கு மூலமும் கூறும்.

2. சொற்பிறப்பியல் அகரமுதலியில் இனச்சொற்கள் தவறாது காட்டப்படும்.

3. சொற்பிறப்பியல் நெறியீடுகளைத் தழுவி சொல்லின் மூலம் அமைந்திருக்கும்.

4. தெளிவான மூலம் உறுதிப்படாதபோது ஓரளவுக்குச் சரியெனப்பட்ட மூலம் ஒருகா. (ஒருகால்) என்னும் முன்னடையோடு குறிப்பிடப்படும்.

5. தெரியாத மூலமாயின் மூலம் தெளிவில்லை எனச் சுட்டப்படும்.

6. சொல்லின் இலக்கண வகை அல்லது பொருள் விளக்கம் வேறாக அல்லது மாறாகக் கூறப்பட வேண்டிவரின் அதுவும் மரபு தழுவியதாக இருக்கும்.

7. ஒருமொழி சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் அவ்வச்சொல்லுக்கு மூலம் அச்சொல் விளக்கத் தொடக்கத்தில் அல்லது இறுதியில் குறிக்கப்படும். இனமொழிகளுள் பன்மொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் ஒவ்வோர் அடிச்சொல்லையும் தலைப்புச் சொல் லாகக் கொண்டு அச்சொல்லுக்கு இனமான இனமொழிச் சொல்லும் பொருளும் குறிக்கப்படும். பரோ எமனேவரின் திரவிடச் சொற் பிறப்பியல் அகரமுதலி இதற்குச் சான்றாகும்.

8. சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் அம்மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறை (Principles of Etymology), ஒலிப்பியல் நெறியீடு (phonetic law), காலப்போக்கில் சொல்லின் பொருட்பாட்டு மாற்றம் (Semantic change) ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

உலக மொழிகளில் தோன்றியுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள்

உலக மொழிகள் பலவற்றுள் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கி.பி. 1662இல் கெர்கார்டு சோகன்னசு வொசியசு (Ghebard Johannes Vossius) என்பவர் வெளியிட்ட இலத்தீனச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Etymologicum Linguae Latinae) உலகில் வெளிவந்த முதல் சொற்பிறப்பியல் அகரமுதலியாகக் கருதப்படுகிறது.

1671இல் தீபன் கின்னர் (Stephen Skinner) என்பவர் இலத்தீன மொழியில் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியை (Etymologicon Linguae Anglicanae) வெளியிட்டார்.

1743இல் பிரான்சிசு சூனியசு (Francis Junius) என்பவர் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியொன்றை (Etymologicum Anglicanum) வெளியிட்டார். இந்நூலைச் சாமுவேல் சான்சன், தன் புகழ்பெற்ற ஆங்கில அகரமுதலி உருவாக்கச் சிறந்த கருவிநூலாகக் கொண்டிருந்தார்.

1808இல், சான்சன்னிசன் (John Jannieson) என்பவர் காத்திய மொழிக்கு (Scottish language) ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கினர். 1840இல் கிரிம் (Grimm) என்பவர் செருமானிய மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி (German Etymological Study) உருவாக்கினர். இவர் அம்மொழிக்கு வடித்துத்தந்த சொற்பிறப்பியல் நெறியீடுகள் ‘கிரிம் நெறியீடு’ (Grimm's law) என்றழைக்கப்படுகிறது.

1879இல் ஆங்கிலத்தில் இன்றும் சிறந்த சொற்பிறப்பியல் அகரமுதலியாக விளங்கும் "Scientific Etymological Dictionary of the English language" என்னும் அகரமுதலியை கீற்று (W. W. Skeat) பெருமகனர் வெளியிட்டார். இந்த அகரமுதலி ஒரு மடலமாக வெளிவந்தது. ஆயின், ஆங்கில மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை (Principles of English Etymology) இரண்டு மடலங்களாக இவர் 1892இல் வெளியிட்டார். இவை இரண்டு மட்டுமன்றிப் பின்வரும் மூன்று நூல்களையும் அடுத்தடுத்து இவரே தொகுத்தளித்தார்.

1. 1894இல் வெளிவந்த Primer of English Etymology.
2. 1897இல் வெளிவந்த Concise Etymological Dictionary of the English Language.
3. 1912இல் வெளிவந்த Science of English Etymology.

சொற்பிறப்பியல் அகராமுதலித் துறையில் பெரிதுழைத்து அரிய தொகுப்புகளை வழங்கிய பெருமை இற்று ஒருவரையே சாரும்.

1931இல் இரால்ஃபு லில்லி தர்னர் (Ralph Lilley Turner) என்பவர் நேப்பாள மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகராமுதலி (A comparative and Etymological Dictionary of the Nepali Language) தொகுத்தளித்தார்.

1938இல் யாழ்ப்பாணத்திலிருந்த தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார் தமிழ் மொழிக்கு "சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதி (A comparative and Etymological Dictionary of the Tamil Language) தொகுத்தளித்தார். 1946இல் குல்கர்னி என்பவர் மராத்திச் சொற்பிறப்பியல் அகராமுதலி (Marathi Etymological Dictionary) தொகுத்து வெளியிட்டார்.

1960இல் பரோ எமனோவரின் திரவிடச் சொற்பிறப்பியல் அகராமுதலி (Dravidian Etyolomgical Dictionary) வெளிவந்தது. 1968இல் அதன் இணைப்பு வெளியிடப்பட்டது.

1966இல் ஆங்கிலஅகராமுதலி வெளியீட்டில் பெரும்புகழ் பெற்ற ஆக்சு போர்டு அகராமுதலி (Oxford Dictionary)க் குழுவினர் சி. தி. ஆனியன் (C. T. Onion) என்னும் அறிஞர் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமர்த்தி ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகராமுதலி (Oxford Dictionary of English Etymology) வெளியிட்டனர். ஆங்கிலத்தில் இவர்களைப் போன்றே சேம்பர்சு அகராமுதலிக் குழுவினரும் ஒரு சொற்பிறப்பியல் அகராமுதலி வெளிட்டுள்ளனர். கிளெயின் (Klien), வீக்லி (Weekley) என்பாரின் சொற்பிறப்பியல் அகராமுதலிகளும் ஆங்கில மொழிக்கு எழில் சேர்க்கின்றன.

1970இல் வால்தர் வோன் வார்த்பர்க்கு (Walter Von Wartburg) என்பவர் பிரஞ்சு மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகராமுதலியை (Franzosisches etymologisches) பதினெண் மடலங்களாகத் தொகுத்தளித்துள்ளார். உலகில் வெளிவந்துள்ள மிகப்பெரிய சொற்பிறப்பியல் அகராமுதலி இஃதொன்றே.

1978இல் சக்கதாராவ் என்பவர் வால்தேர் நகரிலுள்ள ஆந்திரப் பல்கலைக்கழக வாயிலாகத் தெலுங்குச் சொற்பிறப்பியல் அகராமுதலி மும் மடலங்களில் முதன்மடலத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

உலகில் இதுகாறும் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகராமுதலிகளில் செருமானியம், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகராமுதலிகள் தரமானவையாகவும் புகழ் பெற்றனவாகவும் உள்ளன. பரோ எமனோவர் வெளியிட்ட திரவிடச்

சொற்பிறப்பியல் அகரமுதலி திரவிட மொழிகள் பொறுத்தவரை ஒரு தொடக்க முயற்சியாக அமைந்துள்ளது. தமிழில் ஞானப்பிரகாசர் தொடங்கிய சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பின் முதல் ஆறு பகுதிகள் மட்டும் வெளிவந்தன. அதற்குள் அவர் காலமாகிவிட்டார். தெலுங்கிலும் மூன்று மடலங்களில் ஒன்றே வெளிவந்துள்ளது.

தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலிகள்—அதற்கான முயற்சிகள்

தமிழ் உள்ளிட்ட திரவிட மொழிகளுக்கு ஒரு சொற்பிறப்பியல் அகரமுதலி வேண்டும் என்று 1856ஆம் ஆண்டிலேயே கால்டுவெல் வலியுறுத்தினர். யாழ்ப்பாணத்துப் பெருந்தகை தவத்திரு ஞானப் பிரகாசர் 1938இல் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் ஆறு சிறுபகுதிகளை ('அ' முதல் 'உருள்' வரை 364 பக்கங்கள்) வெளியிட்டார். ஒவ்வொன்றும் 1000 பக்கம் கொண்ட இரண்டு மடலங்களாக (20 உட் பகுதிகள்) வெளியிடத் திட்டமிட்டிருந்தார். அது "A Comparative and Etymological Lexicon of the Tamil Language" என்றழைக்கப் பட்டது. இவர் தம் நுண்மாண் நுழைபுலத்தாலும் பல்லாண்டு செய்த ஆராய்ச்சியின் விளைவாகவும் இந்தைரோப்பிய மொழிகளுக்குத் தமிழே மூலம் என்று கண்டறிந்தார். செருமானிய மொழிக்குக் கிரிம் என்ப வரும் ஆங்கிலத்துக்குக் கிற்றும் சொற்பிறப்பியல் நெறியீடுகளை அமைத்தது போல இவரும் திரவிடச் சொற்பிறப்பியல் நெறியீடுகளை (Law of Dravidian Etymology) அமைத்தார். ஒலிப்பு நெறிமுறை (Phonetic Sound Laws)களும் வகுத்தார். மொழியாராய்ச்சிக்கு வழக்கிலுள்ள சொல்லாட்சிகளை விடுத்து இலக்கியச் சொல்லாட்சிகளை மட்டும் கொள்ள லாகாது என்றும் இந்தைரோப்பிய மொழியினர் ஒலிப்பொப்புமை மட்டும் கருதாமல் சொல்லின் வேரும் வரலாறுமாக விரிந்த அடிப்படை உண்மைகளை ஆராய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

Father, Mother என்னும் ஆங்கிலச் சொற்களை அதே ஒலிப்பு ஒப்புமையுடைய இலத்தீன கிரேக்க சமற்கிருதச் சொற்களோடு ஒப்பிடும் சொல்லாராய்ச்சியாளர் மேனுட்டுக் குழந்தைகள் அப்பாவை 'பப்பா' என்றும் அம்மாவை 'மம்மி' என்றும் அழைக்கும் சொல்வடிவங்கள் தமிழோடு நெருங்கியிருப்பதை என் காண மறந்து விட்டனர் என்று வினவுகிருர்.[5] மாக்சு முல்லரின் பொன்மொழியை "Sound Etymology has nothing to do with Sounds" எடுத்துகாட்டி ஒலிப்பு மற்றும் பொருளொப்புமை மட்டும் கருதாது வேர்ச்சொல் இயைபு எம் மொழியில் அமைந்துள்ளது என்று காண வேண்டும் என்று தெளிவு கொளுத்துகிருர். சமற்கிருதவாணர் 'மாத்ரு' (தாய்) என்பது (ம-அளத்தல், வீட்டை மேற்பார்வை செய்தல்) 'மா' என்னும் வேரிலிருந்து பிறந்த தாகக் கூறுவதும் 'பித்ரு' (தந்தை) பாதுகாப்பவன் என்று பொருள் படுவதாகக் கூறுவதும் பொருத்தமற்றவை என்கிருர். அம்மா, அப்பா என்பவை அவற்றுக்கு மூலம் என்று காட்டுகிருர். அவருடைய முயற்சி முற்றும் நிறைவுறு முன்பே அவர் இயற்கையெய்தியது தமிழின் தவக் குறைவே எனலாம்.

இங்கிலாந்தில் சமற்கிருதப் பேராசிரியராகவுள்ள பரோவும் அமெரிக்க கலிபோர்னியாவில் சமற்கிருதப் பேராசிரியராகவுள்ள எமனோவும் ஐம்ப தாண்டுகளாகத் திரவிட மொழிகளை ஆராய்ந்து சொற்றொகுத்து 1960ஆம் ஆண்டில் திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (Dravidian Etymological Dictionary) வெளியிட்டனர். இதில் ஏறத்தாழ 5000 சொற்களுள்ளன. இது இன்றைய திரவிட மொழியாய்வாளர்க்குக் கருவி நூலாகப் பயன்பட்டு வருகிறது.

1959இல் சென்னைப் பல்கலைக்கழகம் திரவிட மொழிச்சொற்களை ஒப்பீட்டு முறையில் தொகுத்து திரவிட மொழிகளின் ஒப்பீட்டுச் சொல் அகரவரிசை (The Dravidian Comparative Vocabulary) வெளியிட்டுள்ளது. இஃது சொற்பிறப்பியல் அகரமுதலியன்றெனினும் இனச் சொல் ஒப்பீடு சொற்பிறப்பியல் அகரமுதலியின் ஒரு கூறுதலின் இதுவும் இவண் குறிப்பிட நேர்ந்தது.

தமிழில், இதுவரை, நிகண்டுகளும், அகராதிகளும், வெளிவந்தனவும் வெளிவாராதனவுமாக 300க்கு மேல் இருப்பினும்[6] தரமான சொற்பிறப்பியல் அகரமுதலி தம்முக்கு இல்லாமலிருப்பது ஒரு பெருங்குறையாக இருந்தது. இக்குறையை நிறைவாக்கும் வகையில் 1974ஆம் ஆண்டு மேத்திங்களில் தமிழக அரசு 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்' (Tamil Etymological Dictionary Project) ஒன்றை உருவாக்கி, மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராக அமர்த்தியுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி பதின்மூன்று மடலங்களாக வெளிவரவுள்ளது. இதில் தமிழின் இனமொழிகளான திரவிட மொழிகளில் மட்டுமன்றி இந்தைரோப்பிய மொழிகளிலிருந்தும் இனச்சொற்கள் காட்டப்படும். சொல்லின் வேரும் வரலாறும் விரிவாக ஆராயப்படும். தொகுப்பாளர், பணியாளர் ஆகியோரின் அமர்த்தத்தில் ஏற்பட்டுள்ள சுணக்கத்தாலும் கருவிநூல் கட்டடம் போன்ற பிற ஏந்துக் குறைவுகளாலும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டில் காலக்கழிவு நேர்ந்துள்ளதெனினும் அண்மையில் முதன் மடலத்தின் முதற்பகுதி அச்சேறும் நிலையிலுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் பதின்மூன்று மடலங்களும் வெளிவரின் தமிழ்மொழியின் பல்துறை வளர்ச்சி விரைவுபடுவதுடன் அனைத்துலக மொழியியல் ஆய்வாளர்க்குச் சொற்பிறப்பியல் துறையில் சிறந்த அகரமுதலி கிடைத்திருப்பதாக அகமகிழ்வர்.

இது, ஆங்கிலத்திலும் சொற்பொருள் விளக்கும் இருமொழியகரமுதலியாக இருப்பதால், அனைத்துப் பல்கலைக்கழக ஆய்வாளரும் எளிதில் பயன் கொள்வர்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு இன்றியமையாது வேண்டப் படுவன

அகரமுதலி தொகுக்கும் பணி எளிதன்று. அயராது உழைக்க வேண்டிய அகரமுதலித் தொகுப்பாளரை, 'அப்பாவி உழைப்பாளர்' என்று சான்சன்* பெருமகனார் ஒருமுறை குறிப்பிட்டார். அகரமுதலித் தொகுப்பாளர் அப்பாவித்தனமாக உழைப்பவராக இருக்கலாம். ஆயின் தன் அறியாமையை வெளிக்காட்டுபவராக இருத்தலாகாது. ஒருவர் எல்லா வற்றையும் பற்றிய அறிவு நிரம்பியவராக இருத்தலியலாது. அக்குறையைப் போக்குவதற்காகத்தான் அகரமுதலித் தொகுப்புப்பணி உலகில் எங்கு நோக்கிலும், ஒரு குழுவின் கூட்டுப் பணியாக அமைக்கப்படுகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலி ஒரு சிறப்பு வகை அகரமுதலியே. இதன் தொகுப்பாளர், தலைவர் ஆகியோர் தாய்மொழியில் நிகரற்ற புலமை யாளராக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட பன்மொழியறிவும் மொழிநூற் புலமையும், நடுநிலையோடு ஆயும் நோக்கும் நிரம்பியவராய் இருத்தல் வேண்டும். "சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பவர், எத்துணைப் பெரும்புலவரேனும், மொழியாராய்ச்சித் துறையில் நடுவுநிலைமை, அஞ்சாமை தன்னலமின்மை, மெய்யறியவா என்னும் நாற்பண்பும் இல்லாதவர் வேர்ச் சொற்களைத் தொகுப்பது, குருடன் கண்மருத்துவமும் செவிடன் இசை யாராய்ச்சியும் சப்பாணி தாண்டவப் பயிற்சியும் செய்வதொத்ததே. கல்வி வேறு; ஆராய்ச்சி வேறு" என்று மொழிநூல் மூதறிஞர் பாவாணர் கூறுகிறார்.[7]

எனவே சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்கு இன்றியமை யாத முதல் தேவை அத்துறையில் ஆர்வமும் புலமையும் நெடுங்கால ஆராய்ச்சிப் பட்டறிவும் கொண்ட அறிஞர் குழுவே.

இரண்டாவது தேவை அக்குழு செயற்பட வேண்டிய தெளிவான திட்டம். தெளிவான முன்னோக்குத் திட்டமில்லாத தால் எத்துணையோ அகரமுதலித் திட்டங்கள் அரைகுறையாக, அல்லது முழுமையாக வெளிவரினும் நிறைவில்லாதனவாக அமைந்து விடுகின்றன. இலத்தீன் மொழிக்குச் சொற்களஞ்சியம் (Thesaurus) தொகுத்த ஐந்து குழுவினர் 100 ஆண்டுகள் உழைத்து மூன்றில் இருபங்கு பணியைத்தான் முடித்தனர். யாழ்ப்பாணம் தவத்திரு ஞானப்பிரகாசர் தனக்குப் பின் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப்பணி தொடர ஒரு திட்டமும் செய்யாததால் அவர் மறைவுக்குப் பின் அப்பணி நின்றுவிட்டது. ஒழுங்கான திட்டத்தின் கீழ் முழுமையாகவும் நிறைவாகவும் வெளிவந்த முதல் அகரமுதலி ஆக்சுபோர்டு ஆங்கிலப் பேரகரமுதலி (Oxford Dictionary)தான் என்பர். இதில் 400 அறிஞர்கள் 75 ஆண்டுகள் பணியாற்றினர். அவர்கள் தொகுத்த 5 இலக்கம் சொற்களுடன் அகர முதலி 13 மடலங்களாக வெளிவந்தது. பூனாவில் தொகுக்கப்பட்டு வரும்

* "Lexicographer is an harmless drudge" (Johnson).

சமற்கிருதப் பேரகாமுதலி 27 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. அதற்குக் காலவரையறை வகுக்கப்படவில்லை. மேலும் மேலும் பண ஒதுக்கீடுகள் குவிகின்றன. பணி சுணக்கமுற வாய்ப்பே இல்லை. திட்டத்தின் தனிக் கூறுகளான பண ஒதுக்கம், தொகுப்பாளர் உழைப்பு, செயற்பாட்டு வகைமை ஆகியவை செம்மையாக அமைந்தால் திட்டம் திட்டமிட்டபடி நிறைவுறும்.

மூன்றாவது தேவை அகரமுதலித் தொகுப்பாளரின் களப்பணித் (field work) திறன். மொழிவழங்கும் எல்லாவிடங்களுக்கும் நேரிற்சென்று சொற்றொகுத்தல் களப்பணி எனப்படும். அவ்விடத்திற்குச் சென்றால் தான் அச்சொல் எப்பொருளில் வழங்குகிறது என்பதை வரையறுக்க முடியும். வெப்தர் (Webster) ஆங்கில அகரமுதலித் தொகுப்பாளர் ஆங்கில மொழி பேசப்படும் 46 நாடுகளுக்கும் நேரிற்சென்று சொற்றொகுத்தனர். தரமான ஆங்கில அகரமுதலித் தொகுப்பதில் ஆங்கிலேயரிடை ஒருகாலத்தில் ஒரு பெரும் போட்டி நிலவியது. அதனை 'அகராதிப் போர்' (War of Dictionaries) என்றழைத்தனர்.

சங்க அகரமுதலியில் 'தசகூலி' என்னுஞ் சொல்லுக்கு 'பயிரிடுந் தொழிலிற் கொடுக்கும் பத்துவகைக் கூலி' என்று பொருள் உள்ளதை நோக்கிச் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலித் தொகுப்பாளரும் அச் சொல்லுக்கு அதே பொருளைக் குறித்தனர். அச்சொல் எந்த வட்டாரத்தில் வழங்கும் வழக்கு என்பது குறிப்பிடப்படவில்லை. நெல்லையில் வழங்கும் அச்சொல் தச்சக்கூலி என்பதன் இடைக்குறை என்று பாவாணர் தெளிவு படுத்துகிறார். 'இந்த ஆண்டு விளைச்சல் தசக்கூலிக்கும் கட்டவில்லை' என்னும் உழவர் வழக்கை எடுத்துக் காட்டுகிறார். நேரிற்சென்று களப் பணி செய்தாலொழிய சொற்களின் செவ்விய பொருளுணர முடியாது என்பதற்கு இஃதொரு சான்றாகும்.

சூர்யாராயர் என்னும் வள்ளல் தன் செல்வம் முழுதும் தெலுங்கு அகரமுதலி தொகுப்பதற்கே செலவிட்டு இறுதியில் ஏழையானாராம். அவர் தொகுத்த தெலுங்கு அகரமுதலி 'சூர்யாராய ஆந்திர நிகண்டு' என்னும் பெயரில் எழு மடலமாக வெளிவந்தது. நாட்டுப்புறச் சொற்றொகுப்பில் ஆந்திரர் நல்ல ஆய்வுப்படைகளைத் தந்துள்ளனர். வேளாண்மை, கட்டடக்கலை, கொல்லுத்தொழில், மீன்பிடித் தொழில், நெசவுத்தொழில் ஆகிய தொழில் துறைகளில் வழங்கும் சொற்களைத் தொகுத்து ஒவ்வொரு தொழிலுக்கும் ஓரகராதியை ஆந்திரப் பல்கலைக்கழகத்தினர் (Dialect Dictionary of occupational Vocabulary என்னும் தலைப்பில் அண்மையில் வெளியிட்டுள்ளனர். பல மொழிகளில் வட்டார வழக்குச் சொல் அகரமுதலிகளும் புதிய கலைச்சொல் அகரமுதலிகளும் வெளிவந்து வண்ணமுள. மலையாள மொழியில் அகரமுதலித் தொகுப்பாளர் முதல் ஏழாண்டுகளைச் சொற்றொகுப்புக்கே செலவிட்டனர். அகரமுதலித் தொகுப்புப் பணியை,

1. களப்பணி — (field work)
2. ஆயத்தப்பணி — (preparatory work)
3. பதிப்புப்பணி — (Editing)
4. பிற்சேர்ப்பு மற்றும் திருத்திய வெளியீட்டுப்பணி — (Supplementary and revised editions)

என நான்காக அவர்கள் வகுத்துக் கொண்டனர். அகரமுதலித் தொகுத்தல் என்பது குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட வேண்டிய திட்டமாக இல்லாமல் நிலைத்த துறையாக இருக்க வேண்டியதன் இன்றியமையாமை உணர்ந்து மலையாள மொழிக்கு என்றும் நிலையான அகரமுதலித்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ‘மலையாள அகரமுதலித்துறை’ திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் ஒரு தனித்துறையாகச் செயற்பட்டு வருகிறது.

கன்னட அகரமுதலித் துறையினர் 1000 பக்கம் கொண்ட (மாணவர் பதிப்பு) கன்னட அகரமுதலியை வெறும் ஐந்து உருபாய் விலையில் வெளியிட்டனர். கன்னட அரசு பாதிச் செலவை ஏற்றது. அதன் விளைவாக $1\frac{1}{2}$ இலக்கம் அகரமுதலிகள் விற்பனையாயின. கன்னட அகரமுதலித் தொகுப்பாளர் கல்வெட்டுச் சொற்றொகுப்பிலும் நாட்டுப்புறச் சொற்றொகுப்பிலும் பெரிதும் ஆர்வம் காட்டினர். மெய்ப்பு (Proof) திருத்துங்கால் ஒவ்வொரு மெய்ப்பையும் இருபதுமுறை படிக்க வேண்டும் என்னும் கட்டாயத்தை ஏற்படுத்தினர். அகரமுதலி பிழையின்றிச் செவ்வனே வெளிவந்தது.

அகரமுதலித் தொகுப்புக்கு நான்காவது தேவை பன்மொழிப் புலமை நிறைந்த தொகுப்பாளர் குழு. சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்கு இது மிகவும் தேவை. பரோ எமனோவர் தொகுத்த திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் (Dravidian Etymological Dictionary) தகப்பன் என்னுஞ் சொல் ‘தகு’ என்னும் வேரிலிருந்து தோன்றியதாகத் தவறான முறையில் சொற்பிறப்பு காட்டப்பட்டுள்ளது.[8] பரோ எமனோவர் இருபதாண்டுகள் களப்பணி செய்தாலும் மொழிப்புலமையாளரொடு நெருங்கிய தொடர்பு கொண்டனர் என்று கூற முடியாது. தம்+அப்பன் = தமப்பன்—தகப்பன் எனத் தமிழ்ச்சொல் திரிந்து வழங்குவதை அவர்கள் உணரவில்லை.

தெலுங்குச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர்கள் எச்சரிக்கை என்னுஞ் சொல்லுக்கு ‘எழுச்சி+அறிக்கை’ என்பதை மூலமாகக் காட்டியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.[9] எச்சரிக்கை என்னுஞ் சொல்லின் மூலம் காண கன்னட வடிவம் என்ன என்று காண அவர்கள் மறந்துவிட்டனர். கன்னடத்தில் இச்சொல் எழுதருவிகெ (எழுந்த நிலை) என்றுள்ளது. இதன் பொருள் விழித்த நிலை என்பதாகும். தமிழில் இதன் மூலம் எழுதருகை என்றிருந்திருத்தல் வேண்டும். எச்சரிக்கை என்பதன் மூலம் எழுகை (விழிப்பு நிலை) என்பதே. இனமொழிப் புலமை நிரம்பாவிடின் அல்லது இனமொழிப் புலமையாளரின் துணை கொள்ளாவிடின் உண்மையான சொற்பிறப்பு காண்டல் அருமை என்பதற்கு மற்றொரு சொல்லையும் சான்றாகக் காட்டலாம்.

அங்காடி என்னும் தமிழ்ச் சொல் திரவிட மொழிகள் அனைத்திலும் வழங்குகிறது. தமிழில் முதன்முதன் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுத்த ஞானப்பிரகாசர் 'அங்கு' (வளைதல்) என்னும் வேரிலிருந்து இச்சொல் தோன்றியதாகக் கூறினர். மலையாள அகரமுதலித் தொகுப்பில் ஈடுபட்ட சூரநாடு குஞ்ஞன்பிள்ளை (அங்கம்-உடம்பு, ஆடுதல்-கூடுதல்) அங்காடி-உடம்புகள் கூடும் இடம் எனப்பொருள் கொண்டார்.[10] திரவிட மொழிகளில் பல்லாண்டுகள் ஆராய்ச்சி செய்துவரும் பாவாணர் ஒருவரே தம் நுண்மாண் நுழைபுலத்தால் 'அம்மு' (விற்றல்) என்னும் தெலுங்குச் சொல்லே (குமரிநாட்டுத் தமிழ்ச்சொல்) 'அங்காடி' என்பதன் மூலம் எனக் கண்டறிந்தார்.[11] ஆதலால், சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்குப் பன்மொழிப்புலமை, அடிப்படைத் திறன்களில் ஒன்று என அறியலாம்.

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு ஐந்தாவது தேவை தக்க கருவி நூல்கள்.

1. அனைத்து மொழிகளிலுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள், சொற்பிறப்பியல் நெறிமுறைகள் (Principles of Etymology).

2. தமிழின் இனமொழிகளில் வெளிவந்துள்ள அகரமுதலிகள், கல்வெட்டுகள், நாட்டுப்புறச் சொற்றொகுப்புகள், நாட்டுப்பாடல்கள், பல்துறை கலைச்சொற்கள், இலக்கணம், மொழிநூல் தொடர்பான நூல்கள்.

3. சமற்கிருத, பாலி, பிராகிருத அகரமுதலிகள்.

4. அகரமுதலித் தொகுப்புத் தொடர்பான கருத்தரங்க ஆய்வேடுகள்.

5. வெளிவந்துள்ள அனைத்து அகரமுதலிகள், நிகண்டுகள், இலக்கண, இலக்கிய, கல்வெட்டு, சொல்லாராய்ச்சி நூல்கள்.

6. வட்டார வழக்கு, நாட்டுப்புறத் தொழிற்சொல் தொகுப்பு தொடர்பான நூல்கள்.

7. அயல்நாட்டுத் தமிழரிடை வழங்கும் சொற்கள் தொடர்பான நூல்கள்.

8. தொலைநாடுகளில் வழங்கும் திரவிட இனமொழிகளில் சொற்றொகுப்பு நூல்கள். (பாசுகு மொழி, ஆத்திரேலிய மொழி போன்றவை).

9. ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அகரமுதலித் தொடர்பான நூல்கள்.

10. இலத்தீனம் எபிரேயம் போன்ற தொன்மொழி ஆய்வேடுகள், அகழ்வாராய்ச்சியாளரின் தொன்முது நாகரிக எழுத்துச் சான்று தொடர்பான நூல்கள்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு ஆறுவதுதேவை சொற்பிறப்பியல் நெறிமுறைகள் (Principles of Etymology).

சொற்பிறப்பியல் அகரமுதலிக்குழு, களப்பணி, ஆய்த்தப்பணி ஆகிய இரு பணிகளும் முடிந்தவுடன், பதிப்புப்பணியை மேற்கொள்ளுமுன், சொற்பிறப்பியல் நெறிமுறைகளை முழுமையாக வகுக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் வேரும் வரலாறும் கண்டு வரைந்த முறை சரியா என்று சொற்பிறப்பியல் நெறிமுறைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே பதிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். சொற்பிறப்பியல் நெறிமுறைகளைத் தனி நூலாக வெளியிட வேண்டும். ஒலிப்பு, நெறியீடுகள் (Phonetic laws) முதற்பகுதியாகவும், அந்நூலில் சொற்பிறப்பியல் நெறிமுறை இரண்டாம் பகுதியாகவும், பொருட்பாட்டுப்புடைபெயர்ச்சி (Semantic changes) மூன்றும் பகுதியாகவும் இடம் பெறவேண்டும்.*

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு ஏழாவது தேவை ஒலிப்பு முறை (pronunciation) வரையறை. தமிழைக் கற்க விரும்பும் வேற்றுமொழியாளர்க்கு ஒலிப்புச் சிக்கல் தோன்றுதபடி ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் ஒலிப்பு ஆங்கிலத்தில் சாய்ப்பு எழுத்துகளில் தரப்படுகிறது. எனினும், ஒரே தமிழ்ச் சொல் ஒலிப்பு வேறுபாட்டில் பொருள் வேறுபடும் நிலையில் இரு சொற்களாகக் காட்டப்பட வேண்டியுள்ளது.

(எடுத்துக் காட்டு)

1. தொகைச் சொல்லில் செங்கோல் (Sengōl) நேர்மையான ஆட்சியின் அடையாளமான கோல்.

‘க’ கர ஒலிப்பு வேறுபாடு—செங்கோல் (Senkōl)

2. இனமெல்லெழுத்தடுத்த மஞ்சள் (Manjal) ‘ja’ ஒலிப்பு.

‘ச’ கர ஒலிப்பு வேறுபாடு—அரசஞ்சண்முகன் (Arasan Chanmugan) ‘cha’ ஒலிப்பு. எனவே தனிச் சொற்களிலும் கூட்டுச் சொற்களிலும் ஒலிப்பு வரையறை தெளிவாக்கப்பட வேண்டும்.

சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு எட்டாவது தேவை மூலம் காண்பதிலும் மூலச் சொல்லின் வடிவ மீட்டமைப்பிலும் மரபு பிறழாத நடுவு நிலைமையும் புலமை நுட்பமும்.

---

* அகராதித் தொகுப்போர் சொல்லை மூவகை நிலைகளில் நோக்குவர் அவை:
1. Phonological aspect (word form) சொல்வடிவம் (ஒலிப்பு)
2. Grammatical aspect (word) சொல் (இலக்கணவகை)
3. Lexical aspect (lexeme) சொல்லின் பொருட்பாட்டுநிலை.

—Matthews, 1974, Morphology, Cambridge

தமிழும் தமிழினச் சொற்களும் சொல்லீற்றில் வல்லின மெய்யீறு கொள்ளாதவை. இது தமிழ் மரபு. இஃதறியாமல் வடிவ மீட்டமைப்பின் போது வேர்ச்சொல்லுக்கோ வடிவமீட்டமைப்புச் சொல்லுக்கோ வல்லின மெய்யீறு காட்டுதல் மரபுக்கு முரணாகும். அஃது எக்காலும் உண்மையாகாது. தவத்திரு ஞானப்பிரகாசர் அஃகுதல் என்னுஞ் சொல்லிற்கு 'அஃக்' என மெய்யீற்று மூலங் காட்டுதலும், பரோ எமனோவர் தந்தை என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இனமான பிற திரவிட இனச் சொற்களை யெல்லாம் ஒப்பிட்டு நோக்கித் தெலுங்கர் தந்தையை தன்றி என்பதால் அனைவர்க்கும் பொதுவான மூலமாக 'தந்த்' அல்லது 'தன்றீ' எனக் காட்டுவதும் தமிழ்ச் சொற்பிறப்பியல் பொறுத்தவரை எவ்வகையிலும் பொருந்தாது. அல் + திணை = அஃறிணையாயது போல அஃகு என்பதற்கு 'அல்கு' என்னும் வினையே மூலமாதல் வேண்டும். முன் + உ = முந்து, பின் + உ = பிந்து என்றாற்போல் தன் + ஐ = தந்தை ஆகியது. (ஒ. நோ. நும் + ஐ = நுந்தை).

வண்ணனை மொழிநூலார் தமிழ்போன்ற தொன்மொழியையும் நேற்றுப் பிறந்த கோண்டு மொழியையும் சமமாக மதித்து அனைத்து மொழிக்கும் தாயான மொழிக்குப் பொதுவாக; 'முந்துதிரவிடம்' (proto-Dravidian) எனப் பெயரிட்டு, மூலங்காணும் முயற்சியிலீடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. இது தமிழ் மொழியின் ஆராய்ச்சியைத் திசைதிருப்பும் முயற்சியா அல்லது தொன்மொழியின் வரலாற்று அடிப்படையை அறியாததன் விளைவா என்பது அவர்களே தம்மைக் கேட்டுக் கொள்ள வேண்டிய வினா.

வண்ணனை மொழிநூலார் தமிழ் தவிர்ந்த எம்மொழியிலாயினும் சொல்லாராய்ச்சி செய்யலாம். தமிழில் மட்டும் அவர்கள் பார்வை படாமலிருந்தால் அதுவே அவர்கள் தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாக இருக்கும். நீலகிரி மலையிலுள்ள பழங்குடிகளில் ஒருசாரார் "லைக்கிறார், றாங்கிவா" என்று பேசுவதைக் கேட்கும் வண்ணனை மொழிநூலார், 'லைக்கிறார்' என்பது அழைக்கிறார் என்பதன் திரிபு என்பதையும் 'றாங்கிவா' என்பது இறங்கிவா என்பதன் திரிபு என்பதையும் உணராமல், (லை = கூப்பிடு, றா = வா) 'லை' 'றா' என்பவற்றையே அச்சொற்களின் முதனிலைகளாகக் கொள்ள முன்வருகின்றனர். ஒரு இனமொழியை அதற்குக் காலத்தால் முந்திய தாய்மொழியோடு இணைத்துப் பார்த்துச் சொல் திரிந்த வடிவத்தை உணரும் வரலாற்றறிவை வண்ணனை மொழிநூல் வழங்குவதில்லை. வரலாற்று மொழிநூல் கற்றார் அன்றி, வண்ணனை மொழிநூலார் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புக்குச் சிறிதும் உதவார் என்பதற்கு இஃது இங்கே கூறப்படுகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளரின் பணி வேரும் வரலாறும் (Origin and derivation) காண்பதோடு முடிவடைவதில்லை. ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை ஒவ்வொருமொழியிலும் ஐந்திலொரு பங்கு சொற்கள் வழக்கழிந்து விடுகின்றனவாதலின், அவ்வாறு வழக்கழிந்த

சொற்களை மீட்டமைத்து, அச்சொற்கள் பிற இனமொழிகளில் எவ்வாறு திரிபுற்று வழங்குகிறது என்று நாட்டுவதன் வாயிலாக மூலமொழியின் தொன்மையும் தாய்மையும் தலைமையும் நிறுவப்படுவதில்தான் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளனின் திறமை அடங்கியிருக்கிறது.

தெலுங்கில் 'நூன' என்னுஞ்சொல் எண்ணெய் (எள்+நெய்) என்று பொருள்படுகிறது. 'நூ' என்னுந் தமிழ்ச் சொல்லுக்கு 'எள்' என்றுபொருள். நூ+நெய் (எள்+நெய்) நூ நெய் என்னுந்தமிழ்ச் சொல்லே தெலுங்கில் 'நூன' எனத் திரிந்துள்ளது. வழக்கழிந்த நூ நெய் என்னுந் தமிழ்ச்சொல் தமிழ் அகரமுதலியில் இடம் பெற்றாலொழிய திரவிட மொழிகளுக்குத் தமிழே தாய் என்பதை எங்ஙனம் நிறுவ இயலும்? தெலுங்கில் 'வல்லகாடு' என்னுஞ்சொல் இடுகாட்டைக் குறிக்கிறது. கன்னடத்தில் இது 'பெள்காடு' என வழங்குகிறது. பழந்தமிழில் இதன் வடிவம் 'வெள்காடு' (ஆள் இயங்காக் காடு, இடுகாடு) என மீட்டமைத்தல் இன்றியமையாததன்றோ? இங்ஙனம் மறைந்துபோன தமிழ்ச்சொற்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றை அகழ்ந்தெடுக்கும் முயற்சியில் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் ஈடுபட வேண்டும்.

சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர்க்குள்ள கடமை பெரிது. உள்ள சொற்களுக்கு மூலங்காணல், புதிய சொற்களைத் தொகுத்தல், கலைச் சொற்களைப் படைத்தல், மறைந்துபோன சொற்களை வடிவ மீட்டமைத்தல் ஆகிய நான்கும் பாங்குறச் செயப்படின் அகரமுதலி சிறந்ததாக அமையும்.

மொழிவளர்ச்சிக்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி எவ்வகையில் துணை நிற்கும்?

போர்வீரனுக்குச் செவ்விய படைக்கலங்கள் வெற்றிக்குத் துணை புரிவது போல பல்வேறு துறைகளில் அறிவை வளர்த்துக் கொள்ள விழையும் மொழியினர்க்கு, அம்மொழியில், அவ்வத்துறை தொடர்பான கலைச்சொற்கள் பெரிதும் துணைநிற்கும். தக்க சொல்வளம் தாய்மொழியில் கிட்டாதவிடத்து வேற்றுமொழியையே தன்அறிவு வளர்ச்சிக்குத் துணை கொள்ள நேரும்; தாய் மொழியின்பால் பற்றுக் குறைபடும். நல்ல அகரமுதலி மக்களைச் செவ்விய மொழிப்பாங்குடையவராக மாற்றும்.*

தாய்மொழியே கல்வி வாயிலாக அமையும் நிலையில் தாய்மொழியின் வெற்றிக்கும் பற்றுக்கும், தாய்மொழியில் ஊற்றூய்ப் பெருகும் சொல்வளம் மிகவும் இன்றியமையாதது. அத்தகு சொல்வளக் களஞ்சியமாக அகரமுதலிகள் விளங்கும். மேலும் புதிய சொற்கள் வேண்டுமிடத்து வேரும் மூலமும் காட்டிப் பல்லாயிரம் புத்தம்புதிய படைப்புச் சொற்களை உருவாக்கச்

* Dictionary might bring people closer to the perfect language (Encyclopaedia Britannica).

சொற்பிறப்பியல் அகரமுதலி வழிகாட்டும். ஆதலால், மொழிவளர்ச்சிக்கு ஏனை அகராதிகளைவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி ஆணிவேராக அமைகிறது.

செருமானிய மொழிக்குக் கிரிம் என்பவர் சொற்பிறப்பியல் அகர முதலி உருவாக்கித் தந்ததன் விளைவாக செருமானிய மொழியின் இலக்கிய வரலாறு எழுத அது மிகவும் பயன்பட்டதாகக் கூறுகின்றனர்.

சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்குவதன் வாயிலாக அம் மொழியின் சொற்பிறப்பியல் நெறியீடுகளை அறியலாம். ஒரு மொழியின் முன்மை, தொன்மை, தாய்மை, தலைமை ஆகியவற்றை அறியலாம். எவ் வெம்மொழியிலிருந்து சொற்கள் எவ்வெம் மொழிக்குச் சென்றுள்ளன என்னும் உண்மைகளையும் எக்காலகட்டத்தில் இம்மாறுதல்கள் தோன்றின? ஏன் தோன்றின? என்னும் வரலாற்றுப் பின்னணிகளையும் அறியலாம். இதனாற்றான் சோவியத்து நாட்டு வரலாற்றாசிரியர் கோந்தரதோவ் என்பவர் 'மொழியாய்வாளர்தான் வரலாற்றாசிரியர்க்கு நிறைந்த செய்திகளைச் சொல்ல முடியும்' என்கிறார்.[12]

அகரமுதலியைச் சொல்லின் பொருளறிய மட்டும் பயன்படுத்துகிறோம். அச்சொல்லின் மூலமென்ன என்று அறிவது மொழியின் பயன்பாட்டு நிலையில் நோக்குவார்க்குத் தேவையற்றது எனச் சிலர் கூறலாம். சொல்லின் மூலமறிந்து பேசுவோர் பொருளாழத்துடன் பேசவும் எழுதவும் இயலும் என்பதை அவர் அறியார் என்க.

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உலகமொழிகளில் வெளிவந் துள்ள ஏனையகரமுதலிகளிலும் வேறுபட்டது. இனச்சொல்லும் அடிப் படைச் சொல்லின் மொழிமூலமும் மட்டும் ஏனைச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் காட்டுகின்றன. ஆனால் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி இனச்சொல் மூலச்சொல் காட்டுவதோடு அச்சொல்லின் வேர் மூலத்தையும் காலப்போக்கில் சொற்பிறப்பியல் நெறிமுறைகளுக்கிணங்கக் கொள்ளும் சொற்றிரிபுகளையும் காட்டும். ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் glad, glitter, gleam என்னும் சொற்களுக்கு 'gl' என்பது வேர்ச்சொல்லாகலாம் என உன்னிப்பாக உய்த்துணர்ந்தாலும் இலக்கண வகையில் அதைத் தனித்த வேராகக் காட்ட அம்மொழியில் சான்றில்லை. ஆதலால் அவர்கள் வேர் மூலம் காட்டத் தயங்குகின்றனர். ஆனால் தமிழில் ஒளிர், ஒளி போன்ற வினைகளுக்கு 'ஒள்' என்றும் வேர்மூலம் காட்ட முடிகிறது. அதனாற்றான் உலக மொழிகளுள் தமிழில் செவ்விய முழுமையான சொற்பிறப்பியல் அகரமுதலி வெளிவர வாய்ப்புள்ளது. ஒருநாட்டின் வரலாற்றைப்போல் சொல்லின் வரலாறும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்புகள்

1. அ. Encyclopaedia Britannica.

1. ஆ. சுந்தரசண்முகனார், 1971, தமிழ் அகராதிக்கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.

2. 'The etymologist might be content to give the earliest recorded date of each word, with its previous history whether of English or Germanic descent or admitted to citizenship from other languages, thus accounting for their origin and formation'.
   —(*C. T. Onion*)

3. 'Etymology of a word means briefly, an account of the history of its form, as far back as we can get it and an account of the chief developments of meaning which it has undergone.
   —(*Webster*)

4. Etymological Dictionary of the English Language.
   —(*by Walter W. Skeat*)

5. Rev. Gnanaprakasar, 1938. A Comparative and Etymological Lexicon of the Tamil Language.
   (*Preface-12*)

6. Subramaniam, S. V., 'Types of Tamil Lexicography' (Paper) Workshop-cum-Seminar on Lexicography—Seminar Papers, 1977, Kerala University, Trivandrum.

7. தேவநேயப்பாவாணர், ஞா., 1976, வேர்ச்சொற் கட்டுரைகள் (முன்னுரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-1.

8. Dravidian Etymological Dictionary (2435).

9. Telugu Etymological Dictionary, 1978, Andhra University, Waltair.

10. Malayalam Lexicon, 1965, Kerala University, Trivandrum.

11. 'To this extent, at any rate, the old School philologist is better fitted as a lexicographer than a modern linguist who has not acquired the descipline of textual criticism'.
    —*Lexicography (P. 15), 1970, Annamalai University.*

12. Alexander Kondratov, 1974, Riddles of Three Oceans (P. 9,) Progress Publishers, Moscow.

பாரதி: பாரதிதாசன் - ஒரு பார்வை

டாக்டர் மா. செல்வராசன்
விரிவுரையாளர் தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை-600005

இருள்மூடிக் கிடந்த நம் நாட்டுக்கு இருபதாம் நூற்றாண்டு ஒரு விடியலாகப் பிறந்தது. புதியதோர் உலகம் புறப்பட்டது. ஒவ்வொரு துறையிலும் ஒரு புத்தொளி படர்ந்தது. கவிதையைப் பொறுத்தவரை புதுமைக்குக் கால்கோள் நடந்தது. இன்று கண்கொள்ளாக் கவின் மாளிகையாக அது காட்சி அளிக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் பாரதியும் பாரதிதாசனும் எனக் கணக்கிடுவது கைமெய்யாகும். ஒன்றி லிருந்து ஒன்று தோன்றுவது உண்மையானல் பாரதியிலிருந்து பாரதி தாசன் உருவானது உண்மையே! தாய் எட்டடி; குட்டி பதினாறடி என்பது தாளச் சொல் அல்ல. எழு ஞாயிறாக எழில் ஞாயிறாகப் பாரதி இலங்கினார் என்றால் வளர்கதிராக, வானச் சுடராக விளங்கியவர் பாரதிதாசன்.

பாரதியார் என்பதற்குப் பைந்தமிழ்ப் புலவர் என எளிதாக விடை பகரலாம். ஆனால் பாரதி வெறும் புலவர் மட்டும் அல்லர். புதிய கவிதை ஞாலத்தின் உதய ஞாயிறு. பாரதி யாரெனச் சரியாக மதிப்பிட்டவர் பாரதிதாசனே! தமிழ்த் தேர்ப்பாகன், தமிழ்த் தேனி, சிந்துக்குத் தந்தை, கவிதைக்குயில், கவிமுரசு, பாடிவந்த நிலா, கற்பூரச் சொற்கோ, கற்பனை ஊற்று, கதைப் புதையல், திறம்பாடும் மறவன், அறம்பாடும் அறிஞன், சாதிக்கு மருந்து, மதங்களை எரிக்கும் மாநெருப்பு, அணையா விளக்கு எனப் பாரதியின் பண்புகளைப் படைத்துக் காட்டுகிறார்[1] தமிழால் பாரதி தகுதி பெற்றார் என்றும்; தமிழ் பாரதியால் தகுதி பெற்றது என்றும் தாங்க வொண்ணாப் பெருமிதம் கொள்கிறார்.[2] பாரதிதாசனின் இந்தக் கணிப்புப் பழுதிலா உண்மை. எதையும் தமிழோடு இயைத்துப் பார்ப்பவர் பாரதி தாசன். எனவேதான் பெண்ணின்பம் பெரிதெனப் பெரும்பாலோர் பேசினாலும், தமிழின்பமே அதனினும் தகுதி மிக்கது எனப் பாடுகிறார்[3].

சுப்பிரமணியன் என்னும் தொடக்கநாள் பெயரினும், பாரதி என்னும் பட்டப் பெயரே இன்று நிலைத்து விட்டது. அதுபோல் சுப்புரத்தினம் என்னும் பெயர் மறைந்துவிட்டது; பாரதிதாசன் என்னும் பற்றால் விளைந்த பெயரே இன்று மணக்கிறது. புனைபெயர்கள் இருவருக்கும் பொருத்தமுற அமைந்து விட்டன. எட்டையபுர மன்னர் பாரதி என்னும் பட்டப்பெயரை வழங்கினார். அப்போது பாரதிக்கு அகவை பதினொன்று. 1919 இல், அதாவது தமது இருபத்தெட்டாவது வயதில் பாரதிதாசன் என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டார் சுப்புரத்தினம்.

புதுவையிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர் பாரதிதாசன். ஆனாலும் புயல்போலக் கருத்துகளையும் கவிதைகளையும் பொழிந்தவர். பாரதியார் புதுவையில் தங்கியது பத்தாண்டுகள் மட்டுமே! ஆனால் அங்கேயே அவருடைய கவிதை வாழ்வின் பெரும்பகுதி கழிந்தது.

பாரதிதாசன் முப்பத்தேழு ஆண்டுகள் பள்ளிக் கூடத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு கொண்டவர். ஆசிரியப் பணியில் அவருக்கு அயர்வு இல்லை. ஆனால் பாரதியார் மூன்று மாத காலத்தில் தமிழாசிரியர் வேலைக்கு மூட்டை கட்டி விட்டார். மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைவிட, மக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதையே அவர் மதித்தார்; விரும்பினார். எனவே இதழியல் துறையில் இறங்கினார். ஏடுகளின் ஆசிரியர் ஆனார்.

இளமையில் காசி, அலகாபாத் என இடம் பெயர்ந்து இந்தியாவின் வடபகுதிகளில் வாழ்ந்தவர்; அங்கே பயின்றவர் பாரதி. வடமொழி ஆங்கிலம் இரண்டிலும் வளமான புலமை பெற்றார். இந்தியும் வங்காளமும் அறிந்தார். இந்தப் பன்மொழிப் புலமை அவருக்குப் பரந்த அறிவைக் கொடுத்தது. பிறமொழி இலக்கியங்களின் பெருமையை உணர்ந்து சிலவற்றைத் தமிழில் பெயர்த்தார். பாரதியார் ஒரு நல்ல மொழி பெயர்ப்பாளர் என்பதைப் பலரும் மறந்து விடுகின்றனர். 'மெம்பர்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்காமல் அவர் தவித்தது ஒரு சுவையான ஆராய்ச்சி.

> நடுவிலே ஒரு ரசமான வார்த்தை. மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். அவயவி சரியான வார்த்தை இல்லை. அங்கத்தான் கட்டி வராது. சபிகன் சரியான பதந்தான். ஆனால் பொதுஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் கண்டுபிடித்துக்கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன். 'உறுப்பாளி' ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்? கடைசியாக மெம்பர் என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன் (4)

இத்தகு பிறமொழிப் புலமை பாரதிதாசனுக்கு இல்லை. அது ஒரு குறை அன்று. அதுவே கூட அவருக்குத் தனித்தன்மையைத் தந்துள்ளது எனக் கூறலாம். ஏனெனில் பாரதி பெற்றிருந்த பன்மொழி அறிவால் பிறமொழி இலக்கியங்களின் தாக்குரவை அவர் படைப்புகளில் காண முடிகிறது. வியாசர், காளிதாசர், தாகூர், செல்லி ஆகியோரிடம் மிகுதியான ஈடுபாடு கொண்டவர் பாரதி. செல்லியிடம் அவருக்கிருந்த பற்றே செல்லிதாசன் எனப் புனைபெயர் வைத்துக் கொள்ளுமாறு அவரைத் தூண்டிற்று. பாரதி, செல்லிதாசன் எனப் பெயர் சூடிக்

கொண்டதைப் பக்கமிருந்து பார்த்த கனக சுப்புரத்தினம், தமது பற்றைப் புலப்படுத்தும் வண்ணம் பாரதிதாசன் எனப் பெயர் வைத்துக்கொண்டார். எனவே பெயரிலேயும் பாரதிதாசனுக்குப் பாரதி வழி காட்டியுள்ளார் என அறிகிறோம்.

பாரதியிடம் பாரதிதாசன் அறிமுகமானது ஒரு சுவையான நிகழ்ச்சி. அது பற்றிப் பாரதியே எழுதியுள்ளார். அது ஒரு கதைபோல் விறு விறுப்பாக அமைந்துள்ளது.[5] தம்மை வந்து வணங்கிய பாரதிதாசனை 'எழுக நீ புலவன்' என்று வாழ்த்தியதாகப் பாரதி குறிக்கிறார். தமிழுலகம் முழுதும் விண்ணளந்தது போல் தலை சிறந்த புலவராக எழுந்து விட்டார் பாரதிதாசன்.

பாரதியுடன் பழக்கம் ஏற்பட்ட பிறகே ஊரறிந்த புலவராகிறார் பாரதி தாசன். அப்போது அவர் பாடிய பாட்டு[6] இன்றைக்கு ஆராய்ந்தாலும் அருமையானது. புலவராக மட்டும் அறிமுகப்படுத்தாமல் புது உலகத்தையும் தமக்குக் காட்டியதாகப் புகல்கிறார் பாரதிதாசன். முப்பது வயது வரையில் முன்னேற்றத்தை அறியாமல், பழமைக் காட்டில் திரிந்த தமக்குப் பாதை காட்டியவர் பாரதி என்கிறார்.

வெண்பா முதலிய எழுதும் என்கை
வண்ணம் பாடிக் கொண்டிருக்கும் வாய்
முப்பதாண்டு முடியும் வரைக்கும் நான்
எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?
கடவுள் இதோ என்று மக்கட்குக் காட்டிச்
சுடச்சுட அவனருள் துய்ப்பீர் என்னும்
ஆயினும் கடவுள் உருவம் அனைத்தையும்
தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்
பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினர்[7]

இவ்வாறு ஒப்புதல் தந்து உரைக்கிறார் பாரதிதாசன். ஆனாலும் பாரதியின் மறுவடிவம் எனப் பாரதிதாசனைச் சொல்ல முடியவில்லை. புதுமைப் பித்தன் சொல்வது போலத் தமது நோக்கத்தில் பாரதிக்கு மாறுபட்டவர் பாரதிதாசன்[8]

பாரதி ஒரு விடுதலைப் பாவலர். இந்திய விடுதலை அவரது இதயத் துடிப்பாக இருந்தது. அரசியலில் அவருக்கு ஆர்வம் மிகுதி. சமூகக் கேடுகளையும் தாக்கிப் பாடினர். ஆயினும் அது இரண்டாவது இடத்தையே பெற்றது.

பாரதிதாசனும் ஒரு விடுதலைப் பாவலரே. ஆனல் தமிழ் விடுதலையே அவருக்குத் தலையாயதாகத் தெரிந்தது. பாரதியினும் மிகுதியாகச் சமூகக்

கேடுகளைப் பாடினார். தமிழே அவருக்குச் சமூகம்.[9] எனவே சமூக விடுதலை அவர் பாடல்களில் முதல் இடத்தைப் பெறுகிறது.

எளிய சொற்களில் பாட வேண்டும்; தெளிவாகப் பாட வேண்டும்; மக்களுக்குப் புரியும் வகையில் பாட வேண்டும். மக்களைப் பாட வேண்டும்; அதன் வாயிலாக அவர்கள் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உணர்வுக்குத்தான் பாரதி வழிகாட்டியாக அமைகிறார். உடன்கால அல்லது சமகால உணர்ச்சி ஓர் இலக்கியப் படைப்பின் உயிர் என்பதை அவர் உணர்த்தினார். ஆனால் அந்த உணர்ச்சி இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று பாரதி வரையறுக்கவில்லை. கண்மூடித்தனமாகப் பாரதிதாசனும் பாரதியின் காலடிச் சுவட்டில் நடந்துவிடவில்லை. அப்படிச் சென்றிருந்தால் ஒரு மாபெரும் புரட்சிக் கவிஞனைத் தமிழகம் பெற்றிராது.

சக்தி வழிபாட்டில் தமது உயிரையே வைத்திருந்தார் பாரதி. அவர் ஒரு சக்திப் பாடகர். எவ்வளவோ முற்போக்காளராக இருந்தும் தமது தேவைகளைப் பராசக்தியிடம் இரந்து நிற்கும் பழமைப் பிடிப்பாளராகவே விளங்கினார்.

> காணிநிலம் வேண்டும்—பராசக்தி
> காணிநிலம் வேண்டும்[10]

என்ற பாட்டிலும்,

> சொல்லடி சிவசக்தி—எனைச்
> சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
> வல்லமை தாராயோ—இந்த
> மாநிலம் பயனுற வாழ்வதற்கே[11]

என்ற பாட்டிலும் தமக்கு மீறிய சக்தி ஒன்று இருப்பதை உருவகப் படுத்துகிறார். பாரதியிடம் இருந்த பற்றாலும் ஏற்பட்ட பழக்கத்தாலும் பாரதிதாசனும் தொடக்கத்தில் சக்தி வழிபாட்டைச் சார்ந்திருந்தார். 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' எனப் பாடினார் பாரதிதாசன். அந்தச் சக்தி, தெய்வ சக்தி அல்ல மக்கள் சக்தி என்பதை மிக விரைவில் உணர்ந்து கொண்டார்.

> சிந்தனா சக்தி சிறிதும் இன்றித்
> தந்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி
> ஊறும் பகுத்தறிவை இல்லாது ஒழித்துவிட்டுச்
> சாறற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
> பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கியே அந்தக்
> கற்கள் கடவுள்களாய்க் காணப்படும் அங்கே[12]

கடவுள் ஒரு கற்பனைப் படைப்பு என்பதைப் பகுத்தறிவுப் பார்வையால் கண்டு கொண்ட பாரதிதாசன் மேலும் பாடுகிறார்.

மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில்! ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும்
மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ [13]

என்று மக்கள் உழைப்பை மாண்புறுத்திக் காட்டுகிறார். ஆனால் பாரதியோ,

மூட நெஞ்சே, முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னும் மொழிவேன்
தலையில் இடிவிழுந்தால் சஞ்சலப் படாதே
ஏது நிகழினும் நமக்கேன் என்றிரு
பராசக்தி உளத்தின்படி உலகம் நிகழும் [14]

என்று உலக இயக்கத்தையே பராசக்தி உள்ளத்தின் விருப்பத்திற்கு உரியதாக்குகிறார். இருவரிடையேயும் இந்த முரண்பாடு எப்படித் தோன்றியது?

பாரதி ஒருவகையில் ஆரியப் பண்பாட்டை அரங்கேற்ற விழைகிறார் என்பது பழுதன்று. அதற்குக் காரணம் இருக்கிறது. வடமொழிப் புராணங்களும் வேத உபநிடதங்களும் கற்றவர் அவர். சமற்கிருத இலக்கியங்களில் மனம் தோய்ந்தவர். அவருடைய அடிமனத்தில் அவை படிந்துவிட்டன. அவற்றின் தாக்குரவு தவிர்க்க முடியாதது. சமயத் திலே அவருக்கு நம்பிக்கை இருந்தது. மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் மாண்புடையது மதம் என நம்பினார். சமயத்தின் பொய்ம்மை, போலிமைகளையே அவர் தாக்குகிறார். ஆனால் பாரதிதாசன் தமிழ்ப் பண்பாட்டின் வார்ப்பாகி விட்டார். தமிழ் மட்டும் அறிந்தது அவருக்கு இந்தத் தனித்தன்மை ஏற்பட ஒரு காரணம். தமிழரின் பண்பாடு, கலை, முன்னேற்றம், மொழி ஆகியவற்றின் கலப்புக்கும் அழிவுக்கும் காரணம் ஆரியமே என்னும் போக்கில் பாரதிதாசன் சிந்திக்கத் தொடங் கினார். அப்போது தமிழ் நாட்டிலே தோன்றியிருந்த வேகமான ஆரிய எதிர்ப்பியக்கம் பாரதிதாசனுக்கு ஒருவிசை ஆயிற்று.

வியாசரின் மகாபாரதத்திலிருந்து ஒரு பகுதியை மட்டும் எடுத்துப் பாஞ்சாலி சபதம் எனப் பாரதி பாடியதற்கு உடன்கால உணர்ச்சி ஒரு காரணம் என உரைப்பர். இருந்தாலும் அவருடைய இதயத்தில் இருந்த பழங்கால ஆரியப் பண்பாட்டின் ஈடுபாடு பெருங்காரணம் எனக் கூற வேண்டும். கண்ணன் பாட்டும் வடமொழிப் புராணங்களின் செல்வாக் கால் தோன்றியது எனல் பொருந்தும். ஆனால் பாரதிதாசன் சிலப்பதி காரத்தை, கண்ணகி புரட்சிக் காப்பியம் என்றும், மணிமேகலையை மணிமேகலை வெண்பா என்றும் புதுவகையில் பாடியுள்ளார். பழைய காப்பியங்களைக் காலத்திற்கு ஏற்றவாறு பாடலாம் என்னும் ஒரு பண்பை மட்டுமே பாரதியிடமிருந்து பாரதிதாசன் பெற்றுக் கொண்டார். முன்னவர் ஆரியப் பண்பாட்டில் (பிற்காலத்தில் அதுவே பாரதப் பண்பாடு எனப் பெயர் மாற்றம் பெற்றது) மூழ்குகிறார். பின்னவர் தமிழ்ப் பண்பாட்டைத்

தழுவுகிறார். பாரதப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டைப் பார்க்கிறார் பாரதி. அவர் தமிழ்ப்பண்பாட்டிற்கு எதிரி அல்லர். ஆனால் பாரதி தாசன் ஆரியப் பண்பாட்டிற்கு எதிரானவர். பாரதப் பண்பாடு என்பது உருவாக்கப்பட்ட ஒன்று; உருவான ஒன்று அல்ல என்பதை உணர்ந்தவர். அதையே உரைத்தவர். அதே நேரத்தில் தமிழ்ப் பண்பாடு தலை சிறந்தது என்பதை ஊத்துப் பாடுவதில் உறுதிமிக்கவர்.

இந்தியநாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்ததை எண்ணி எண்ணிப் பொங்கியவர் பாரதி. அடிமைத் தன்மையை அடியோடு வேரறுக்க அவா வியவர் அவர். எனவே உலகில் எந்த நாடு விடுதலை பெற்றாலும் உணர்ச்சி கொண்டு பாடுவார். தளையறுப்பதில் அவருக்கிருந்த தலையாய வேட்கையை இது காட்டும். நாட்டு விடுதலையில் அவருக்கு அவ்வளவு நாட்டம். அதனாலேயே அவர் நாடு கடத்தப்பட்டது போலப் பத்தாண்டுகள் புதுவையில் வாழ நேர்ந்தது. அதனால் அவர் பட்ட தொல்லைகளும், துயரங்களும் அளவில. ஒருகொள்கைக்காக வாழ்ந்ததால், கதிரவன் மறையாத கடும் பேராசைத் தமது கவிதையால் எதிர்த்ததால், வாழ்நாள் முழுதும் வறுமைச் சூறாவளி யால் புரட்டப்பட்டார். இருந்தும் பணம் அவருக்கு ஒரு பொருட்டன்று.

பாரதிதாசனுக்கு இத்தகு இடர்கள் இல்லை. அவர் ஆங்கிலேய ஆட்சியின் குடிமகன் அல்லர். பிரெஞ்சு ஆட்சியில் புதுச்சேரி இருந்ததால் ஓரளவு பிரச்சனைகள் குறைவு. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இருப்பிடமாக இருந்து ஆதரவு தந்தது புதுச்சேரி. எனவே பாரதி தாசன் விடுதலையாக வாழ முடிந்தது. வாழ்க்கைச் சுமை அழுத்தாமல் இருக்க அவர் செய்து வந்த ஆசிரியப்பணி வாய்ப்பாக இருந்தது. தமது வாழ்நாளிலேயே மக்களால் பாராட்டப் பெற்றார். அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் இருபத்தைந்தாயிரம் உரூபா பணமுடிப்புப் பெற்றார். இத்தகு வாய்ப்புப் பாரதிக்கு வாய்க்கவில்லை. அவருடைய முற்போக்கு எண்ணங்கள் முனைமுறிந்து போனதற்கு வறுமை வாழ்க்கையும் ஒரு காரணம். திருமகளைச் செல்வத்தின் கடவுளாக உருவகிப்பது ஒரு மரபு. கடவுளரைப் பொறுத்தவரை பாரதி மரபு மாறாமலே பாடுகிறார். தமது வறுமை நிலைமையைத் திருமகளிடம் எடுத்துரைத்து மாற்றுத் தேடுகிறார். திருமகளைச் சரண்புகுதல் என்னும் பாட்டில் பின்வருமாறு வேண்டுகிறார்.

மாதவன் சத்தியினை—செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம்—எந்தப்
போதிலும் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும்—உயர்
வேதமும் வெறுபுறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை—அன்னை
மாமகள் அடியிணை சரண் புகுவோம்

... ...
வீழ்க இக் கொடுநோய்தான்—வைய
மீதினில் வறுமையோர் கொடுமை அன்றோ?[15]

உள்ளம் உணர்ந்து உரைக்கிறார். அவர் பின்னும் வேண்டுகிறார்.

ஆடுகளும் மாடுகளும்
அழகுடைய பரியும்
வீடுகளும் நெடுநிலமும்
விரைவினிலே தருவாய்
ஈடு நினக்கோர் தெய்வ முண்டோ
எனக்குனை யன்றிச் சரண முண்டோ[16]

வாழ்க்கையில் எத்துணை இடுக்கண் வந்துற்ற போதும் கடவுளை மட்டுமே சரண் அடைந்தார் பாரதி; கொண்ட கொள்கையை வாழ்க்கை வசதிக்காகக் குழிதோண்டிப் புதைக்கவில்லை. ஆங்கிலேயரை அண்டிப்பிழைக்க அவாவியதும் இல்லை. அவர்களுக்கு ஆதரவாகப் பேசியதும் இல்லை. இதுதான் அஞ்சாமை. இந்த அஞ்சாமை பாரதியின் செல்வம். இதே இயல்பு பாரதிதாசனுக்கும் உண்டு. வாழ்க்கை இன்பத்துக்காக ஏற்ற கொள்கையிலிருந்து அவர் வழுவியதில்லை. கொள்கை மாற்றல் திருட்டுத் தனம் காண்[17] என்பது அவர் கூற்று. இல்லாமையை இறைவனிடம் முறையிடுவதும்; அதைப் போக்கி இன்பம் சேர்க்குமாறு இறைஞ்சுவதும் பாடல்வகையில் ஒரு மரபு என்றால் அதைப் பாரதிதாசன் ஏற்றுக் கொண்டதில்லை. உழைப்பொன்றே செல்வம்[18] என்பதில் அவர் உறுதியாளர்.

பழமைக்குப் புதுமை விளக்கம் தந்தவர் பாரதி. பழமையைச் செல்வமாகப் பார்த்தவர் அவர். மதம் மனிதனுக்குத் தேவை என்று கருதியவர். எனவே கடவுள் வழிபாட்டைக் கருத்தூன்றி நிகழ்த்தியவர். அதனால் தமிழையே ஆதிசிவன் பெற்றெடுத்ததாகக் கற்பனை செய்தார்.[19] அந்த அளவிற்குப் படைப்பிற்கும் இறைவனுக்கும் பாலம் போடுபவர் அவர். ஆனால் பாரதிதாசன் பழமைக்குப் புதுமை விளக்கம் தரும் முயற்சியினும் புதியது படைக்கும் ஆக்கத்தையே விழைந்தார். புதியதோர் உலகம் செய்வோம்[20] எனப் புரட்சிப் பண் எழுப்பினார். மனிதனின் முன்னேற்றத்திற்கு மதம் ஒருமுட்டுக் கட்டை எனத் தெளிவுற மொழிந்தார். கடவுள் மறுப்பைக் கடைசிவரையில் கடைப்பிடித்தார்; தமது கவிதைக்குப் பொருளாக்கினார். பாரதி ஓர் ஆத்திகர்; ஆனால் பழமையாளர் அல்லர். பாரதிதாசன் பழுத்த நாத்திகர்: அதனால் ஒரு புரட்சியாளர். சமயத் துறையில் இருவரும் நேர் எதிராக நின்றனர்.

'தொல்லுலகில் மனிதர்க்கு மதம் தேவை இல்லையே'[21]
'ஒரு மதமும் வேண்டாம்—தம்பி
உண்மை உடையார்க்கே[22]
'மூடத் தனத்தை முடுக்கும் மதத்தை—நீர்
மூலப் படுத்தக்கை ஓங்குவீர்[23]

என்பன பாரதிதாசனின் வெடிக்கும் குண்டுகளில் சில.

பாரதி முன்னால் தோன்றி முன்னால் மறைந்தவர். அவருடைய மறைவுக்குப் பிறகு நாற்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்தவர் பாரதிதாசன். எனவே பாரதியைப் பாதித்த சமூக நிலைமைகள் பாரதிதாசனை மிகுதியும் பாதித்தன. இருவரும் ஒரு காலத்தவர் என்றாலும் ஒருவர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே மறைந்துவிட்டார். மற்றொருவர் பிற் பகுதியிலே மறைந்தார். ஆனாலும் ஒன்று சொல்லலாம். பாரதியின் சமூக உணர்வைப் பாரதிதாசன் முழுமையாகப் பெற்றிருந்தார். ஆனால் பார்வையிலே வேறுபாடு பாய்ந்தது. எனினும் அது பழுதற்ற பார்வை; பகுத்தறிவுப் பார்வை. முன்னவர் பாரத சமுதாயத்தைப் பாடினார். பின்னவர் தமிழ்ச் சமுதாயத்தைப் பாடினார்.

தமிழின் பெருமை, சாதிக் கொடுமை, பெண்ணடிமை, தொழிலாளர் துயரம் முதலான சமூக நோக்குகளில் பாரதியை அடியொற்றியே பாடி யுள்ளார் பாரதிதாசன். சாதி ஒழிப்பும் தமிழ் வளர்ப்பும் சரிசமமாகப் போற்றப்பட வேண்டும் என்று பாரதி தம்மிடம் பகர்ந்ததாகப் பாடுகிறார் பாரதிதாசன்.

சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை
சாதி களைந்திட்ட ஏரி—நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே—நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்
என்றுரைப்பார் என்னிடத்தில்—அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை—நான்
இன்றும் இருப்பத னாலே [24]

பாரதியிடம் பெற்ற இந்த உணர்வே பாரதிதாசனைத் தமிழ் ஆர்வலராகவும் சாதி ஒழிப்பாளராகவும் ஆக்கிற்று எனல் தவறில்லை. ஆனால் தமிழைப் பாடியதிலும் சாதி ஒழிப்பைச் சாற்றியதிலும் பாரதியினும் பல மடங்கு உயர்ந்துவிட்டார் பாரதிதாசன்.

பாரதிக்கு முன்பே தமிழைத் தெய்வ நிலைக்கு உயர்த்திப் பாடியவர் பேராசிரியர் சுந்தரனார். பாரதி தமிழைத் தாயாக உருவகித்துப் பாடியுள்ள பாட்டு ஒன்றே! ஆனால் பாரத நாட்டைத் தாயாகப் படைப்பதிலேதான் அவருக்கு ஆர்வம் மிகுதி. அதற்குக் காரணம் முன்பே குறிப்பிட்டது போல நாட்டு விடுதலையில் அவருக்கிருந்த நாட்டமே! அரசியல் விடுதலையில் மற்ற விடுதலைகள் அனைத்தும் அடங்கும் என அவர் கருதியிருந்தார். ஆனால் அது எவ்வளவு பொய்யானது என்பதை இன்றிருந்தால் பாரதி புலம்பிக் காட்டுவார்.

பாரதிதாசன் தமிழையே தாயாகப் போற்றினூர். தமிழர் வாழ்வுக்குத் தமிழ் மொழியே படிக்கல் என்று சாற்றினூர் ; வாழ்வும் வளமும் தமிழ் என்று வாயாரப் பாடினூர்.

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே [25]

என்கிறூர். தமிழரின் முன்னேற்றம் தமிழ்மொழியைப் பொறுத்தது என்பதை,

ஒண்டமிழ்த்தாய்ச் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம் [26]

என உரைக்கிறூர். அறிவியல் ஆயிரமாக வளர்ந்தாலும் மொழியின்றி மனிதன் இல்லை. இதன் அருமையைப் பாரதிதாசன் ஒருவரே உணர்ச்சியுற உணர்த்தியுள்ளார். தமிழர்க்கு உயிர் தமிழ் எனச் சாற்றியவர் ; உயிர் கொடுத்தேனும் தமிழைக் காக்கவேண்டும் என உணர்ச்சியூட்டியவர் ; தமிழை வாழ்க்கை முறையாக அமைத்துக் கொண்டவர் பாரதிதாசன். தமிழ் அவருக்குச் சமூகப் பொருளாயிற்று. பாரதியிடம் காணமுடியாத பான்மை இது. தமிழைப் போற்றிப் பாரதிதாசன் பாடிய அளவு வேறு ஒருவர் இன்னும் பாடவில்லை. ஏனெனில் அவருக்கு எல்லாமாக விளங்கியது தமிழே! அது ஓர் இயக்கம்.

சாதியை ஒழிக்க வேண்டும் என்று பாரதி விரும்பினூர். சாதிகள் இல்லையடி பாப்பா [27] என்று பாடினூர். ஆனூல் வருண வேறுபாட்டைக் கண்டித்ததாகத் தெரியவில்லை. ஆராய்ந்தால், வருண வேறுபாடே சாதிகள் வளர்வதற்குக் காரணமாக அமைந்தன என்பது விளங்கும்.

நாலு வகுப்புமிங் கொன்றே—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி [28]

என்ற பாட்டில் பழைய சமூக அமைப்பைப் பாரதி பாராட்டுவது தெரிகிறது. வருணப் பாகுபாட்டுக்கு வாழ்த்துக் கூறிக் கொண்டு சாதியை ஒழிக்க வேண்டும் என்பது வேரை நறுக்காமல் வெளியே தெரியும் முள்ளை மட்டும் வெட்டுவது போன்றது. இதனூல் இடைக் காலப் பயன்தான் ஏற்படும். ஆனூல் பாரதிதாசன் சாதியை வேரோடு அறுத்தெறிய வேண்டும் என்று வேகமுறப் பாடியுள்ளார்.

‘வாளினை எடுங்கள் சாதி
மதமில்லை’ [29]

என்கிறார். சாதி ஒழிப்பில் பாரதிதாசன் மிகுந்த வன்மை காட்டியதற்கு அவர் சார்ந்திருந்த தன்மதிப்பு இயக்கம் ஒரு காரணம். அதனால் அவர் சாதி ஒழிப்பைக் கருப்பொருளாக அமைத்துக் காப்பியங்களும் படைத்தார்.

பெண்மை வாழ்க என்று கூத்தாடியவர் பாரதி. பெண்மை அவருக்குத் தெய்விகம். புதுமைப் பெண்ணைப் படைத்துப் பெண்ணுலகில் புரட்சி செய்தார். பாரதிதாசனும் அவ்வாறே உயர்வாகப் போற்றுகிறார். பெண்களின் வாழ்வில் எவ்வளவோ பேரிடர்கள். அவர்களை அடிமைகளாக ஆண்கள் கருதுவதை எதிர்த்துப் போர் முழக்கம் செய்தவர் பாரதி. ஆனால் கைம்பெண்களின் மறுவாழ்வு பற்றி அவ்வளவாகக் கருதாமல் விட்டுவிட்டார். ஓரிடத்தில் காந்தியாரைக் கிண்டல் செய்யும் அளவிற்குக் கைம்பெண் மறுமணம் பற்றி உறுதியாக எழுதியுள்ளார்.[30]

எல்லா விதவைகளும் மறுமணம் செய்து
கொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில்
மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள்
எல்லாவற்றிலும் பெரிதான இந்த
அநியாயத்திற்குத் தகுந்த மாற்று. மற்றப்
பேச்செல்லாம் வீண்கதை.[31]

என்று தீர்ப்புரைக்கும் பாரதி, பாட்டில் மட்டும் ஏனோ பாடாமல் விட்டுவிட்டார். அந்தக் குறையைத் தீர்த்த குரிசில் ஆனார் பாரதிதாசன். பெண்களைப் பற்றிப் பாடியவற்றுள் கைம்பெண்களின் கண்ணீர் உள்ளத்தை உருக்குவது. அவர்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ[32]

என்பது அவர் வினா? விடையைப் பலவாறு விரித்துப் பாடியுள்ளார். இந்த வேகத்திற்குத் தந்தை பெரியாரின் சமூக வேலைத் திட்டங்கள் காரணம்!

பெண்களை வீரமுள்ளோராகக் காட்டுவதில் இருவரும் ஒற்றுமை உடையவர்கள். பாஞ்சாலியின் வீரத்தைக் கௌரவர் அவையில் பாங்குறக் காட்டியுள்ளார் பாரதி. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் வரும் வஞ்சி தொடங்கி, தமிழச்சி சுப்பம்மா வரை பாரதிதாசன் படைத்த எல்லாப் பெண்களுமே பாரதியின் மகளிரை மிஞ்சிய வீரமகளிர்தாம்!

உமியல்ல மாதர் வலக்கை—தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை[33]

என்கிறார் பாரதிதாசன். அவர் படைத்த பெண்கள் வீர மகளிர் மட்டும் அல்லர். அறிவார்ந்தவர்கள்; ஆண்களை விஞ்சிய ஆற்றலர்கள்,

தொழிலாளர், சமத்துவம், பொதுவுடைமை பற்றியெல்லாம் தொட்டுச் சென்றுள்ளார் பாரதி. அவைகளைத் துலக்கியவர் பாரதி தாசன். உருசியாவில் நடந்த புரட்சியை உணர்ச்சியுள்ள வரவேற்றுப் பாடினார் பாரதி! ஆனால் அவருக்கே உரிய மரபுப்படி, பராசக்தி அருளால் புரட்சி எழுந்தது என்கிறார்.[34] பொதுவுடைமை ஓர் அறிவியல் நெறி என்பதைப் புரிந்து கொண்டவர் பாரதிதாசன். அதனால் அந்தப் பொதுவுடைமை உணர்வை அவர் பாடிய அளவு அழுத்தத்தோடும் ஆற்றலோடும் வேறு ஒரு தமிழ்க் கவிஞர் பாடவில்லை என உறுதியாக உரைக்கலாம்.

'பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்'[35]
'ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பா நீ'[36]

எனப் பல படைப்பாட்டுகளைப் படைத்துள்ளார் பாரதிதாசன். பொது வுடைமைக்காக இந்த நாட்டில் ஒரு போர் நடைபெறுமானால் கருவி களாக அவருடைய கவிதைகளே விளங்கும். ஒருவேளை பாரதி உயிரோடு இன்னும் சில காலம் இருந்திருந்தால் பொதுவுடைமையைப் பாடியிருப்பார். ஏனெனில் அது மக்கள் வாழ்க்கைக்குக் கட்டியம் கூறுவதால் மாபெரும் வரவேற்பை அவரிடம் பெற்றிருக்கும்.

மக்களை மையப்படுத்தியே பாரதியார் தமது பாடல்களைப் பாடி வந்தார். பண்டிதர்களைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. ஏனெனில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேகமாகப் பரவி வந்த மக்களாட்சி முறையில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். பெரும் பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நாட்டில் புலமைச் செருக்கைப் புகுத்துவது ஒரு போலிமை ஆகும். மக்களோடு மக்களாக வாழ்வதே ஒரு மக்கள் பாடகனுக்கு இயலும். எனவே எளிமையே பாட்டின் உயிர் எனக் கருதினார் பாரதி. குடுகுடுப்பைக்காரன் பாட்டைப் பின்பற்றியும் பாடினார். அதே பான்மை பாரதிதாசனுக்கும் வந்தது. எளிமையாகவும் தெளிவாகவும் பாடுவதில் இருவரும் வெற்றி எய்தி யுள்ளனர். என்றாலும் பாரதியை விடவும் பாரதிதாசன் எளிமையாகப் பாடினார் எனக் கொள்ளுதல் ஏற்புடையது. கட்டுடையாத தமிழ்ச் செய்யுளைக் கட்டுடைத்தவர் பாரதி. அதனைக் கவினுறக் கையாண்டு பாட்டாக்கியவர் பாரதிதாசன். அதற்குக் காலம் ஒரு காரணம்.

பாரதி பாடிய குயில் பாட்டையும் பாரதிதாசன் பாடிய சஞ்சீவி பர்வதத்தின் சாரலையும் ஒப்பிட்டால் எளிமைத் தன்மையில் இருவர்க்கு முள்ள நெகிழ்ச்சியைப் புரிந்து கொள்ளலாம். குயில் பாட்டு பின் வருமாறு தொடங்குகிறது.

காலை யிளம்பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாம் சோதி பொருந்தி முறைதவறு
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரின்
மேற்கே சிறு தொலைவில் மேவுமொரு மாஞ்சோலை [37]

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் பின்வருமாறு தொடங்குகிறது.

குயில்கூவிக் கொண்டிருக்கும் கோல மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்: கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு: கனிமரங்கள் மிக்க உண்டு
பூக்கள் மணங்கமழும்: பூக்கள்தோறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார் [38]

இரண்டின் தொடக்க அடிகளும் வருணனையைக் கொண்டுள்ளன. முன்னது செறிந்தும் பின்னது நெகிழ்ந்தும் தோன்றுகின்றன. செறிவில் சிக்கலின்மையும் நெகிழ்வில் நிறைவும் காணலாம். ஆனால் அதனினும் இது எளிமையாக அமைந்துள்ளது.

பாரதியை வழிகாட்டியாகப் பாரதிதாசன் ஏற்றுக் கொண்டார். ஆனால் வழியை மட்டும் அவரே வகுத்துக் கொண்டார். பாரதப் புதல்வன் பாரதி; பகுத்தறிவு மகன் பாரதிதாசன். பாரதியே தமது வழிகாட்டி எனப் பாரதிதாசன் பாடினாலும் முழுமையாக அதனை ஏற்பதற்கு இல்லை. ஒருவர் புதுமை செய்தார்: மற்றவர் புரட்சி செய்தார் என்பதே பொருந்துவது. அடிப்படையை மாற்றும் ஆற்றலுடையவனே புரட்சி யாளன். அந்த வகையில் சமுதாயக் கேடுகளை வேரறுக்கும் வீராகப் பாரதிதாசன் விளங்குகிறார். பூசி மெழுகும் போக்கு அவருடைய பாடல்களில் இல்லை. எதையும் உண்டு இல்லை என உரைக்கும் உறுதியும் துணிவும் அவரது உடைமைகள். எனவே பாரதி ஒரு புதுமைக் கவிஞர் என்பதும் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்பதும் ஏற்கத்தக்கன.

சான்றெண் விளக்கம்

1. தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வு அளிக்கும்
2 தலைவனை எண்ணித் தவம்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் : அவன் ஒரு
செந்தமிழ்த் தேனி ; சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில் ; இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடுகமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம் பாடவந்த அறிஞன், நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்

பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 2, ஏழாம் பதிப்பு (சென்னை, 1967), பக் 72-73.

3. மங்கை ஒருத்தி தருஞ்சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்
—**பாரதிதாசன் பன்மணித்திரள்** (சென்னை, 1964) ப. 85.

4. **மகாகவி பாரதியார் கட்டுரைகள்** (திருநெல்வேலி, 1962), ப. 83.

5. இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார். கைக்கோள ஜாதி ; ஒட்டக் கூத்தப் புலவர் கூட அந்தக் குலந்தா னென்று நினைக்கிறேன். இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாது என்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்த வில்லை. தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது

"இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு சந்தோஷம்; எப்போதும் வீண் வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன் ?" என்றது. "கவிரயாயரே, என்ன விஷயம் கேட்க வந்தீர் ?" என்று தராசு கேட்டது.

"எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்" என்று கவிராயர் சொன்னார். 'இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்" என்று தராசு கேட்டது.

"இதுவரை நாற்பது அல்லது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை" என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.

'மாதிரி சொல்லும்" என்றது தராசு. புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை.

தராசு கேட்டது:— "புலவரே, தமிழ் யாரிடம் படித்தீர்?"

கவிராயர் :— இன்னும் படிக்கவில்லை; இப்போது தான் ஆரம்பம் செய்கிறேன்.

தராசு :— "சரிதான், ஆரம்பம் குற்றமில்லை. விடாமுயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிமையேறும்."

இங்ஙனம் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் *சீட்டிக் கடை ஸேட்* வந்தார்.

"சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது. ஏதேனும் *சீட்டித் துணி* செலவுண்டா?" என்று ஸேட் கேட்டார்.

"இல்லை" என்று சொன்னேன்.

கவிராயர் தராசை நோக்கி, "நம்முடைய சம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று" என்றார். "தராசு சொல்கிறது:— "உமக்கும் அதுதான் காணும் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல்; விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது; ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழில ருமை மேல். காசிப் பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும். "மல்" நெசவு கூடாது. "மஸ்லின்" நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் செய்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்." அப்போது புலவர் தராசை நோக்கி :—"நீயே எனது குரு" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

தாரசு :— "எழுக! நீ புலவன்" என்றது.

மகாகவி பாரதியார் கதைகள் (சென்னை, 1957), ப. 395-396.

6. எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடி யண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா

காளை ஒருவன் கவிச் சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வைய முழுதும் துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!

—இந்தப் பாட்டு பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் 'பாரதியார் முன்' என்னும் தலைப்போடு இடம் பெற்றுள்ளது'

7. ந. இராமநாதன், 'புரட்சிக் கவிஞர் பாவேந்தனுர் வாழ்த்து; **கவிஞரும் காதலும்** (சென்னை, 1960) ப. 2–3.

8. புதுமைப்பித்தன், 'புரட்சிக் கவிதை' **புரட்சிக் கவிஞர்** (திருச்சி, 1974), ப. 29.

9. பாரதிதாசன், 'சங்கநாதம்', **பாரதிதாசன் கவிதைகள்** தொகுதி-1, இருபத்து நான்காம் பதிபபு (இராமச்சந்திர புரம், 1980), ப. 100.

10. மணி, சீனி விசுவநாதன் (பதிப்பாசிரியர்), **பாரதியார் கவிதைகள்** (சென்னை, 1980), ப. 72.

11. .... ப. 75.

12. **பாரதிதாசன் கவிதைகள்**, தொகுதி–1, ப. 6

13. .... ப. 14.

14. **பாரதியார் கவிதைகள்**, ப. 14.

15. .... ப. 23.

16. .... ப. 28.

17. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி–1, ப. 185.

18. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, பதின்மூன்றும் பதிப்பு (இராமச்சந்திரபுரம், 1976), ப. 55.

19. பாரதியார் கவிதைகள், ப. 166.

20. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி–1, ப. 158.

21. .... தொகுதி–2, ப. 133.

22. .... தொகுதி-3, நான்காம் பதிப்பு (சென்னை, 1968), ப. 152.

23. .... தொகுதி–1, ப. 160.

24. .... தொகுதி–2, ப. 81.

25 பாரதிதாசன், இசையமுது தொகுதி–1, ப. 34.

26. பாரதிதாசன், தமிழியக்கம், ஆறும் பதிப்பு (இராமச்சந்திரபுரம், 1969), ப. 9.

27. பாரதியார் கவிதைகள் ப. 268.

28. .... ப. 281.

29. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப. 64.

30. மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 87.

31. .... ப. 88.

32. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி–1, ப. 82.

33. பாரதிதாசன், தேனருவி (புதுச்சேரி, 1956), ப. 53.

34. மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
—பாரதியார் கவிதைகள், ப. 220.

35. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி–1, ப. 158.

36. .... ப. 148.

37. பாரதியார் கவிதைகள், ப. 283.

38. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி-1, ப. 1.

சொல்லாக்கம்*

இ. மறைமலை
தமிழ்த்துணைப் பேராசியர்
மாநிலக் கல்லூரி சென்னை-600 005

முன்னுரை

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு, "அவ்வக்காலத்துத் தோன்றி நன்மக்கள் வழக்கிலுள்ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின், 'இவை தொன்றுதொட்டு வந்தன அல்ல' என்று கடியப்படும் சொற்கள் இல்லை" என்று பொருள் வகுப்பர் நச்சினார்க்கினியர்.[1] மொழி, மனிதனது சிந்தனையை வெளிப் படுத்த உதவுகிறது. காலந்தோறும் மனிதனது சிந்தனை வளர்ந்து கொண்டே வருகின்றது. ஒருபுறம் அவனது அறிவியல் அருஞ்செயல் களும், மற்றொருபுறம் அவனது இலக்கியப் படைப்புகளும் அவனது சிந்தனையின் வளர்ச்சியைப் புலப்படுத்தி நிற்கின்றன. இதன் விளைவாக உருவாகும் புதிய கருவிகளையும், புதிய கருத்துக்களையும் பெயரிட்டழைக்கப் புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. புதிய சொற்களை எங்கிருந்து பெறுவது? எப்படி உருவாக்குவது? "பொதுப்படப் புத்தம் புதிய சொற்களை மக்கள் இயற்றுவதில்லை என்று நாம் முடிவு கட்டினால் அது பிழையாக மாட்டாது" என்பது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கூற்று.[2] இரண்டு சொற்களின் சேர்க்கை, இரண்டு வினையடிகளின் சேர்க்கை, வினையடிகள் பெயர்ப் பொருளை உணர்த்தல், வினையடிகள் நீட்டல் முதலிய விகாரங்கள் பெற்றுப் புதிய சொற்களாதல், புதிய விகுதிகளின் சேர்க்கை யால் புதிய சொற்கள் உருவாதல் பேரன்ற பல வழிமுறைகளால் புதிய சொற்கள் உருவாக்கப்பட்டுத் தமிழ்ச்சொற்கோவை விரிவடைந்து வருகிறது என்பதே பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முடிந்த முடிபாகும்.[3]

தமிழ் மொழியின் சொற்கோவை விரிவடைதற்குக் காரணமாக அமைந்த சொல்லாக்க வழிமுறைகளை தாமஸ்கிரீன், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பா. வே. மாணிக்க நாயகர், இ. மு. சுப்பிரமணியபிள்ளை, ஞா. தேவநேயப் பாவாணர், கீ. இராமலிங்கனார் முதலிய பல்வேறு அறிஞர்களும் எடுத்துக் கூறியுள்ளனர்.

தமிழில் சொல்லாக்கம், விகுதி வழி ஆக்கம் (Affixation), கூட்டுச் சொல்லாக்கம் (Compounding), ஒலிவழி ஒப்பாக்கம் முதலிய பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. இங்கு கூட்டுப் பெயர்ச் சொற்கள் (Noun Compounds) புதிய வினைச்சொற்கள் (Derived Verbs) ஆகிய இரண்டின் சொல்லாக்க வழிமுறைகளை ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

---

* 13—11—80 அன்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை நடத்திய சிறப்புக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரை.

I. கூட்டுப் பெயர்ச் சொற்கள் (Noun Compounds)

சொல்லாக்க முறைகளில் சொற்களின் கூட்டாக்கம் (Compounding) ஓர் இன்றியமையா முறையாகும். இரண்டு சொற்கள் (அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள்) சேர்ந்து ஒரு புதிய சொல்லை உருவாக்கும் இம் முறையினால் மொழியின் சொற்கோவை (Vocabulary) விரிவடைகிறது. டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் தமது ஆய்வு நூலில்[4] "சொல்லாக்கமும் கூட்டுச் சொற்களும்" (Word-Formation and Compounds) என்னும் தலைப்பில், தமிழ் இலக்கணம் காட்டும் தொகைச் சொற்களையே கூட்டுச் சொற்கள் எனக் குறிப்பிடுகிறார்.[5] இத்தொகைச் சொற்களால் மொழி, புதிய சொல்லாக்கம் பெறுகிறது என்றும் குறிப்பிடுகிறார்.[6]

அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட அவரது ஆய்வுநூலில் (1930) சொல்லாக்கம் பற்றிய சிந்தனை இடம் பெற்றிருத்தல் குறிப்படத்தக்கது. ஆனால் தொகைச் சொற்களைக் கூட்டுச் சொற்கள் எனக் குறிப்பிடுதல் ஆய்வுக்குரியது. கூட்டுச் சொல்லாக்கம் (Compounding) பற்றிக் குறிப்பிடும்போது திருமதி ஸ்ட்ரேங், "கூட்டுச் சொல் இரண்டு பகுதிகளையுடையது. ஒன்று வரையறுக்கும் பகுதி. மற்றொன்று வரையறுக்கப் படும் பகுதி. ஆங்கிலத்துக்குரிய மொழியமைப்பின்படி ஆங்கிலத்தில் வரையுறுக்கும் பகுதியே (determinant) வரையறுக்கப்படும் பகுதியின் (determinatum) முன்னர் இடம் பெறுகிறது" என்ற மர்ச்சாண்டின் விளக்கத்தை மேற்கோள் காட்டுகிறார்.[7] இவ்விளக்கம் தமிழிலக்கணம் காட்டும் தொகைச் சொற்களுக்கும் ஏற்புடையதாக விளங்குகிறது.

வரையறுக்கும் பகுதி (determinant)		வரையறுக்கப்படும் பகுதி (determinatum)	
கருங்	—	குதிரை	(பண்பு)
கொல்	—	யானை	(வினை)
மதி	—	முகம்	(உவமை)
பொற்	—	குடம்	(வேற்றுமை)

மேற்குறித்த நான்கு தொகைச் சொற்களும் மர்ச்சாண்டு காட்டிய முறைப்படி, இருபகுதிகள் இணைந்தே அமைந்துள்ளன. மேலும் கூட்டுச் சொற்களைச் சொற்பொருளமைப்பின்படி அகமையங் கொண்டன (endocentric), புறமையங் கொண்டன (exocentric) என இரு பிரிவுகள் ஆக்குகிறார் ஸ்ட்ரேங்.[8] அகமையங் கொண்ட கூட்டுச் சொற்களில் ஒரு பகுதி ஒரு பொதுப்பெயரையும் இன்னொரு பகுதி அதன் சிறப்புத்தன்மையையும் விளக்கும் வகையில் அமைந்திருக்கும்.

உ—ம்: கருங்குதிரை
பொற்குடம்
கொல்யானை
மதிமுகம்.

புறமையங் கொண்ட கூட்டுச் சொற்களில் இரண்டு சொற்கள் சேர்ந்து. அவ்விரண்டும் அல்லாத வேறொன்றினைக் குறிக்கும் வகையில் அமைந்திருக்கும். எ-டு: தாழ்குழல், இங்கு அகமையங்கொண்ட கூட்டுச் சொற்களுக்கு பண்புத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகியவையும் புறமையங்கொண்ட கூட்டுச் சொற்களுக்கு அன்மொழித்தொகையும் எடுத்துக்காட்டாகக் கூறத்தக்கன. எனவே டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் குறிப்பிட்டுள்ளவாறு தொகைச் சொற்களைக் கூட்டுச் சொற்கள் எனக் கூறுவதில் தடையில்லை.

மேலும் தொகைச் சொற்களின் இயல்பைக் குறித்துத் தொல்காப்பியர் கூறியுள்ள பின்வரும் நூற்பா, கூட்டுப் பெயர்ச் சொற்களுக்கு முழுமையும் பொருந்தும்.

"எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய" (415)

என்னும் இந்நூற்பாவிற்கு "இரண்டு சொல்லாகி ஒட்டுப்பட்ட பெயர் பிரிந்து நில்லாது ஒரு பெயர் மாத்திரமாகி நிற்கும்" என்று தெய்வச்சிலையார் உரை கூறுகிறார்.

ஆனால் தொகைச் சொல்லிலக்கணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல், விரிவடைந்து வரும் சொற்கோவைக்கு அடிப்படையாகத் திகழும் புதிய சொல்லாக்க முறைகளையும் ஆயும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

I. பெயர் + பெயர்: (N + N)

இரண்டு பெயர்ச்சொற்கள் (தனித்த நிலையில் விளங்கும் பெயர்ச் சொற்களோ அன்றி விகுதி சேர்ந்த பெயர்ச் சொற்களோ அன்றி முன்னொட்டு சேர்ந்த பெயர்ச் சொற்களோ) ஒருங்கிணைந்து, புதிய கூட்டுச் சொற்களை உருவாக்குகின்றன.

i. சிறப்புப் பெயர் + பொதுப்பெயர்

மருத்துவக் கல்லூரி	பொறியியற் கல்லூரி
வேளாண்மைக் கல்லூரி	கலைக்கல்லூரி

கல்லூரி என்ற பொதுப்பெயருடன் மருத்துவம், பொறியியல் வேளாண்மை கலை ஆகிய சிறப்புப் பெயர்கள் சேர்ந்து வேறுபட்ட சொற்களை உருவாக்குகின்றன.

பொதுப்பெயர், சிறப்புப் பெயர் என்பவை ஒப்பு நோக்குச் சொற்களே (Comparative terms) ஆகும். கல்லூரி என்னும் பொதுப்பெயரை நோக்குமிடத்து மருத்துவம் சிறப்புப் பெயராக விளங்குகிறது. ஆனால், இதே சொல் (மருத்துவம்),

தொண்டை, மூக்கு, காது மருத்துவம்
அறுவை மருத்துவம்
இதய நோய் மருத்துவம்
இயற்கை மருத்துவம்
ஓமியோபதி மருத்துவம்

என்னும் சொற்களில் பொதுப்பெயராக விளங்குகின்றது.

ii) தொடர்புடைய இரண்டின் இணைவு

புகையிலை (Tobacco) தமிழ்நாட்டுக்கு அறிமுகமானபோது, அதனை டுபாக்கோ என அழையாமல், "புகைக்கப் பயன்படும் இலை" என்ற பொருளில், அதன் பயனையும் வடிவத்தையும் குறிக்கும் புகை, இலை என்னும் இரு சொற்களை இணைத்துப் புகையிலை என்னும் சொல்லை உருவாக்கினர். இதேபோலத் தொடர்புடைய இரு சொற்களின் இணைவால் பெரும் பான்மையான கூட்டுச் சொற்கள் உருவாகின்றன.

எ-டு : திரைப்படம் (திரையின்கண் தோன்றும் படம்)
புகைவண்டி (புகையை விட்டுச் செல்லும் வண்டி)
நிறமாலை (நிறங்களாலான மாலை போன்ற வடிவம்)
மின் விசிறி (மின்சாரத்தால் இயங்கும் விசிறி)
நீரழுத்தம் (நீரின் அழுத்தம்)
உராய்வு விசை (உராய்வுத் தன்மையின் விசை).

iii) சொற்சுருக்கத்துடன் இணையும் சொற்கள் (Clipping Compounds)

"ஆட்டோ" என்னும் ஆங்கிலச் சொல் "ஆட்டோமொபைல்" என்னும் கூட்டுச்சொல்லை உருவாக்கியது. "ஆட்டோ" என்பதற்கு "தான்" என்றும் "மொபைல்" என்பதற்கு இயங்குவது என்றும் பொருளாகும். நாளடைவில் "ஆட்டோ" என்னும் சொல்லே "ஆட்டோ மொபைல்" என்னும் முழுச்சொல்லையும் குறிக்கும் வகையில் "ஆட்டோ பஸ்", "ஆட்டோமானியா" என்னும் சொற்களில் பயன்படுத்தப் படுகிறது.[5]

இதேபோலத் தமிழில் "மின்சாரம்" என்னும் சொல் "மின்" "சாரம்" என்னும் இருசொற்களின் இணைவாகும். முதன் முதலில் மின்சாரம் வெளிச்சம் தருவதற்குப் பயன்பட்டதால், "வெளிச்சத்தினின்று எடுக்கப் படும் சாரம்" என்ற பொருளில் மின்சாரம் என்று அழைக்கப்பட்டது என்பது நாஞ்சில் செ. சுந்தரராசன் கூற்று. நாளடைவில் இந்த முழுச்சொல்லையும், பொருளையும் குறிக்கும் வகையில் "மின்" என்ற சொல் மட்டுமே போதுமானதாகக் கருதப்பட்டது. மின்சாரத்தின் சொற்சுருக்கமாகிய "மின்"—பிற சொற்களுடன் சேர்ந்து கூட்டுச் சொற்களை உருவாக்கியுள்ளது.

எ-டு : மின்புலம் மின் காந்தம்
மின்விசை மின் விசிறி
மின் அடுப்பு மின் இயக்கம்
மின் பொறி

இதேபோலத் "திரையின்கண் தோன்றும் படம்" என்ற பொருளில் அமைந்த "திரைப்படம்" என்ற கூட்டுச்சொல்லில் "திரை" என்னும் தோன்றுமிடத்தைக் குறிக்கும் சொல்லே, "திரைப்படம்" என்னும் முழுச்சொல்லையும் பொருளையும் குறிக்கும் வகையில், பிற சொற்களுடன் இணைந்து கூட்டுச் சொற்களை உருவாக்கியுள்ளது.

எ-டு : திரையுலகம் திரையன்பர்
திரையிதழ் திரையிசை

இவ்வகைக் கூட்டுச் சொற்களைச் சொற்சுருக்கங்கள் சொற்களுடன் இணைந்து உருவாக்கும் கூட்டுச் சொற்கள் எனலாம்.

iv) பெயர்+பெயர் அமைப்பில் உருவாகும் பிற சொற்கள்

அ) பெயரடை + பெயர் + பெயர் :

பல்பொருள் அங்காடி
சிற்றுண்டிச்சாலை
பேருந்து நிலையம்
பல்கலைக்கழகம்

ஆ) 1. N+N=NC1 = மருத்துவக் கல்லூரி

2. N+N+N=NC 1a = தடுப்புக் காவல் சட்டம்

3. N+N+N+N=NC 1b = பேருந்து ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி

4. N+N+N+N+N=NC 1c = உயர்நிலைப் பள்ளிக் கல்வி—இயக்குநர் அலுவலகம்

5. N+N+N+N+N+N=NC 1d= தமிழ்நாடு அரசினர் கலைக் கல்லூரி ஆசிரியர் சங்கம்

6. N+N+N+N+N+N+N=NC 1e = தமிழ்நாடு அரசினர் கலைக்கல்லூரி ஆசிரியர் சங்கத் தேர்தல்.
(நீளமான சொற்கள் பெரும்பான்மை நிறுவனங்களை, அமைப்புகளைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகின்றன).

II. வினையடி பெயர் (NC 2)

அ) எ-டு : பகுமுறை
தொடுகோணம்

படுகோணம்
சுழல்வேகம்
அணுகு கோடு
மாறு அடிப்படை
தொடு நாண்
விரிகோணம்
சுழல் தளம்
சுழல் மேடை
வெட்டு பொறி
நகர் தொட்டி
கொதி கலன்

"வினையின் தொகுதி காலத்தியலும்" என்பது தொல்காப்பியம். (சொல் எச்சவியல் 410). "காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்பது நன்னூல் (பொது-364). ஆனால் வினையடி பெயர் என்ற அமைப்பில் உருவாகியுள்ள மேற்கண்ட சொற்கள், நெருநல் விரிந்த கோணம், இன்று விரிகின்ற கோணம், நாளை விரியும் கோணம் என்று விரித்துக் கூறும் தன்மை வாய்ந்தன அல்ல.

இச்சொற்களில், சுழல் தளம், சுழல் மேடை, வெட்டு பொறி, நகர் தொட்டி, கொதி கலன் என்பன போன்ற சொற்கள் விருத்தியுரைகாரர் கூறும் "வினைத்தொகைக் குறிப்பு" என்னும் வரையறைக்குப் பொருந்து வனவாகும்.

"இங்ஙனம் கால விகற்பம் பற்றிப் புடை பெயர்வினை கருதாது அரிவாள், ஆவுரிஞ்சுதறி என்றாற்போல அடுகளிறு என்பது இத்தொழிற்கு உரியது இஃது என்னும் பொருள்பட வருமாயின், வினைத்தொகைக் குறிப்பு எனப்படும் என்க" என்பது விருத்தியுரை.

ஆனால் வினையடி + பெயர் என்ற அமைப்பில் காணப்படும் எல்லாச் சொற்களும் இவ்வரையறைக்குள் அடங்காது. கருவிகள், பொறிகள் ஆகியன குறித்த சொற்கள் மட்டுமே இவ்வரையறைக்குள் அடங்குவன.

சுழல் உந்தம்
நிகழ் தகவு
திரள் விளைவு
நெகிழ் திரிவு

என்பன போன்ற சொற்களை "இத்தொழிற்கு உரியது இது" எனக் கூறினால் சொல்லின் பொருள் மாறுபட்டு விடும். எனவே "இத்தன்மை கொண்டது இது" என்றும் அமைப்பில் இச்சொற்கள் அமைந்துள்ளதாகக் கூறலாம்.

இ, உ, ர், ல், ழ், ள் ஆகியவற்றில் முடியும் வினையடிகளே இங்ஙனம் கூட்டுச் சொற்களை உருவாக்குகின்றன. 'ஐ'யில் முடியும் சில சொற்கள் (எ-டு ; குடைவரை) இங்ஙனம் சேர்கின்றன.

கடை, பொறி, துளை கருவி என்றே கூறுவதில்லை. எனவே 'ஐ'யில் முடியும் வினையடிகள் பெரும்பான்மையன கூட்டுச் சொல் அமைப்பதில்லை. 'அ'வில் முடியும் எந்த வினையடியும் (நட, மித, பற, சிற, இற, கிட) பெயர்ச்சொல்லுடன் சேர்த்து கூட்டுச் சொல் உருவாக்குவதில்லை.

ஆ) வினையடி + பெயர் + பெயர் : (NC 2a)

எ-டு : சுழல் காந்தப் புலம்
தொகுபயன் விசை
விலகு கதிர்க்கற்றை
சுழல்தள வளைவு

III. செய்தென்எச்சம் + வினை + விகுதி : (N C 3)

அ. செய்தென் எச்சம், வினை முதலுடன் சேர்ந்து பெயர்களை உருவாக்குகின்றது.

எ-டு : அணிந்துரை, பரிந்துரை.

ஆ. செய்தென்னெச்சம் வினையடிடன் சேர்ந்து புதிய வினைகளை (Derived Verbs) உருவாக்குகிறது.

எ-டு : பகுத்தறி, கண்டுபிடி.

இ. இத்தகைய புதிய வினைச்சொற்கள் விகுதி எற்றுப் பெயர்ச் சொற்களாகின்றன.

321913

எ-டு : பகுத்தறிவு, கண்டுபிடிப்பு.

IV. பெயர் + வினையடி + பெயர் : (N C 4)

894.81105
BAL

எ-டு : குடிசை மாற்று வாரியம்
வெப்பம் கடத்து திறன்
ஒளி கடத்து திறன்
துளையிடு கருவி
கணக்கிடு பொறி

இவ்வகைக் கூட்டுச் சொற்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

i. மேற்கண்டவற்றுள் முதல் மூன்று சொற்களை, குடிசையை மாற்றும் வாரியம், வெப்பத்தைக் கடத்தும் திறன், ஒலியைக் கடத்தும் திறன் எனப்பிரிக்கலாம்.

ii. ஆனால் பின்னிரண்டு சொற்களை துளையை இடும் கருவி, கணக்கை இடும் பொறி எனல் மிகை. துளையிடும் கணக்கிடும் பொறி என விரித்தலே போதுமானது. எனவே மேற்போக்கான பார்வையில் இவை ஒரேமாதிரியாகத் தோன்றினாலும் முதல் மூன்று சொற்களும் பெயர் + வினையடி + பெயர் என்ற அமைப்பில் உருவாகியவை.

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1984

பின்னிரண்டு சொற்களும்

பெயர் + வினையடி............புதிய வினையடி
புதிய வினையடி + பெயர்............துளையிடு கருவி

என்ற அமைப்பில் உருவாகியவை எனலாம்.

V. செய்யா என்னும் எச்சம் + பெயர் : N C 5

ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் பெயர்ச் சொற்களுடன் கூட்டுச் சொற்களை உருவாக்குகிறது.

வாழாவெட்டி
அடங்காப் பிடாரி
விடியா மூஞ்சி

போன்ற வழக்குச் சொற்கள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாம். இவை ஈறு பெற்றால் கூட்டுச் சொல் நிலையிழந்து தனிச்சொற்றொடர் (free phrase) நிலையையடைந்து விடுகின்றன.

எ-டு; அடங்காத பிடாரி
விடியாத மூஞ்சி

ஈறு கெட்ட நிலையில் இவை வினைத்தொகைகளுக்கு எதிர் நிலையானவை யாக விளங்கும்.

எ-டு: தூங்கு மூஞ்சி, விடியா மூஞ்சி.

வழக்கியல் நிலையில் மட்டுமே (ஓடாப் பூட்கை, உழாஅநாஞ்சில், ஏசாச் சிறப்பு போன்ற சங்க இலக்கிய, சிலப்பதிகாரச் சொற்கள் எண்ணற்றன உள. ஆனால் இவை கூட்டுச் சொல்லாகக் கருதப்படவில்லை) விளங்கி வந்த இக்கூட்டுச்சொல்லமைப்பு மெல்ல மெல்ல இலக்கிய வழக்கில் செல்வாக்குப் பெற்று வருகிறது.

எ-டு: பற்றாக்குறை.

குடிசை மாற்று வாரியம், துளையிடு கருவி என்பவற்றிக்கு எதிர் நிலையான அமைப்பாக வரி கொடா இயக்கம், முறைசாராக் கல்வி (Non-formal Education) போன்ற சொற்கள் உருவாகிச் செல்வாக்குப் பெற்றுள்ளன. இவை ஈறு பெற்றுத் தனிச்சொற்றொடராக விளங்கு வதில்லை. எனவே இத்தகைய கூட்டுச் சொல்லாக்கம் செல்வாக்குப் பெற்று வருகிறது எனலாம். என். ஜி. ஓ. என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பதிலாக "அரசிதழ் பதிவுபெறா அலுவர்" என்று தமிழ் நாடெங்கும் வழங்கி வரும் சொல் மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

கூட்டுச் சொல்லாக்கம் தமிழில் விரிவடைந்து வளர்ந்து வருகின்றமை யால் ஒரு கட்டுரைக்குள்ளாகச் சுருக்கிச் சொல்லல் எளிதன்று. கூட்டுச் சொல்லாக்கத்தின் அடிப்படையாக விளங்கும் ஐந்து வடிவங்கள் மட்டுமே

இக்கட்டுரையுள் காட்டப்பட்டுள்ளன. இவ்வடிவங்களுக்கு உட்படுகின்ற பெயர்களும், வினைகளும், உட்படாத பெயர்களும், வினைகளும் அதற்குரிய காரணங்களும் விரிவான ஆய்வுக்குரியன.

II. புதிய வினைச்சொற்கள்

1. முன்னுரை

> "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" (தொல். சொல். 192)

என்பது தொல்காப்பியம். கருத்தா, கருவி, இடம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச்சொல் என நன்னூலார் விரித்துரைப்பர். காலப்போக்கில் தேவைக் கேற்பப் புதிய வினைச்சொற்கள் உருவாகின்றன. இங்ஙனம் உருவாகியுள்ள வினைவடிவங்களைப் பகுத்தாய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஏற்கெனவே வழக்கில் உள்ள வினைச்சொற்களுடன், பெயர்ச் சொற்கள், இடைச்சொற்கள், பிற வினைச்சொற்களை உருவாக்குகின்றன. இங்ஙனம் புதிய வினைச்சொற்கள் உருவாகுதலை மூவகைப்படுத்தலாம்.

அ) பெயர் + வினை
ஆ) வினை + வினை
இ) இடைச்சொல் + வினை.

2. பெயர் + வினை

பெயர்ச்சொற்களுடன் வினைச்சொற்கள் சேர்ந்து புதிய வினைச் சொற்களை உருவாக்குகின்றன.

2. 1. 'சீர்' என்னும் பெயர்ச்சொல் 'திருத்து' என்னும் வினையுடன் சேரும்போது இரண்டு சொற்களும் தம்மினும் வேறாய புதிய பொருளை அளிக்கும் 'சீர்திருத்து' என்னும் வினைச்சொல்லை உருவாக்குகின்றன. 'சீர்திருத்து' என்னும் வினைச்சொல் தொடர்மொழி அன்று; ஒருசொல் நீர்மைத்து. பழைய நிலையை முற்றிலும் மாற்று என்பதே இதன் பொருள்.

2. 2. பெயர் + இடு

i. ஆங்கிலத்தில் மதிப்பு என்ற பொருள்படும் வேல்யூ (value), எஃஸ்டிமேட் (estimate) ஆகிய சொற்கள், மதிப்பை வரையறுக்கும் செயலுக்கும் அங்ஙனமே வினைச்சொற்களாக வழங்கப்படுகின்றன. தமிழில் இத்தகைய சூழலில் அப்பெயர்ச் சொற்களுடன் 'இடு' என்ற சொல் சேர்க்கப்பட்டு வினைச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

பெயர்	—	வினை
மதிப்பு	—	மதிப்பிடு
குறிப்பு	—	குறிப்பிடு
பெயர்	—	பெயரிடு
முறை	—	முறையிடு
கணக்கு	—	கணக்கிடு
பார்வை	—	பார்வையிடு
தடை	—	தடையிடு

'பார்' பார்வையிடு, 'தடு' தடையிடு, என்ற வினைச்சொற்கள் வேறுபட்ட பொருளைக் குறிப்பன.

"உயர்அலுவர் கோப்புகளைப் பார்த்தார்" என்று கூறுவதில்லை. "பார்வையிட்டார்" என்றே கூறுகிறோம். படித்தலுக்கும் கற்றலுக்கும் கூறப்படும் வேறுபாட்டைப்போல இங்கு பார்த்தலுக்கும் பார்வையிடுதலுக்கும் வேறுபாடு அமைந்துள்ளது. அதிகாரபூர்வமான முறையில் கோப்புகளைப் பார்த்துக் குறிப்பெழுதும்பொழுது "பார்வையிட்டார்" என்றுதான் கூறப்படுகிறது. அதேபோல அதிகாரபூர்வமற்ற முறையில் ஒன்றைத் தடுத்தலைக் குறிக்கத் 'தடு' என்ற வினைச்சொல் பயன்படுத்தப் பட்டாலும், சட்டப்படி தடை செய்யப்படுவதைக் குறிக்கத் "தடையிடு" என்ற வினைச்சொல் பயன்படுத்தப்படுகிறது. எனவே வழக்கில் இருக்கும் வினைச்சொற்களோடு இப்புதிய வடிவங்களும் தேவையே. திரைப்படத்தைக் காண்பித்தலைக் குறிக்க ஆங்கிலத்தில் (screen) வினைச்சொல் இருப்பது போலத் தமிழிலும் தேவைப்படுகிறது. இங்கிலையில் "திரையிடு" என்னும் சொல் இப்பொருளைக் குறிக்கும் வினைவடிவமாக அமைகிறது.

2. 3. பெயர் + உறு

'பு' கர ஈற்றிலும், 'வு' கர ஈற்றிலும் 'ம' கர ஒற்றிலும் முடியும் பண்புப் பெயர்களுடன் 'உறு' சேர்ந்து வினைச்சொற்களை உருவாக்குகிறது.

சிதைவு		சிதைவுறு
துன்ப		துன்புறு
இன்பு		இன்புறு
மகிழ்வு	+ உறு =	மகிழ்வுறு
நிறைவு		நிறைவுறு
வலிவு		வலிவுறு
பொலிவு		பொலிவுறு
கோபம்		கோபமுறு
சீற்றம்		சீற்றமுறு
சினம்		சினமுறு
அவசம்	+ உறு =	அவசமுறு
இன்பம்		இன்பமுறு
வருத்தம்		வருத்தமுறு
வாட்டம்		வாட்டமுறு

2. 4. பெயர்+அடை

மேலே காட்டப்பட்ட பண்புப் பெயர்களுள் 'பு' கர ஈற்றில் முடியும் இன்பு, துன்பு ஆகிய பெயர்களைத் தவிர ஏனைய பெயர்களுடன் 'அடை' என்ற வினையும் சேர்ந்து வினைச்சொற்களை உருவாக்குகின்றது.

சிதைவு		சிதைவடை
மகிழ்வு		மகிழ்வடை
நிறைவு	+அடை=	நிறைவடை
வலிவு		வலிவுடை
பொலிவு		பொலிவடை
கோபம்		கோபமடை
சீற்றம்		சீற்றமடை
சினம்		சினமடை
அவசம்	+அடை=	அவசமடை
இன்பம்		இன்பமடை
துன்பம்		துன்பமடை
வருத்தம்		வருத்தமடை
வாட்டம்		வாட்டமடை

2. 5. பெயர்+ஊட்டு

மேலே காட்டப்பெற்ற பண்புப் பெயர்களுடன் ஊட்டு என்ற வினையடி சேர்ந்து புதிய வினைவடிவங்களை அளிக்கிறது.

சிதைவு		சிதைவூட்டு
மகிழ்வு		மகிழ்வூட்டு
நிறைவு	+ஊட்டு=	நிறைவூட்டு
வலிவு		வலிவூட்டு
பொலிவு		பொலிவூட்டு
கோபம்		கோபமூட்டு
சீற்றம்		சீற்றமூட்டு
சினம்		சினமூட்டு
அவசம்	+ஊட்டு=	அவசமூட்டு
இன்பம்		இன்பமூட்டு
துன்பம்		துன்பமூட்டு
வருத்தம்		வருத்தமூட்டு
வாட்டம்		வாட்டமூட்டு

2. 6. மேற்குறித்த மூவகையான வினைவடிவங்களுள் 'உறு' வினையடியின் சேர்க்கையால் உருவாகும் வினைவடிங்கள் ஒருவன் இயல்பாக அத்தகைய உணர்வுகளைப் பெறுவதைக் குறிக்கும்.

'அடை' வினையடியின் சேர்க்கையால் உருவாகும் வினைவடிவங்கள், பிறரால் அல்லது பிற சூழலால் அத்தகைய உணர்வுகள் பெறுவதைக்

குறிக்கப் பயன்படுகின்றன. 'ஊட்டு' வினையடியின் சேர்க்கையால் உருவாகும் வினைவடிங்கள் இத்தகைய உணர்வுகளைப் பெறுமாறு பிறர் தூண்டிவிடுவதைக் குறிக்கப் பயன்படுகின்றன.

2. 7. எண்ணுப் பெயர்+வினை

எ-டு: ஒன்று சேர்வோம்.
ஒன்றுபடுவோம்.
ஊர் இரண்டுபட்டால்...

மேற்குறித்த எடுத்துக்காட்டுகளில் எண்ணுப் பெயர்+வினை சேர்ந்து வினைச் சொற்களை உருவாக்கியுள்ளதைக் காணலாம். ஒற்றுமையைக் குறிக்க "ஒன்று சேர்", "ஒன்று படு" என்ற வினைச்சொற்களும் முறிவைக் குறிக்க "இரண்டாகு" "இரண்டுபடு" என்ற வினைச்சொற்களும் பயன்படுத்தப் படுகின்றன. ஒன்று, இரண்டு என்ற எண்ணுப்பெயர்களுடன் சேர், படு, ஆகு ஆகிய வினையடிகள் சேர்வதால் இத்தகைய வினைச்சொற்கள் உருவாகின்றன.

ஒன்று என்ற எண்ணுப் பெயரே வினைச்சொல்லாகவும் வழங்கப் படுகிறது. ஒன்றுதல், ஒன்றித்தல், ஒன்றிப்பு, ஒன்றியம் என்ற தொழிற் பெயர் வடிவங்களை இவ்வினைச்சொல் பெறுகிறது.

இரண்டு என்ற எண்ணுப் பெயர் வினைச்சொல்லாக வழங்கப்படா விட்டாலும் இரட்டுதல், இரட்டித்தல், இரட்டிப்பு என்ற தொழிற்பெயர் வடிவங்களைப் பெறுகிறது.

2. 8. பெயர்+அடி

பெயர்ச்சொற்களுடன் 'அடி' என்ற வினையடி சேர்ந்து புதிய வினைசொற்களை உருவாக்குகிறது. 'பிரிண்ட்' (print) என்ற ஆங்கில வினைச் சொல்லுக்கு ஈடாக 'அச்சடி' என்ற தமிழ் வினைச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. (இதே போல "அச்சுப்பதி" "அச்சிடு" ஆகிய வினைவடிவங்களும் வழக்கில் உள).

பெயர்+அடி சேர்ந்து வினைச்சொற்கள் உருவாதற்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள்.

கொள்ளையடி
பாழடி
வெள்ளையடி
போரடி

2. 9. பெயர்+ஏ (ற்) று:

பெயர்ச்சொற்களுடன் ஏறு, ஏற்று என்ற வினையடிகள் சேர்ந்து புதிய வினைச்சொற்களை உருவாக்குகின்றன. அங்ஙனம் உருவாகுங்கால் 'ஏறு' சேர்ந்து வரும் வினைச்சொற்கள் தன்வினையாகவும், 'ஏற்று' சேர்ந்துவரும் வினைச்சொற்கள் பிறவினையாகவும் அமைகின்றன.

தன்வினை	பிறவினை
அரங்கேறு	அரங்கேற்று
நிறைவேறு	நிறைவேற்று
முன்னேறு	முன்னேற்று

2. 10. பெயர் + பெயர் என்னும் வினைச்சொல்

பெயர்ச்சொற்களுடன் பெயர் என்னும் வினைச்சொல் சேர்ந்து வெவ்வேறு வினைச்சொற்களை உருவாக்குகின்றது.

எ-டு : மொழிபெயர்
இடம்பெயர்
குடிபெயர்

2. 11. பெயர் + படு

பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து புதிய வினைச்சொற்களை உருவாக்குகிறது.

எ-டு :

புலம் + படு = புலம்படு	தொழில் + படு = தொழிற்படு
முறை + படு = முறைப்படு	கேள்வி + படு = கேள்விப்படு
தடை + படு = தடைப்படு	சுவை + படு = சுவைப்படு
செயல் + படு = செயற்படு	பாடு + படு = பாடுபடு

உணர்வுகளைக் குறிப்பிடும் சொற்களுடன் :

ஆசைப்படு, சுகப்படு, கோபப்படு, அனுதாபப்படு, பரிதாபப்படு, அவசரப்படு, விரைவுபடு, விருப்பப்படு, பிளவுபடு, வகைப்படு, இடர்ப்படு, துயர்ப்படு, துன்பப்படு, வருத்தப்படு, தொல்லைப்படு, கவலைப்படு.

மையீற்றுப் பண்புப் பெயர்களுடன் :

ஒருமைப்படு, சிறுமைப்படு, பெருமைப்படு, கடமைப்படு. (செயவெனெச்சத்தின் பின் ‘படு’ ஏற்று வினைகள் செயப்பாட்டு வினையை (Passive Voice) குறிக்கின்றன. அவை பற்றி ஆய்தல் இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது.)

2. 12. பெயர் + படுத்து

நெறிப்படு, வழிப்படு, பண்படு, புண்படு, புலப்படு, வெளிப்படு, போன்ற வினைச்சொற்கள் பிறவினையாக அமையும்போது நெறிப்படுத்து, வழிப்படுத்து, பண்படுத்து, புண்படுத்து, புலப்படுத்து, வெளிப்படுத்து என வருதல் மரபு.

ஆனால் தன்வினைச்சொல் வடிவமே பெறாத சில வினைவடிவங்களும் பெயர் + படுத்து என்ற அமைப்பில் உருவாகின்றன.

எ-டு: அறிமுகப்படுத்து
விளம்பரப்படுத்து
ஊக்கப்படுத்து
உயர்வுபடுத்து

'அறிமுகப்படு', 'விளம்பரப்படு' போன்ற வினைவடிவங்கள் வழங்கப் படுவதில்லை.

2. 13. பெயர்+ஆக்கு

எ-டு: உருவாக்கு — சீராக்கு
ஆளாக்கு — பழுதாக்கு
சிக்கலாக்கு — சிறிதாக்கு — பெரிதாக்கு

மேற்குறித்த வடிவங்களில் 'ஆக்கு' என்ற வினை 'செய்' என்ற பொருளில் பெயர்களுடன் சேர்ந்து புதிய வினைவடிவங்களை உருவாக்கி யுள்ளது.

உருவாக்கு, ஆளாக்கு, சிக்கலாக்கு போன்ற வினைவடிவங்களுக்கு வேறு மாற்று வடிவங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. 14. பெயர்+செய்

எ-டு: ஈடுசெய்
பதிவு செய்.

இரு சொற்கள் போலத் தோற்றமளித்தாலும் இவை ஒரே சொல்லாக நின்று தம் பொருளைப் புலப்படுத்துகின்றன.

2. 15. பெயர்+ஆடு

வாது, சூது, போர், ஊசல், வழக்கு, நடம், மன்று, சூறை என்ற பெயர்களுடன் 'ஆடு' சேர்ந்து வாதாடு, சூதாடு, போராடு ஊசலாடு, வழக்காடு, நடமாடு, மன்றாடு, சூறையாடு என வினைச்சொற்களை ஆக்கி அளிக்கிறது. இவ்வினைவடிவங்களிலிருந்து 'ஆடு' என்பதனைத் தனியே பிரித்தல் இயலாது. வாதை ஆடினான் எனவே சூறையை ஆடினான் எனவோ கூறுதல் பிழைபடும்.

மேலும் போராடு, ஊசலாடு, மன்றாடு என்ற வினைவடிவங்கள் தமது நேர்பொருளை இழந்து மரபுநிலை வழக்காக (Idiomatic Usage) போராடுதல் துன்பத்தை எதிர்த்து நிற்றலையும் ஊசலாடுதல்-ஒரு நிலையில் இல்லா திருத்தலையும், மன்றாடுதல்-இறைஞ்சிக் கேட்டுக் கொள்வதையும் குறிப் பிடுகின்றன.

தலைவிரித்தாடுதல்-கட்டுக்கடங்காமல் இருத்தலையும், தாண்டவமாடுதல் மேலோங்கி நிற்றலையும் குறிக்கின்றன.

எ-டு: வன்முறை தலைவிரித்தாடியது. எங்கும் ஊழல் தாண்டவமாடுகிறது.

2. 16. பெயர் + அவிழ்

கட்டவிழ்: அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. கட்டவிழ்தல் இதுவரை கட்டுப்பாட்டுக்குள் இருந்த ஒன்று, முழு ஆற்றலுடன் செயல்படத் தொடங்குதலைக் குறிக்கும்.

2. 17. பெயர் + குலை

கட்டுக்குலை: ஒழுங்காக இருந்த ஓர் சூழல் சிதைந்துபோதலை இவ்வினைச் சொல் குறிக்கின்றது.

எ-டு: பல்வேறு சிக்கல்களால் கல்வித்துறை கட்டுக்குலைந்துள்ளது.

சீர்குலை: இதே பொருளில் சீர்குலை என்ற சொல்லும் வழக்கில் உள்ளது. 'சிறப்புக் கெடுதல்' என்னும் பொருளிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

எ-டு: என் மனஅமைதியைக் சீர்குலைத்தான்.
நல்ல குடும்பம் சீர்குலைந்தது.

2. 18. பெயர் + அழி

கட்டழி: "கட்டுக்குலைத்தல்" என்றும் பொருளில் திருவாசகத்தில் "கட்டழித்தல்" என்றும் வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே"
(சிவபுராணம்—திருவாசகம்)

இச்சொல் இப்போது இலக்கிய வழக்கில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

கற்பழி:
சீரழி : } இச்சொற்கள் ஒருசொல் நீர்மையன. கற்பை அழித்தான், சீரை அழித்தான் என்று கூறுவதில்லை. இவ்விரண்டும் நுண்பொருள்களாதலின் அங்ஙனம் கூறுதல் மரபும் அல்ல.

2. 19. பெயர் + அமை

எ-டு: **சீரமை:** சீர்கெட்டிருக்கும் ஒன்றை நல்ல நிலைக்கு மாற்றியமைத்தலை இவ்வினைச் சொல் குறிக்கும்.

இளைஞர் அணி மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளது.

2. 20. பெயர் + ஆகு

எ-டு: பாழாகு, உருவாகு, சீராகு.
சொத்து முழுவதும் பாழாகிவிட்டது.
நல்லநிலை உருவாகியுள்ளது.
பதட்ட நிலைமை நீங்கியதும், சூழல் சீராகியது.

பாழ், உரு, சீர் என்ற சொற்கள் தமது தனிப்பொருளை இழந்து, இவ்வினைச்சொற்கள் ஒருசொல் நீர்மையனவாக விளங்குதலைக் காணலாம்.

2. 21. பெயர் + பார்

எ-டு: பழுதுபார் (Repair)
சரிபார் (Verify)

பழுது பார்த்தல் என்றால் பழுதாக இருப்பதைப் பார்த்தல் என்று பொருளல்ல. பழுதைப்பார் என்பதற்கும் பழுதுபார் என்பதற்கும் பொருள் வேறுபாடு மிகுதி. பழுது, பார்—இவை இரண்டும் ஒரே சொல்லாகி பழுதுபார்த்தல் என்றால் கோளாறைச் சரி செய்தல் என்று பொருள்படும்.

2. 22. பெயர் + பெறு

எ-டு: இடம்பெறு
பங்குபெறு

நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைக் குறிப்பிடும் பங்கு பெறு (participate) என்னும் சொல்லுக்கும் ஊதியத்தில் (profit) பங்கு (dividend) பெறுவதைக் குறிக்கும் சொல்லுக்கும் வேறுபாடு உண்டு. "லாபத்தில் பங்கு பெற்றான்" என்னும்—போது "பங்கு பெற்றான்" என்பது சொற்றொடராக, தொகைநிலைத் தொடர் மொழியாக விளங்குகிறது. ஆனால்,

கூட்டத்தில் பங்கு பெற்றான்.
போராட்டத்தில் பங்கு பெற்றான்.

என்னும்போது 'பங்குபெறு' என்னும் வினைச்சொல் ஒருசொல் நீர்மைத்தாய் விளங்குகிறது.

2. 23. பெயர் + செலுத்து

எ-டு: அன்பு செலுத்து
இரக்கம் செலுத்து

அன்பு செலுத்துதல், இரக்கம் செலுத்துதல் என்பன பேச்சு வழக்கில் வழங்கும் வினைச்சொற்கள்.

ஏழைகளிடம் இரக்கம் செலுத்து.
குழந்தைகள்பால் அன்பு செலுத்து.

"கட்டணத்தை அலுவலகத்தில் செலுத்தினான்" என்று கூறுவதைப் போல, "அன்பை ஏழைகளிடம் செலுத்தினான்" என்று கூறுவதில்லை. இரு வாக்கியங்களையும் கவனிக்கும்போது அன்பு செலுத்து என்ற வினை பிரிக்கப்படக் கூடாத ஒன்று என்பது தெளிவாகிறது.

2. 24. பெயர் + காட்டு

எ-டு: அன்பு காட்டு
இரக்கம் காட்டு
கருணை காட்டு

இவை முன்னைய வினைச்சொற்களைப் போன்ற அமைப்பில் வழங்கிவரும் வினைச்சொற்களாகும்.

3. வினை + வினை

இரண்டு வினையடிகள் சேர்ந்து புதியதொரு பொருள்பயக்கும் மூன்றாவது வினைச்சொல்லை உருவாக்குகின்றன.

எ-டு: 'விடு' 'பெறு' என்பவை தனிநிலையில் வழங்கப்படும்போது கொண்ட பொருளை விடுத்துப் புதிய பொருளைக் குறிக்கும் "விடு பெறு" என்றும் புதிய வினைச்சொல்லை உருவாக்குகின்றன.

இதேபோல 'விடுபடு', 'அடைபடு' போன்ற சொற்களைக் குறிக்கலாம்.

"வேறு, இல்லை, உண்டு ஐம்பால் மூவிடத்தன" என்பது நன்னூல் (339). உண்டு என்னும் குறிப்பு வினைமுற்று ஆக்கு, ஆகு என்னும் வினைச்சொற்களுடன் சேர்ந்து உண்டாக்கு = உற்பத்தி செய்தலையும், உண்டாகு = கருத்தரித்தலையும் குறிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன.

3. 1. செயவென்னெச்சம் + வினை

செயவென்னெச்சத்துடன் வினையடிகள் சேர்ந்து புதிய வினைச் சொற்களை உருவாக்குகின்றன.

எ-டு: செல + அழி = செலவழி:

செலவழி என்ற வினைச்சொல்லை செலவு அழி எனப் பிரித்தால் உரிய பொருள் வராது. கையில் இருக்கும் பொருள் செல்லும் வகையில் அழிப்பதை செலஅழித்தல் எனக்குறித்து அது 'வ' கர உடம்படுமெய் பெற்று செலவழித்தல் என்றாகி இப்புதிய வினைச்சொல் உருவாக்கப் பட்டுள்ளது.

இதேபோல் வரவழை என்ற வினைச்சொல்லும் வா அழை என்ற கூட்டமைப்பால் உருவாகிய வினைச்சொல் ஆகும்.

செயவெண் எச்சத்தின் பின் 'விடு' சேர்வதால் வேண்டற்பொருள் ஏவல் வினைவடிவங்கள் உருவாகின்றன.

எ-டு: செய்யவிடு, வாழவிடு, வரவிடு, அழவிடு, பேசவிடு.

பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படும் சாகடித்தான், மூழ்கடித்தான் போன்ற வினைச்சொற்களும் இத்தகைய அமைப்பில் உருவானவையே.

மூழ்க + அடி = மூழ்கடி
சாக + அடி = சாகடி.

3. 2. செய்தென்னெச்சம் + வினை

ஒருவினையின் 'செய்தென்னெச்சமும்' இன்னொரு வினையும் சேர்ந்து வேறொரு பொருள்பயக்கும் மூன்றாவது வினையை உருவாக்குகின்றன.

எ-டு: எதிர்த்து நில், விட்டுக்கொடு, ஏற்றுக்கொள், செய்துமுடி, சேர்த்துவை, குறித்துவை, செய்துபார், 'நினைத்துப்பார், கண்டுகொள், கண்டுபிடி—பு, பகுத்தறிவு—வு, பகுத்தாய்—வு, பகிர்ந்தளி—பு.

இவ்வினைச்சொற்கள் ஒருசொல் நீர்மையன. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்பதனை அமெரிக்காவைக் கண்டு, பிடித்தார் எனப் பிரித்துப் பொருள் கொள்ள இயலாது. கண்டு அதன்பின் பிடித்ததாக இவ்வினை கூறவில்லை. கண்டு, பிடித்தல் (discovery) இங்கு ஒரே தொழிலையே குறிக்கின்றன. 'ஒத்து' என்னும் செய்தென்னெச்சம் இரு, உழை, பார், போ ஆகிய வினைச்சொற்களுடன் சேர்ந்து ஒத்திரு, ஒத்துழை, ஒத்துப்பார், ஒத்துப்போ என்னும் புதிய வினைச்சொற்களை உருவாக்குகிறது.

4. இடைச்சொல் + வினை

இடைச்சொற்கள் பல்வேறு வினைச்சொற்களுடன் சேர்ந்து புதிய வினைச்சொற்களை உருவாக்குகின்றன.

4. 1. முன் + வினை

முன் என்ற இடைச்சொல் வினைச்சொற்களுடன் சேர்ந்து புதிய வினைச்சொற்களை உருவாக்குகிறது.

மொழிந்தான் என்ற வினைச்சொல் பேசினான், கூறினான் என்ற பொருளில் அமைந்துள்ளது. இத்துடன் 'முன்' சேர்ந்து 'முன் மொழிந்தான்' என்ற சொல்லை உருவாக்கி (to propose) அவையில் ஒரு தீர்மானத்தை முதலில் எடுத்துக் கூறுவதைக் குறிக்கும் வினைச் சொல்லாக விளங்குகிறது. இங்கு 'முன்' என்பது இடத்தைக் குறிக்கும் இடைச்சொல்லாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் முன்னேறு, முன்வை, முன்னில் முற்படு போன்ற வினைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4. 2. பின் + வினை

இதேபோலப் 'பின்' என்ற இடைச்சொல் வினைகளுடன் சேர்ந்து புதிய வினைச்சொற்களை உருவாக்குகின்றது. 'பின்வாங்கு' என்றால் பின்னாலே (பொருளை) வாங்கு என்று பொருளல்ல. வளர்ச்சியடைதற்குரிய ஆக்கவழியில் செல்லாமல் தேங்கி நிற்றலைப் 'பின்வாங்கு' என்னும் வினை குறிக்கின்றது. இதேபோலப் 'பின்னடை', 'பிற்படு' என்ற வினைச்சொற்கள் வழங்குதலைக் காணலாம். பெரியோரது கொள்கைகளை ஏற்று அதன்வழி நடத்தலைக் குறிக்க "பின்பற்றுதல்" என்ற சொல் வழங்கப்படுகிறது.

4. 3. வேறு பல இடைச்சொற்கள் + வினை

4. 3. 1. உள் + படு உட்படு
2. உள் + இடு உள்ளிடு
3. அகம் + படு அகப்படு
4. புறம் + படு புறப்படு
5. மேல் + படு மேற்படு
6. மேல் + இடு மேலிடு
7. கீழ் + படு கீழ்ப்படு
8. கீழ் + இடு கீழிடு
9. கீழ் + ஆகு கீழாகு
10. வெளி + படு வெளிப்படு
11. வெளி + இடு வெளியிடு
12. வெளி + விடு வெளிவிடு
13. வெளி + ஆக்கு வெளியாக்கு
14. இடை + படு இடைப்படு
15. இடை + மறி இடைமறி
16. இடை + விடு இடைவிடு
17. கடை + படு கடைப்படு
18. தலை + படு தலைப்படு
19. தலை + இடு தலையிடு

மேலே காட்டப்பெற்ற இடம்குறித்த இடைச்சொற்கள், வினைச்சொற்களை உருவாக்கிய பின் தமது இடப்பொருளை இழந்து விடுவது குறிப்பிடத்தக்கது. மேற்படு என்பவற்கு மேலே தோன்று (படு) என்றோ கீழ்ப்படு என்பதற்குக் கீழே தோன்று (படு) என்றோ புறப்படு என்பதற்குப் புறத்திலே

தோன்று என்றோ பொருள் கொள்வதில்லை. உயர்ந்த நிலையை அடைவதை மேற்படு என்ற சொல்லும் தாழ்ந்த நிலையை அடைவதைக் கீழ்ப்படு என்ற சொல்லும் கிளம்பு என்ற வினையைப் புறப்படு என்ற சொல்லும் குறிக்கின்றன.

5. மரபுச் சொற்றொடர் வழக்கு

தலைசாய், தலைநிமிர், தலைதூக்கு, தலைகவிழ், தலைகுனி, தலையாட்டு, தலையசை போன்ற சொற்கள் மரபுச் சொற்றொடர் வழக்குநிலையில் வழங்கி வருவன. இவை தமது நேரடிப் பொருளை இழந்து வேறொரு பொருளைக் குறிக்கப் பயன்படுகின்றன.

தலைசாய்தல்	=	இறத்தல்
தலைநிமிர்	=	எழுச்சிகொள்
தலைதூக்கு	=	வீழ்ச்சியடைந்தபின் மீண்டும் பழைய நிலைக்கு வருதல்
தலைகவிழ்தல்	=	நாணுதல்
மூக்குடைதல்	=	அவமதிப்படைதல்
வாயாடு	=	அளவுக்கதிமாக உரையாடு
கண்ணயர்	=	தூங்கு
நெஞ்சழி	=	துன்புறு
நெஞ்சுடை	=	மனம் தளர்

'கை என்னும் பெயர்ச்சொல்லுடன் பற்று, கொள், விடு, விரி, வை, ஆள், ஆடு, கொடு, தூக்கு ஆகிய வினையடிகள் சேர்ந்து, கைப்பற்று, கைக்கொள், கைவிடு, கைவிரி, கைவை, கையாள், கையாடு, கைகொடு, கைதூக்கு என்னும் வினைச்சொற்களை உருவாக்குகின்றன. கைப்பற்று என்ற சொல் தன்வசமாக்குதல் என்ற பொருளிலும் கைக்கொள் என்ற சொல் ஏற்றுக்கொள் என்ற பொருளிலும் கைவிடு என்ற சொல் விட்டுவிடு என்ற பொருளிலும் கைவிரி என்ற சொல் மறுத்துவிடு என்ற பொருளிலும் கைவை என்ற சொல் தாக்கு என்ற பொருளிலும் கையாள் என்ற சொல் பயன்படுத்து என்ற பொருளிலும் கையாடு என்ற சொல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருளைத் திருடு என்ற பொருளிலும் கைகொடு என்ற சொல் தக்க நேரத்தில் உதவிபுரி என்ற பொருளிலும் கைதூக்கு என்ற சொல் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்போரை உயர்த்து என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

6. முடிவுரை

வானொலி நிலையம் வந்தபோது தமிழில் ஒலிபரப்பு (Broadcast) என்ற சொல் உருவாக்கப்பட்டு வழக்கில் வந்து நீண்ட நாள் ஆகிவிட்டது. "புதிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறார்கள்", "நேற்று அரங்கிசை ஒலிபரப்பினார்கள்" "நாளைக் காலை தமிழ் மணம் ஒலிபரப்புவார்கள்"

என்னும் வாக்கியங்களைக் கவனிக்கும் போது ஒலிபரப்பு என்னும் வினை வடிவம் முழுமையாக வழக்கில் வந்துவிட்டது என்பது தெளிவு. இதே போலத் தொலைக்காட்சி வந்தபின் 'ஒலிபரப்பு' என்ற சொல் வழக்கில் வந்துள்ளது. ஆனால் ஒளிபரப்புவதுடன் ஒலிபரப்புவதையும் தொலைக் காட்சி நிலையம் செய்வதால் இச்சொல் முழுமைபெற்ற ஒன்றாகுமா என்பது காலப் போக்கில் தெரியும். இதேபோல் 'ஒலிபெருக்கு' என்ற வினைச்சொல்லும் வழக்கில் வரத் தொடங்கியுள்ளது. 'தொலைபேசி மூலம் செய்தி கூறுக' என்பதற்குச் சிலர் 'தொலைபேசுக' என்ற சொல்லைக் கையாள்கின்றனர். 'தட்டச்சு செய்க' என்பதனைத் 'தட்டச்சுக' என்று சிலர் குறிப்பிட முற்படுகின்றனர். 'மழை பெய்தது' என்னும் பொருளில் பாவேந்தர் பாரதிதாசனார் 'மழைத்தது' என்னும் சொல்லைக் கையாள்கிறார். சிரித்தான் என்னும் பொருளில் 'புன்னகைத்தான்' என்ற சொல்லைச் சிலர் கையாள்கின்றனர். இச்சொல்லாக்கங்கள் தமிழ் மரபுக்கு ஒவ்வாதன. எனவே காலப்போக்கில் நிலைத்து நிற்பது கடினம்.

எனேபிள் (enable) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'இயல்வித்தல்' என்று ஆட்சிமொழிக்குழு ஆணையம் மொழிபெயர்த்துள்ளது. புரூவ் (prove) என்னும் ஆங்கிலச் சொல்லை 'எண்பித்தல்' எனப் பாவாணர் மொழிபெயர்த்து வழங்குகிறார்.

காலப்போக்கில், கலை, அறிவியல் துறைகளில் தேவைப்படும் புதிய வினைச்சொற்களுக்கு இங்ஙனம் தமிழ் மரபை ஒட்டி வினைச்சொற்களை ஆக்கிக் கொண்டால் தமிழ் மேலும் புதிய பொலிவு அடையும் என்பதில் ஐயமில்லை.

பிற குறிப்புகள்

1. வினை + உண் என்னும் வடிவம் இலக்கிய வழக்கில் காணப்படுகின்றது.

எ-டு : கொல்லுண், புதையுண்,

2. பெயர் + இ; காதலி என்னும் வினைச்சொல் (காதல் + இ) பெயருடன் இகர விகுதி சேர்ந்து உருவாகியுள்ளது- இத்தகைய வழக்குள் மிகக் குறைவே. முறுவல் + இ முறுவலி என்னும் தற்கால வழக்கு வினைச் சொல் இவ்வமைப்பில் உள்ளது. மகர ஒற்றில் முடியும் வடமொழிப் பெயர்கள் மகரம் கெட்டு இகர விகுதி பெற்று வினையாகின்றன.

கவனம்	கவனி	—	கவனித்தான்
சயனம்	சயனி	—	சயனித்தான்
ஸ்வாசம்	ஸ்வாசி	—	ஸ்வாசித்தான்
சந்தேகம்	சந்தேகி	—	சந்தேகித்தான்
யூகம்	யூகி	—	யூகித்தான்
சல்லாபம்	சல்லாபி	—	சல்லாபித்தான்.

முடிவுரை :

கூட்டுப்பெயர்ச் சொல்லாக்கம், புதியவினைச் சொல்லாக்கம் ஆகிய இரண்டினையும் சுருக்கமாகக் கண்டோம். செய்தித் தொடர்பும் கருத்துப் பரிமாற்றமும் மிகுதியாகியுள்ள இந்நாளில் புதிய புதிய சொற்களின் தேவையும் மிகுந்துள்ளது. அறிவியல் வளர்ச்சியும் கலையியல் வளர்ச்சியும் நமது மொழியின் சொற்கோவையை விரிவுபடுத்திக் கொண்டே வருகின்றன. உருவாகிவரும் புதிய சொற்கள் அனைத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கி வரும் சொற்கள் அனைத்தும் இலக்கண மரபுக்குக் கட்டுப்படுகின்றனவா என்பதை ஆய்தல் வேண்டும். இலக்கண மரபுக்குக் கட்டுப்படாவிடினும், பழைய மரபுகளின் பாதையில் புதிய நெறிகளை உருவாக்குகின்றனவா என்பதை ஆய்ந்து அத்தகைய புதிய நெறிகளைப் புலப்படுத்துவதே சொல்லாக்கவியலாளர்தம் கடமையாகும். இங்ஙனம் சொல்லாக்க நெறிகளை வகைப்படுத்தியுரைப்பதன் மூலம் ஆட்சித்துறை, அறிவியல்துறை, சட்டத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சொற்கோவை விரிவும் வளமும் பொருந்தியதாகச் செய்ய முடியும். ஆட்சிமொழியாக, பயிற்று மொழியாகச் சிறப்புறச் செயல்படத் தமிழால் முடியும் என்ற தன்னம்பிக்கையோடு தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

குறிப்புகள்

1. தொல்காப்பியம்—சொல்லதிகாரம் – நச்சினார்க்கினியருரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை-1, 1962.
2. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, "சொற்கலைவிருந்து"-17. சொல்லாக்கம், ப. 176
3. ,, ,, ,, ,, பக். 178-180.
4. History of Grammatical Theories in Tamil and their relation to the Grammatical literature in Sanskrit. (Thesis submitted for the Ph. D. Degree of the Madras University, (1930) by Dr. P. S Subrahmanya Sastri, Published in the journal of Oriental Research, Madras, 1934).
5. Ibid., p. 204.
6. Ibid., p. 205.
7. Barbara M. H. Strang *Modern English Structure*, Second Edition, 1969, p. 230.
8. Ibid , p. 232.

பாரதிதாசன் சிறுகதைகள்*

கோ. கிருட்டிணமூர்த்தி
முதுநிலை ஆய்வாளர், தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

'புரட்சிக்கவிஞர்' என்றும், 'பாவேந்தர்' என்றும் தன்னுடைய கவிதைப்படைப்புகளுக்காகப் புகழப்படும் பாரதிதாசன் சிறுகதைகளும் எழுதியுள்ளார் என்பது பலர் அறியாத செய்தி. தான் உணர்த்த விரும்பிய கருத்துகளை இலக்கியமாகப் படைக்க விரும்பிய பாரதிதாசன் அதற்குப் பெரிதும் கதைகளைத் துணையாகக் கொண்டார் என்பது அவரது படைப்புகளை மேலோட்டமாகப் பார்க்கும்போதே புலனாகும். அவருடைய கதைசார்ந்த படைப்பு வடிவங்களுள் சிறுகதையும் ஒன்று. 'ஏழைகள் சிரிக்கிறார்கள்'[1] என்னும் தொகுப்பினைக் கொண்டு அவரது சிறுகதைப் படைப்புத் திறனையும், சிறுகதை இலக்கிய வரலாற்றில் அவருக்குரிய இடத்தினையும் ஆராய்கிறது இக்கட்டுரை.

ஏழைகள் சிரிக்கிறார்கள்

'ஏழைகள் சிரிக்கிறார்கள்' என்னும் தொகுப்பு நூலை அக்டோபர் 1980-இல் பூம்புகார் பிரசுரம் வெளியிட்டுள்ளது. இந்நூலுக்குப் பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னன் எழுதியுள்ள முன்னுரையினின்று இந்நூலைத் தொகுத்தவர் ச. சு. இளங்கோ என அறிய முடிகிறது.

'பாரதிதாசன் கதைகள்' என்னும் பெயரில் 1955-இல் ஒரு நூல் வெளிவந்துள்ளது.[2] இந்த நூலைப் பற்றிக் குறிப்பிட்டு "அந்நூலில் இடம் பெறாத சிறுகதைகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளமை இந்நூலின் தனித்தன்மையைச் சிறப்பிக்கும் தகுதியாகும்"[3] என்று தொகுப்பாளர் கூறியுள்ளார். இக்குறிப்பு, 'பாரதிதாசன் கதைகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டன எவை? புதியதாகச் சேர்க்கப்பட்டன எவை? என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை.

1. கடவுள் மகத்துவம்
2. தாசிவீட்டில் ஆசீர்வாதம்
3. என்னப்பன் கூத்தாண்டவன் அருட்பெருக்கு
4. தேரைவிட்டுக் கீழே குதித்தான் சல்லியராசன்
   மோரைவிட்டுக் கூழைக் கரைத்தான்

---

* தமிழ் மொழித்துறைக் கருத்தரங்கில் 18-8-1982 அன்று வழங்கப்பெற்ற கட்டுரை.

5. ஆற்றங்கரை ஆவேசம்
6. திருந்திய ராமாயணம்
7. சுயராஜ்யம் வேண்டும்
8. சுயமரியாதைக்காரருக்கு அமெரிக்கரின் கடிதம்

ஆகிய எட்டுப்படைப்புகளும் 'பாரதிதாசன் கதைகள்' என்னும் நூலி லிருந்து எடுக்கப்பட்டு இந்தத் தொகுப்பினுள் சேர்க்கப்பட்டுள்ளன.

1. லௌகிகத்தின் துஷ்டப்பிள்ளை வைதிகம்
2. சுயமரியாதைக்காரர்களே தொலைந்து போய் விடுங்கள்
3. கடவுள் வேண்டியதில்லை
4. புதுவையில் பெருங்காற்று
5. விகடக் கோர்ட்

ஆகிய ஐந்து படைப்புகளும் முன்னர் வெளியான 'பாரதிதாசன் கதைகள்' என்னும் நூலில் உள்ளவை; இந்நூலில் சேர்க்கப்படாதவை. முன்னர்க் கூறிய எட்டுப் படைப்புகளும் எந்த அடிப்படையில் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டன; பின் ஐந்து படைப்புகளும் ஏன் சேர்க்கப்படவில்லை என்பதற்கான காரணமும் நூலுள் எங்கும் விளக்கப்படவில்லை. விடப் பட்ட ஐந்தினுள் முதல் நான்கும் கதைத்தன்மை கொண்டவை அல்ல; கட்டுரைகளே. அதனால் விடப்பட்டன போலும். 'விகடக் கோர்ட்' என்பது நாடகமாகும். இந்த நாடகம் 'தலைமலை கண்ட தேவர்'[4] என்னும் நாடகத்தொகுப்பு நூலினுள் சேர்க்கப்பட்டுள்ளது. 'பாரதிதாசன் கதைகளி'ல் காணப்படும் 'பயன் கிண்டல்' என்னும் பெயரில் அமைந்த நகைச்சுவைத் தொகுப்பு 'சிரிக்கும் சிந்தனைகள்'[5] என்னும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிறுகதைகளா?

இந்த நூலினுள் உள்ள பாரதிதாசனின் முப்பத்திரண்டு படைப் புகளும் சிறுகதைகள் என்ற எண்ணத்தில் ஒன்றாகத் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.[6] இதனுள் இடம் பெற்றுள்ள எல்லாப் படைப்புகளையும் சிறுகதைகள் எனக் கொள்ளமுடியாது. அவற்றுள் பின்வரும் படைப்புகளில் கதைத் தன்மை எதுவும் இல்லை.

1. படிக்க விருப்பந்தான்...பள்ளியில் வகுப்பில்லை
2. என்னப்பன் கூத்தாண்டவன் அருட்பெருக்கு
3. சுயராஜ்யம் வேண்டும்
4. தமிழ்ப்பெண் மனப்பான்மை
5. பாலனைப் பழித்தல்

இவற்றுள் முதல் மூன்றும் கட்டுரையாகவே கொள்ளத்தக்கவை. ஏனைய இரண்டும் பாடலும் அதன் உரைவிளக்கமுமாக அமைந்தவை. ஆகவே

இவ்வைந்து படைப்புகளும் ஏனைய சிறுகதைகளோடு உடன் வைத்து எண்ணத்தக்கன அல்ல. உரைவடிவப் படைப்புகள் என்ற அளவிலேயே இவை ஒன்றுபடுகின்றன.

காலம்

ஓர் எழுத்தாளரின் படைப்புகளை ஆராயும்போது அவை படைக்கப் பட்ட காலத்தினையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது என்ப தோடு பலவகைகளில் பயனும் நல்குவதாகும். இத்தொகுப்பிலுள்ள படைப்புகளின் காலம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. "பாரதி தாசனின் தொடக்ககாலச் சிறுகதைகளும் பிற்காலச் சிறுகதைகளும் இந் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இதனால் பாரதிதாசனின் நடை வளர்ச்சியை அறிவதற்கும் இத்தொகுதி சிறப்பாகப் பயன்படுகிறது"[7] என்று தொகுப்பாளர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்குறிப்புக்கு மறு தலையாகப் பாரதிதாசனின் நடையில் காணப்படும் மாற்றத்தினைக் கொண்டே இந்நூலில் உள்ள படைப்புகளைத் தொடக்க காலத்தன என்றும், பிற்காலத்தன என்றும் வேறு பிரித்தறிய வேண்டியுள்ளது. பாரதிதாசன் தனித்தமிழ் நடையினைக் கையாளுவதற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்ட படைப்புகள் இதனுள் காணப்படுகின்றன. இப்படைப்புகள் வெளியான காலம், இதழ் ஆகியவை பற்றியும் தேவையான குறிப்புகள் தரப்படவில்லை.

> 1930-32 ஆம் ஆண்டுகளுக்கிடையில் வெளிவந்த 'புதுவைமுரசு' இதழ்களிலும் பின்னர் நடத்தப்பட்ட 'குயில்' இதழ்களிலும் மாசிலாமணி (முதலியார்) நடத்திய 'தமிழரசு' இதழ்களிலும், பி. எஸ். செட்டியார் நடத்திய 'சினிமா உலகம்' இதழ்களிலும், காஞ்சி மணிமொழியார் நடத்திய 'போர்வாள்' இதழ்களிலும் இடம் பெற்ற பாரதிதாசனின் கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன[8]

என்று இந்நூலின் அணிந்துரை கூறும் குறிப்பினைக் கொண்டு இந் நூலில் உள்ள படைப்புகள் வெளியான இதழ்கள் எவை என்று ஒட்டு மொத்தமாகத் தெரிகிறதே தவிர, எவ்வெப் படைப்புகள் எந்தெந்த இதழ்களில் எப்போது வெளியாயின என்பது தெளிவாகவில்லை. இரண்டு படைப்புகளுக்குமட்டும் காலமும் வெளியான இதழும்தரப்பட்டுள்ளன. அவை:

1.	ஏழைகள் சிரிக்கிறார்கள் / இதயம் எப்படி இருக்கிறது ?	உண்மை	14—8—71
2.	படிக்க விருப்பந்தான்... / பள்ளியில் வகுப்பில்லை	குயில்	8—6—58

ஏனைய முப்பதுக்கும் இத்தகைய குறிப்புக்கள் இல்லை.

இரு தலைப்புகள்

பாரதிதாசன் தன்னுடைய ஐந்து சிறுகதைகளுக்கு இருதலைப் புகளைத் தந்துள்ளார்.

1. ஏழைகள் சிரிக்கிறார்கள் —இதயம் எப்படி இருக்கிறது?
2. முதலாளி—காரியக்காரன் —கடவுள் விஷயத்தில் ஜாக்கிரதை
3. பெறத்தக்க ஒன்று பெற்று விட்டேன்—அவளும் நானும்
4. வேல்பாய்ந்த இருதயம் —விதவைகள் துயர்
5. செவ்வாய் உலக யாத்திரை —கண்ணுக்குத் தெரியாத சுமை

இவற்றுள் முதல் மூன்று சிறுகதைகளுக்கும் இருதலைப்புகளும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னிரண்டுக்கும் இரண்டாவதாகக் காட்டப்பட்டுள்ள தலைப்புகள் கொடுக்கப்படவில்லை. இத்தவறு அந்தச் சிறுகதைகள் பற்றிப் படைப்பாளனின் கருத்தாகக் கிடைக்கக் கூடிய சான்றினை அறியமுடியாமல் தடுக்கிறது.

மேலும் 'பகுத்தறிவுக்குத் தடை' என்னும் தலைப்பு 'பகுத்தறிவுத் தடை' எனவும், 'படம் இயக்கி (Director)யின் தங்கை' என்னும் தலைப்பு 'படம் இயக்கி (Director)யின் தந்தை' எனவும் தவறாகக் கொடுக்கப் பட்டுள்ளன. இவை இரண்டும் மிகுந்த பொருள் மாறுபாட்டைத் தருவ தோடு கதையின் கருவுக்கே முரணாயும் உள்ளன.

பாரதிதாசனின் கதைப்படைப்புகள்

பாரதிதாசன் தமது கருத்துகளை வெளியிடுவதற்குக் கவிதை, உரை நடை என்ற இரண்டையுமே கருவியாகக் கொண்டுள்ளார். அவரது படைப்புகளில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு உரைநடை சார்ந்த படைப் புகளேயாகும். அவருடைய உரைநடைப் படைப்புகளை, 1. துணுக்கு, 2. கட்டுரை, 3. குட்டிக்கதை, 4. சிறுகதை, 5. புதினம், 6. நாடகம், 7. திரைக்கதை, 8. மேடைப்பேச்சு என்று பாகுபாடு செய்யலாம். பாரதிதாசன் படைப்புகளை முழுமையாக மதிப்பிட அவருடைய உரைநடைப் படைப்புகளும் ஆராயப்பட வேண்டும். அவை மிகுதியும் பயிலப்படாமலும் ஆராய்ந்து மதிப்பிடப்படாமலும் உள்ளன.

பாரதிதாசனும் உரைநடையும்

பாரதிதாசன் கதைகளைக் கூறுவதற்கும் உரைநடை, கவிதை என்ற இரண்டினையும் பயன்படுத்தியுள்ளார். அவரது கதைசார்ந்த படைப் புகளை ஏழுவகையாகப் பகுக்கலாம். 1. குட்டிக்கதை, 2. சிறுகதை, 3. புதினம், 4. சிறுகதைப்பாடல், 5. நெடுங்கதைப்பாடல், 6. நாடகம், 7. திரைக்கதை என்பன அவை.

கவிதை, உரைநடை என்ற இரண்டையும் பாரதிதாசன் தம் படைப்பு களை வெளியிடும் கருவியாகக் கொண்டிருந்த போதிலும் அவர் உரை நடையைவிடக் கவிதையையே மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். உரை

நடையைப் பற்றி அவர் வெளியிட்டுள்ள கருத்துகளை எண்ணும்போது அதனை இரண்டாம் நிலையினதாகவே கருதியுள்ளார் என்று அறிய முடிகிறது.

> உரைநடையால் எழுதுவதினும் கவிதையால் குறைந்த சொற்களால் ஒன்றைச் சொல்லி முடித்துவிடலாம்

எனப் 'பாண்டியன் பரிசு' முன்னுரையிலும்,

> உரைநடையால் ஒருபொருளை விளக்குவதினும் பாட்டாற்காட்டும் கால் இனிது பதியும்

என 'இளைஞர் இலக்கியத்'தின் முன்னுரையிலும்,

> உரைநடையானது கேட்க முடியும். நினைவில் நிறுத்த ஏற்றதல்ல; பாட்டு நினைவில் நிற்கும். பாடுவது பாட்டின் கருத்தை மக்கள் நினைவில் நிற்கச் செய்யத்தானே ?[9]

எனத் தனது மேடைப்பேச்சிலும் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றுகளிலிருந்து, 1. சுருங்கச்சொல்லல், 2. தான் கூறுவதைப் படிப்பார் நெஞ்சில் பதியவைத்தல், 3. பதிந்ததை நினைவில் நிறுத்தல் ஆகிய மூன்று காரணங்களுக்காகப் பாரதிதாசன் கவிதையை உரைநடையிலும் சிறந்ததாகக் கொள்கிறார் என்று உணரலாம்.

சிறுகதைப்பாட்டு

பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் காணப்படும் சில பாடல்கள் சிறுகதைத் தன்மையைக் கொண்டுள்ளன. 'மாந்தோப்பில் மணம்', 'காதற் குற்றவாளிகள்', 'காதலைத் தீய்த்த கட்டுப்பாடு', 'மூடத் திருமணம்', 'எழுச்சியுற்ற பெண்கள்', 'குழந்தை மணத்தின் கொடுமை', 'தவிப்பதற்கோ பிள்ளை', 'மாண்டவன் மீண்டான்', 'வியர்வைக்கடல்', 'சைவப்பற்று' ஆகியன அவை. இவற்றுள் 'சைவப் பற்று' என்னும் சிறுகதைப்பாடலை ஆராய்ந்து, "சிறுகதைக்கு வகுக்கப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருத்தமாகச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதில் எத்தடையும் இல்லை" என்று சாலை இளந்திரையன் கூறியுள்ளார்.[10] 'சிறுகதைப்பாட்டு" என்று தலைப்பிட்டு ஒன்பது பாடல்களை 'இளைஞர் இலக்கியத்'துள் அமைத்துள்ளார் என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

காலம் அறியப்பட்ட சிறுகதைகள்

இந்தச் சிறுகதைகளை, அவை எழுதப்பட்ட காலச்சூழலுடன் சேர்த்து நோக்கும்போதுதான் சரியாக மதிப்பிடமுடியும். முன்னரே கூறியபடி இரண்டு படைப்புகளுக்கு மட்டுமே நூலில் காலக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இருபத்து ஏழு படைப்புகளின் காலமும் வெளியான இதழ்களும் கட்டுரையாளரால் கண்டறியப்பட்டன. அவை வருமாறு :

1.	தாசி வீட்டில் ஆசீர்வாதம்	புதுவைமுரசு	17—11—30
2.	கடவுள் மகத்துவம்	,,	30—3—31
3.	என்னப்பன் கூத்தாண்டவன் அருட்பெருக்கு	,,	4—5—31
4.	தேரைவிட்டுக் கீழே குதித்தான் சல்லியராசன் மோரைவிட்டுக் கூழைக் கரைத்தான்	,,	3—8—31
5.	ஆற்றங்கரை ஆவேசம்	,,	22—12—30
6.	திருந்திய ராமாயணம்	,,	16—12—31
7.	சுயமரியாதைக் காரருக்கு அமெரிக்கரின் கடிதம்	,,	1930?
8.	பகுத்தறிவுக்குத் தடை	,,	2—2—31
9.	பண்டிதர்க்குப் பாடம்	,,	10—11—30
10.	முதலாளி-காரியக்காரன் கடவுள் விஷயத்தில் ஜாக்கிரதை	,,	15—12—30
11.	வேல்பாய்ந்த இருதயம்-விதவைகள் துயர்	,,	28—9—31
12.	சேற்றில் இறைத்த மாணிக்கங்கள்	,,	29—12—30
13.	கண்ணுக்குத் தெரியாத சுமை செவ்வாய் உலக யாத்திரை	,,	5—1—31
14.	சுயராஜ்யம் வேண்டும்	,,	20—7—31
15.	முயற்சியே வாழ்வு சோம்பலே சாவு	குயில்	22—9—59
16.	அனைவரும் அவர்களே	,,	,,
17.	அஞ்சிய உள்ளத்தில்...	,,	2—8—60
18.	பெறத்தக்க ஒன்று பெற்றுவிட்டேன் அவளும் நானும்	,,	8—9—59
19.	ஏழைகள் சிரிக்கிறார்கள் இதயம் எப்படி இருக்கிறது?	புரட்சி	11—2—34
20.	உனக்கு ஆசைதான் சாமிக்கு?	குயில்	15—5—48
21.	அதிகார நரி மான்களின் ஒற்றுமை கண்டு அஞ்சி இறந்தது	,,	15—6—48
22.	காகத்தை ஏன்செயப் படைத்தாய்?	,,	15—7—48
23.	தமிழ்ப்பற்று	பாரதிதாசன் குயில்	10—9—67
24.	காதலும் சாதலும்	தமிழரசு	15—12—39

25. பாலனைப் பழித்தல்	,,	15—12—39
26. தமிழ்ப்பெண் மனப்பான்மை	,,	,,
27. தேசியப் பத்திரிகைகள்	போர்வாள்	21—11—47

இந்தப் படைப்புகளுள் முதல் பதினான்கும் புதுவை முரசில் 1930-31 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டவை. அவற்றுள் 'என்னப்பன் கூத்தாண்டவன் அருட்பெருக்கு', 'சுயராஜ்யம் வேண்டும்' ஆகிய இரண்டும் கட்டுரைகள். எஞ்சிய பன்னிரண்டு புதுவை முரசுச் சிறுகதைகளும் சிறு கதை வரலாற்றின் தொடக்க காலத்தில் எழுதப்பட்டவை. ஆதலால் அவற்றின் உள்ளடக்கம், உருவம், உத்திமுறை ஆகியவற்றை அவை எழுதப்பட்ட காலச்சூழலுடன் சேர்த்து ஆராய்வது பாரதிதாசனின் சிறுகதைப் படைப்புத் திறனை மதிப்பிடவும், சிறுகதை வரலாற்றில் அவருக்குரிய இடத்தினைக் கண்டறியவும் பயன்படும்.

புதுவை முரசு

பிரெஞ்சிந்தியப் பகுதியாக விளங்கிய புதுவையில் க. இராமகிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தின் வார இதழாகப் புதுவை முரசு 10–11–1930 முதல் வெளிவந்தது. இந்த இதழில் பாடல், சிறுகதை, கட்டுரை ஆகியனவும் 'பயன் கிண்டல்' என்னும் தலைப்பில் விகடத் துணுக்குகளும் பாரதிதாசனால் எழுதப்பட்டன. 'புதுவை முரசு'க்கு முதலில் க. இராமகிருஷ்ணனும் பின்னர் குத்தூசி குருசாமியும் ஆசிரியராகப் பெயரளவில் இருந்த போதிலும் உண்மையான ஆசிரியர் பாரதிதாசன் ஆவார். அரசுப் பள்ளியில் பணிபுரிந்ததால் பத்திரிகையில் அவர் ஆசிரியர் என்பது குறிப்பிடப்படவில்லை.

'புதுவை முரசு' தோற்றத்துக்கு முன்னர் நூல் வடிவில் வெளிவந்த பாரதிதாசன் படைப்புகள் ஆறு. 1. மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் துதியமுது (1926), 2. கதர் இராட்டினப் பாட்டு (1930), 3. சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்(1930), 4. தொண்டர் படைப்பாட்டு (1930), 5. தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு (1930), 6. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (1930) ஆகியன அவை. இந்த ஆறும் கவிதைப் படைப்புகளே. 'புதுவை முரசு' காலத்துக்கு முன்னர் பாரதிதாசன் சிறுகதைகள் எழுதியுள்ளாரா என்பது தெரியவில்லை.

சிறுகதை இலக்கியத்தின் தோற்றம்

தமிழில் சிறுகதை இலக்கியம் தோன்றி ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் ஆகின்றன. தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் வ. வே. சு. அய்யர் புதுவையில் வாழ்ந்த காலத்தில் (1910-1920) சிறுகதைகளை எழுதினார். அவரது சிறுகதைத் தொகுப்பு நூல் 'மங்கையர்க்கரசியின் காதல்' 1927இல் வெளிவந்தது. இதனுள் அமைந்த எட்டுச் சிறுகதைகளுள் வரலாற்றுக் கதை ஒன்று; தழுவல் மூன்று; சொந்தப் படைப்புகள் நான்கு. இந்நான்கும் காதலையும்

வீரத்தையும் கருப்பொருளாகக் கொண்டவை.[11] எனினும் சிறுகதை என்னும் இலக்கிய வடிவினை அறிமுகப்படுத்தி அதன் உருவம், உத்தி ஆகியவற்றில் அவர் வெற்றிகண்டதால் 'சிறுகதை இலக்கியத்தின் தந்தை' எனப்படுகிறார்.

பாரதியார் புதுவையில் வாழ்ந்த காலத்தில் (1908-1918) தாகூரின் சிறுகதைகள் சிலவற்றை மொழிபெயர்த்தார்; தாமே பல கதைகளை எழுதினார். வ. வே. சு. அய்யரைவிட மிகுதியான கதைகளை எழுதியிருந்தும் பல்வேறு கருப்பொருள்களையும் கையாண்டிருந்த போதிலும் அந்தக் கதைகளின் உருவம், உத்திமுறைகள் காரணமாக அவை 'கட்டுக் கதைகள்'[12] என்றும் 'சிறிய கதைகள்'[13] என்றும் மதிப்பீடு செய்யப் படுகின்றனவே அன்றி சிறுகதைகள் எனத் திறனாய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தமிழ்ப் புதின இலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவரான மாதவையாவும் இதே காலகட்டத்தில் சிறுகதைகள் எழுதியுள்ளார். 1917-இல் 'தமிழர் நேசன்' இதழிலும், 1924-இல் 'பஞ்சாமிர்தம்' இதழிலும் இவரது படைப்புகள் வெளியாயின. சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவராக இவர் கருதப்பட்டாலும் இவரது சிறுகதையின் உருவம் பற்றி இருவித மதிப்பீடுகள் எழுந்துள்ளன. ஆங்கில அறிவின் பயனாக இவரது சிறுகதையின் வடிவம் சிறந்து விளங்குகின்றது என்று ஓர் ஆய்வாளரும்[14] எடுப்பும் முடிப்பும் ஏற்புற அமையாமை, சிறுகதையின் எல்லை மீறிய நீட்சி, இடையிடையே அமைந்த ஆசிரியரின் குறுக்கீடு ஆகிய குறைபாடுகள் காணப்படுகின்றன எனப் பிறிதொருவரும்[15] கருதுகின்றனர்.

சிறுகதை வரலாற்றில் முன்னோடிகளாகக் கூறப்படும் இம்மூவருமே ஆங்கிலம் கற்றவர்கள் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. எனவே சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் தமிழுக்குப் புதியது என்பது பற்றியும் கதை கூறும் முறையில் அது நமது பழைய மரபினின்றும் வேறுபட்டது என்பது பற்றியும் விழிப்புடனேயே இருந்தனர். வ. வே. சு. அய்யர் தன்னுடைய இரு கதைகளுக்குச் சூசிகை என்னும் பகுதியை எழுதிச் சேர்த்து அதற்கு விளக்கமாகத் "தலைப்பில் எழுதியிருக்கும் சூசிகையைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தோன்றும், ஆனால் ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமல் போனாலும் போகலாம் என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்"[16] என்று குறிப்பிட்டார். பாரதியாரும் தன்னுடைய 'சின்ன சங்கரன் கதை'யின் தொடக்கத்தில் இதுபற்றி எழுதியுள்ளமை அவரது சிந்தனையைப் புலப்படுத்துகிறது. "நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடி தொடங்கி கதாநாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக்கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பியக் கதைகளிலே அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப் போல நட்ட நடுவில் தொடங்குகிறார்கள்...நான் இக்கதையில் மேற்படி இரண்டு வழிகளையும் கலந்துகொண்டு வேலை செய்யப் போகிறேன்"[17] எனக் கூறிக் கதையைத் தொடங்குகிறார்.

மேலே சொல்லப்பட்ட மூவருள் வ. வே. சு. அய்யர் மட்டுமே "தமிழ் நாட்டுக்கு அதுவரை பழக்கமாகி இருந்த பழங்கதை மரபினை மீறி வடிவாலும் வனப்பாலும் சிறந்து விளங்கும் புதிய தமிழ்ச் சிறுகதை மரபினை அறிமுகப்படுத்தி உள்ளார். இவருக்கு முன் சிறுகதை இலக்கியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யாவரும் அவ்வளவு விழிப்போடு ஈடுபடவில்லை" [18] என்பர்.

இம்மூவருள் பாரதியார் 1921-ஆம் ஆண்டில் மறைந்தார். வ. வே. சு. அய்யர், மாதவையா இருவரும் 1925-இல் மறைந்தனர். 1925 முதல் 1932 வரை சிறுகதை இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படவில்லை என்று கூறி அதன் காரணத்தையும் பின்வருமாறு குறிப்பிடுவர்:

> நம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1927-1932 காலகட்டம் ஒரு நெருக்கடியான காலமாகும். காந்திய இயக்கம் நாட்டில் உள்ள எல்லாச் சக்திகளையும் ஒருமுனைப்படுத்த வேண்டியிருந்தது. எனவே அந்நாளைய எழுத்தாளர்களுக்கு அரசியல் வேகம் முனைப்பாக இருந்த அளவுக்கு இலக்கிய வேகம் இல்லை... ஒன்றை ஆழமாக நினைக்கும்போது மற்றவற்றை மறப்பது இயல்புதானே? எனவே அச்சிறு இடைவெளிக் காலத்தில் வாழ்க்கை அனுபவங்கள் நேரடியாகப் பாதித்த அளவுக்கு இலக்கிய அனுபவங்கள் பாதிக்கவில்லை.[19]

இந்த இடைவெளிக்குப் பின்னர் சிறுகதை வரலாற்றின் முக்கியக் காலகட்டமாகிய மணிக்கொடியின் தோற்றம் (1933) நிகழ்ந்தது. பின்னர் கு. ப. ரா., பிச்சமூர்த்தி, மௌனி, புதுமைப்பித்தன், கல்கி, லா. ச. ரா. போன்றோர் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தமது பங்குகளை ஆற்றினர்.

சிறுகதை இலக்கிய வரலாற்றில் பாரதிதாசன்

சிறுகதை வரலாற்றின் நெருக்கடிக் காலமாகவும் இடைவெளியாகவும் குறிப்பிடப்படும் இந்தக் காலத்தில் எழுதப்பட்டவை பாரதிதாசனின் 'புதுவைமுரசுச்' சிறுகதைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் விடுதலையைவிடச் சமுதாய விடுதலையே முதன்மையானது எனக் கருதிய சுயமரியாதை இயக்கக் கொள்கைகளின்பால் ஈடுபாடு கொண்டிருந்த பாரதிதாசன் இந்த நெருக்கடிக் காலத்திலும் தனது இலக்கியப் பணியைத் தான் உணர்த்த விரும்பும் கருத்துக்களை வழங்கும் வடிகாலாகக் கொண்டதில் வியப்பில்லை. இதே காலத்தில் 'புதுவை முரசி'லேயே அவர் கவிதைகளையும் எழுதியுள்ளார். அவையும் கருப்பொருளில் சிறுகதையோடு ஒத்தவையே. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் காணப்படும் 'மூடத்திருமணம்' (17—11—30), 'குழந்தை மணத்தின் கொடுமை' (24—11—30), 'கைம்மைக் கொடுமை' (12—10—31), 'இறந்தவன் மேற்பழி' (9—11—31), 'மானிட சக்தி' (7—12—31) ஆகிய பாடல்கள் புதுவை முரசில் வெளிவந்தவையே. இங்கு முக்கியமாகக் கருதப்பட வேண்டியது

சிறுகதை வரலாற்றில் ஏற்படும் இடைவெளிக் காலத்தில் (1927—32) பாரதிதாசனின் 'புதுவை முரசு'ச் சிறுகதைகள் (1930—31) எழுதப்பட்டு வரலாற்றில் ஏற்படும் இடையறவினைத் தவிர்த்துத் தொடர்ச்சியை உண்டாக்குகின்றன என்பதே.

உள்ளடக்கம்

விடுதலைக்குமுன் எழுந்த சிறுகதைகள் சமகாலச் சிக்கல்களை ஒட்டியனவாகவே அமைந்தன. திருமணச் சிக்கல்கள், திருமணத்தில் ஏற்படும் தடைகள், குடும்பச் சிக்கல்கள், காதல், காந்தியச் சிந்தனை, சமுதாயத் தீமைகள், புராணக்கதைகளின் செப்பம் போன்றவையே அக் காலக் கதைகளின் பொருளாக அமைந்தன.[20] பாரதிதாசனின் புதுவை முரசுச் சிறுகதைகளும் அவை தோன்றிய காலத்துச் சிக்கல்களை வெளிப் படுத்துவனவாகவே காணப்படுகின்றன. மூடநம்பிக்கை, கடவுள் மறுப்பு, தொழிலாளர் துயர், விதவைகள் துயர், காதல் ஆகியவற்றைத் தன்னுடைய சிறுகதைகளுக்குரிய பொருளாக அவர் கொண்டுள்ளார். இவற்றோடு, சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையான பார்ப்பனிய எதிர்ப்பும் கதைப் பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

'தாசிவீட்டில் ஆசீர்வாதம்' மதத்தலைவர்களின் போலி வேடத் தினைப் புலப்படுத்துவது. 'கடவுள் மகத்துவம்' கடவுள் நம்பிக்கையைக் கிண்டல் செய்வது. 'என்னப்பன் கூத்தாண்டவன் அருட்பெருக்கு' தங்கள் வருமானத்தைப் பெருக்க, பேடித்தன்மையை வளர்க்கும் கூத் தாண்டவர் விழா ஆத்திகர்களின் ஏற்பாடே என்பது. 'தேரை விட்டுக் கீழே குதித்தான்...' சி. பி. ராமசாமி அய்யர் வைசிராய் நிர்வாகசபை உறுப்பினர் பதவியிலிருந்து சென்னைக்கு வந்ததை விளக்குவது. 'ஆற்றங் கரை ஆவேசம்' கரிநாளன்று நிகழும் கன்னி ஆட்டத்தினைக் கிண்டல் செய்வது. 'திருந்திய ராமாயணம்' ராமாயணக் கதையை மாற்றத்தோடு புதுமைப்படுத்துவது. இந்தியா தமிழருடையது; கைகேயியும் மந்தரையும் தமிழ்ப்பெண்கள்; தசரதன் ஆரியனுகிய இராமனுக்கு முடிசூட்டித் தமிழரைப் பார்ப்பனருக்கு அடிமையாக்கச் சூழ்ச்சி செய்கிறான் என்னும் கருத்து இக்கதையில் காணப்படுகிறது. 'சுயமரியாதைக் காரருக்கு அமெரிக்கரின் கடிதம்' ஆத்திகர்களின் நெற்றிக் குறிகளைக் கேலி செய்வது. 'பகுத்தறிவுக்குத் தடை' கடவுள் நம்பிக்கையால் தோன்றும் அறியாமையை வெளிப்படுத்துவது. 'பண்டிதர்க்குப் பாடம்' அறியாமையைக் கேலி செய்வது. 'முதலாளி-காரியக்காரன்' கடவுள் நம்பிக்கையால் விளையும் முயற்சியின்மையைச் சுட்டிக் காட்டுவது. 'வேல் பாய்ந்த இருதயம்' விதவைகளின் துயர் நிலையைக் கூறி அதனைப் போக்க மறு மணமே வழி என்பது. 'சேற்றில் இறைத்த மாணிக்கங்கள்' மதங்கள் செய்யும் போதனைகளால் ஏழைகளின் பசித்துயருக்கு எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை என்பது. 'செவ்வாய் உலக யாத்திரை' சாதிப் பாகுபாடும் அதன் தொடர்பான நம்பிக்கைளும் தூக்கி எறியப்பட வேண்டிய சுமைகள் என்று கூறுவது.

உருவம்

சிறுகதையின் அளவு அல்லது உருவம் பற்றி ஆய்வாளர் கூறும்போது அது ஒரே மூச்சில் படித்து முடித்துவிடக் கூடியதாக இருக்க வேண்டும் என்பர். பாரதிதாசனின் 'புதுவை முரசு'ச் சிறுகதைகள் அனைத்துமே இந்த இலக்கணத்துக்கு ஒத்துவருகின்றன. அவரது சிறுகதைகளில் அளவில் பெரியது 'சுயமரியாதைக்காரருக்கு அமெரிக்கரின் கடிதம்' (9 பக்கங்கள்). அளவில் சிறியன 'தாசிவீட்டில் ஆசீர்வாதம்,' 'கடவுள் மகத்துவம்' (ஒவ்வொன்றும் 40 வரிகள்). சிறுகதையின் வடிவக் கட்டமைப்புக்குத் தேவைப்படும் ஒருமுக இயையும் இவரது சிறுகதைகளில் அமைந்துள்ளது.

தலைப்பு

சிறுகதைகளுக்கு அதன் கருப்பொருளை வைத்தும் கதைமாந்தர் பெயரையொட்டியும், பிற வகைகளிலும் தலைப்பிடுவது வழக்கம். "நல்ல தலைப்பு என்பது அதன் ஒலிநயத்தாலும், வண்ணச் சிறப்பாலும், தொனிப் பொருளாலும் முரண்நயத்தாலும் படிப்போரின் கவனத்தை ஈர்த்துப் பிடிக்க வேண்டும்" என்பர்.[21].

'தாசிவீட்டில் ஆசீர்வாதம்' ஒலிநயத்தாலும் பொருள் முரணாலும் சிறந்த தலைப்பு. 'ஆற்றங்கரை ஆவேசம்', 'பண்டிதர்க்குப் பாடம்', இரண்டும் ஒலிநயத்தால் சிறந்த தலைப்புகள். 'பண்டிதர்க்குப் பாடம்', 'சேற்றில் இறைத்த மாணிக்கங்கள்' ஆகியன முரணமைந்த தலைப்புகள். 'வேல்பாய்ந்த இருதயம்', 'கண்ணுக்குத் தெரியாத சுமை' இரண்டும் உருவகத் தலைப்புகள். இந்த வகையிலும் பாரதிதாசனின் சிறுகதைத் தலைப்புகள் சிறுகதை இலக்கணத்துக்கு உட்பட்டே அமைந்துள்ளன.

தொடக்ககால நாவல்கள் இரட்டைத் தலைப்புகளைக் கொண்டதாயிருக்கும். "நாவல்களுக்குத் தரப்பட்டது போல் இரட்டைப் பெயர்கள் 'இது அல்லது அது' போன்ற தலைப்புகள் சிறுகதைகளில் காண முடியாத ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும்"[22] என்று சிறுகதை இலக்கிய வரலாற்றுளர் குறிப்பிடுவர். பாரதிதாசனின் சிறுகதைகளுள் ஐந்து, இரு தலைப்புகள் கொண்டவை. இவற்றுள் எது பொருத்தமான தலைப்பு என்று தேர்வது கடினமானது.

தொடக்கமும் முடிவும்

சிறுகதையின் தொடக்கம் படிப்போருக்கு ஆவலைத் தூண்டுவதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் இருக்க வேண்டும். அது கதை நிகழ்ச்சியின் தொடக்கமாகவோ கதை நிகழிடம் பற்றியதாகவே, கதைமாந்தர் பற்றிய அறிமுகமாகவோ இருக்கலாம். பாரதிதாசனின் சிறுகதைகளுள் ஏழு (தாசி வீட்டில் ஆசீர்வாதம், கடவுள் மகத்துவம், ஆற்றங்கரை ஆவேசம், திருந்திய ராமாயணம், சுயமரியாதைக்காரருக்கு அமெரிக்கரின் கடிதம், முதலாளி காரியக்காரன், செவ்வாய் உலக யாத்திரை) கதை நிகழ்ச்சியுடன்

தொடங்குவன. கதைமாந்தர் அறிமுகத்துடன் தொடங்குவன மூன்று (தேரைவிட்டுக் கீழே குதித்தான்...பண்டிதர்க்குப் பாடம், வேல்பாய்ந்த இருதயம்). கதை நிகழிடம் பற்றிய குறிப்புடன் தொடங்குவன இரண்டு (பகுத்தறிவுக்குத் தடை, சேற்றில் இறைத்த மாணிக்கங்கள்). எடுத்துக் காட்டாகத் 'தாசிவீட்டில் ஆசீர்வாதம்' என்ற சிறுகதையின் தொடக்கத்தைக் காணலாம்.

> ''கதவு தட்டப்படுகிறது! நான் போய்ப் பார்க்கிறேன். நீ சாமியிடம் பேசிக் கொண்டிரு'' என்று சொல்லித் தாய்க்கிழவி வந்து கதவைத் திறந்து 'யார்? என்றாள்[23]''

இங்கே கதையின் தொடக்க நிகழ்ச்சியாகிய கதவு தட்டப்படுதலும் அதனைத் தொடர்ந்து வரும் உரையாடலும் குறிக்கப்படுகின்றன. தட்டுவது யார்? அடுத்து நிகழப் போவது என்ன? என்னும் ஆவலைத் தூண்டும் வண்ணம் தொடக்கம் அமைந்துள்ளது. தொடக்கத்திலேயே கதவைத் தட்டுவோர், அதனைக் கூறும் தாய்க்கிழவி, கேட்கும் மகள் ஆகிய மூன்று கதைமாந்தர்கள் பற்றிய குறிப்பு தரப்பட்டு விடுகிறது.

சிறுகதையின் முடிவு கதையின் வளர்ச்சிக்குத் தகுந்ததாகவும், முன் கூட்டியே எதிர்பார்க்க முடியாததாகவும், முடிந்த பின் இந்த முடிவு சரியானதே எனப் படிப்போர் ஏற்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். இந்த இலக்கணத்துக்கும் பாரதிதாசனின் சிறுகதைகள் பொருந்தி வருகின்றன. ஆனால் கதையின் முடிவில் ஆசிரியரின் கூற்றாக அந்தக் கதையினால் பெறப்படும் கருத்து விளக்கத்தைச் சிலகதைகளில் (ஆற்றங் கரை ஆவேசம், பகுத்தறிவுக்குத் தடை, முதலாளி காரியக்காரன், சேற்றில் இறைத்த மாணிக்கங்கள், தேரைவிட்டுக் கீழே குதித்தான்...) கூறுகிறார். இதுதொடக்ககாலச் சிறுகதை ஆசியர்களிடத்துக் காணப் படும் ஒரு குறைபாடே.

நோக்கு நிலை

ஒரு கதை யார் மூலமாகச் சொல்லப்படுகின்றது என்பது சிறுகதை, நாவல் இரண்டிலும் முக்கியமானதாகக் கருதப்படுவது. இதனை நோக்கு நிலை (point of view) என்பர். ஆசிரியர் கூறுதல், கதைமாந்தர் கூறுதல், கதைமாந்தரின் நனவோட்டம், கடிதங்கள் போன்ற நோக்கு நிலைகளில் கதை சொல்லப்படுவதுண்டு. பாரதிதாசனின் புதுவைமுரசுச் சிறுகதைகள் பன்னிரண்டுள் 'செவ்வாய் உலக யாத்திரை' மட்டுமே கதை மாந்தர் கூறுவதாக அமைந்தது. செவ்வாய் உலகத்துக்குச் சென்று திரும்பிய ஒருவன் அங்கே நிகழ்ந்தவற்றையும் தான் கண்டறிந்தவற்றையும் கூறுவதாக அமைந்தது. இதனை ஆசிரியர் கூறுவதைவிடக் கதைமாந்தர் கூறுவதே சிறப்புடையது. ஆகவே கதைப் பொருளுக்குத் தகுந்த நோக்கு நிலையைப் பாரதிதாசன் தேர்ந்தெடுத்தது பொருத்தமானதே. மேலும் இக்கதை ஒரு அறிவியல் கற்பனையாகவும் அமைந்துள்ளது. ஆசிரியர் ஆகாய விமானத்தில் ஆறு நண்பர்களுடன் செவ்வாய் உலகம் செல் வதாகவும் அங்குச் சிவப்பு நிறமுடைய உயரமான மனிதர்கள் வாழ்வதாகவும்

கற்பனை செய்துள்ளார். இதனுடன் பிறிதொரு அறிவியல் கற்பனை பொருந்திய ‘திருந்திய ராமாயணம்’ என்ற கதையும் சேர்த்து எண்ணத் தக்கது. இராமனுக்குப் பட்டம் சூட்டுவதற்காகத் தசரதன், மந்திரி, இராணுவத்தலைவர் போன்றோருடன் நடத்தும் இரகசிய ஆலோசனையை மந்தரையின் ஏற்பாட்டின்படி குளியலறையில் இருந்து தொலைபேசி, மின் சாதனங்கள் ஆகியவற்றின் மூலம் கைகேயி ஒட்டுக் கேட்கிறாள். இராமா யணத்தில் ‘வாட்டர்கேட்’ ஊழல்! 1930-31 ஆண்டுகளில் செவ்வாய் உலகப் பயணம் பற்றியும், அறிவியல் கருவிகளின் மூலம் ஒட்டுக் கேட் பதையும் கற்பனை செய்துள்ளது வியத்தற்குரியது.

நடை

இந்தச் சிறுகதைகள் எழுதப்பட்டகாலம் ஆசிரியரிடம் தனித்தமிழ் என்னும் உணர்வு தோன்றாத காலம். அதனால் வடசொற்களும் ஆங்கிலச் சொற்களும் காணப்படுகின்றன. ஆசிரியர் கூற்று, கதை மாந்தரின் உரையாடல் என்ற இருவகையில் சிறுகதையின் நடையினை நோக்கலாம்.

கதைமாந்தரின் உரையாடலுக்கும் ஆசிரியரின் கூற்றுக்கும் வேறு பாட்டினை இந்தச் சிறுகதைகளில் காணமுடியவில்லை. உரையாடல்கள் பெரும்பான்மையும் பேச்சுநடையில் இல்லாமல் எழுத்து நடையிலேயே உள்ளன. மேலும் உரையாடல் முழுவதும் நாடக அமைப்பிலேயே எழுதப்பட்டுள்ளது. இவரது சிறுகதைகளில் பாதிக்கு மேற்பட்டவை இவ்வாறு அமைந்துள்ளன.

சிறு சிறு வாக்கியங்களில் உணர்ச்சியும் ஒலிநயமும் மிகுந்தவையாகப் பாரதிதாசனின் உரைநடை அமைந்துள்ளது.

> உடம்பு சிலிர்க்கிறது! நல்ல உயரம்! நெற்றி நிறையத் திருநாமம்! செக்கச் செவேலென்று 60 வயதிருக்கும். என்னை வந்து தட்டி எழுப்பினார். நான், ஆர் ஐயா? என்று கேட்டேன் (கோப மாக)! என்னை அவமதிக்கிறீர்கள். புரட்டாசி மாதத்து விரதத்தைக் கைவிட்டீர்கள். எனக்கு வருகிற சனிக்கிழமை தளியல் போடு, இந்தா இதைப்பிடி, என்று சொன்னார். கையில் வாங்கினேன். அப்போதுதான் மலர்ந்த மாதிரி இருந்தது. அத்தனையும் மல்லிகைப் பூக்கள். அதற்குள் விழித்துக் கொண்டேன்.[24]

பக்தி உள்ளங்கொண்ட ஒருத்தி, தான் கண்ட கனவைக் கூறுவதாக அமைந்தது இந்தப் பகுதி. கனவு கண்டவள் பெற்ற உணர்வின் வெளிப் பாட்டை இந்த வரிகள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

இவ்வாறு பாரதிதாசனின் புதுவை முரசுச் சிறுகதைகள் உள்ளடக்கம், உருவம், உத்திகள் ஆகியவற்றில் சிறுகதை இலக்கணங்களுக்குப் பொருத்த மாகவே அமைந்துள்ளன. கதையின் இடையிலும் முடிவிலும் ஆசிரியர்

இடையிட்டுக் கருத்துக் கூறும் குறுக்கீடு என்னும் ஒரு குறைபாடு இவருடைய சிறுகதைகளில் காணப்படுகிறது. ஐந்து சிறுகதைகளில் மட்டுமே இக் குறைபாடு உள்ளது. இக்குறுக்கீடு 'பகுத்தறிவுக்குத் தடை' என்னும் கதையில் ஒரு பக்க அளவிற்கும் 'முதலாளி காரியக்காரன்' என்னும் கதையில் மூன்று பக்க அளவிற்கும் விரிந்துள்ளது. இந்தக் குறைபாடு தொடக்கால்ச் சிறுகதை ஆசிரியர்களிடத்துப் பரவலாகக் காணப்படுவதே.

இந்தக் கட்டுரையின் வாயிலாகப் பாரதிதாசன் சிறுகதை இலக்கணத்தோடு பொருந்திய சிறுகதைகளைப் படைத்துச் சிறுகதை இலக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளார் என்றும், அவர் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவராகக் குறிப்பிடத்தக்கவர் என்றும் தெளியலாம்.

குறிப்புகள்

1. பாரதிதாசன், **ஏழைகள் சிரிக்கிறார்கள்**, பூம்புகார் பிரசுரம், (சென்னை, 1980).

2. பாரதிதாசன், **பாரதிதாசன் கதைகள்**, ஞாயிறு நூற்பதிப்பகம், (புதுச்சேரி, 1955).

3. ச. சு. இளங்கோ, அணிந்துரை, **ஏழைகள் சிரிக்கிறார்கள்**, ப. 8.

4. பாரதிதாசன், **தலைமலை கண்ட தேவர்**, பூம்புகார் பிரசுரம், (சென்னை, 1978).

5. பாரதிதாசன், **சிரிக்கும் சிந்தனைகள்**, பூம்புகார் பிரசுரம், (சென்னை, 1981).

6. ச. சு. இளங்கோ, அணிந்துரை, **ஏழைகள் சிரிக்கிறார்கள்**, ப. 7.

7. அதே கட்டுரை, ப. 8.

8. அதே கட்டுரை, ப. 5.

9. பாரதிதாசன், **பாரதிதாசன் பேசுகிறார்**, பூம்புகார் பிரசுரம், (சென்னை, 1980), ப. 39.

10. சாலை. இளந்திரையன், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் ஒரு கவிதைச் சிறுகதை", **ஆய்வுக் கோவை** 7:1 (1975), ப. 162.

11. மா. இராமலிங்கம், **விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்**, தமிழ்ப் புத்தகாலயம், (சென்னை, 1977), ப. 48.

12. கா. சிவத்தம்பி, **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்**, பாரி நிலையம், (சென்னை, 1967), ப. 19.

13. இரா. தண்டாயுதம், **தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்**, தமிழ்ப் புத்தகாலயம், (சென்னை, 1975), ப. 21.

14. கா. சிவத்தம்பி, **மு. நூல்**, ப. 20.

15. மா. இராமலிங்கம், **மு. நூல்**, ப. 46-47.

16. **அதே நூல்**, ப. 51-இல் மேற்கோள்.

17. பாரதியார், **பாரதியார் கதைகள்**, பூம்புகார் பிரசுரம், (சென்னை, 1982), ப. 273.

18. மா. இராமலிங்கம், மு, நூல், ப. 51.

19. அதே நூல், ப. 54.

20. அதே நூல், ப. 84–140.

21. மா. இராமலிங்கம், மு. நூல். ப. 159–இல் மேற்கோள்.

22. அதே நூல், ப. 161.

23. பாரதிதாசன், ஏழைகள் சிரிக்கிறார்கள், ப. 27.

24. அதே நூல், ப. 29.

பாரதியின் தொலைநோக்கு

டாக்டர் சி பாலசுப்பிரமணியன்
தலைவர், தமிழ்மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

முப்பத்தொன்பதே ஆண்டுகள் வாழ்ந்த பாரதியார் நாட்டிற்கும் மொழிக்கும் மக்களுக்கும் உழைத்த உழைப்பு மிகுதியாகும். பொருள் உடையவர்களைப் பார்த்துப் பாராட்டுப் பாடல்கள் பாடி அவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்து அவர்கள் தரும் பொருளால் வாழ்ந்து வருவதே புலவர் தொழில் என்றிருந்த அவல நிலைமையினை மாற்றி யமைத்தவர் மகாகவி பாரதியார் ஆவர். பாரதியும் எட்டையபுர அரசருக்குச் சீட்டுக்கவி எழுதியவர்தாம். ஆயினும் அவர் பாடலில் கவிமிடுக்கு இருந்தது. எட்டையபுர சமத்தானப் புலவர்களால் இளம் வயதிலேயே பாராட்டப் பெற்ற பாரதியார், அவர்களால் 'பாரதியார்' என்ற பட்டமும் வழங்கப் பெற்றார். சமத்தானத்துப் புலவர்கள் போல் வாழாமல் பாரதி புதுமைக் கருத்துகளுடன் வாழ்ந்தார். ஒருமுறை எட்டையபுர மன்னர் பாரதியார் சென்னை செல்லும்போது கொடுத்த பணம் முழுவதிற்கும் புத்தகங்களாக வாங்கிவந்து விட்டார். தம் மனைவிக்கு ஒரு புடவை வாங்கி வந்து அவர் தம் மனத்தை மகிழச் செய்ய வேண்டுமே என்ற எண்ணங்கூடப் பாரதிக்கு எழவில்லை. எல்லா வகைகளிலும் பாரதியார் புதுநோக்கிலும் புதுப் போக்கிலும் திகழ்ந்தார் என்பதனை அவருடைய இளமைக்கால வாழ்வு தொடங்கியே நன்கு காணலாம்.

பாரதியார் மறைந்து அறுபது ஆண்டுகள் கடந்துவிட்டாலும் இன்னும் அவர் சிந்தனைகள் செயலுருவம் பெறவில்லை என்பதனைப் பார்க்கிறோம். எனவே பாரதியார் இன்றைக்கும் நமக்கு வேண்டியவராகப் படுகிறார். அவருடைய பாடல்கள் இன்னும் நடப்புப் பொருத்தம் உடைய தாக, கால இயைபபு உடையதாக அமைந்து துலங்குவதனைக் காணலாம். எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராகவும், கால காலத்திற்கு அவர் தந்த கருத்துக் கருவூலங்கள் மன்பதைக்கு, மனித சமுதாயத்திற்கு உரமூட்டுவனவாகவும் அமைந்திலங்கக் காணலாம்.

முதலாவதாக நாட்டு மக்கள் நலமுற்று வாழ ஒற்றுமை என்னும் உயர் பண்பினைப் பெற்றவர்களாக வேண்டும் என்பது பாரதியாருடைய திண்ண மான எண்ணமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவர் பெருமான்,

> பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான் (குறள்)

என்றார். பாரதியார் இந்தக் கருத்தினைப் பல கோணங்களில் நின்று வலியுறுத்தக் காணலாம். பல்வேறு எண்ணங்களையுடைய பூனைக் குடும்பம்

ஒன்றனை எடுத்துக்கொண்டு பல்வேறு எண்ணங்களையுடைய மனிதர்களிடையில் ஒற்றுமை மலர வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரமன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றமென்றும் சொல்லலாமோ?

என்று வினவிடுத்துப் பின்வருமாறு விடையையும் கூறி, ஒற்றுமையுணர்வை உறுதிப்படுத்துகிறார் பாரதியார்.

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள், செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

சாதிக்கொடுமைகளால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்கள் நடைபெறுவது இன்னும் நிற்கவில்லை. இந்த நிலைமையில் பாரதி அன்றே கூறிய அறிவுரைகளை நோக்குவோம்.

சாதிப்பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வர்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தனில் செழித்திடும் வையம்.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, வாழும் நெறியாலேயே ஒருவர் மதிக்கப்பட வேண்டும் என்று கருதினார் பாரதியார். எனவே அவர்

நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் இந்த
நாட்டினில் இல்லை; குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தரேனும் உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்

என்று பாடினார்.

பெரியவர்களுக்குச் சொல்லிச் சொல்லி அலுத்துப்போன பாரதியார் பாப்பாவுக்குப் பாட்டுச் சொல்லி அப்பாட்டில் வாழும் உயர்நெறியினை உணர்த்துகின்றார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரேயே

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே—ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
ஆடுவோமே

என்று நம்பிக்கையுடன் சுதந்திரம் அடைந்து விட்டதாகவே பாடியவர் பாரதியார் ஆவர். அவர் கண்ட சுதந்திர நாட்டில் மக்கள் அனைவரும் பின்வருமாறு வாழ்வார்கள் என்று கனவுகண்டார் பாரதியார்.

பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை

என்று விடுதலைப் பண்ணிசைத்து,

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே

என்று சமத்துவக் குரல் கொடுத்து,

மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே

என்றும்,

ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்றும் அன்பு முழக்கம் செய்கிறார் பாரதியார், இந்தக் கருத்துக் கொண்ட காரணத்தினாலேதான் பாரதியார் உயிருள்ள பொருள்களையும், உயிரல் பொருள்களையும் ஒன்றாகக் கண்டு உலக உயிர்கள் அனைத்தும் ஒன்று என்று தெளிந்து ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை இசைக்கக் காணலாம்.

காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குத் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாட்டு அவருடைய பரந்துபட்ட சிந்தனையை விளக்கவில்லையா?

அடுத்தபடியாக மனித இனத்தின் சரிபாதிப் பகுதியான பெண்கள் அடிமைகளாய் நடத்தப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்தவர் பாரதியார். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?", "பெண் புத்தி பின் புத்தி", "தையல் சொல் கேளேல்" "சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே" என்றெல்லாம் புன்மொழிகள் எழுந்ததனை எண்ணிப் பார்க்கிற பாரதி,

பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை

என்று வன்மையுடன் உரைக்கின்றார்.

பெண்டாட்டி தன்னை அடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?

என்று கேள்வி கேட்டு,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிபேணு வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றைக் குத்தி
காட்சி கொடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடும் காணீர்

என்று விடையும் விளக்கமாகத் தருகின்றார். எனவே 'புதுமைப்பெண்'ணைப் படைத்துத் தம் கவிதையில் உலவ விடுகின்றார். பாரதி படைக்கும் புதுமைப் பெண்ணைக் காண்போம்.

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக்கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்
காத்து மானிடச் செய்கை யனைத்தையும்
கடவுளர்க்கினிதாகச் சமைப்பராம்
ஏத்தியான் மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ.

இந்தப் புதுமைப் பெண்கள் 'சாதம் படைப்பதோடு தெய்தவசாதி படைக்கவும்' கூடியவர்கள். எனவே அவர்கள்,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்று கொம்மாளமிட்டுக் கும்மியடிக்கிறார்கள். இப்புதுமைப்பெண்கள் "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்று வாழ்பவர்கள் அல்லர். இவர்களுக்கும் உயர்ந்த குறிக்கோள்கள் உண்டு. அக்குறிக் கோள்கள் தாம் யாவை? அவர்கள் வாயாலேயே கேட்போம்:

காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

எனவேதான் பாரதியார் பெண்ணுரிமை பேணிய கவிஞராக, பெண் விடுதலை எனும் வைகறை வானிற்குப் பூபாளம் இசைத்த இசைவாண ராகத் துலங்குகின்றார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக் குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்று பாரதி முழங்கிய முழக்கம் இன்றும் தேவைப்படுகின்றது.

மூன்றாவதாக, பாரதத் திருநாட்டில் வாழும் பலர் இன்றும் நாட்டுப் பற்று அற்றவராக விளங்குவதனைக் காண்கிறோம். அன்னியனான ஆங்கிலேயன் ஆட்சியே மேல் என்ற அளவிற்குக் கூட அன்னிய மோகம் பிடித்து, விடுதலை வேட்கையற்று வாழும் விந்தை மனிதர் பலரை நாம் காண்கிறோம். எனவே நாட்டுப்பற்றை முதலாவதாக நாட்டுமக்கள் நெஞ்சில் பற்றுமாறு வகை செய்கின்றார். பாரதி நாட்டுப்பற்றை நலங்கொள மக்கள் உளங்கொள ஊட்டும் முறை சற்றுப் புதுமையானது என்று கூடச் சொல்லிவிடலாம். நம் முந்தையோர்—முன்னோர் பலரும் மகிழ்ந்து வாழ்ந்தது இந்த நாட்டிலே என்றும், அவர்கள் மாட்சியுடன் வாழ்ந்து மீட்சியடைய முடியாமல் முடிந்ததும் இந்த நாட்டிலே என்றும், முன்னோர்கள் எண்ணிய எண்ணங்கள் அவர்கள் சிந்தனையில் முகிழ்த்ததும் இந்த நாட்டிலே என்னும் உணர்வுப் பாங்கில் உரைக்கின்றார் கவிஞர்.

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே

என்னும் பாடல், புதுவது கிளந்த—தமிழிற்குப் புதுவரவாய் அமைந்த பாடலாகும்.

பாரதமணித் திருநாட்டை இவ்வாறு பாங்குறக் கண்டவர், செந்தமிழ்த் திருநாட்டையும் சிறப்புறக் காட்டுகின்றார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று அடிகள் மந்திர அடிகளன்றோ ?

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று கூறி,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

என்றும் பாடித் தமிழர்க்குத் தமிழ்நாட்டுப்பற்றை ஊட்டுகின்றார்.

அடுத்து, தமிழ்மொழிப் பற்றினைத் தமிழர்க்கு ஊட்டுகின்ற தொண்டில் திளைக்கின்றார் பாரதியார். பாப்பாவுக்கும் விளங்கும் வகையில் எளிய தமிழில் தமிழின் ஏற்றத்தினை எடுத்துரைக்கின்றார் அவர்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்று தமிழ்மொழியின் அருமையை விளங்குகின்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று கூறி,

பாமரராய் விலங்குகளாய் உலக னைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

என்று தமிழர் ஆற்ற வேண்டிய அருங்கடனையும் புலப்படுத்துகின்றார்.

பாரதி மறைந்து அறுபது ஆண்டுகளாகியும் இன்னும் தமிழில்—தமிழ் நாட்டில் அறிவியல் முன்னேற்றம் வரவில்லை. இதனை அன்றே உணர்ந்து பின்வருமாறு பாடினார் பாரதியார்.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் செய்திடலாமோ
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குசேர்ப்பீர்

என்று ஆக்க வழியில் தமிழ் வளர்வதற்குரிய அருஞ்செயல்களைப் புலப்படுத்தினர். அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள செயல்கள் இன்னும் முற்றும் நிறைவேறாமல் நின்று கொண்டிருப்பதனைக் காணலாம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

பாரதியார் உழவினையும் தொழிலினையும் போற்றியவர். சுறுசுறுப்பாக உழைக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர். 'சோம்பல் மிகக்

கெடுதி' என்று சொன்னவர். எத்தித் திரிபவரை வெறுத்தவர். எனவே வீணுக்கு உழைக்காமல், வீணருக்கு உழைக்காமல் வாழ வேண்டும் என்று வற்புறுத்தினர் பாரதியார்.

எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

என்ற நிலை ஏற்பட்ட பிறகு, 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமும்', 'மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையும்' இனி இருக்கக்கூடாது என்று பாரதியார் உறுதியாக எண்ணினர். எனவே புரட்சிச் சமுதாயத்தைப் பின்வருமாறு தம் அக்கண்ணுல் கண்டார்.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை

என்று கூறி,

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்

என்று ஆவேசமாக முழங்கினர்.

கல்வி வளர்ச்சியே மனவளர்ச்சிக்கு வழி வகுக்கும். எனவே,

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி

என்று கூறி,

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று கூறி,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றார்.

"மக்கள் ஆக்காத மனுவேந்தர்கள் கவிஞர்கள்"

என்பார் கவிஞர் ஷெல்லி, அம்முறையில் பாரதியாரும் எதிர்காலச் சிந்தனையோடு—தொலைநோக்கோடு பல அரசியல் சிந்தனைகளை நம்முன் வைத்துள்ளார்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

என்னும் கவியின் கூற்று எதிர்காலக் கனவன்றோ?

வடநாட்டில் இன்றும் அடிக்கடி நேரும் வெள்ளத்தால் ஆற்றுப் பெருக்கெடுத்து ஊர்களும் நிலங்களும் அழிகின்றன. தென்னகத்தில் கடுங்கோடையில் பல ஊர்களில் குடிக்கும் தண்ணீருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆட்பட்டு அல்லல் உறுவதனைக் காணலாம். பாரதி அன்றே இதை உணர்ந்தவர்போல்

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய் குவோம்.

என்று பாடினார்.

இவ்வாறு பாரதியாரின் தீர்க்க தரிசனம் அரசியல், சமூகம், பொருளாதாரம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்று பல துறைகளிலும் பளிச்சிடக் காணலாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறுவது போலப் பாரதியார் 'காடு கமழ வரும் கற்பூரச் சொற்கோ'வாகவும், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா'வாகவும், 'புதிய அறம் பாடவந்த மறவனாகவும்' துலங்குகின்றார் எனலாம். பாரதியின் தொலைநோக்கு அவர்தம் மதிநலம் காட்டும்; அவர் பாடல்கள் இன்றும் பொருத்தமாயிருப்பது அவர்தம் தொலைநோக்குச் சிந்தனையை உணர்த்த நிற்கும். எனவே பாரதி 'பாட்டுக்கொரு புலவனாகவும்', 'நாட்டு மக்கள் வாட்டம் நீக்க வந்த கவிக்குயிலாகவும்', புரட்சி நோக்கும் புத்துலகச் சிந்தனையும் கொண்ட அறிஞராகவும் விளங்குகின்றார் என்பது வெள்ளிடைமலை. எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராவார்.

மலேசியாவில் தமிழ்க்கல்வி

டாக்டர் இரா. தண்டாயுதம்

அண்மையில் ஏறத்தாழ இருபத்தைந்து நாட்கள் மலாயா நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். மலாயாப் பல்கலைக்கழக இந்திய இயல் துறையின் புற மதிப்பீட்டாளராகப் பணியாற்றினேன். கல்வித்துறையினைச் சார்ந்த பலரிடமும், தமிழறிஞர் சிலரிடமும் கலந்துரையாடி மலாயாவில் தமிழ்க்கல்வி நிலை எவ்வாறுள்ளது என ஒருவாறு தெரிய வந்தேன்.

தமிழர் பலர் வாழும் அந்நாட்டில் தமிழ்க் கல்வியின் நிலையினைத் தெரிந்துகொள்வது தக்கது என்று கருதினேன். எனவே மலாயாப் பல்கலைக்கழக இந்திய இயல் துறை விரிவுரையாளரும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் ஆராய்ச்சி மாணவரும், பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ்த் "தமிழில் சமூக நாவல்கள்" என்னும் பொருள் பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவரும், "தற்காலத் தமிழ் இலக்கியம்" என்னும் தம் நூலிற்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றவருமான டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களிடம் "மலாயாவில் தமிழ்க் கல்வி" என்னும் பொருள் குறித்து ஒரு கட்டுரை எழுதித்தருமாறு கேட்டேன். அவரும் இணங்கினார்; அதன் விளைவே இக்கட்டுரை; அவருக்கு நம் நன்றி.

சி. பாலசுப்பிரமணியன்.

மலேசியாவில் தமிழ்க்கல்வி ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றையுடையது. 1786-இல் பினாங்கு ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது. இதனையொட்டித் தற்கால இந்தியத் தொழிலாளர் குடியேற்ற வரலாறும் தொடங்குகிறது. வீட்டுவேலை செய்வதற்கும், வேளாண்மையில் உதவுவதற்கும் சுமார் ஆயிரம் இந்தியத் தொழிலாளர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பினாங்கில் இருந்ததாகத் தெரிகின்றது. இவர்கள் 'கூலிகள்' என்றே குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் போல் வீட்டுவேலை செய்வதற்காக அல்லாமல், மலாயாவின் காடுகளை அழித்துத் தோட்டங்கள் ஆக்கவும், அத்தோட்டங்களில் வேலை செய்யவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் இங்குக் குடியேறத் தொடங்கினர். 1840-களில் கரும்புத் தோட்டங்களிலும், 1870-களில் காப்பித் தோட்டங்களிலும், 1890-களில் ரப்பர்த் தோட்டங்களிலும் வேலை செய்ய இவ்வாறு குடியேறத் தொடங்கிய இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் நன்கு பெருகத் தொடங்கியது. 1891-இல் 75,000 ஆக இருந்த இந்தியத் தொழிலாளரின் எண்ணிக்கை, 1901-இல் 120,000-ஐ எட்டியது. 1911-இல் 268, 269க்கும், 1921-இல் 470, 180க்கும், 1931-இல் 621, 847க்கும் இவ்வெண்ணிக்கை உயர்ந்தது. மலாயா விடுதலையடைந்த 1957-இல் இந்தியர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 11.1 விழுக்காடு இருந்தது. இப்புள்ளி விவரங்கள் இந்தியர் எனப் பொதுவாகக் குறித்தாலும், இவர்களில் பெரும்பான்மையோர் தமிழரே! எடுத்துக் காட்டாக, 1844–1941 ஆண்டுகளுக்கிடையில் இங்கு வந்த 2,725,917 இந்தியத் தொழிலாளர்களில் 85.2 விழுக்காட்டினர் தமிழர்.

தமிழ்த் தொழிலாளர் இவ்வாறு பெரும்பான்மையினராய்க் குடிபெயரக் குடிபெயரத் தமிழ்க்கல்வியும் இங்கு வேர்கொள்ளத் தொடங்கியது. தோட்டங்களில் வேலை செய்வதற்காக இங்குக் குடியேறிய தொழிலாளர்கள் தொடர்ந்து நிலைத்திருக்கவே தொடக்கத்தில் தமிழ்ப்பள்ளிகள் தோன்றின 1816-இல் பினாங்கு இலவசப் பள்ளியில் (Penang Free School) தொடங்கப்பட்ட தமிழ்ப் பள்ளியே இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி மலாயாவில் தோன்றிய முதல் தமிழ்ப் பள்ளியாகத் தெரிகிறது. இதே ஆண்டில்தான் இப்பள்ளியில் மலாய் மொழியும் தொடங்கப் பெற்றது. போதிய ஆதரவு இன்மையால் இத்தமிழ்ப்பள்ளி விரைவில் மூடப்பட்டது. இதன் பின்னர் சிங்கப்பூரில் 1834-இல் சிங்கப்பூர் இலவசப் பள்ளியில் (Singapore Free School) தமிழ் வகுப்பு ஒன்று தொடங்கப் பெற்றது. இவ்வகுப்பை மேற்பார்வையிடத் தமிழறிந்த ஆங்கிலேயர் கிடைக்காததாலும், எதிர்பார்த்த பயன் விளையாததாலும் 1839-இல் இவ்வகுப்பு நிறுத்தப்பட்டது. இதன் பிறகு சிங்கப்பூர் ஹைஸ்ட்ரீட்டில் (High Street) இருந்த சிங்கப்பூர் கல்வி நிறுவனம் (Singapore Institution) ஒரு தமிழ் வகுப்பைத் தொடங்கியதாகவும், அதுவும் 1836-க்குப் பின் நடைபெறவில்லை என்றும் தெரிகிறது.

தமிழ்த் தொழிலாளரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தரத் தோற்றுவிக்கப்பட்ட இத்தொடக்க காலப் பள்ளிகளும் வகுப்புக்களும்

வெற்றியடையாமல் போனதற்கு முக்கிய காரணம், எந்த இடத்திலும் ஒரு பள்ளி நடத்துவதற்கு வேண்டிய மாணவர் எண்ணிக்கை இன்மையே எனலாம். தோட்டங்கள் நாட்டின் பல பகுதிகளில் சிதறிக் கிடந்ததும், ஒரு தோட்டத்திற்கும் மற்றொரு தோட்டத்திற்கும் இடையில் இருந்த தொலைவும், போதிய போக்குவரத்து வசதி இன்மையும் மாணவர்கள் ஒன்று சேர விடாமல் தடுத்தன. எனவே அப்போது இருந்த ஆங்கிலப் பள்ளிகளிலேயே தமிழையும் சொல்லிக் கொடுக்க ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டது. சிங்கப்பூரில் இருந்த செயின்ட் பிரான்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் (St. Francis Xavier Malabar School), மலாக் காவில் இருந்த ஒரு பள்ளியிலும் தொடங்கப்பட்ட வகுப்புக்கள் இவ்வாறு தொடங்கப்பட்டனவேயாகும். இவையும் எதிர்பார்த்த அளவில் வெற்றி தரவில்லை. 1862-இல் மாதர் விவிலிய சமய ஆய்வு சங்கம் (Ladies' Bible and Tract Society) அரசாங்கப் பொருள் உதவியுடன் தொடங்கிய ஒரு தமிழ்ப் பள்ளியும் சில காலமே நடைபெற்றது.

குடியேற்றத் தொழிலாளர் குழந்தைகளின் கல்வி நலனில் அரசாங்கம் சற்றும் அக்கறை காட்டாததால், அப்போதைய முயற்சிகள் யாவும் மத நிறுவனங்களாலும் தனிப்பட்ட சிலரது நல்லெண்ணங்களாலுமே நடந்தன. இக்காலகட்டத்தில் தோன்றிய பல ஆங்கிலப்பள்ளிகள் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளாகவே தோன்றின. இத்தகைய பல பள்ளிகளைப் பினாங்கிலும் சிங்கப்பூரிலும் கிருத்துவ சமய நிறுவனங்கள் சில நடத்தி வந்தன. எஸ். பி. ஜி. என்னும் கிருத்துவ சமய நிறுவனம் வெல்லெஸ்லி மாநிலத்தில் ஐந்து பள்ளிகளை நடத்தி வந்தது. 1895-1896 ஆண்டுகளில் தவத்திரு ஆப்ரகாம் கோலாலம்பூரில் ஓர் ஆங்கிலோ—தமிழ்ப் பள்ளியைத் தொடங் கினார். இதுவே பின்னர் மெதடிஸ்ட் ஆண்கள் பள்ளியாக மாறியது.

இதே காலகட்டத்தில் காப்பி, கரும்பு, ரப்பர் தோட்டங்களிலும் சில சிறிய தமிழ்ப் பள்ளிகள் தோன்றத் தொடங்கின. 1872-இல் நிபோங் திபால் (Nibong Tibal) என்ற இடத்தில் தொடங்கப்பட்ட தோட்டப் பள்ளியும், 1875-1876 ஆண்டுகளில் வெல்லெஸ்லி மாநிலத்தில் தொடங் கப்பட்ட ஒரு தோட்டப்பள்ளியும் காலத்தால் முற்பட்டவை ஆகும். இவற்றிற்குப் பின்படிப்படியாகத் தமிழ்ப் பள்ளிகள் பெருகத் தொடங்கின.

எண்ணிக்கை யளவில் இவ்வாறு தமிழ்ப் பள்ளிகள் பெருகத் தொடங்கினாலும், அவற்றின் பால் அரசாங்கத்தின் போக்கில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. பழைய பாராமுகமே தொடர்ந்தது. தோட்டத் தொழிலாளர் குழந்தைகளின் கல்விப் பொறுப்பை ஏற்க அது எந்த விதத்திலும் தயாராக இல்லை. மாறாகத் தோட்ட நிர்வாகங்களும் இதைத் தம்முடைய கடமையாகக் கருதவில்லை. எனவே தமிழ்க்கல்வி பயனுள்ள முறையில் அமையாததில் வியப்பில்லை. இச்சூழ்நிலையில் 1876-இல் அரசாங்கம் செய்துவந்த சிறு பொருளுதவியையும் நிறுத்தி விட்டது. எனினும், ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், 1882-இல் இப்பொருளுதவியைத் தொடர அரசாங்கம் முன் வந்தது.

சென்ற நூற்றூண்டில் தமிழ்க் கல்வியின்பால் ஆங்கில அரசாங்கம் கொண்டிருந்த மனப்பான்மையை இரு செய்திகள் தெளிவாகக் காட்டுகின்றன. முதலாவது, தமிழ்-சீனக் குழந்தைகளுக்குத் தாய்மொழிக் கல்வி அளிப்பது தன் கடமையல்ல என்று 1872-இல் வெளிப்படையாக அரசாங்கம் அறிவித்ததாகும். அடுத்தது, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் கற்றுத் தருவதற்கும் தமிழ் மாணவர்களிடமிருந்தே ஆசிரியர் கட்டணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என விதி வகுத்ததாகும். 1881-இல் வெளியான 'சிங்கப்பூர்—தொடுவாய்ப் பகுதி தகவல் தொகுதி (Singapore and Straits Directory) இச்செய்தியைத் தருகிறது.

இருபதாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் இந்நிலையில் சிறிது மாற்றம் ஏற்படத் தொடங்கியது அரசாங்கமும் தமிழ்க் கல்வியில் ஓரளவு நாட்டம் செலுத்தத் தொடங்கியது. அரசினர் தமிழ்ப் பள்ளிகளும் தலைகாட்டத் தொடங்கின. பேராக் மாநிலக்கிரியான் மாவட்டத்தில் பாகன் சொராயில் 1900-ஆண்டில் கட்டப்பட்ட தமிழ்ப்பள்ளியே முதலாவது அரசினர் தமிழ்பள்ளியாகக் கருதப்படுகின்றது. அச்சமயத்தில் பேராக்கில் அரசப் பேராளாக இருந்த சர் பிராங்க் ஸ்வெட்டன்ஹாம் (Sir Frank Swettenham) தமிழ்க் கல்வியின் வளர்ச்சியில் ஓரளவு ஆர்வம் காட்டியதன் விளைவே இது. நெகிரி செம்பிலான் மாநிலத்திலும் இக்காலகட்டத்தில் சில அரசினர் தமிழ் பள்ளிகள் தோன்றின. இவற்றில் முதலாவது 1900-இல் சிரம்பானில் தோன்றிய அரசினர் தமிழ்ப்பள்ளி ஆகும். இப் பள்ளியின் தலைமையாசிரியரே தமிழ்ப் பள்ளிகளின் இடைக்காலத் துணைக் கண்காணிப்பாளராக அப்போது பதவி வகித்தார். நெகிரி செம்பிலான் மாநிலத்தோடு பஹாங் மாநிலத்திற்கும் இப்பதவியைத் தற்காலிகமாக இவர் வகித்து வந்தார். இவையல்லாமல் பெண்களுக்கான தமிழ்ப் பள்ளிகள் ஓரிரண்டும் இக்கால கட்டத்தில் ஏற்பட்டன. பினாங்கு கான்வென்ட் நடத்திய ஒரு பள்ளியும் ஸ்ரீஇராமகிருஷ்ண மடம் சிங்கப்பூரில் நிறுவிய சாரதாமணி பெண்கள் பள்ளியும் இவற்றில் குறிப்பிடத் தக்கவை.

இருபதாம் நூற்றூண்டின் தொடக்க காலத்தில் ஆங்கில அரசாங்கம் தமிழ்க் கல்வியின் மீது இவ்வாறு நாட்டம் கொள்ளத் தொடங்கியதற்குத் தகுந்த காரணம் உண்டு. மலாயாவின் பொருளாதார வளத்திற்கு முதுகெலும்பாக விளங்கிய ரப்பர்த் தோட்டங்கள் இக்காலகட்டத்தில் மளமளவென்று பெருகத் தொடங்கின. 1900-இல் 50,000 ஏக்கர்களாக இருந்த ரப்பர்த் தோட்டங்கள் 1911-இல் 543,000 ஏக்கர்களாகவும், 1938-இல் 3,272,000 ஏக்கர்களாகவும் உயர்ந்தன. ரப்பர்த் தோட்டங்களின் எண்ணிக்கை உயரஉயரத் தமிழ்த் தொழிலாளரின் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது. இதற்கு வசதியாக 1907-ஆம் ஆண்டிற்குப் பின் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இங்கு வருவதற்கு இலவசப் பயணச் சீட்டும் தரப்பட்டது. இக்காரணங்களால் தமிழ்த் தொழிலாளர் பெரும் அளவில் மலாயாவிற்குக் குடிபெயரத் தொடங்கினர். 1911-1920 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ

90,000 பேர் மலாயா வந்துள்ளனர். இவ்வெண்ணிக்கை 1921-1930 ஆண்டுகளில் ஆண்டிற்கு 88,000 பேராகக் காணப்படுகிறது. இதன் பின்னரே இவ்வெண்ணிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது.

பெருகிவரும் மலாயாவின் ரப்பர்த் தோட்டங்களில் இவ்வாறு வேலை செய்ய வந்த தொழிலாளர்களை இங்கு நிலைத்திருக்கச் செய்யவே அரசாங்கம் தமிழ்க் கல்வியில் ஓரளவு அக்கறை காட்டத் தொடங்கியது. 1912-இல் கூட்டரசு மலாய் மாநிலங்களில் (Federated Malay States) கொண்டுவரப்பட்ட தொழிலாளர் சட்டம் இதற்குச் சரியானதோர் எடுத்துக்காட்டாகும். (இரண்டாம் உலகப் போருக்கு முந்திய மலாயா, அரசியல் அப்படையில் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. பினங்கு வெல்லெஸ்லி மாநிலம், மலாக்கா, சிங்கப்பூர் ஆகியவை தொடுவாய்ப் பகுதி மாநிலங்கள் (Straits Settelments) எனப்பட்டன. நெகிரி செம்பிலான், சிலாங்கூர், பேராக், பஹாங் ஆகியவை கூட்டரசு மலாய மாநிலங்கள் (Federated Malay States) என வழங்கின. திரெங்கானு, கிளந்தான், கெடா, ஜோகூர், பெர்லிஸ் ஆகிய மாநிலங்கள் கூட்டரசல்லாத மலாய் மாநிலங்களாக (Unfederated Malay States) விளங்கின) இச்சட்டத்தின்படி ஏழு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் உட்பட்ட பத்துப் பிள்ளைகள் ஒரு தோட்டத்தில் இருந்தால் அங்கு ஒரு பள்ளி திறக்கப்பட்டு ஆசிரியரும் அமர்த்தப்பட வேண்டும். பள்ளிகள் அமைவதைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு தொழிலாளர் அதிகாரியிடம் (Controller of Labour) விடப்பட்டது. 1933-ஆம் ஆண்டு இறுதிவரை இந்நிலை நீடித்தது.

இச்சட்டத்தின் காரணமாகத் தோட்டப்புறத் தமிழ்ப் பள்ளிகள் எண்ணிக்கையில் பெருகினாலும், கல்வியின் தரம் உயரவில்லை. இதற்குக் காரணம், பயிற்சி பெற்ற ஆசிரியர் அதிகம் இல்லை. கல்வியைத் தருவது அரசாங்கத்தின் கடமையாக இருக்க, அது தங்கள் தலையில் வலியச் சுமத்தப்பட்டு விட்டதாகத் தோட்ட நிர்வாகங்கள் கருதின. கல்விக்காக மேலும் செலவிட அவை விரும்பவில்லை. எனவே, சட்டத்தைத் திருப்திப்படுத்தப் பெயரளவில் அவை பள்ளிகளை நிறுவின. ஆனால் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதில் அவை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கங்காணியோ, கிராணியோ (Clerk), கோயில் பூசாரியோ அல்லது ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்த தொழிலாளியோ பகுதிநேர ஆசிரியராக வேலை பார்த்தனர். தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தொழில் என்பது விரும்பி ஏற்கப்படாத ஒரு தொழிலாகவே இருந்தது. வேறு எந்த வேலையும் கிடைக்காத நிலையிலேயே தற்காலிகமாகத் தமிழாசியர் வேலையைச் சிலர் ஏற்றனர். (தமிழாசிரியர் என்ற சொல்லுக்குத் தமிழகத்தில் கொள்ளப்படும் பொருளும் மலாயாவில் கொள்ளப்படும் பொருளும் வேறு வேறானவை. புலவர் அல்லது வித்வான் தேர்வில் தேறி உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றுகிறவர்களே தமிழகத்தில் தமிழாசிரியர் என அழைக்கப்படுகின்றனர். மலாயாவிலோ தமிழ்த் தொடக்கப்

பள்ளி ஆசிரியர்களே தமிழாசிரியர் என அழைக்கப்படுகின்றனர்.) இதற் கேற்றாற்போல் தொழிலாளரும் தங்கள் பிள்ளைகளின் கல்வியைப் பெரிதாகக் கருதவில்லை. தோட்டங்களில் சிறுவர் வேலை செய்வது தடுக்கப்படாததால், தங்கள் வறுமையின் சுமையைக் குறைத்துக் கொள்ளப் பிள்ளைகள் வேலை செய்வதை அவர்கள் விரும்பினர். அன்றியும், தமிழ்க் கல்வி எந்த வகையிலும் தங்கள் நிலையிலிருந்து பிள்ளைகளின் நிலையை உயர்த்திவிடாது என அவர்கள் கருதியதும் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவே அமைந்தது. 1920-களில் பத்து வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதில் எந்தவிதச் சிரமமும் இருக்கவில்லை என்பதையும் இங்கு நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

தமிழ்க் கல்விப் பாதையில் இத்தனை தடைகள் இருந்த போதிலும், தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை என்னவோ மெல்ல மெல்லக் கூடிக் கொண்டே வந்தது. கூட்டரசு மலாய் மாநிலங்களில் 8,153 பிள்ளைகளோடு 1925-இல் 235 ஆக இருந்த தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை, 1930-இல் 12,640 பிள்ளைகளோடு 333 பள்ளிகளாக உயர்ந்தது. இச் சூழ்நிலையில் அரசாங்கமும் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சியில் ஓரளவு அக்கறை காட்டத் தொடங்கியது. 1929-இல் தமிழ்ப் பள்ளிகளின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அது ஒரு சட்டமும் இயற்றியது. 1932-இல் அமைக்கப்பட்ட ஒரு மான்யக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்பத் தமிழ்ப் பள்ளிகளுக்குப் பிள்ளைக்கு ஆறு வெள்ளி வீதம் மான்யமும் அளிக்கப்பட்டது. 1935-இல் பிள்ளைக்கு எட்டு வெள்ளியாக இம்மான்யத்தையும் உயர்த்தியது. அத்துடன், தோட்டப்புறக் கள்ளுக்கடைகளின் வருமானத்தில் ஒரு பகுதியையும் பள்ளி மேம்பாட்டிற்குப் பயன்படுத்த அது வழி செய்தது. இவற்றுடன் நில்லாமல், தமிழ்க் கல்வியின் தரம் உயரவும் அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்ப் பள்ளிகளைக் கண்காணிக்கவும், பாடதிட்டங்களை ஒருமுகப்படுத்தவும் மலாயாக் கல்வித் துறையில் 1930-இல் ஓர் அதிகாரி முதன்முறையாக நியமிக்கப்பட்டார். பதவியேற்ற சிறிது காலத்திற்குள் இவர் இறந்துவிடவே, 1937-இல் இந்தியப் பள்ளிகளின் கண்காணிப்பாளராக (Inspector of Indian Schools) மற்றொருவர் நியமிக்கப்பட்டார். இவர் முதலில் தமிழ் கற்றுக் கொள்வதற்காக இலண்டனில் உள்ள கீழ்த்திசை—ஆப்பிரிக்க ஆய்வு நிறுவனத்திற்கு (School of Oriental and African Studies) அனுப்பப்பட்டார். அதன்பின் தமிழ்நாட்டுப் பேச்சு வழக்கில் பயிற்சி பெறவும், தமிழ் நாட்டுத் தொடக்கப் பள்ளிகளின் கல்வி முறையை அறியவும் தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டார். மலாயாவின் தமிழ்க் கல்வி வரலாற்றில் இது ஒரு முக்கியமான திருப்பு மையம் எனலாம். ஆற்றலுள்ள கண்காணிப்பு இல்லாமல் வாடிக் கொண்டிருந்த தமிழ்ப் பள்ளிகளாகிய பயிர்கள், இம்மழையினால் தளர்ச்சி நீங்கி ஓரளவு ஊக்கமும் உற்சாகமும் பெற்றன. எனினும், பயிற்சி பெற்ற ஆசிரியர் இன்மையால் வாட்டம் முழுமையாக நீங்காமல்தான் இருந்தது. 1937-இல் கூட்டரசு மலாய் மாநிலங்களிலும் தொடுவாய்ப் பகுதி மாநிலங்களிலும் இருந்த 800 தமிழாசிரியர்களில் கால் பகுதிக்கும் குறைவானவரே பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருந்தனர் என்பது இங்குக் கருதத்தக்கது.

தோட்டப்புறங்களில் இவ்வாறு தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை கணிசமாகப் பெருகிக் கொண்டிருந்த வேளையில், நகர்ப்புறத் தமிழ்ப் பள்ளிகளின் நிலையில் எந்தவித மாற்றமும் நிகழவில்லை. அவை எண்ணிக்கையில் சிலவாகவே இருந்தன. கோலாலம்பூரில் 1906-இல் தோன்றிய தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப் பாடசாலை, 1910-இல் தோன்றிய விவேகானந்தா தமிழ்ப் பள்ளி, 1937-இல் தோன்றிய அப்பர் தமிழ்ப் பள்ளி ஆகியவையே சில குறிப்பிடத்தக்க நகர்ப்புறப் பள்ளிகளாக விளங்கின. இவையல்லாமல், பினாங்கில் இந்தியர் சங்கம் ஒரு பள்ளியையும், இராமகிருஷ்ண மிஷன் கோலாலம்பூர், சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இரு பள்ளிகளையும் நடத்தின. தமிழ் அல்லாமல் ஆங்கிலம் கற்றோர் சிறந்த வேலைகளை அரசாங்கத்திலும் வெளியிலும் பெறும் வாய்ப்பு அதிகம் இருந்ததால், நகர்ப்புறப் பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிகளையே நாடினர். மாறாகத் தோட்டப்புறப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமோ மலாயோ ஒரு சிறிதும் கற்றுத் தரபடவில்லை. இந்நிலையில் தமிழ் மட்டும் அறிந்த பிள்ளைகள் ஒரு புறமும், தமிழையே அறியாத பிள்ளைகள் மற்றொரு புறமுமாகத் தமிழ்ப் பிள்ளைகள் இருவேறு உலகங்களில் இயங்கி வந்தனர்.

தொடக்கப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் ஆறு ஆண்டுகள் கல்வி கற்றனர். முதல் ஓராண்டு தொடக்கக் கல்வியும், பின் ஐந்து வகுப்புகளும் என இவ்வாறாண்டுக் கல்வி பிரிக்கப்பட்டிருந்தது. ஏட்டளவில் ஐந்து வகுப்புக்கள் என இருப்பினும், பெரும்பாலான பள்ளிகள் மூன்றாம் வகுப்போடு முடித்துக் கொண்டன. சில தமிழ்ப் பள்ளிகளில் மட்டும் நான்காம், ஐந்தாம் வகுப்புகள் இருந்தன. கூட்டரசு மலாய் மாநிலங்களில் 1937-இல் நான்காம் வகுப்பில் 650 பிள்ளைகளும், ஐந்தாம் வகுப்பில் 200-க்குக் குறைந்த பிள்ளைகளுமே இருந்தனர் என்ற புள்ளி விவரம் அன்றைய தமிழ்ப் பள்ளிகளின் உண்மை நிலையை நன்கு உணர்த்தும். தோட்டப்பள்ளிகளில் பல, ஓராசிரியர் பள்ளிகளாக இருந்ததும் இதற்கொரு காரணம் எனலாம்.

இதனையடுத்து வந்த ஜப்பானியர் ஆட்சிக்காலத்தில் (1942-1945) நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் ஜப்பானிய மொழிப்பள்ளிகளாக மாற்றப்பட்டன. மொழி, இன வேறுபாடின்றி எல்லாப் பள்ளிகளும் ஜப்பானிய மொழியையே பயிற்றுவித்தன. எனினும் இக்காலகட்டம் நீடிக்கவில்லை.

ஜப்பானியர் திரும்பி ஆங்கிலேயர் மீண்டும் வந்த பின்னர் தமிழ்ப் பள்ளிகளின் நிலையில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. 1946-இல் புதிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதன்படி, தொடக்கப்பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி இலவசமாகக் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆங்கிலம் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாய பாடமானது. 1947 இல் தமிழ்ப் பள்ளிகளைத் திருத்திக் கட்டவும், நவீன சாதனங்களைப் பெருக்கவும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டது. மலாய் ஆசிரியர்களுக்குச் சமமான சம்பளமும் அரசாங்கம் இவ்வாறு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரே கிடைத்தது. 1946-இல் முதன் முதலாக ஏழாவது

வகுப்பும் தொடங்கப் பெற்றது. இவ்வகுப்பில் பயின்று தேறியவர்களுக்குத் தமிழாசிரியர் வேலை கிடைக்க வழியும் செய்யப்பட்டது. 1949-இல் கல்வியைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளால் தமிழ்ப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை கூடியது. 1946-இல் 29,800 ஐயும், 1949-இல் 38,700 ஐயும் இவ்வெண்ணிக்கை எட்டியது.

இதன் பின்னர் நாட்டின் கல்விக் கொள்கையை வகுக்கவும், அதன் அடிப்படையில் ஆலோசனைகள் கூறவும் அவ்வப்போது அரசாங்கத்தால் பல உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் அறிக்கைகள் தமிழ்ப் பள்ளிகளின் நிலையை அவ்வப்போது ஓரளவு மாற்றிக்கொண்டே இருந்தன. இவற்றில் முதலாவதாகக் குறிக்கத் தக்கது பார்ன்ஸ் (Barnes Report) ஆகும். 1949-இல் நியமிக்கப்பட்ட இக்குழு 1951-இல் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஒரு மொழி, ஒரு நாடு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இவ்வறிக்கை, மலாய் மொழியைத் தேசீய மொழியாகப் பரிந்துரைத்தது. அடுத்த பத்தாண்டுகளில் ஆங்கிலத்தின் இடத்தை மலாய் பெற வேண்டும் எனப் பரிந்துரைக்கும் அவ்வறிக்கை, மலாயோ அல்லது ஆங்கிலமோ போதிக்கப்படாத தமிழ், சீனப் பள்ளிகளுக்கு அரசாங்கம் தன்னுடைய பொருளுதவியை நிறுத்திவிட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. இன அடிப்படையில் அல்லாமல், அனைத்து மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் ஒரு சேரப் பயிலும் வண்ணம் தேசீயப் பள்ளிகளை உருவாக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு, சீனக் கல்வியைப் பற்றிய கருத்துக்களை அறிய ஃபென்-வு குழுவை (Fenn-Wu-Committe) அரசாங்கம் அமைத்தது. எனினும், அப்போதைய காலனித்துவ அரசாங்கம் தமிழ்க் கல்வியைப் பற்றி ஆராய இத்தகைய ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்க ஒப்புக் கொள்ளவில்லை. இச்சூழ்நிலையில் சைவப்பெரியார் இராமனுதன் செட்டியார், ஆதி நாகப்பன், சுவாமி சத்யானந்தா, கே. எல். தேவாசகர், ஜி. லியோ முதலியவர்களைக் கொண்டு இந்திய சமூகத் தலைவர்கள் ஒரு கல்விக் குழுவை அமைத்தனர். சீன, தமிழ்க் கல்விக் குழுக்கள் இரண்டுமே மலாய்மொழியைத் தேசீய மொழியாக ஒப்புக் கொண்டன. தமிழ்க் கல்விக் குழு, அத்துடன் ஒரு மும்மொழிக் கொள்கையைப் பரிந்துரைத்தது. அதன்படி, தொடக்கப் பள்ளியின் ஆறுண்டுகளில் தாய்மொழியிலேயே கல்வி அமையவேண்டும் என்றும், ஆங்கிலமும் மலாயும் தொடக்கப் பள்ளியின் மூன்றும் ஆண்டிலிருந்து படிப்படியாகக் கற்றுத்தர ஏற்பாடு செய்து தரப்படவேண்டும் என்றும் அது கருத்துரைத்தது.

மலாயா மக்களுக்கு அதிக அதிகாரத்தைத் தரும் வகையில் 1945-இல் அமைந்த தேசீய அரசாங்கம் கல்விப் பொறுப்பைத் தன் வசம் வைத்துக்கொண்டதுடன், கல்விக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய டத்தோ அப்துல் ரஸாக் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழுவின் அறிக்கை (Razak Report) 1956-இல் வெளியானது. இதன்படி, அப்போதிருந்த பள்ளிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. மலாய் மொழியைப் பயிற்சி மொழியாகவும், ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும்

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1984

கொண்ட தொடக்கப் பள்ளிகள் தேசியப் பள்ளிகளாகவும் (Standard Primary Schools), ஆங்கிலத்தையோ தமிழையோ சீனத்தையோ பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் (Standard Type Primary Schools) ஆங்கிலத்தையும் மலாயையும் பாடங்களாகப் போதிக்கும் தமிழ்ப் பள்ளிகள், சீனப் பள்ளிகளாகவும் இப் பிரிவுகள் அமைந்தன. எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் குறைந்தது பதினைந்து பிள்ளைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால் தமிழையோ சீனத்தையோ போதிக்கவும் இவ்வறிக்கை வழி செய்தது. இக்குழுவின் அறிக்கையை மறுபரிசீலனை செய்ய 1960-இல் அப்போதைய கல்வி அமைச்சர் ரஹ்மான் தாலிப் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையும் (Rahman Talib Report) முன்னதான ரஸாக் அறிக்கையே தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் எனக் கருத்துரைத்தது. இதன் பின் எல்லாப் பள்ளிகளும் இரு முக்கியப் பிரிவுகளுக்குள் அடங்கின. மலாய்ப் பள்ளிகள் அனைத்தும் தேசியப் பள்ளிகளாகவும் (National Schools), மற்ற சீன தமிழ்ப் பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் (National Type Schools) அமைந்தன. இப்பிரிவுகளே இன்றளவும் நீடிக்கின்றன.

அரசாங்கத்தின் கவனம் தமிழ்ப் பள்ளிகளின் மேலும் விழத் தொடங்கிய பின், தமிழ்க் கல்வியில் ஒரு தொடர்ந்த வளர்ச்சியினைப் பார்க்க முடிகின்றது. பின்வரும் புள்ளிவிவரங்கள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆண்டு	பள்ளிகள்	பிள்ளைகள்
1946	724	33,466
1956	902	48,212
1957	908	51,370
1958	895	53,836
1959	857	56,930
1960	832	61,221
1961	798	64,355
1962	758	66,865
1963	731	67,985
1964	717	69,668
1965	713	73,315
1966	703	76,691
1967	695	79,567
1968	679	81,872
1969	668	81,092
1970	661	79,449

மேற்கண்ட புள்ளி விவரத்தின்படி மாணவர் எண்ணிக்கை படிப் படியாகக் கூடி வந்தாலும், பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தே வருகின்றது. பக்கம் பக்கமாக வெகு அருகாமையில் உள்ள சில பள்ளிகளை இணைத்துக் கூட்டுப் பள்ளிகள் உருவாகியது இதற்கொரு காரணம் எனலாம். 1971—1980 ஆகிய காலகட்டத்திலும் இப்போக்கினைத் தொடர்ந்து காண முடிகின்றது.

ஆண்டு	பள்ளிகள்	பிள்ளைகள்
1971	647	77,192
1972	632	78,758
1973	631	78,854
1974	618	79,674
1975	612	80,404
1976	606	78,546
1977	தெரியவில்லை	தெரியவில்லை
1978	590	,,
1979	588	,,
1980	583	73,958

இப்புள்ளி விவரத்தின்படி, 1975-க்குப் பின் பள்ளிகளின் எண்ணிக்கையில் மட்டும் அல்லாது, பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் ஒரு வீழ்ச்சி இருப்பதை நன்கு காண முடிகின்றது. தமிழ்ப் பிள்ளைகள் பலர் தேசியத் தொடக்கப் பள்ளிகளில் பயில்வது இதற்கொரு காரணம் எனலாம். 1978-இல் மலாய், ஆங்கில, சீனப் பள்ளிகளில் படித்த இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கை 77,903 என்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது.

மலேசியத் தமிழ்க் கல்வியின் தரத்திலும் வளர்ச்சியிலும் பெரும் தடையாக விளங்கியது ஆசிரியர் பயிற்சிக்கான வாய்ப்பின்மையே எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழ்க் கல்விக்கான விதைகள் இங்குத் தூவப்பட்டு விட்டாலும், 1938-ஆம் ஆண்டிலேயே ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கத் தமிழ்ப் போதனா முறை வகுப்புக்கள் முதன்முதலாகத் தொடங்கப் பெற்றன. அப்போது தோட்டப் புறங்களில் கங்காணிகளாகவும் பூசாரிகளாகவும் தொழிலாளர்களாகவும் இருந்து கொண்டே பகுதி நேர ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கும் இவ்வாசிரியப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிலை ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் முற்றாகப் பாதிப்புற்றது. எனினும் ஆங்கிலேயர் மீண்டும் வந்தபின், அரைகுறையாகப் பயிற்சியைக் கைவிட்ட ஆசிரியர்களுக்கு எவ்விதப் பரிசோதனையும் நடத்தாமல், தேர்ச்சிச் சான்றிதழ் தந்து நிரந்தரமாக்கி விட்டனர். இவர்கள் இன்றும் ‘குண்டுபாஸ் ஆசிரியர்கள்’ என வேடிக்கையாக அழைக்கப்படுகின்றனர். 1949-இல் இருந்த 1341

தமிழாசிரியர்களில் 369 ஆசிரியர்களே பயிற்சி பெற்றவர்கள். மற்றவர்களில் 617 பேர் பயிற்சியில் ஈடுப்பட்டிருந்தனர். இப்பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்தன. 1957-இல் மலாயா விடுதலையடைந்த பிறகு, ஏழாம் வகுப்பு தடை செய்யப்பட்டது. இதனால் பலர் பாதிக்கப் பட்டனர்; தமிழ்க் கல்வியின் தரமும் பாதிக்கப்பட்டது. 1962-இல் போதனா முறைப் பயிற்சியும் (Normal Training) நிறுத்தப்பட்டது. கோலாலம்பூரில் தினப்பயிற்சி நிலையத்திலிருந்த தமிழ்ப் பிரிவும் கை விடப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு 1967-இல் தஞ்சோங் மாலிம் என்னுமிடத்தில் விடுமுறைக்காலத் தற்காலிகத் தமிழாசியர் பயிற்சி வகுப்பொன்று சுல்தான் இட்ரிஸ் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. 1967-இல் இவ்வகுப்புக்களில் சேர்ந்த 82 பேர் 1970-லும், 1968-இல் சேர்ந்த 132 பேர் 1971-லும், 1970-இல் சேர்ந்த 133 பேர் 1973-லும் தங்கள் பயிற்சியை முடித்தனர். புதிய கல்வித் திட்டத்திற்கிணங்கப் பின்னர் தொடங்கப்பட்ட பகல்நேரப் பயிற்சிக் கல்லூரிகளும் இங்குக் கருதத்தக்கன இப்போது கோலாலம்பூரில் ஸ்ரீகோத்தா பயிற்சிக் கல்லூரியிலும், லெம்பா பந்தாயில் (Lembah Pantai) உள்ள பயிற்சிக் கல்லூரியிலும் தமிழாசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இங்கு தேசிய மொழி பிரதான மொழியாகவும், தமிழ் ஒரு பாட மொழி யாகவும் உள்ளது.

மலேசியத் தமிழ்க் கல்வி வரலாற்றில் 1957 ஒரு முக்கிய ஆண்டு ஆகும். இவ்வாண்டில்தான் மலாயப் பல்கலைக் கழகத்தில் தமிழை முதன்மை மொழியாகக் கொண்டு இந்தியப் பகுதி (Indian Studies) தொடங்கியது. தமிழிலக்கியம், மொழியியல் முதலியன இங்குத் தமிழில் கற்றுத் தரப்படுகின்றன. அத்துடன் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, சமூகவியல், தத்துவம் முதலியவை மலாய், ஆங்கில மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன. மலேசியச் சமுதாயத்தைச் சேர்ந்த மூவின மக்களும் தமிழையும், தமிழினத்தின் பண்பாடு, வரலாறு, சமயம், சமூக வியல், அகியவற்றை அறியவும் இத்துறை சிறந்த தொண்டாற்றி வருகின்றது. மலாயாப் பல்கலைக் கழக மொழிகள் மையத்திலும் (Language Centre) மாரா தொழில் நுட்பக் கல்லூரியிலும் (MARA Institute of Technology) தமிழர் அல்லாதாரும் தமிழ் கற்க இன்று வாய்ப்புக்கள் உள்ளன.

பல்கலைக்கழக அளவில் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் கற்கும் வாய்ப்புக்கள் மலேசியாவில் இருப்பினும், மலேசியத் தமிழ்க்கல்வி அமைப்பில் நிரப்பவே முடியாத ஓர் இடைவெளி உள்ளது. தொடக்கப் பள்ளிக்கும் பல்கலைக்கழகக் கல்விக்கும் இடையில் பாலமாக அமைய வேண்டிய தமிழ் இடைநிலைப் பள்ளிகள் இங்கு இல்லை. மலேசியக் கல்வித் திட்டத்தின்படி பதினைந்து தமிழ்ப் பிள்ளைகள் விரும்பினால் தமிழ் இலக்கியத்தை ஒரு பாடமாகப் பயில இடைநிலைப் பள்ளிகளில் வாய்ப்புள்ளது. எனினும் இவ்வாய்ப்பு முழுமையாகப்பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இடைநிலைப் பள்ளிகளில் இவ்வாறு ஒரு

பாடத்தைத் தமிழில் கற்றுத் தேறியவர்களே உயர்கல்வியைத் தமிழில் பெற வாய்ப்புள்ளது. இப்போது, மலேசியக் கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education), உயர்கல்விச் சான்றிதழ்(Higher School Certificate) ஆகிய தேர்வுகளுக்குத் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்கலாம். அண்மைக் காலம் வரை தமிழகப் பாடநூல்களே இத்தேர்வுகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. இப்போது பாடநூல்களை இங்கேயே உருவாக்கும் முயற்சி நடந்து கொண்டுள்ளது. முதன்முறையாகக் கவிஞர்கள் ஐ. உலகநாதன், கரு. திருவரசு ஆகிய கவிஞர்களின் சில பாடல்கள் மலேசியக் கல்விச் சான்றிதழ் தமிழ் இலக்கியத் தேர்விற்குப் பாடமாகி உள்ளன. தொடக்கப் பள்ளிகளுக்கான தமிழ் நூல்கள் யாவும் இங்கேயே எழுதப்பட்டு வெளியாகின்றன.

தமிழ்க் கல்வியைப் பொறுத்த மட்டில் அது தொடக்கப் பள்ளியோடு நின்று விடுவதால், சில காலத்திற்கு முன்புவரை தமிழ்ப்பள்ளி மாணவன் ஒருவன் உயர்கல்வி பெறுவதென்பது பெரும்பாலும் கனவாகவே இருந்தது. இந்நிலை 1965-க்குப் பிறகு மாறிவிட்டது. தமிழ்ப் பள்ளியில் படித்த மாணவன் 'ரிமூவ்' வகுப்பில் (Remove Class) ஓராண்டு படித்து, மலாய் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று, இடைநிலைக் கல்வியைத் தொடர இப்போது வாய்ப்புள்ளது.

தோட்டங்களில் வேலை செய்யக் குடியேறிய தொழிலாளர்களின் பிள்ளைகளைக் கருத்தில் கொண்டே இங்கு தமிழ்க்கல்வி வேர்கொள்ளத் தொடங்கியதால், அதன் பிரச்னைகள் இன்னும் முடிந்த பாடில்லை. பள்ளிப்படிப்பை இடையில் கைவிடுவோர் பற்றி மூராட் குழு 1973-இல் சமர்ப்பித்த அறிக்கை தமிழ்த் தொடக்கப் பள்ளிகளின் இன்றைய நிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழ்ப்பள்ளி மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலை தாழ்ந்துள்ளதையும், மற்ற மாணவர்களை விடத் தமிழ்ப்பள்ளி மாணவர்களிடம் கல்வி கற்கும் ஆர்வம் குறைந்துள்ளதையும், பொருளாதார நிலையில் பின்தங்கிய குழந்தைகளே தாய்மொழிப் பள்ளிகளுக்குச் செல்வதையும், தமிழ்ப் பள்ளிகள் அளவில் சிறியவையாய் இருப்பதையும், தேவையான கல்வி வசதிகள் இல்லாமையையும், மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிடும் போது தங்கள் பள்ளிகளுக்கு வருகின்ற மாணவர்களை நீண்ட காலத்திற்குத் தங்களிடம் வைத்திருக்கும் ஆற்றல் தமிழ்ப் பள்ளிகளிடம் இல்லாததையும் இவ்வறிக்கை பல புள்ளி விவரங்களுடன் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ்த் தொடக்கப் பள்ளிகளும் அதில் பயிலும் மாணவர்களும் இவ்வளவு பிரச்னைகளை எதிர்நோக்கி நின்றாலும், அப்பிரச்னைகளால் ஒருவிதச் சோர்வுணர்வையும் இங்குக் காண முடியவில்லை. மாறாக, அப்பிரச்னைகளை எதிர்நோக்கி வழிவகை காணும் உணர்வே இங்கு ஓங்கியுள்ளது. மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை இப்பிரச்னைகளை ஆராய்வதற்குச் சில கருத்தரங்குகளையே நடத்தியுள்ளது. தமிழ்

இலக்கியக் கழகமும் சில கருத்தரங்குகள் மூலம் இப்பிரச்னைகளை இனங் காணவும் அவற்றைப் போக்கும் வழிமுறைகளை ஆராயவும் முயற்சி செய்துள்ளது. மலேசியக் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலேசிய இந்தியர் காங்கிரஸ் (Malaysian Indian Congress–M.I.C.), மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம், திராவிடர் கழகம் ஆகியவையும், பிற சமூக அமைப்புக்களும் இப்பிரச்னைகளை ஆழ்ந்த கவலையோடு நோக்கி ஆராய்ந்து வருகின்றன. ஒரு பக்கம் பிரச்னைகளும், மறுபக்கம் அவற்றைக்களைய நடக்கும் ஆய்வுகளுமாக மலேசியத் தமிழ்கல்வி வாலாற்றுப் பாதையில் தொடர்ந்து தன் பயணத்தை மேற்கொண்டுதான் உள்ளது.

பாரதியின் கடித இலக்கியம்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

பாரதி புலமை

முப்பத்தொன்பது ஆண்டுகளே உயிர் வாழ்ந்த பாரதி இலக்கிய உலகில் எல்லாத் துறைகளிலும் தன் முத்திரையைப் பதித்துச் சென்றார். சிறுகதை, கவிதை, கட்டுரை, வசன கவிதை எனப் பல்வேறு துறைகளில் புதுமையைப் புகுத்தித் தமிழ் மொழிக்குப் புதிய உயிர்ப்பையும் உணர்வையும் தந்தார். பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் 'எளிய சந்தத்தையும், எளிய சொற்களையும் மக்களுக்குப் புரியுமாறு பயன்படுத்துபவன் தமிழ் மொழிக்குப் புத்துயிர் தருவோனாவான்' என்று கூறுவார் பாரதி. சொல்லிலும் மட்டுமேயன்றிச் செயலிலும் தமிழுக்குப் புத்துயிர் தந்த கவிகளுள்ளே தலைசிறந்தவர் மகாகவி பாரதியார்.

படைப்பிலும் மொழிநடையிலும் பாரதியின் புதுமை மக்களை ஈர்த்தது. அவருக்கென அமைந்த பாடுபொருள்களும் தனித்தன்மை வாய்ந்தன. எடுத்துரைக்கும் உத்திகளும் புதியன. அவ்வகையில் தேசியத்தையும், ஆன்மிகத்தையும், சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகளையும் கவிதை வடிவங்களிலே படைத்தார்; உணர்ச்சிமிக்க உரைநடைகளிலே உலகிற்கு வழங்கினார்; புதுக்கவிதை வடிவிலே புரட்சிச் சிந்தனைகளையும், ஆன்மிகத் தத்துவக் கருத்துகளையும் வழங்கினார். பாரதி தன்னுடைய நண்பர்களுக்கும் பிற தலைவர்களுக்கும் எழுதிய கடிதங்களில் இலக்கிய நயம் செறிந்த தம்முடைய உணர்ச்சிகளை நன்கு புலப்படுத்துகின்றார்.[1]

இக்கட்டுரை அவருடைய கடிதங்களில் காணப்பெறும் செய்திகளையும் உணர்த்தும் முறைகளையும் ஆராய்கின்றது.

கடிதக் கலை

கடிதம் எழுதும் கலை தமிழ் இலக்கிய மரபிற்குப் புதுமையன்று. சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய மடலும், பெருங்கதையில் உதயணன் தன் கருத்தைப் புதுமையான முறையில் வாசவதத்தையின் நெற்றியில் மடலாக எழுதுவதும், முன்னையோரின் மரபுகளாக விளங்குகின்றன.[2] சேரமான் பெருமாள் நாயனார்க்கு இறைவன் விடுத்த மடலும் தமிழிலக்கியத்திற்குச் சுவை கூட்டுவதாகும்.[3] இம்மரபு பின்னர் சீட்டுக்கவிகளாகவும், ஓலைத்தூக்குகளாகவும் மாறிய நிலையையும் கால வளர்ச்சி காட்டும்.

கடித இலக்கிய வடிவம் பிற வடிவங்களைக் காட்டிலும் நெகிழ்ச்சி யமைப்புக் கொண்டதால் தங்கள் கருத்துகளை வெளியிடப் படைப்பாளிகள் இக்கடித வடிவத்தினைப் பயன்படுத்தினர் என்பர். அரசியலிலும் இத்தகைய கடித வடிவ இலக்கியங்கள் மறுமலர்ச்சியையும், புதிய விழிப்புணர்ச்சியையும் உண்டாக்கின. மார்க்ஸிம் கார்க்கி, நேரு, அண்ணா, கலைஞர் முதலானோரின் கடிதங்களைச் சான்றாகக் கொள்ளலாம். பெட்ரண்ட் ரஸ்ஸல், தாகூரின் கடிதங்கள் தத்துவ உலகிலும் இலக்கிய உலகிலும் புகழ் பெற்று விளங்கு குகின்றன. தமிழறிஞர் மறைமலையடிகளார் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்னும் புதினத்தையே கடித இலக்கிய வடிவில் தந்தார். மு. வரதராசனார் அன்னைக்கு, தம்பிக்கு, நண்பர்க்கு, தங்கைக்கு எனத் தன் கருத்துகளைக் கடித வடிவில் இலக்கிய உலகிற்கு அளித்தார். இன்றும் இவ்வகை வடிவம் இலக்கிய வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுவருகின்றது.[4]

பாரதி தன் படைப்புகளைக் கற்பனையில் அமைந்த கடித இலக்கிய வடிவில் தரவில்லை. தன்னுடைய மனைவிக்கும், நண்பர்களுக்கும், பிற தலைவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல கடிதங்கள் எழுதியுள்ளார். தனிப்பட்ட கடிதங்களாயினும் அவற்றில் அவருடைய தமிழ்ப்பற்று, சமுதாய உணர்ச்சி, நூல் பதிப்பிக்கும் நெறி முதலான பல செய்திகள் புலனாகின்றன. உணர்த்தும் நெறியிலும் புதுமை மிளிர்வதை உணரமுடியும்.

தமிழ்ப்பற்று

பாரதி தன் மனைவிக்குக் காசியிலிருந்து கடிதம் எழுதுகின்றார்.[5] தன்னைக் குறித்து எதும் பயம் கொள்ள வேண்டாம் என்று குறிப்பிட்டு விட்டு 'நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்' என்று எழுதுகின்றார். கவலைப்படும் நேரத்திற்கும்கூடத் தமிழ் மருந்தாகும் என்பதை நுட்பமாகக் குறிப்பார். அதுவும் இளம் மனைவிக்கு, 'எனதருமைக் காதலி செல்லம் மாளுக்கு' என்று தன் கடிதத்தைத் தொடங்கித் தமிழ் படிக்குமாறு அறிவுரைகூறும் பாரதியாரின் தமிழ்ப்பற்று தனிப்பட்ட முறையில் மடல் எழுதும்போதும்கூட வெளிப்படுகின்றது.

தமிழ், தமிழ்நாடு, தமிழ்மக்கள்

அவ்வாறே 'தம்பி' பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதும் போதும்[6] அவருடைய தமிழுணர்ச்சி வீறு கொள்கின்றது. 'தம்பி, நான் எது செய்வேனடா! தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை, தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகா யிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது' என்று எழுதுவார். 'தமிழ்நாடு வாழ்க என்றெழுது', 'தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது' 'தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது' 'அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம்

பயிற்சி பெற்று வளர்க என்றெழுது' என்றெல்லாம் நெல்லையப்பரிடம் உணர்ச்சி மீதூற வேண்டுகின்றார். தமிழ்நாட்டு மக்கள் தமிழ்க் கல்வியைப் பெற வேண்டும் என்னும் அவருடைய வேணவா இக்கடிதத்தால் புலனாகும்.

ஆறுபகுதிகள்

பாரதி இக்கடிதத்தினை ஆறு பகுதிகளாகப் புள்ளியிட்டுப் பிரித்துள்ளார். முதற்பகுதியில் நெல்லையப்ப பிள்ளையைப் 'பராசக்தி நன்கு காத்திடுக' என்று தொடங்கி, நெல்லையப்பரின் அறிவு மாதத்திற்கு மாதம் நாளுக்கு நாள் மலர்ச்சி பெற்று வருவதை அறிந்து மகிழ்கின்றார். அடுத்த பகுதியில் மெலியாருக்கு இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்ய வேண்டும் அவா சுடர் விடுகின்றது. மூன்றும் பகுதியில் ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு மொழிகளில் உள்ள இதழ்கள் பெறும் புதுமையினைத் தமிழ்மொழியும் பெற்று வளர வேண்டும் என்னும் ஆர்வத் துடிப்பு வெளியாகின்றது. புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும் என்னும் உணர்ச்சித் துடிப்பு புலனாகின்றது.

நான்காவது பகுதியில் தமிழ், தமிழ்ச்சாதி, தமிழ்ப்பெண் தான் உயர்ந்து நிற்க வேண்டும் என்னும் அவருடைய அவாவும், நிற்கும் நிலையில் கயிற்றைக் கட்டிக்கொண்டு கீழே விழாமல் பிழைக்க முயற்சி பண்ணும் மூடநம்பிக்கையைச் சாடும் புரட்சிப்போக்கும், சிறகுகள் பெற்று, 'பற! பற! மேலே, மேலே, மேலே' என்ற உணர்ச்சி முழக்கமும் வெளிப்படுகின்றன.

ஐந்தாவது பகுதியில் தமிழ், தமிழ்நாடு, தமிழ்க்கல்வி என்னும் சிந்தனையும், ஆண் பெண் நிகர் என்னும் கருத்தும், பெண்விடுதலை உணர்வும் மேற்குலத்தான் யார் என்னும் தெளிவும், வியாபாரமும் பிற துறைகளும் தமிழ்நாடு பெற்றுப்பொலிய வேண்டும் என்னும் வேட்கையும் எடுத்துரைக்கப்படுகின்றன.

உரிமை உணர்வு

ஆறும் பகுதியில்தான் தனிப்பட்ட செய்திகளை எடுத்துரைக்கின்றார். தன்னுடைய குழந்தை நலமின்மையைத் தெரிவிக்கின்றார். குழந்தை நலம் பெற்ற செய்தியைக் 'குழந்தை புதிய உயிர் கொண்டது' என்பார். தன்னுடைய கவிதைகளாம் 'நாட்டுப் பாட்டுக்கள்' 'புதுமைப்பெண்' ஆகியனவற்றை நெல்லையப்பரின் இதழிலும், 'ஞானபானு'விலும் உடனே வெளியிட வேண்டுவதல்லாமல் அதன் கருத்தையும் விளக்கி எழுதுமாறு கூறுவார். கடிதத்தின் இறுதியிலே நெல்லையப்பரிடம் பணம் வேண்டிக் கேட்கும் முறையிலும் பாரதிக்கேயுரிய உரிமையும் உணர்ச்சியும் வெளியாகும். 'எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி—உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை ?' என்று கேட்கும்போது அவர் வாழ்ந்த வறுமைச் சூழலும், உரிமையோடு கேட்கும் நெறியும் அத்துடன் அவருடைய பெருமித உணர்வும், நெகிழ்ச்சி தரும் நடையும் புலனாகும்.

பாரதியின் தம்பி திரு சி. விசுவநாதனுக்கு எழுதிய ஒரு மடலில்[7] ஆங்கிலத்தில் கடிதம் எழுத வேண்டாம் என்று கூறுகிறார். 'நீ எழுதும் தமிழ் எத்தனை கொச்சையாக இருந்தபோதிலும் அதைப் படிக்க நான் ஆவலுறுவேன். கொச்சைத் தமிழ் கூட எழுத முடியாவிட்டால் ஸம்ஸ்கிர்தத்திலே காயிதம் எழுது' என்பார். தமிழிலேயே எழுத வேண்டும் என்னும் முனைப்பு அவருக்கிருந்த போதிலும் இன்றியமையாத சூழல்களில் ஆங்கிலத்திலும் பாரதி கடிதங்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழறிஞர்க்குப் பாராட்டு

தமிழறிஞர் மு. இராகவையங்கார் அவர்கள் 1907-ஆம் ஆண்டில் செந்தமிழ் இதழில் 'வீரத் தாய்மார்கள்' என்னும் கட்டுரையினை எழுதினார். அதனையும் தேசியக் கண்ணோடு பார்த்து மகிழ்ந்தவர் பாரதி. அந்தக் கட்டுரையினைப் பாராட்டிப் பாரதியார் இராகவையங்காருக்கு மடல் எழுதும் போது,[8] 'தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'ஸ்வதேச பக்தி' என்ற புதுநெருப்பிற்கு' வணக்கம் செய்வதாகக் கூறுகின்றார். அக்கட்டுரை "தாழ்நிலை' என்ற இருளிலே மூழ்கிக்கிடக்கும் பாரதவாஸிகளுக்கு மகாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே ஒன்று" என்பார்.

கட்டுரையினைப் படித்துப் பெருமகிழ்வு கொண்ட பாரதியார் அதனை 'இந்தியா' பத்திரிகையிலும் தொடர்ந்து வெளியிட்டார். வாசகர்கள் 'தாம் பலமுறை படிப்பது மட்டுமேயன்றித் தம்சுற்றத்தார்க்கும் மித்திரர்க்கும் தமது வீட்டு மாதர்களுக்கும் திரும்பத்திரும்பப் படித்துக் காட்டுதல் நலமென்று கருதுகிறோம்' என்று 'இந்தியா' இதழில் தலையங்கமும் எழுதுகின்றார். இலக்கியக் கட்டுரைகளையும் தேசியப்பற்று வளர்க்கும் நெறியில் பயன்படுமாறு செய்தவர் பாரதி என்பது இதனால் புலனாகும். இக்கட்டுரையையொட்டி அவர் விரிவாக எழுதிய தலையங்கமும் குறிப்பிடத் தக்கதாகும்.[9]

கவிதைக் கடிதங்கள்

பாரதியார் எட்டையபுரம் ஜமீன்தாருக்குக் கடிதங்கள் எழுதும்போது கவிதை, உரைநடை ஆகிய இருவகையையும் பயன்படுத்தியுள்ளார். 1897-ல் எழுதிய இக்கவிதைக் கடிதம்தான் பாரதி எழுதிய (நமக்குக் கிடைத்த) கடிதங்களுள் மிகப் பழமையானது என்பர் திரு ரா. அ. பத்மநாபன்.[10] இக் கடிதத்தின் இறுதியில்'இளைசைச் சுப்பிரமணியன்,என்று கையெழுத்திடுகிறார். பதினைந்து வயதில் பாரதி அகவற்பாவில் இக்கடிதத்தினை எழுதியுள்ளார். பிற்காலத்திய எளிய நடைபோல் அமையாது புலமை நடை மீதூற இம்மடல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 64 வரிகளில் அமைந்த இப்பாடல் கிறீஇ (வரி 6, 9, 12), தரூஉம், உஊஉம், பெறீஇ, எய்வுறீஇ என அளபெடைகள் மிகுந்து சங்கப்பாடல்களை நினைவூட்டும்வண்ணம் அமைந்துள்ளது. இப்பாடல் குறித்துப் பாரதி அறிஞர் பத்மநாபன் '1897 ஆம் ஆண்டு இளம்பாரதியின் கவிதை மடலில் அவரது ஆரம்பகாலக் கடினமான

பண்டித நடை பரிபூரண ஆதிக்கம் செலுத்துகிறது; அளபெடைகள் மலிந்து காண்கின்றன; இது பாரதி பாட்டுத்தானு என்று நினைக்குமளவு கடினமான புரியாத நடை' என்பர்.

பாரதி இக்கவிதைக் கடிதத்தில்,

> **தென்னிசை நன்னகரிற் சிங்கம் வெங்கடேசு ரெட்ட**
> **கன்னன் சமுக சமுகம்**

என்று தொடங்கி வெங்கடேசர எட்டப்பனைப் பலவாருய்ப் புகழ்கின்ருர். 'உம்பரும் உலகரும் உணருப் பெருமையோன், செஞ்சொற்பாவலர் சர்மாறன், மாற்றலர் அடுங்கூற்று, கன்னன், புண்ணியன், எவ்வத்தேயத் திறைவருஞ் சூழ்தா அரியணை மிசைத்தோன், அமரர்கோன்' என்றெல்லாம் புகழ்வார். அடுத்துச் செந்தமிழ்த் திருமொழியினை ஆதரிப்பார் இன்மையினுலும் தமிழைக் கற்பார்க்குப் பயன் இன்மையினுலும் புன்மொழிகள் பொலிவுறுகின்றன என்று உளம் நைந்து வருந்தி 'என்னையும் என் தந்தை புறமொழி கற்க' என்று கூறுகின்ருரே எனப் புலம்புகின்ருர். ஆங்கிலக் கல்வி பெறுவதற்குப் பொருளின்மையால் உதவுமாறு வேண்டுவது இக்கடிதத்தின் செய்தியாகும்.

> **என்னையிச் சிறுவன் இயம்புவ தென்னுது**
> **மன்னநின் னருளான் அடியனை வாழ்வித்**
> **துன்னரு ளானே உய்ந்தோ னெனப் பிறர்**
> **என்னைச் சாற்றலால் இரும்புக ழினையெற்**
> **கீந்தருளுதிநீ இனிது வாழ்கவே!**

எனக் கடிதத்தினை முடிக்கின்ருர்.

'மாந்தர்ப் புரத்தல் வேந்தர்தந் திருவருட் கிலக்கியம்' என மன்னனின் இயல்பையும் இம்மடல் மூலம் எடுத்துரைக்கின்ருர். மன்னனின் பெருமையும் புகழ் மொழிகளும் மடலின் முன்பகுதியாய் விளங்குகின்றன. இன்னமுதினும் சுவையுடைய செந்தமிழ்த் திருமொழியின் பெருமையையும், கற்பார்க்குப் பயன் இன்மையான் தமிழை ஆதரிப்போர் இல்லாமையையும், அதனுல் புன்மொழிகள் பொலிவு பெறுவதையும், தானும் அப்புற மொழியைப் படிக்க வேண்டி ஏற்பட்ட சூழலையும் இரண்டாம் பகுதி எடுத்துரைக்கும். 'என்னே! யான் செய்குவது! இன்றமிழ் கற்பனே பின்னை ஒருவரும் பேணுர்' எனும் கூற்று அக்காலச் சூழலை மட்டுமன்று இக்காலச் சூழலையும் புலப்படுத்துவது போல் அமைந்துள்ளது. இறுதிப் பகுதி வேந்தரிடத்துப் பொருள் வேண்டுவதாக அமைகின்றது.

மன்னனுக்குப் பொருள் வேண்டி எழுதப்பட்ட மடலாயினும் வேந்தன் பெருமை, மொழியின் பெருமை, தன்னுடைய வறுமை, காலச் சூழலால் மக்கள் கொண்ட மன இயல்பு, தன்னுல் ஏதும் செய்ய இயலாமை முதலாயின பாரதியின் முதல் கடிதத்தால்—இக்கவிதைக் கடிதத்தால் புலனுகின்றன.

ஓலைத்தூக்கு

1919-ஆம் ஆண்டு மேத்திங்கள் இரண்டாம் நாள், 'ஸ்ரீ எட்டயபுரம் மகா ராஜ ராஜேஜ்ந்த்ர ஸ்ரீவேங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்கள் சமூகத்துக்கு கவிராஜ சி. சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத்தூக்கு' நமக்குக் கிடைக்கும் கவிதைக் கடிதங்களிலே இரண்டாவதாகும்.

'வாசமிகு துழாய்த் தாரான் கண்ணனை மறவாத மனத்தான், சக்திதாசன், புகழ்வளர் சுப்பிரமணிய பாரதி' என்று தன்னைப் பாரதி இவ் ஓலைத்தூக்கின் மூலம் வெளிப்படுத்துகின்றார். மரபு நெறியில் மன்னனைப் புகழ்வதாய் அமைந்துள்ளன முதலிரு வரிகள். தமிழ்நாட்டில் தமிழறிந்த மன்னன் இல்லை என்னும் பழி நிலை வேங்கடேசு ரெட்டப்ப பூபதி மகுடம் புனைந்ததும் இறந்தது என்கிறார். 'சொன்னலமும் பொருள் நலமும் சுவைகண்டு சுவைகண்டு துய்த்துத் துய்த்துக் கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள் போல்' தமிழ்ச்சுவை உண்டான் என்று பாராட்டுவார். 'சுவைகண்டு சுவைகண்டு துய்த்துத் துய்த்து' எனும் தொடர் இலக்கியச்சுவை அறியும் நெறியினைச் சுட்டும்.

பாட்டுப் பெருமை

தமிழ் நாட்டில் தமிழறிந்த மன்னன் இல்லை எனும் வசை மொழி எட்டையபுரம் ஜமீன்தாரால் ஒழிந்தது என்று கூறும் பாரதி தன்னைப் பற்றியும் பெருமிதத்தோடு பின்வருமாறு கூறுவார்.

புவிய னைத்தும் போற்றிட வான்புகழ்படைத்துத்
தமிழ் மொழியைப் புகழிலேற்று நல்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை யெனும்
வசை யென்னுற் கழிந்த தன்றே

'தமிழரசன்' என்று மன்னனையும், 'கவியரசன்' என்று தன்னையும் ஒப்பக் கருதும் உளப்பாங்கு படைத்தவர் பாரதி. 'சுவை புதிது நயம் புதிது வளம் புதிது சொற்புதிது ஜோதி கண்ட நவகவிதை எந்நாளும் அழியாத மஹாகவிதை' என்று தன் பாட்டுப் பெருமையைப் பறை சாற்றுவார். பாரதியின் காலத்திலேயே பாரதி பாடல்கள் பிரான்ஸ் தேசத்தவராலும், ஆங்கிலக் கவிஞர்களாலும் பாராட்டப் பெற்றதைப் பாரதியே இக் கடிதத்தில் நினைவுகூர்ந்து, அங்ஙனம் புகழ் மிகுந்த தமிழ்ப் பாட்டை 'நின்பால் கொணர்ந்தேன்' என்பார்.[11]

ஒப்பக்கருதும் உளப்பாங்கு

பாரதி தன்னையும் அம்மன்னனையும் ஒப்பக் கருதும் உளப்பாங்கினராயினும் பாடலின் இறுதியிலே அவன் தன்னை எப்படிப் பாராட்ட வேண்டும் என்னும் குறிப்பினையும் தருகின்றார். 'வியப்புமிகு புத்திசையில் வியத்தகுமென் கவிதையினை நன்கு கேட்டுப் போற்றுக; ஜயப் பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள் பொற்பைகள் ஜதி பல்லக்கு வியப்பரி வாரங்கள் முதல் பரிசளித்து நீ பல்லூழி வாழ்க!' என்பார். வேண்டுதலிலும் பெருமித உணர்ச்சி தோன்றப் பாடுவது அவருக்கு இயல்பாக அமைகின்றது.

இவ்வளவு உரிமையோடும் உணர்ச்சியோடும் தன் பெருமித உணர்வு குன்றாத நிலையில் பாரதி வேண்டியும் அம்மன்னன் இவருக்கு ஏதும் தரவில்லை போலும்! மறுநாளே பாரதி இன்னொரு சீட்டுக்கவி அனுப்புகின்றார்.[12] 'வள்ளல் பாரி வாழ்ந்த நாட்டில் நீயும் அரசு வீற்றிருக்கின்றாய். காரியம் வேண்டி நின்னைக் கவிஞர் காண வந்தால் நேரில் அப்போதே வந்து வழிபட நினைக்கவில்லையே' என்று வருத்தத்தோடு தொடங்குகிறார். 'உன் புகழ் விண்ணளவு உயர்ந்தது. என்பா பண்ணளவு உயர்ந்தது; எண்ணளவுயர்ந்து கவிஞர்கட்குக் கோடிப் பரிசில் அளித்திட விரைய மாட்டாயா?' என்று வேண்டுகிறார். அரசில் உயர்ந்த மன்னனும், பண்ணில் உயர்ந்த பாரதியும் சமம் என்னும் குறிப்புக் காணப்பட்டாலும் முதல்நாள் எழுதிய கவிதையின் வேகம் இரண்டாம் நாள் எழுதிய கவிதையில் இல்லை என்பது நன்கு புலப்படும்.[13]

கல்வியே தொழிலாக் கொண்டோய் கவிதையே தெய்வமாக
அல்லுநன் பகலும் போற்றி அதை வழிபட்டு நின்றாய்
சொல்லிலே நிகரிலாத புலவர் நின் சூழலுற்றால்
எல்லினைக் காணப் பாயும் இடபம்போல் முற்படாயோ?

என்று கல்வி கவிதை இரண்டையும் போற்றி வழிபடுவதாக மன்னனைக் குறிப்பிட்டு, புலவருக்கு உதவ விரைய மாட்டாயா என உவமை நயத்தோடு தன் கடிதத்தினை முடிக்கின்றார் பாரதி. புலமையிலே ஒளி பெற்றுத் துலங்கும் பாரதி பொருளிலே தாழ்ந்த நிலையில்—பிறருக்கு மடல் எழுதிப் பொருள் வேண்டும் நிலையில் இருந்தாலும் பெருமிதமும் மிடுக்கும் அவர் நடையில் ஒளி வீசுகின்றன. எட்டையபுரத்திலிருந்து கொண்டே நேரில் சென்று பொருள் வேண்டாது மடலின்வழியே பொருள் வேண்டுவதும் குறிப்பிடத்தக்கது. இது பாரதியின் உள்ளத்தைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவும்.

தன்னிடம் நெருங்கிப் பழகிய ஒத்த நிலையில் உள்ள நெல்லையப்பரிடமும் ஆளுகின்ற மன்னரிடத்தும் வேண்டும் பொழுது இதே உணர்வினைப் பாரதி கொண்டுள்ளார். ஆனால் மன்னருக்கு எழுதிய மடல்களில் தன்னுடைய துன்பத்தின் சாயலையும், உடன் மறுமொழி வாராததால் ஏற்பட்ட மனவருத்தமும் புலனாவதை மிக நுட்பமாகக் காட்டுகின்றார் பாரதி.

பதிப்பு நெறி

'நூல் பிரசுரத்திட்டம்' தொடர்பாக வெளியாகியுள்ள கடிதம் தமிழ் வளர்ப்புப் பண்ணையின் காரியதரிசி பெயரால் வெளிவந்துள்ளது. எனினும் அது பாரதியால் எழுதப்பட்டது என்பார் திரு ரா. அ. பத்மநாபன்.[14] அக்கடிதத்தில் பாரதி, நூல்கள் வெளியிடுவது குறித்துப் பெருந்திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளார். 40 நூல்களை ஒவ்வொன்றிலும் 10000 படிகள் வீதம் அச்சிட விரும்புகின்றார். இந்நான்கு லட்சம் படிகளும் விரைவில் விற்பனையாகி விடும் என்னும் அவருடைய தன்னம்பிக்கைக் கூற்று வருமாறு: 'இந்நான்கு லக்ஷம் புத்தகங்களும் தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் தீப்

பெட்டிகளைக் காட்டிலும் அதிக ஸாதாரணமாகவும், அதிக விரைவாகவும் விலைப்பட்டுப் போகுமென்பதில் சிறிதேனும் ஸந்தேஹத்துக்கிடமில்லை' என்பார். அதற்குரிய காரணங்களையும் தொடர்ந்து விளக்குகின்றார்.

நூல் வரவு செலவு கணக்கு குறித்த அவருடைய செய்தியும் குறிப்பிடத்தகுந்தது :

> " அச்சிட ரூபாய் 20,000 ரூபாய் பிடிக்கும். விளம்பரச் செலவு 10,000 ரூபாய். ஷை 30,000 ரூபாய்க்கு மாஸம் 1 க்கு 2 ரூபாய் வீதம் இரண்டு வருஷத்து வட்டி ரூபாய் 14,400. ஆக மொத்தம் செலவு ரூபாய் 44,400.
>
> புஸ்தகம் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம், மொத்தம் புஸ்தகத்துக்கு வரவு ரூபாய் 2 லக்ஷம். ஆகவே மிச்ச லாபம் 156000. ஒன்றரை லக்ஷத்தாறாயிர ரூபாய் வித்தமாகக் கிடைக்கிறது '.

இப்பட்டியல் அவருடைய நூல் வெளியீட்டு ஆர்வத்தைப் புலப்படுத்து கின்றது. தம்முடைய நூலின் அமைப்பும், அதன் தரமும் மிக உயர்ந்தவை யாக, இருக்கும் என்பார். 'இந்த நூல்கள் அச்சிடப்படும் மாதிரியே இவை ஏராளமாக விலைப்படுவதற்கொரு ஸாதனமாகும். அமெரிக்கா, ஐரோப்பா கண்டத்துப் பதிப்புகளைப் போல் நேர்த்தியாகவும் மனோரம்மியமாகவும் நல்ல காயிதத்தில் தெளிவான எழுத்துக்களில், தெளிவாகப் பதம் பிரித்து ஆச்சர்யமான தகுந்த சித்திரங்கள் பதிப்பித்து வெளியிடுவதால், இந் நூல்கள் ஜனங்களுக்குள்ளே மிகுந்த வியப்பையும், பிரியத்தையும் விளை வித்து லக்ஷக்கணக்காக விலையாகுமென்பதில் ஸந்தேஹமில்லை' என்னும் சொற்கள் நூல் எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்னும் அவருடைய விருப்பத்தைக் காட்டும். நல்ல தாளில்-மக்களை மனங் கவருமாறு உரிய படங்களுடன் அழகிய முறையில் நன்கு பதிப்பித்தல், தெளிவாகப் பதம் பிரித்து அச்சடித்தல் முதலியன இவருடைய விழைவு என்பது புலனாகும். இவ்வாறே கானாடு காத்தான் வள்ளல் வயி. க. சண்முகம் செட்டியாருக்கு எழுதிய மடலிலும், 'புஸ்தக விலை ரூ. 1க்குக் குறைத்து வைக்க வேண்டாம். தடித்த காயிதம்; நேர்த்தியான அச்சு; பெரிய எழுத்து; இட விஸ்தாரம் இவை கீதைக்கு மட்டுமேயன்றி நாம் அச்சிடப்போகும் புஸ்தகங்கள் எல்லாவற்றுக்கும் அவசியம்' என்பார். ஆங்கிலம் முதலான பிறமொழி களில் அச்சாகும் நூல்களுக்கு இணையாகத் தம் நூல்கள் அமைப்பிலும் அழகிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது இவருடைய கடிதங்களால் நன்கு புலனாகின்றன.

முடிவுரை

நண்பர்க்கும், பிறர்க்கும் எழுதிய கடிதங்களாயினும் இக்கடிதங்களில் பாரதியின் தனித்தன்மையும் தமிழ்ப் பற்றும் நன்குபுலனாகின்றன. பாரதி யினுடைய வரலாறும் வாழ்வுச் சூழலும் தெளிவாகின்றன. உரைநடைக் கடிதங்களிலும் அவருடைய உணர்ச்சிமிகுந்த உள்ளம், பாரதியின் தமிழ்ப் பற்று, பிறமொழிகளுக்கு ஈடாக நம்மொழியிலும் நூல்கள் வெளிவர வேண்டும் என்ற எண்ணம், பதிப்பு நெறியில் அவர் கொண்ட ஈடுபாடு முதலாயன இக்கடிதங்கள் நமக்கு உணர்த்தும் செய்திகளாகும்.

குறிப்புகள்

1. பாரதியின் கடிதங்கள் (தொகுத்தவர்: ரா. அ. பதமநாபன், வானதி பதிப்பகம், சென்னை 1981) பல்வேறு இதழ்களிலும், நூல்களிலும் அவ்வப்போது வெளிவந்தன. அவற்றைத் (28) தொகுத்து நூல் வடிவில் முதன்முதலாக அளித்துள்ளார் தொகுப்பாசிரியர்.

2. சிலப்பதிகாரம், 13, 95-96.
பெருங்கதை, 13, முகவெழுத்துக்காதை.

3. பெரியபுராணம், தொகுதி 7, ப. 32.

4. (1) உலகத்தில் பிறமொழிகளில் காணப்பெறும் புகழ்மிக்க இலக்கியங்களும் கடித வடிவில் தோற்றம் கொண்டனவாக விளங்குகின்றன. சாமுவேல் ரிச்சர்டஸின் 'பாமலா', ரோமானிய அறிஞன் நீரோவின் புகழ்மிக்க அறநெறிக் கடிதங்கள், பாரதி ஆஸ்டா தன்னுடைய கணவனுக்கு எழுதிய கடிதங்கள், மான்டெஸ்க் சார்லஸ் லூயியின் கடிதங்கள் (பிரெஞ்சு சட்ட அமைப்புகளைச் சாடியவை) வைகவுண்ட் டாலிங் புரோக் வில்லியம், வின்தாமிற்குத் தான் அரசியலில் நாடுகடத்தப்பட்டபோது எழுதிய கடிதங்கள், மெக்காலே, அடிசன் முதலானோரின் கடிதங்கள், கவிதைக் கொள்கையைப் பற்றி கீட்ஸ், பார்க் ஆகியோர் எழுதிய கடிதங்கள் எமிலிடிக்கன்ஸ், டி. எச். லாரன்ஸ், பைரன், லாம்ப், லார்டு செஸ்டர் பீல்டு, அலெக்ஸாண்டர் போப், வால்ட் விட்மேன் முதலியோரின் கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவையாகும்.

(2) (Horace Walpole) ஹோரஸ் வால்போல் நான்காயிரம் கடிதங்கள் எழுதியுள்ளதாகக் கூறுவர்.

'Dr. Mu. Va. as a Letter Writer' Mu. Va., p. 115, I.I.T.S., Madras, 1975.

Horace Walpole, W. S. Lewis Hart Davis, London, 1961, p. 169.

5. 1901-ஆம் ஆண்டில் காசியிலிருந்து எழுதப் பெற்ற கடிதம்.

6. 1915-ஆம் ஆண்டில் புதுச்சேரியிலிருந்து எழுதிய கடிதம்.

7. 1918 ,, ,, ,,

8. 1907-ஆம் ஆண்டில் எழுதியது.

9. பாரதியார் கட்டுரைகள், பக். 493-496.

10. 24-1-1897-இல் எழுதப்பட்ட கடிதம்-அப்போது பாரதியாருக்கு வயது 14; பாரதியின் கடிதங்கள், ப. 12.

11. இது குறித்துப் பாரதி காவலர் ரா. அ. பத்மநாபன் பின்வருமாறு எழுதுவார்: 'பாரதியை பிரெஞ்சு மொழியில் வின்ஸன் என்பவர் மொழிபெயர்த்ததாக நினைவு. ஆங்கிலத்தில் ஜேம்ஸ் களின்ஸ் என்ற புலவர் பாரதி பாடல்களை மிகவும் போற்றினர். 'வேண்டுமடி யெப்போதும் விடுதலை' என்ற பாட்டை அதே சந்தத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார், பாரதியின் கடிதங்கள், ப. 85.

12. 1919-ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி.

13. பாரதியின் கடிதங்கள், ப. 88.

14. மு. கா. நூ. ப. 114.

துணை நூல்கள்

1. பத்மநாபன், ரா. அ., பாரதியின் கடிதங்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1981.

2. நவநீத கிருட்டினன்., மா., ஆய்வுச்சுடர், குறிஞ்சிமலர் வெளியீடு, மதுரை, 1980.

3. முத்து சண்முகம், மு. வ. கடித இலக்கியம் கண்ணோட்டம், கலா வெளியீடு, சென்னை, 1979.

4. பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை, 1981.

5. Dr. V. Veerasami, 'Dr. Mu. Va. As a Letter Writer', **Mu. Va.** (Ed. by Dr. S. V. Subramanian & A. A. Manavalan), I I T S, Madras, 1975.

பாரதி நூற்றாண்டில் பாரதி இலக்கியங்கள்

(1981—1982)

தொகுப்பு

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

தமிழ் மொழித்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

பாரதி நூற்றாண்டில் பாரதி இலக்கியங்கள் (1981-1982)

தொகுப்பு,

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005.

1.	அறிஞர்கள் பார்வையில் பாரதி	பெ. சு. மணி
2.	அறுபது ஆண்டுகளில் பாரதி ஆய்வு	ச. மெய்யப்பன்
3.	இரு மகாகவிகள் *	க. கைலாசபதி
4.	இருவர் கண்ட பாரதி	எதிரொலி விசுவநாதன்
5.	ஊருக்கு நல்லது சொல்வேன்	கே. எஸ். இராஜேந்திரன்
6.	எட்டயபுரத்துத் தங்கம்	ஆர். பொன்னம்மாள்
7.	எண்ணத்தின் வண்ணங்கள்	சாலை இளந்திரையன்
8.	கட்டுரைக் கொத்து	மகாகவி பாரதியார் (தொ : சீனி. விசுவநாதன்)
9.	கடவுள் பார்வையில் பாரதி	செந்தமிழ்ச் செழியன்
10.	கண்ணன் என்கவி *	கு. ப. இராஜகோபாலன் பெ. கோ. சுந்தரராஜன்
11.	கண்ணன் பாட்டுத்திறன்	ந. சுப்பு ரெட்டியார்
12.	கவிக்குயில் பாரதியார்	சுத்தானந்த பாரதியார்
13.	கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும்	மு. மு. இஸ்மாயில்
14	கவி பாரதிக்கோர் கவியாரம்	கோ. இளவழகன் பெருமாள் (தொ.)
15.	கவியுலகக் கதிரவன் பாரதி	வசந்தா ராமநாதன்
16.	கவிராஜன் கதை	கவிஞர் வைரமுத்து
17.	காலனை வென்ற கவிஞன் (பாரதியார் நாடகம்)	இனியவன்
18.	குயில் பாட்டு ஆராய்ச்சி	கு. சிவஞானம்

குறிப்பு : சுருக்கவிளக்கம் : தொ : தொகுப்பாசிரியர் ; ப : பதிப்பாசிரியர்
* மறுபதிப்பு, (81-82-இல்,)

பாரதிநூற்றாண்டில் பாரதிகுறித்து வெளிவந்துள்ள நூல்களின் தொகுப்பு; பட்டியல் முழுமையானதன்று. பதிப்பகம், ஆண்டு முதலான பிறவிவரங்களைப் 'பாரதி நூற்றாண்டில் பாரதி ஆராய்ச்சி' என்னும் நூலில் காண்க.

19.	குயில் பாட்டு ஒரு மதிப்பீடு	ந. சுப்பு ரெட்டியார்
20.	சக்கரவர்த்தினி	பாரதியார் (ப)
21.	சிம்பாலிஸம்	ஆரார்
22.	சில சிந்தனைகள்	பாரதியார் (ப)
23.	சின்னஞ் சிறுகிளியே *	வானதி பதிப்பகம் (தொ.)
24.	சுதந்திரச் சிற்பி சுப்பிரமணிய பாரதி	ஜோதிர்லதா கிரிஜா
25.	சுப்பிரமணிய பாரதி	புலவர் செந்துறைமுத்து
26.	சுப்பிரமணிய பாரதியின் கண்ணன் பாட்டு, காப்பிய நாடகம், கூவும் குயில்	க. சி. கமலையா
27.	சுவரதாள அமைப்புடன் பாரதியார் பாடல்கள் (முதல் பாகம்)	பத்தமடை எஸ். கிருஷ்ணன்
28.	செந்தமிழ்த் தேனீ	பட்டர்வொர்த் எஸ். எம். ஜைனுத்தீன்
29.	ஞானரதம்	சீனி. விசுவநாதன் (ப)
30.	தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்	டாக்டர் க. த. திருநாவுக்கரசு
31.	தீர்க்கதரிசி பாரதியார்	புலியூர்க்கேசிகன்
32.	தேசியக் கவி பாரதியார்	எஸ். வி. ரமணி
33.	தேசிய கவி	பி. எல். இராசேந்திரன்
34.	நூறாண்டு கண்ட பாரதி	எழிலமுதன்
35.	பல்கலை நோக்கில் பாரதி	ம. வே. சுதாகர் (ப)
36.	பல்கோண பாரதி *	புலவர் நக்கீரன்
37.	பன்னோக்குப் பாவலன்	புலவர் மு. வைத்திலிங்கம்
38.	பாஞ்சாலி சபதம்—ஒரு நோக்கு	ந. சுப்பு ரெட்டியார்
39.	பாட்டுக்கொரு புலவன் *	கே. பொன்னுசாமி
40.	பாப்பாவுக்குப் பாரதி *	எஸ். நடராஜன்
41.	பார்புகழ் பாரதி	இலட்சுமி நாராயணன்
42.	பாரதி இயல்	மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள்(தொ)
43.	பாரதி இலக்கியம்-ஒரு பார்வை	தா. வே. வீராசாமி
44.	பாரதி உலக கவி	எம். அப்துல் கரீம்
45.	பாரதி என் தந்தை *	சகுந்தலா பாரதி
46.	பாரதி ஒரு சமூகவியல் பார்வை	பி. மணியரசன், மா. வளவன்
47.	பாரதி ஒரு தேசிய சகாப்தம்	ர. சண்முகம்

48.	பாரதி ஒரு நெருப்பு	புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
49.	பாரதி ஒரு பார்வை	வலம்புரி ஜான்
50.	பாரதி கண்ட கல்வியும் பெண்மையும்	மு. கோவிந்தராசன்
51.	பாரதி கண்ட கவிதைத் தலைவி	ஏ. வி. சுப்பிரமணியன்
52.	பாரதி கண்ட சமுதாயம்	ர. சண்முகம்
53.	பாரதி கண்ட தாய்க்குலம் *	பி. இ. பாலகிருஷ்ணன்
54.	பாரதி கண்ட தெய்வ தரிசனம்	நஜன்
55.	பாரதி கண்ட விடுதலைக் காதல்	எம். நெல்லையப்பன்
56.	பாரதி கண்ணீர்	மதுரை கி. இராசா
57.	பாரதி கவிதாஞ்சலி	மா. வரதராஜன்
58.	பாரதி காட்டிய பாப்பாவின் தோழர்கள்	எஸ். கமலா
59.	பாரதி காணிக்கை	கவிஞர் தமிழ்முடி
60.	பாரதி காலமும் கருத்தும்	ரகுநாதன்
61.	பாரதி குழந்தை	பால நடராஜன்
62.	பாரதி சிந்தனைகள்	செந்துறை முத்து
63.	பாரதி சில பார்வைகள்	ரகுநாதன்
64.	பாரதி சில யதார்த்தப் பார்வைகள்	சென். பெருமாள், மங்களா, டாக்டர் என். ஸ்ரீதரன், சாந்தகுமாரன்
65.	பாரதி சிறுகதைகள்	7 பிரபல எழுத்தாளர்கள்
66.	பாரதி நடையியல்	டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
67.	பாரதி நவகதைகள்	ஆர். சீதா
68.	பாரதி நான் கண்டதும் கேட்டதும் *	பி. ஸ்ரீ.
69.	பாரதி நினைவுகள்	பெ. நா. அப்புசாமி
70.	பாரதி நோக்கில் பெண்மை	இராதா ரமணன்
71.	பாரதி படைத்த புதுமை	கே. இராமநாதன்
72.	பாரதி பதியம்	கவிஞர் தமிழ்முடி
73.	பாரதி பாடம் *	ஜெயகாந்தன்
74.	பாரதி பார்வையில்	மா. வரதராஜன் (தொ)
75.	பாரதி பார்வையில் அறிவியல்	டாக்டர் வா. செ. குழந்தைசாமி
76.	பாரதி புகழ்பரப்பியது கம்யூனிஸ்டுகளே	ஜீவா
77.	பாரதி புகழ்பரப்பிய முன்னோடிகள்	பெ. சு. மணி

78.	பாரதி புகழ்பரப்பும் ம. பொ. சி.	பெ. சு. மணி
79.	பாரதி புதிர்	கருவை பழனிசாமி
80.	பாரதி புதையல் பெருந்திரட்டு	ரா. அ. பத்மநாபன்
81.	பாரதி போற்றிய பன்னரும் உபநிடத நூல்	தி. சா. ராஜு
82.	பாரதி போற்றுவோம்	பண்ணன்
83.	பாரதி மாண்பு	தண். கி. வேங்கடாசலம் (தொ)
84.	பாரதியார்	பிரேமா நந்தகுமார்
85.	பாரதியார் இதயம்	டி. வி. எஸ். மணி
86.	பாரதியார் இல்லற நாடகம்	ஆ. ஜி. ரங்கநாயகி
87.	பாரதியார் இலக்கியச் சோலை	சீனி. விசுவநாதன்
88.	பாரதியார் கட்டுரைகள்	வானதி பதிப்பகம் (ப)
89.	பாரதியார் கதை	ரமணீயன்
90.	பாரதியார் கருத்துரைகள்	பாரதி பதிப்பகம் (ப)
91.	பாரதியார் கவிநயம்	ரா. அ. பத்மநாபன்
92.	பாரதியார் கனவுகள்-கற்பனைகள்	வசந்தா இராமநாதன்
93.	பாரதியார் தேடியதும் கண்டதும்	கரிச்சான் குஞ்சு
94.	பாரதியார் நவதந்திரக் கதைகள்	அருணோதயம் (ப)
95.	பாரதியார் நூல்கள்—ஒரு திறனாய்வு	பெ. தூரன்
96.	பாரதியார் பார்வை	வே. கபிலன்
97.	பாரதியார் பெருமை	முல்லை முத்தையா (தொ)
98.	பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்	ச. வே. சுப்பிரமணியன்
99.	பாரதியாரில் மூன்று நாடகங்கள்	சென். பெருமாள்
100.	பாரதியாரின் சிந்தனை வளம்	மதுரை கி. இராசா
101.	பாரதியாரின் சுவையான அனுபவங்கள்	தேவகோட்டை பி. நாராயணன்
102.	பாரதியாரின் நகைச்சுவைக் கதைகள்	அறிவு நிலையம் (ப)
103.	பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும் *	பெ. தூரன்
104.	பாரதியாரின் பயணக் கட்டுரைகள்	கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் (ப)
105.	பாரதியாரின் பாதையிலே *	ம. பொ. சிவஞானம்
106.	பாரதியாரின் புதிய ஆத்திசூடி	லலிதா பரமேஸ்வரன்

107.	பாரதியாரின் மணிமொழிகள்	டாக்டர் என். ஸ்ரீதரன்
108.	பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்	பெ. சு. மணி
109.	பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்	பெ. சு. மணி
110.	பாரதியின் இலக்கியப் பார்வை *	கோவை. இளஞ்சேரன்
111.	பாரதியின் கடிதங்கள்	ரா. அ. பத்மநாபன்
112.	பாரதியின் சிறுவர் பாடல்கள்	எச். வைத்தியநாதன்
113.	பாரதியின் நீதிகள் *	என். குலசேகரன்
114.	பாரதியின் பண்பாடு	ம. வி. சுதாகர்
115.	பாரதியின் பராசக்தி	டாக்டர் என். ஸ்ரீதரன்
116.	பாரதியின் பாதை பலருக்குக் கீதை	அம்மன் சத்தியநாதன்
117.	பாரதியின் புதுக்கவிதைகள்	
118.	பாரதியின் புலமை ஒளி	பாரதியார் பல்கலைக்கழகம் (தொ)
119.	பாரதியின் புலமை நலம்	பா. வளன் அரசு (தொ)
120.	பாரதியின் போர்க்குரல் *	ம. பொ. சிவஞானம்
121.	பாரதியும் உலகமும் *	பெ. தூரன்
122.	பாரதியும் கடவுளும்	பெ. தூரன்
123.	பாரதியும் கீட்சும்	பாலா
124.	பாரதியும் சக்தி வழிபாடும்	புலியூர்க்கேசிகன்
125.	பாரதியும் சாதிகளும்	தா. பாண்டியன்
126.	பாரதியும் பார்ப்பனீயமும்	அக்கினிபுத்திரன்
127.	பாரதியும் பாரத தேசமும் *	பெ. தூரன்
128.	பாரதியும் பாரதிதாசனும் *	பெ. தூரன்
129.	பாரதியும் பெண்மையும் *	பெ. தூரன்
130.	பாரதியும் பெண்மையும்	மணிமேகலைப் பிரசுரம்
131.	பாரதியும் பெண் விடுதலையும்	ச. மெய்யப்பன்
132.	பாரதியும் பொதுவுடைமையும்	நா. முகம்மது செரீபு
133.	பாரதியும் யுகப் புரட்சியும்	தா. பாண்டியன்
134.	பாரதியும் ஷெல்லியும்	ரகுநாதன்
135.	பாரதியைப் பற்றி நண்பர்கள்	ரா. அ. பத்மநாபன்
136.	பாரதியைப் பற்றி ஜீவா *	ப. ஜீவானந்தம்
137.	பாரதியைப் பாடுவோம்	ஜோதிதாசன்

138.	பாரதி வரலாற்று நாடகம்	சிலோன் விஜயேந்திரன்
139.	பாரதி வழி	ப. ஜீவானந்தம்
140.	பாரதி வளர்த்தது பார்ப்பனீயமே	
141.	பாரதி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்	கங்கா ராமமூர்த்தி
142.	பாரதி வாழ்வும் வாக்கும்	இலந்தை சு. இராமசாமி
143.	பால பாரதி	சக்தி சீனிவாசன்
144.	பாவலர் நெஞ்சில் பாரதி	அரு. அருமைநாதன்
145.	பாவலர் பார்வையில் பாரதி	நெ. பூபதி
146.	புதுநெறி காட்டிய பாரதி *	ஆர். கே. கண்ணன்
147.	புதுயுகக் கவிஞர்	திரு லோக சீதாராம்
148.	புதுயுகச் சிற்பி பாரதி	த. தியாகராசன்
149.	புதுவையில் பாரதி	சம்பந்தம்
150.	புதுவையில் பாரதியார்	மு. த. வேலாயுதம்
151.	புதுவையில் பாரதியார்	வி. எஸ். குஞ்சிதபாதம்
152.	பெரும்பாவலர் பாரதி பிள்ளைத்தமிழ்	பி. வேதராஜன்
153.	மக்கள் கவிஞர் பாரதி	டாக்டர் கோ. செல்வம்
154.	மக்கள் போற்றும் மகாகவி	எதிரொலி விசுவநாதன்
155.	மகாகவி பாரதி கட்டுரை மணிமாலை	சீனி. விசுவநாதன் (ப) வி. எஸ். மணி பி. கிருஷ்ணமூர்த்தி
156.	மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை	சீனி. விசுவநாதன் டி. வி. எஸ். மணி (தொ)
157.	மகாகவி பாரதி பற்றி சோவியத் அறிஞர்கள்	சோவியத் அறிஞர்கள்
158.	மகாகவி பாரதி பிள்ளைத்தமிழ்	பாவலர் சுமாசு
159.	மகாகவி பாரதி மதிப்பீடுகள்	சிற்பி (தொ)
160.	மகாகவி பாரதியார் கவிதையும் வாழ்க்கையும்	தி. சா. ராஜு
161.	மகாகவி பாரதியார் தமிழில் தரும் பகவத்கீதை	சமுதாயம் பிரசுராலயம் (ப)
162.	மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா	அருட்கவி ஆனந்தன்
163.	மகாகவி பாரதியார் பதஞ்சலி யோக ஸூத்ரம்	அபிராமி பப்ளிகேஷன்ஸ் (ப)

164.	மகாகவி பாரதியாரின் கதைக் கொத்து	சீனி. விசுவநாதன் (ப) டி. வி. எஸ். மணி
165.	மகாகவி பாரதியாரின் சந்திரிகையின் கதை	சீனி. விசுவநாதன் (ப) டி. வி. எஸ். மணி
166.	மகாகவி பாரதியாரின் சின்னசங்கரன் கதை	டி. வி. எஸ். மணி (ப)
167.	மகாகவி பாரதியார் தராசு	சீனி. விசுவநாதன் (ப) டி. வி. எஸ். மணி
168.	மகாகவி பாரதியாரின் பாஞ்சாலி சபதம் (நாடகமாக்கம்)	பி. எஸ். இராமையா
169.	மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திசூடி	சி. ஞானமணி
170.	மகாகவி பாரதியின் சக்கரவர்த்தினி கட்டுரைகள் *	சீனி. விசுவநாதன் (ப) டி. வி. எஸ் மணி
171.	மகாகவி பாரதியின் பகவத்கீதை	நர்மதா பதிப்பகம் (ப)
172.	மங்கையர்க்கு பாரதியார்	ம. செல்வராசன்
173.	மறுமலர்ச்சிக் கவிஞர்	சீனி. விசுவநாதன்
174.	மாணவச் செல்வங்களுக்குப் பாரதியார்	கவியுலகம்
175.	மாணவர்களுக்கு மகாகவி பாரதியார்	ஆர். சண்முகம்
176.	மும்மணிகள்	
177.	வாழ்விக்க வந்த பாரதி *	நெ. து. சுந்தரவடிவேலு
178.	A Study of the Achievements of Bharati as a Poet	Dr. K. Meenakshi-sundaram
179.	Bharathi As a Translator	C. Viswanathan (Comp.)
180.	Bharathi's Longer Poems	Dr. J. Parthasarathi
181.	Poems of Subramania Bharati	P. S Sundaram
182.	The Maha Kavi and the Maha Yogi	R Gopalan Shastri
183.	The Sun and the Stars (Prose Poems by Bharati)	P. Raja
184.	The Voice of Bharathi *	Bharati Tamil Sangham Calcutta.

பிற்சேர்க்கை :

185. ஞானரதம்—ஒரு கண்ணோட்டம் புலவர் தேவிதாசன்
186. பாரதியின் சொல்லாட்சி பாரதிப்பித்தன்
187. பாரதியும் பாரதிதாசனும் ஜெகத்ரட்சகன்

குறிப்பு :—

பாரதிநூற்றாண்டில் (1981-82) வெளியான நூல்களின் பட்டியல் இங்குத்தரப்பெற்றுள்ளது. 2, 30, 66, 126 முதலாய எண்கள் குறிக்கப் பெற்ற நூல்கள் அச்சில் உள்ளன. நூற்றாண்டின்போது வெளியிடப் பட்டுள்ள பிறநூல்களைப் பற்றியும் அன்பர்கள் தொகுப்பாளருக்குத் தெரிவித்துதவ வேண்டுகின்றோம்.

மதிப்புரை மாலை

நூல்	மதிப்புரையாளர்
1. பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	கு. மங்கையர்க்கரசி
2. பணவிடு தூது	உ. வ. ஜெயதேவன்
3. சான்றோர் கண்ட திருவள்ளுவர்	இ. சுந்தரமூர்த்தி
4. தமிழர் கண்ட மனம்	மு. ஜான்சிராணி
5. திரு.வி.க. வாழ்க்கையும் தொண்டும்-ஒரு கைவிளக்கு	அரங்க. இராமலிங்கன்
6. தமிழர் உணவு	,,
7. சைவசித்தாந்த மகா சமாஜம் : பவழவிழா மலர்	உ. வ. ஜெயதேவன்
8. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம் நூன்மரபு	கோ. கிருட்டிணமூர்த்தி
9. பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்	இ. சுந்தரமூர்த்தி
10. கந்தர் அலங்காரம்	இ. சுந்தரமூர்த்தி
11. பேரும் பெருமையும் : பெயராய்வுக் கட்டுரைகள்	உ. வ. ஜெயதேவன்

1. பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

டாக்டர் க. காந்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600020, பக்கம் xvi + 402, ரூ. 16.

பழந்தமிழரின் பண்பாட்டுச் செய்திகளின் கருவூலங்களாகப் பழந்தமிழர் இலக்கியங்கள் இலங்குகின்றன. இப்பழந்தமிழ் இலக்கியங்களின் துணைக் கொண்டு பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளான பழக்க வழக்கங் களையும், நம்பிக்கைகளையும் நுணுகி ஆய்ந்து வரைந்துள்ளார் டாக்டர் க. காந்தி. இது இவர்தம் டாக்டர் பட்ட ஆய்வேட்டின் நூல்வடிவம் ஆகும்.

பண்டைத் தமிழரின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் 1. தமிழரின் பழக்கவழக்கங்கள், 2. தமிழரின் நம்பிக்கைகள், 3. தமிழரின் நம்பிக்கை வயப்பட்ட பழக்க வழக்கங்கள், 4. தமிழரின் மீவியல்பாற்றல்கள் பற்றிய நம்பிக்கைகள், 5. தமிழரின் வாழ்வியல் மரபுகள் என்னும் ஐந்து பகுதிகளில் பகுத்தாய்கின்றார் ஆசிரியர். முதல் பகுதியில் தமிழரின் பழக்கவழக்கங்களைத் தோற்றம், வளர்ச்சி, நிலைப்பாடு என்ற மூன்று நிலைகளில் ஆராய்கிறார் ஆசிரியர். முதலில் பழக்கம், வழக்கம், பழக்கவழக்கம் என்னும் சொல்லாட்சிகள் இலக்கியங்களில் பயின்றுவரும் நிலை, அவற்றிற்கு உரிய விளக்கங்கள் ஆகியவற்றைக் காட்டுகின்றார். பின் தமிழரின் பழக்க வழக்கங்களைப் பற்றிப்பேசுகின்றார். தமிழரின் மடலேறும் பழக்கத்தைச் சுட்டவரும் ஆசிரியர் அதனைப் பர்மியரின் வாழ்க்கை முறையோடும், அதர் வண வேதத்தில் கூறப்படும் மடலேறும் நிலையினோடு ஒப்பிட்டும் உரைக் கின்றார். தமிழரின் மடல் பற்றிப் பேசும்போது பெரியவாச்சான் பிள்ளை, உ. வே. சா. ஆகிய தமிழறிஞர்களின் விளக்கங்களை எடுத்துக்காட்டி, தமிழரின் மடல் இலக்கிய வழக்காக மட்டுமன்றி உலகியல் வழக்காகவும் துலங்கிய திறனைக் கலித்தொகைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு காட்டுகின்றார். அடுத்து மடல் அமைக்கப்படும் நிலை, மடலேறும் தலைமகன் சூடும் பூக்கள், அவற்றின் குறியீடுகள் இவற்றினை எடுத்துக் காட்டி இறுதியில் மடலேறலின் இழிதகைமையைச் சுட்டிக்காட்டுகின்றார். மடலேறுதல் என்ற தலைப்பின் கீழ் இது பெருந்திணைக்குரிய ஒன்றாகத் தொல்காப்பியரால் பாடப்பட்டிருப்பினும் இலக்கியச் சான்றுகளின் அடிப் படையில் நோக்கும்போது கைக்கிளை, பெருந்திணை ஆகியன பொருந்தாக் காமத்திற்குரியதாகவே பாடப்பட்டுள்ளது (பக்கம் 16) என்று குறிப் பிட்டுள்ளார். கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம் என்றே அன்று முதல் இன்றுவரை விளக்கம் பெற்று வருகின்றது. ஆசிரியர் கைக்கிளையைப் பொருந்தாக் காமம் என்று குறிப்பிட்டிருப்பது மரபுக்கு மாறுபட்ட ஒரு விளக்கமாகத் தோன்றுகின்றது. தமிழரின் மடலேறும் பழக்கத்தை எடுத்துக்காட்டிய ஆசிரியர், பின் திருமணக் காலங்களில் அவர்கள் பின்

பற்றும் பழக்கவழக்கங்களை மிகத்தெளிவாக விளக்கிச் செல்கின்றார். அக்காலத்தில் பின்பற்றப்பட்ட சிலம்புகழி நோன்பை இப்பகுதியில் விரிவாக எடுத்து மொழிகின்றார். தொடர்ந்து விழாக்காலங்களில் தமிழர் கடைப் பிடிக்கும் பழக்க வழக்கங்களைப் பொதுநிலையில் குறித்துச் செல்லும் ஆசிரியர் சிறப்பு நிலையில் பிறந்த நாள் விழா, புனலாட்டு விழா, பூந் தொடை விழா, உள்ளி விழா, ஓண விழா, கார்த்திகை விழா, முருகன் விழா, இந்திர விழா, காமன் விழா, பெருஞ்சோறளிக்கும் விழா முதலிய விழாக்களில் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்களை எடுத்து உரைக்கின்றார். இறுதியில் மகளிர்க்குரிய பழக்கவழக்கங்களைப் பற்றிப் புகல்கின்றார். இதில் பருவமுற்ற மகளிர், மகப்பேறு வாய்க்கப்பெற்ற மகளிர், கணவனை இழந்த காரிகையர் ஆகிய மூவகை நிலையினரின் பழக்க வழக்கங்களும் உடன் பாய்தல், தீப்புகுதல், நோன்பு நோற்றல், வரைபாய்தல் முதலியவற்றைக் குறித்துச் செல்லும் ஆசிரியர், வரைபாய்தல் பகுதியின் காமமிக்க கழிபடர் தலைவனுக்கு முதலிடம் கொடுத்துள்ளார். கைம்மை மகளிரைப் பற்றிப் பேசும்போது வரைபாய்தலை காமமிக்க கழிபடர் தலைவனின் செயலாகச் சுட்டிப்பேச முதன்மை இடம் தருவது, அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும் காமமிக்க கழிபடர் தலைவன் வரைபாயும் செயலை மடலேறும் பகுதியிலேயே ஆசிரியர் குறித்துள்ளார். மீண்டும் இப்பகுதியில் அசசெயலைப் பற்றிப்பேசுவது கூறியது கூறலாகும். மேலும் இவர் குறிப்பிடுவது போன்று (பக்கம் 99)

மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே

என்னும் குறுந்தொகைப் பாடல் தலைமகன் வரைபாய்ந்துயிர் செகுத்த செயலைப் புலப்படுத்துவதாகத் தெரியவில்லை; வலிந்து பொருள் கொண்ட தாகவே தோன்றுகின்றது.

இரண்டாவது பகுதியில் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றிப் பேசு கின்றார். முதலில் நம்பிக்கைகளின் தோற்றம், வளர்ச்சி, நிலைப்பாடு ஆகியவற்றிற்குரிய காரணங்களை ஆராய்கின்றார். நம்பிக்கைகளின் தோற்றத்திற்குக் காரணம் மனிதனின் அச்ச உணர்வே என்றும், அவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படை அவன் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே என்றும், அவற்றின் நிலைபேற்றிற்கு அவனின் தற்காப்பு முயற்சியும், விருப்பவாவுமே அடிமனை என்றும் துணிகின்றார். பின் தமிழரின் நம்பிக்கைளை விரித்துரைக்கும் ஆசிரியர் முதலில் நம்பிக்கை வயப்பட்ட நிமித்தங்களை எடுத்துரைக்கின்றார். இந்நிமித்தங்களை, நன்னி மித்தங்கள், தீ நிமித்தங்கள், இரண்டற்கும் பொதுவானவை என்ற நிலைகளில் பகுத்து ஆராய்கின்றார். ஓந்தி, காக்கை, காரிப்புள் இவற்றின் செயற்பாடுகளை நன்னிமித்தங்களாகவும், உன்னமரம், ஆந்தை, கூகை, குடிஞை முதலிய பறவைகள், யானை, குதிரை, எருது, மறி ஆகிய விலங்குகள் இவற்றின் செயற்பாடுகளைத் தீ நிமித்தங்களாகவும் கொண்ட

நிலைமையை எடுத்து மொழிகின்றார். கனவு, வெள்ளி, மைம்மீன், தூமம், அசரீரி முதலியவற்றால் நிகழும் விண்ணிகழ்வுகள் ஆகியவை நன்னிமித்தம், தீ நிமித்தம் இரண்டையும் உணர்த்துமாற்றையும் காட்டுகிறார். விண்ணி கழ்வுகள் பெரும்பாலும் தீ நிமித்தங்களையே உணர்த்துகின்றன என்று துணிகின்றார். இதனை அடுத்து மந்திரம், சாபம், ஊழ்வினை, இம்மை, மறுமை, துறக்கம், நிரையம், நாள்—கோள், எண்கள் இவற்றில் பழந் தமிழர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தமிழ் இலக்கியங்களின் வழி நின்று எடுத்துக்காட்டுவதோடு பிற இனத்தவரின் கொள்கைகளோடும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

மூன்றாவது பகுதியில் தந்தையின் பெயரைத் தன் தனயனுக்கு இட்டு வழங்கும் நிலை, புலிப்பல் தாலியும் ஐம்படைத் தாலியும் காப்புக்கருதி அணிவிக்கப்பட்ட நிலை, சட்டும் சழங்கும் பார்க்கும் நிலை, வெறியாட்டு அயரும் நிலை, நடுகல் அமைக்கும் நிலை போன்றவற்றை எடுத்துக்காட்டி அவற்றைப் பண்டைத்தமிழரின் நம்பிக்கைவயப்பட்ட பழக்கவழக்கங்கள் என ஆசிரியர் நிறுவுகிறார்.

நான்காம் பகுதியில் தமிழரின் மீவியல்பாற்றல்கள் பற்றிய நம்பிக்கை களைப் பற்றிப் பேசுகின்றார். இப்பகுதியில் கடவுள் நெறிக்கு மனிதனை ஆற்றுப்படுத்தியது அச்ச உணர்வே என்றும், இயற்கை வழிபாடே காலப் போக்கில் இறைவழிபாடாக மலர்ச்சியுற்றது என்றும் விளக்கித் தமிழர் பல தெய்வக் கோட்பாட்டினர் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். பின்னர் அணங்கு, சூர், பூதம், கூற்றுவன், பேய் இவற்றைப் பற்றிய செய்திகளை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நோக்குகின்றார் ஆசிரியர். அணங்கு என்பது முழு கற்பனைப்படைப்பே; பூதங்களே காவல் தெய்வங்களாகக் கருதப்பட்டன.

கூற்றுவன் சிவனே; அச்ச உணர்வின் அடிப்படையில் தோன்றிய பேய் பற்றிய நம்பிக்கைகள் கர்ணபரம்பரைச் செய்தியே என்னும் கருத்துக்களை தம் ஆய்வின் முடிபாக்குகின்றார்.

ஐந்தாம் பகுதியில் அரசர், அந்தணர், முனிவர் இவர்தம் வாழ்வியல் மரபுகளைச் சித்திரித்துள்ளார்.

இந்நூல் பண்டைத்தமிழரின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் முறையாகவும், செம்மையாகவும் பகுத்தாய்கின்றது. தமிழரின் பழக்க வழக்கங்களைத் தமிழ் இலக்கியங்களின் துணைக்கொண்டு விளக்கும் இந்நூல் தமிழர் தம் பழக்க வழக்கங்களோடு இயைந்து காணப்படும் பிற இனத் தவரின் பழக்க வழக்கங்களையும் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றது. இது ஆசிரியரின் ஒப்பாய்வுத் திறத்திற்கும், முறையான ஆய்வுப்போக்கிற்கும் சான்றாக அமைகின்றது. டாக்டர் க. காந்தியின் இந்நூல் தமிழ்நூல் உலகிற்குப் பயன்மிகு வரவு எனலாம்.

—கு. மங்கையர்க்கரசி.

2. பணவிடுதூது

இரா. நிர்மலாதேவி (ப. ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 020, 1980, பக். XII+116, ரூ. 6.

முத்து விசய ரகுநாத சேதுபதி மீது சொக்கநாதக் கவிராயர் பாடிய பணவிடுதூது என்னும் நூல் இப்போது முதன்முறையாக அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு நூலின் தொடக்கத்தே ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை அமைந்துள்ளது. இம்முன்னுரை, தூது இலக்கியம் பற்றிய பொதுவான செய்திகளைத் தருவதோடு இப்பணவிடுதூதின் ஆசிரியர், காலம், இவரது படைப்புகள், இத்தூதின் அமைப்பு, சிறப்பு ஆகியவற்றையும் சுருக்கமாகத் தெரிவிக்கிறது. 'பதிப்பாசிரியர் முகவுரை' என்னும் பகுதி, 'பதிப்பியல்' குறித்த நுட்பமான செய்திகள் சிலவற்றை வழங்குவதோடு பதிப்பாசிரியரின் பதிப்புஅனுபவத்தையும் புலப்படுத்துகிறது.

'தூது-ஒரு பார்வை' என்னும் பகுதி பதிப்பாசிரியரின் ஆராய்ச்சிப் பெற்றியையும் புலமையையும் உழைப்பையும் நன்கு வெளிப்படுத்துகிறது. தொல்காப்பியம் தொடங்கித் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'தூது' ஒரு சிறு கருத்தாகத் தோன்றிப் பின் பல்கிப் பெருகிப் பல கோணங்களில் வளர்ந்து, இறுதியில் தனியொரு இலக்கியமாக மலர்ந்த பாங்கைப் பதிப்பாசிரியர் திறம்பட விளக்கி, உமாபதி சிவாசாரியாரின் நெஞ்சுவிடுதூது (கி. பி. 14-ஆம் நூற்றாண்டு) முதல் தூது நூலாகக் கருதப்படுகிறது என்று சுட்டியுள்ளார். மேலும் இவர், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு, இரத்தினச் சுருக்கம் ஆகிய நூல்களின் துணைகொண்டு தூதின் இலக்கணத்தை விளக்கியுள்ளார். 'தூதுப்பொருள் பத்து' என்று பிரபந்தத் திரட்டு, இரத்தினச் சுருக்கம் ஆகியவை வரையறுத்தாலும், இவ்வரையறையைக் கடந்து, பணம், தமிழ், மான், வசனம், சவ்வாது, நெல், புகையிலை, விறலி, துகில், காக்கை, மதங்கி, பொன், கழுதை, பழையது, அன்பு, செருப்பு முதலிய பொருள்களையும், குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி, இருவாட்சி முதலிய மலர்களையும் தூதுப் பொருளாகக் கொண்ட நூல்கள் உள்ளன என்றும், இவற்றுள் ஒரே பொருளைத் தூதுப் பொருளாகக் கொண்ட பல நூல்களும் உள்ளன என்றும் பதிப்பாசிரியர் சுட்டுவதோடு, பத்து என்னும் வரையறைக்குள் கூறப்பட்ட அன்னம், மயில், பாங்கி, குயில், பூவை ஆகிய தூதுப்பொருள் அமைந்த நூல்கள் இல்லாமையையும் எடுத்துக் காட்டியுள்ளார். அன்றியும், பொருளமைப்பு, தூதுப் பொருள், தூது விடுப்பவர் இவற்றின் அடிப்படையில் தூது நூல்களைப் பகுத்து, அகப்பொருள் சார்ந்ததாயும் அஃறிணைப் பொருள்களைத் தூது விடுப்பதாயும், தலைவி தூது விடுப்பதாயும் உள்ள தூது நூல்களே காலத்தால் பழமையுடையனவாகவும் எண்ணிக்கையில் மிக்குடையனவாகவும் உள்ளன என்று நிறுவியுள்ளார். தூது நூல்களின்

தனிப்பட்ட அமைப்பு முறை, பெயரமைதிச் சிறப்பு ஆகியவற்றையும் விளக்கியுள்ளார். வடமொழி, மலையாளம், தெலுங்கு, சிங்களம், வங்காளம், பாலி ஆகிய மொழிகளிலும் தூது நூல்கள் உள்ளன என்று சுட்டியுள்ளார். பிற சிற்றிலக்கியங்களிலும் தூதுக் கூறுகள் உள்ளன. அனைத்துத் தூது நூல்களும் கலிவெண்பாவில் அமைந்துள்ளன.

'நூலாசிரியர் வரலாறு' என்னும் பகுதியில் சொக்கநாதக் கவிராயரின் வேறு பெயர்கள், பிறப்பிடம், குலம், தொழில், காலம், சமயம், இவரால் பாடப்பட்ட மன்னர்கள், வள்ளல்கள், இவருடைய சமகாலப் புலவர்கள் போன்ற செய்திகளைப் பதிப்பாசிரியர் ஆழ்ந்து ஆராய்ந்து வரைந்துள்ளார். சொக்கநாதக் கவிராயர் மொத்தம் 10 நூல்கள் இயற்றியுள்ளார். தூது நூல்கள் 4, கோவை நூல்கள் 3, உலா நூல் 1, மடல் 1, யமக அந்தாதி 1. இவற்றுள் மூன்று கோவை நூல்களும் ஒரு மடலும் இன்னும் அச்சேற வில்லை. இவையன்றியும், 75 தனிப்பாடல்களும், மதுரை மும்மணிக் கோவையில் 'மேகவிடுதூது'ப் பொருளமைந்த 16 அடி அகவல் ஒன்றும், 'பூவை விடு தூது'ப் பொருளமைந்த 20 அடி வெண்பா ஒன்றும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்துக்குச் சிறப்புப் பாயிரம் ஒன்றும் இயற்றியுள்ளார். சுப்பிரதீபக் கவிராயர், படிக்காசுத் தம்பிரான் பரஞ்சோதி முனிவர், தாயுமானவர், திரிகூடராசப்பக் கவிராயர், உமறுப் புலவர், வீரமாமுனிவர், கடிகை முத்துப்புலவர் முதலானோர் சொக்கநாதக் கவிராயரின் சமகாலப் புலவர்கள் ஆவர்.

'பாட்டுடைத் தலைவன் வரலாறு' என்னும் பகுதியில் முத்துவிசய ரகுநாத சேதுபதியின் பெற்றோர், ஆட்சிமுறை, அரசுச் சின்னங்கள்' பணிகள் சமகாலத்தவர்கள், மறைவு, இந்நூல் எழுந்த காலம் போன்றவை குறித்துப் பதிப்பாசிரியர் விரிவாக வரைந்துள்ளார்.

'நூலாராய்ச்சி' என்னும் பகுதி, பதிப்பாசிரியரின் பரந்த இலக்கியப் பயிற்சியையும், ஆராய்ச்சித்திறத்தையும், உழைப்பையும் நன்கு வெளிப் படுத்துகிறது. இப்பகுதியில் நூல், நூலாசிரியர், பாட்டுடைத் தலைவன், நூலின் காலம், தூதிலக்கணமும் பணவிடுதூதும், தூதுப் பொருளின் திணை, தூதுப்பொருள், நூலின் பொருளமைதி, தூது விடுப்பவரில் உள்ள புதுமை, நூலமைப்பு, முறை, நூலாசிரியர் நோக்கம், நூலில் உள்ள செய்திகள், பணத்தைக் குறிக்கும் சொற்கள், நூலில் காணப்பெறும் குறள், திவ்வியப் பிரபந்தங்கள், பெரியபுராணம் முதலியவற்றின் கருத்துகள், நூலில் இடம்பெறும் புராணச் செய்திகள், புராணக் கதைகள், இதிகாசச் செய்திகள், வரலாற்றுச் செய்திகள், பாட்டுடைத்தலைவனின் பெயர், இனம், குலம், சமயம், வீரம், கொடை, ஆட்சி முறை, நாட்டெல்லை, உருவப் பொலிவு, உறவினர்கள் குறித்த செய்திகள், ஊர்ப்பெயர்கள், ஆட்சி யாளர்களின் பெயர்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மேலும் பண விடுதூதில் அமைந்துள்ள நால்வகை வருணனைகள், உவமை உருவகங்கள், பழமொழிகள், மொழிநடை, அரசியல், சமுதாயப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

'நூலாராய்ச்சி' என்னும் பகுதியினையடுத்துப் 'பணவிடுதூது' நூலின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மூலத்தில் குறிக்கப்பெறும் செய்திகளை நோக்கி ஆங்காங்கே உரிய தலைப்பிட்டும், கண்ணி எண்களைக் குறித்தும் மூலத்தில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்கு அவ்வப்பக்கத்தில் விளக்கம் அளித்தும், மூலத்தொடர்களோடும் கருத்தோடும் தொடர்புடையதாயும் ஒப்புநோக்கத் தக்கதாயும் உள்ள பிற இலக்கியத் தொடர்களைத் தக்க இடத்தில் சுட்டியும் பதிப்பாசிரியர் பதிப்பித்துள்ளமை பாராட்டுக்கு உரியது. இன்றைய கல்வி நிலையைக் கருத்திற்கொண்டும் ஓரளவு படிக்கத் தெரிந்தவர்களும் பயன்கொள்ள வேண்டும் என்பதனை நினைந்தும் எளிதாக மூலத்தைப் படித்து மகிழுதற்கு ஏற்றவாறு 'மர்ரே' பதிப்பு முறையைப் பின்பற்றிச் செய்யுள் சொற்களைப் பதிப்பாசிரியர் பிரித்துப் பதிப்பித்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

தூது நூற்பட்டியல் ஒன்று இந்நூலில் இடம்பெற்றுள்ளது. நூலின் பெயர், ஆசிரியரின் பெயர், காலம் முதலிய பகுப்புகளைக் கொண்ட இப்பட்டியலில் 73 தூது நூல்கள் குறிக்கப்பட்டுள்ளன. பயனுள்ள 'சொல்லகராதி' ஒன்று இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. நூலின் ஈற்றில் உள்ள துணைநூற்பட்டியலில் ஆசியர் பெயர், நூலின் பெயர், வெளியீட்டகம், வெளியான காலம் போன்றவை இடம் பெறாமை பெருங்குறை.

முத்துவிசயரகுநாத சேதுபதி மீது சொக்கநாதக் கவிராயர் 369 கண்ணிகளை உடையதாய் 1710 1715க்குள் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் பணவிடுதூது என்னும் நூலை இரா. நிர்மலாதேவி அரிதின் முயன்று பதிப்பித்துள்ளார். மூலநூலின் சிறப்புக் கருதியும், பதிப்பு நெறி கருதியும் இந்நூலைத் தமிழ் உலகம் வரவேற்கும் எனக் கருதலாம்.

—உ. வ. ஜெயதேவன்.

3 சான்றோர் கண்ட திருவள்ளுவர்

டாக்டர் க. த. திருநாவுக்கரசு, மணியகம், கோட்டூர்த் தோட்டம், சென்னை-600 085, பக். 242 + 16, விலை ரூ. 12-00.

திருவள்ளுவரின் கருத்துக்களை வையகம் எங்கும் பரப்பும் தமிழ்த் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர் திருக்குறள் மணி பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள். திருக்குறள் நீதி இலக்கியம், திருக்குறளில் கற்பனைத்திறனும் நாடகநலனும், திருக்குறளும் இந்திய அற நூல்களும், ஒளிவிளக்கு முதலாய பல்வேறு நூல்கள் ஆசிரியரின் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும். திருக்குறள் நீதி இலக்கியம் இந்திய அரசின் சாகித்திய அக்காதெமியின் பரிசையும் பாராட்டையும் பெற்றநூல்.

திருக்குறளைப் புதிய கண்ணோட்டத்தில் அணுகும் ஆசிரியரின் மற்றொரு படைப்பு சான்றோர் கண்ட திருவள்ளுவர் என்னும் இந்நூலாகும். ஒப்பியல் நெறிநின்று வள்ளுவரை, சாக்ரடீஸ், அரிஸ்டாடில், சர்வஞ்ஞர் முதலான அறிஞர் பெருமக்களோடு ஒப்பிட்டு ஆராய்கிறார் ஆசிரியர். 'பலவகையில் சாக்ரடிசின் சிந்தனைப் போக்குடையவராகவும், சில துறைகளில் அவரைவிடச் சிறப்புமிகு சிந்தனையாளராகவும், முற்போக்குக் கொள்கையாளராகவும், புத்துலகச் சிற்பியாகவும் விளங்கும் திருவள்ளுவரை, 'உலகப் பெருஞ்சிந்தனையாளராக'ப் பண்டைக்காலத்திலேயே தமிழ் மக்கள் அறிமுகப்படுத்தாமல் போனது தமிழரின் தவக் குறைவேயாகும்' (பக். 47) என்று ஆசிரியர் சுட்டுவது தமிழ் மக்களின் 'நிலையை'ப் புலப்படுத்துகின்றது. இனியேனும் உரியதைச் செய்ய வேண்டியதை நினைவூட்டுகின்றது. 'திருவள்ளுவரும் அரிஸ்டாட்டிலும்' என்னும் சிறந்த ஒப்பாய்வுக்கட்டுரை (139-224) தனி நூலாகவே கருதத்தக்கது. இருபெரும் அறிஞர்களின் பல்வேறு சிந்தனைகளையும் நடுநிலைநின்று ஆராயும் சிறப்பு போற்றுதற்குரியதாக அமைந்துள்ளது.

யோகநெறியாளரான சர்வஞ்ஞரையும், அறவழிப்பட்ட அன்பு நெறியாளரான திருவள்ளுவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து (49-59), இருவர் காணும் சாதிவேறுபாடற்ற சமுதாயம், அருள்நெறி, உழவு பற்றிய சிந்தனைகள் முதலாயவற்றைப் புலப்படுத்துகின்றார். அண்ணல் காந்தியடிகள் திருக்குறளைப் படித்துப்போற்றுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்த தால்ஸ்தாயின் கடிதத்தையும், அவர் குறளில் காட்டிய பேரார்வத்தையும் ஒரு கட்டுரையின் மூலம் விளக்குகிறார். தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியாக விளங்கிய மறைமலையடிகளார், தமிழகத்தில் புதியதொரு விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்த தந்தை பெரியார்

ஆகியோர் திருக்குறளில் கொண்ட ஈடுபாட்டையும், அவர்கள் வள்ளுவரைக் காணும் போக்கினையும் இந்நூல் ஆராய்கின்றது. குறிப்பாக மறைமலை யடிகளாரை 'வள்ளுவரின் காலத்தைக்கண்ட பேரறிஞர்' (பக். 74) எனக்குறிப்பிடுவது மறைமலையடிகளாரின் திருக்குறள் ஆய்வுக் கொடையினைப் புலப்படுத்தும்.

மனாலம், மயக்கும்மோகினி, மழையே நீ வாழ்க, தலைவரும் தொண்டரும், பொய்தீர் ஒழுக்கநெறி, ஒப்புரவு முதலாய கட்டுரைகள் வள்ளுவம் வாழ்விற்கு வழிகாட்டியாகத் துலங்கும் பெற்றியைச் சிறப்பித் துரைக்கின்றன. திருக்குறளின் மொழி இயல்பை ஆசிரியர் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, மொழி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகத் திருக்குறள் விளங்கும் பான்மையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

'சான்றோர் கண்ட திருவள்ளுவர்' என்னும் இறுதிக்கட்டுரை உலகப் பேரறிஞர்கள் பலரும் திருக்குறளை எவ்வாறெல்லாம் போற்றிப் பாராட்டியுள்ளார்கள் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. வீரமாமுனிவர் தொடங்கி அண்மைக்காலம்வரை பிறநாட்டறிஞர்கள் திருக்குறளில் காட்டும் தனிஈடுபாட்டைப் பல நூல்களினின்றும் அரிதின்முயன்று தொகுத்துத் தந்துள்ளார். நூலினை முழுமையாகப் படித்து முடிக்கும்போது ஆசிரியரின் உழைப்பையும் ஆய்வுப் பொருள்களை அணுகும் முறையையும் எவரும் பாராட்டுவர். குறள் பற்றிய அருமையான ஆய்வு நூலைத்தந்த ஆசிரியர் தமிழுலகத்தின் பாராட்டுக்கு உரியவர்.

—இ. சுந்தரமூர்த்தி.

4. தமிழர் கண்ட மனம்

கரு. நாகராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 020. பக். 202. ரூ. 9/- 1980.

தமிழர் கண்ட மனம் என்னும் இவ்வாராய்ச்சி நூல் 'மனம்' பற்றிய பல்வேறு நிலைகளையும், அவற்றின் தன்மைகள், மாறுதல்கள், தொழில்கள் இவற்றையும் நன்கு விளக்குகிறது. ஆசிரியர் தம் ஆய்வுக்கு அடிப்படையாகப் பின்வரும் பத்து நூல்களைக் கொண்டுள்ளார்; நற்றிணை, புறநானூறு, திருநாவுக்கரசர் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம், திருவருட்பா, பாரதியார் கவிதைகள். மனத்தின் பல்வேறு நிலைகளான நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம் முதலியவை மேற்கண்ட ஒவ்வொரு நூலிலும் பயன்படுத்தப்பட்டுள்ள முறை, சூழ்நிலை முதலியவற்றைத் தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர்.

ஆசிரியர் தம் கருத்துக்களுக்குத் தெளிவான வடிவம் கொடுக்கும் பொருட்டு இந்நூலினை ஒன்பது பகுதிகளாகப் பிரித்துள்ளார். ஒவ்வொரு பகுதியிலும் சொல்லமைப்பு, இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள இடங்கள், அவற்றின் தன்மைகள், அடைமொழிகளால் அச்சொற்கள் வழங்கும் முறை, உவமை, உருவகம் விளியில் அவை வெளிப்படும், முறை அவற்றால் உணரப் படுபவை ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளார்.

முதல் பகுதியில் தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழினத்தின் சிறப்பையும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். மேலும் இப்பகுதியில், இவர், 'மனம்' என்ற சொல் 'மன்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது; மனத்தை உடையவன் 'மனத்தன்'; 'மனத்தன்' என்பது 'மனிதன்' ஆகியிருக்கலாம் என்று விளக்கம் தருகிறார்.

இரண்டாம் பகுதியில் 'நெஞ்சம்' என்ற சொல் ஆராயப்படுகின்றது. 'நைந்து' என்ற சொல்லே 'நைஞ்சு' என்றாகிப் பின் முதற் போலியாக 'நெஞ்சு' என்று ஆகியிருத்தல் வேண்டும் என ஆசிரியர் விளக்குகிறார். நெஞ்சம் நைந்துபாடும் திருவருட்பாவில்தான் இச்சொல் மிகுதியாக ஆளப்பட்டுள்ளது. 'நெஞ்சிற்கு' வரும் அடைமொழிகளைக் கொண்டு நெஞ்சத்தின் தன்மையைப் பொதுத்தன்மைகள், நல்ல தன்மைகள், தீய தன்மைகள் என்று மூன்றாகப் பிரித்துள்ளார் ஆசிரியர். பக்தி இலக்கியங்களில் சமயக் குரவர்கள் 'பாவிநெஞ்சம்' 'பிணநெஞ்சம்' எனச் சாடியுள்ளனர். ஆனால் ஆழ்வார் பாசுரங்களிலும், வள்ளலார் பாடல்களிலும் இந்நிலை காணப்படாததற்குக் காரணம் காலப்போக்கில் ஏற்பட்ட மன வளர்ச்சியே என்று ஆசிரியர் விளக்கியுள்ளார். நெஞ்சத்தின் தீய தன்மைகளை விளக்குகையில் புலவர்கள் உவமைகளைக் கையாண்டுள்ளனர் என்பதைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

மூன்ரும் பகுதியில் ஆசிரியர் 'உள்ளம்' குறித்து ஆராய்கிருர். உள்ளத்தை முன்னிலைப்படுத்திப் பேசும் பாங்கு குறைவாகவும் நெஞ்சத்தை முன்னிலைப்படுத்திப் பேசும் பாடல்கள் மிகுதியாகவும் உள்ளதை எடுத்துக் காட்டி, நெஞ்சம் உணர்ச்சிமயமானது; விரைந்து செல்லக்கூடியது; ஆனல் உள்ளம் பெரும்பாலும் கோயிலாகவே கருதப்பட்டது என்று விளக்கி நெஞ்சத்திற்கும் உள்ளத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

நான்காம் பகுதியில் 'சிந்தை'யின் சொல்லமைப்பு, இலக்கியங்களில் கையாளப்பட்ட இடங்களின் எண்ணிக்கை இவற்றை முதலில் ஆசிரியர் தெளிவுபடுத்துகிருர். சங்க இலக்கியமான நற்றிணையில் சிந்தை என்ற சொல்லே காணப்படவில்லை; புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இதிலிருந்து சங்க காலத்தில் இச்சொல் பெரும்பாலும் வழக்கில் இல்லை என்பதும் பிற்காலத்தில் சமயத் தொடர்பான சிந்தனைகள் காணப்படுதலைப் போலச் சங்க காலத்தில் காணப் பெறவில்லை என்பதும் தெளிவாகின்றன.

ஐந்தாம் பகுதியில் 'சித்தம்' குறித்து ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். மனிதரது மனத்தைக் குறிக்கவும், இறைவனே உணர்த்தவும், மனிதரது எண்ணம், விருப்பம் முதலியவற்றை உணர்த்தவுமே 'சித்தம்' பயன் படுத்தப்பட்டுள்ளது. 'சித்தம்' என்ருல் 'மனம்' என்ற நிலையிலேயே புலவர்கள் பாடியுள்ளனர் என்பதனை ஆசிரியர் விளக்குகிருர்.

'அகம்' ஆருவது பகுதியில் ஆராயப்படுகின்றது. உள்ளம், நெஞ்சம் என்னும் இரண்டின் தன்மையையும் உடையது 'அகம்'. பக்தி இலக்கியங்களில் இச்சொல் பெரும்பாலும் இல்வாழ்வுத் தொடர்புடனேயே பயன்படுத்துதற்குரியது என்றும், 'அகம்' என்ற சொல்லால் உணர்த்த விரும்பியதை உள்ளம், நெஞ்சம் போன்ற சொற்களால் பக்திப் பனுவலாசிரியர்கள் உணர்த்திபிருக்கின்றனர் என்றும் ஆசிரியர் எடுத்துரைக்கிருர். பாரதியார் 'அகக்கண்' என்று குறிப்பதை ஆசிரியர் அகத்தைக் கண்ணுகப் பாரதி உருவகம் செய்தார் என்று விளக்குகிருர். இதன் தன்மை, செயற்பாடுகள் நுண்ணறிவுடையோரால் உணரப்படுமே தவிர அதற்கு வடிவம் கொடுத்து விளக்க இயலாது என்று மேலும் அதனைத் தெளிவு படுத்தியுள்ளார் ஆசிரியர்.

ஏழாவது பகுதியில் மனத்தின் தன்மையை உணர்த்தும் மற்ருெரு சொல்லான 'இதயம்' பற்றி ஆசிரியர் பேசுகின்ருர். மனத்தின் மென்மையான, இதமான தன்மையை இச்சொல் உணர்த்துகின்றது. 'இதயம்' என்ற சொல் காலத்தால் பிந்திய நிலையில்தான் இலக்கிய வழக்கைப் பெற்றது என்பதைச் சான்றுகளுடன் நிறுவுகிருர்.

'மனம்' என்ற சொல் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள முறையினை எட்டாவது பகுதியில் ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். சங்க இலக்கியங்களில் இச்சொல் சிறு வழக்காகவே காணப்படுகிறது. மனத்தைப்

பற்றிய தெளிவை அவர்கள் பெற்றிருந்தாலும் வளத்தோடும் சிறப் போடும் வாழ்ந்த அக்கால மக்களின் வாழ்வு உணர்ச்சிமயமானதாகவே பெரும்பாலும் அமைந்திருப்பதால் 'நெஞ்சம்', 'உள்ளம்' போன்ற சொற்களே அவர்கள் நிலைகளை விளக்க வல்லனவாகக் காணப்படுகின்றன என்று ஆசிரியர் விளக்குகிறார். மனத்தைக் குறிக்கையில் இலக்கியங்களில் ஆளப்பெறும் அடைமொழிகள், உருவகம், உவமை ஆகியன 'மன'த்தின் தீயதன்மையைக் காட்டவே உதவுகின்றன என ஆசிரியர் நிறுவுகிறார். மேலும் இப்பகுதியில் வினை, மாயை ஆகியவற்றுடன் மனத்திற்குள்ள தொடர்பு பற்றியும் ஆராய்ந்துள்ளார். வாய், கண் போன்ற பொறி களுக்கும் மனத்திற்கும் உள்ள உறவு நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன.

இறுதிப் பிரிவில் மனத்திற்கும் வாழ்விற்கும் இடையே உள்ள தொடர்பு விளக்கப்பட்டுள்ளது. மனப்போராட்டம், மனச்சான்று, மன முடைதல், மனக்கோட்டை, மனக்கோட்டம், மனக்கவலையும் மகிழ்ச்சியும், மனக்குறையும் நிறையும், மனம்போல வாழ்வு போன்ற உள்தலைப்புகளில் அத்தொடர்பினை ஆராய்ந்துள்ளார் ஆசிரியர்.

ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் நூலின் இறுதியில் 'நெஞ்சம்' குறித்த சொற்பட்டியலும், இந்நூலுக்குரிய 'சொல்லகராதி'யும் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழர் கண்ட மனம் என்னும் இந்நூல், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம், மனம் போன்றவை குறித்துத் தெளிந்து கொள்ளவும், மனத்தின் தன்மைகள், தொழில்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், மனமும் வாழ்வும் குறித்த தமிழர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளவும் பெரிதும் பயன்படும்.

—மு. ஜான்சிராணி

5. திரு. வி. க. வாழ்க்கையும் தொண்டும்—ஒரு கைவிளக்கு

டாக்டர் அ. நாகலிங்கம், பர்வதவர்த்தனி பதிப்பகம், 51, வ. உ. சி. தெரு, சென்னை-600063, முதல் பதிப்பு 1981, பக்கம் 36 + 80. விலை 7-00.

பாமரர்களுக்குப் புரியாத தமிழில் எழுவதுதான் புலமை எனப் புலவர்கள எண்ணியிருந்த காலம் ஒன்று உண்டு. அந்நிலையை மாற்றி ஆழமான கருத்துக்களை மிக எளிமையாக, இனிமையாகச் சொல்லமுடியும் எனச்சொல்லி, எழுதிக்காட்டிய பெருமக்களில் இருவர் குறிப்பிடத் தக்கவர்கள். ஒருவர் தமிழ்த்தென்றல் திருவாரூர் கலியாணசுந்தரனார். மற்றொருவர் முன்னவரைத் தனது குருவாகக் கொண்டு ஒழுகிய பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வ. இவ்விருவருடைய வரவால் தமிழ் உரைநடை ஏற்றம் பெற்றது. தமிழர்களிடம் உள்ள மிகப்பெரிய குறை தமிழ்ப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை முறையாக எழுதி வெளியிடாதது தான். தற்காலத்தில் வாழ்ந்த பகுத்தறிவுத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள், எழுதிய எழுத்துக்கள் இன்னும் முறையாக முழுமையாக வெளியிடப்படவில்லை. இந்நிலையில், இக்கால கட்டத்தில் வாழ்ந்த திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், பணிகள், தொண்டுகள் அனைத்தையும் முறையாகத் தொகுத்துத் தந்திருக்கும் டாக்டர் அ. நாகலிங்கம் பாராட்டுக்குரியவர்.

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தரக்கூடிய ஒரு கையேடாக இந்நூல் விளங்குகிறது. “இந்நூல் பொதுவாக வாசகருக்கும், சிறப்பாக ஆராய்ச்சியாளர்களுக்கும் திரு. வி. கவை அறிய விழைவோருக்கும் ஆற்றுப்படை நூலாக அமைந்துள்ளது” என நூலாசிரியர் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொருந்தும்.

டாக்டர் அ. நாகலிங்கம் திரு. வி. க. வின் நூல்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் உழைப்பின் பயனை நூல் முழுமையும் காணமுடிகிறது. திரு. வி. க. வின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர்படித்த பள்ளிகள், எழுதிய கட்டுரைகள், நூல்கள், பிறர் அவரைப் பற்றிய எழுதிய கட்டுரைகள், நூல்கள் எனப் பல்வேறுசெய்திகளையும் முப்பத்தியேழு உள்தலைப்புகளில் தொகுத்து வகைப்படுத்தித் தந்திருப்பது அருமை.

ஆசிரியரின் முதல்நூலாகிய இந்நூல் ஆய்வாளர்களுக்குப் பயன் நல்கும் வகையில் வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது. திரு. வி. க. வைப்பற்றி அறிய விரும்பும் தமிழர்கள், குறிப்பாகத் தமிழ் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் வாங்கி வைத்திருக்க வேண்டிய நூல்.

—அரங்க. இராமலிங்கன்

6. தமிழர் உணவு

செ. நமசிவாயம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை-20, முதற்பதிப்பு—1981, விலை ரூ. 12/- பக்கம். 12+304.

உயிரினங்களின் உயிர் உணவில் உள்ளது. மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் இவற்றில் உணவே தலையாயது. அறிவும் நாகரிகமும் வளர, வளர மனித இனம் சுவையுணர்வை அறிந்து பல்வேறு நிலைகளில் உணவைப் பக்குவப்படுத்தி உண்ண ஆரம்பித்தது. "அறுசுவை யுண்டி" (நாலடி) போன்ற தொடர்களைப் பழந்தமிழ் இலக்கியத்தில் காணும்பொழுது, தமிழர்கள் சுவையுணர்வை நன்கு உணர்ந்து அதற்கொப்ப உணவைப் பக்குவப்படுத்தி உண்டார்கள் என அறிகிறோம். தமிழர் உணவு என்னும் இந்நூலில் நூலாசிரியர் பழந்தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கங்களை வகை / தொகை செய்து வளம் கண்டிருக்கிறார்.

அறிமுகம், நில அடிப்படை, கல்வெட்டுச்செய்திகள், நிகண்டுச் செய்திகள், சுவையடிப்படை, திடவுணவு, நீருணவு, உண்ணும் முறை, உணவும் பண்பாடும், உணவும் தமிழ்ச்சமுதாயமும் என்னும் பத்துத் தலைப்புகளில், பழந்தமிழரின் உணவு வகைகளை விளக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

அறிமுகம் எனும் முதல் இயலில் உணவு என்ற சொல்லின் தோற்றத்தையும், உணவின் இன்றியமையாமையையும்,

"உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" (18:19-20)

என்ற புறநானூற்று வரிகளை மேற்கோள்காட்டி விளக்குகிறார். உணவைப் பல்வேறு பெயர்களால் குறிப்பிட்டிருக்கும் பழந்தமிழரின் வழக்காற்றையும் எடுத்துக்காட்டுகிறார்.

"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்" (229)

என்ற குறட்பாவின் கருத்துப்படி, தமக்குக் கிடைத்த உணவைத் தாமே தனித்து உண்ணாமல் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய தமிழரின் உணவுக் கொள்கையையும் சிறக்கக் காட்டுகிறார் ஆசிரியர்.

பழந்தமிழ் நாட்டில் மக்கட்பாகுபாடு இயற்கைச் சூழலையும், அச்சூழலுக்கேற்ப அமைந்த தொழிலையும் அடிப்படையாக வைத்து அமைந்திருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பிரிந்திருந்த நிலத்தில் வாழ்ந்திருந்த மக்கள் உணவைப் பெறும் முறையிலும், அதை உண்ணும் முறையிலும் தம்முள வேறுபட்டிருந்தனர். இவ்வேறுபாடுகளை நில அடிப்படை என்னும் இரண்டாவது இயலில் விளக்குகிறார்.

"களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன
சுவல் விளை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்
வரைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்"
(130-134)

எனவரும் பெரும்பாணாற்றுப்படைப் பாடல் வரிகளை எடுத்துக்காட்டி "பாலை நில மக்களும் மற்ற நிலத்தவரைப் போல உண்டு வாழ்ந்தவர்கள் என்பது புலனாகிறது. இதன் வழி அவர்கள் வழிப்பறியாளர் என்று கருதும் போக்கினையும் இலக்கியங்கள் ஓரளவு நீக்கிவிடுகின்றன. வளமில்லாத காரணத்தாலும், வேறுவழி இல்லாத காரணத்தாலும் அவர்களது உணவுமுறை பெரும்பான்மையாக இறைச்சியே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கள் முதலிய வெறிப்பொருள்களை அருந்தியதனாலும். முரட்டுத்தனமான சில பழக்க வழக்கங்களை கொண்டிருந்ததனாலும் சமூகத்தில் அவர்கள் தாழ்ந்த இடத்தைப் பிற்காலத்தில் பெற்றனர் எனக் கொள்ளலாம்" (பக். 20) என ஆசிரியர் குறிப்பிடுவது ஏற்கத் தக்கது. "பழைய உணவு முறைகள் இன்றும் காணப்படுவது ஐந்நில மக்கள் வலுவான அடிப்படையை நமக்கு அமைத்துக் கொடுத்ததை நினைவுறுத்தும்" (பக். 20) என ஆசிரியர் குறித்திருக்கும் கருத்து குறிக்கத்தக்கது.

கல்வெட்டில் காணப்படும் உணவுபற்றிய செய்திகளையும், நிகண்டுகளில் காணப்படும் உணவு பற்றிய செய்திகளையும் முறையே மூன்று, நான்கு இயல்களில் தொகுத்துத் தருகிறார் ஆசிரியர். திட உணவு எனும் ஆறாவது இயலில் தமிழர்கள் உண்ணுவதற்குப் பயன்படுத்திய அனைத்து உணவு வகைகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

சோறு, பழந்தமிழர் உணவுவகைகளுள் முதலிடம் பெற்றுச் சிறந்திருந்தது என்பதை அடிசில், அயினி, அவிழ், கூழ், கொன்றி, நிமிரல், புழுக்கல், புன்கம், பொம்மல், மிதவை, மூரல், வத்தம் (பக். 55-56) என்பது போன்ற பல சொற்களை இலக்கியச்சான்றுகளுடன் எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பு. பாற்சோறு, பருப்புச்சோறு, தினைச்சோறு போன்ற சோற்று வகைகளையும், காய், கிழங்கு, கனி, இறைச்சி, முதலியவை உணவாகப் பயன்பட்ட நிலையினையும் இவ்வியல் விரிவாகக் காட்டுகிறது. ஆடு, ஆமான், எலி, பசு, பன்றி, மான், முயல், முளவுமா, யானை, பறவைகள் இவற்றின் இறைச்சியைப் பெற்ற முறையையும் பக்குவப்படுத்தி உண்ட முறையையும் விளக்கமாக எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

பால், தேன், நீர், கள், போன்ற பல்வேறுவிதமான நீருணவு பற்றிய செய்திகளை ஏழாவது இயல் விளக்கி நிற்கிறது. பழந்தமிழர் உணவில் 'கள்' பெரும் ஆதிக்கத்தைப் பெற்றிருந்தது என்பதை ஆசிரியர் தரும் விளக்கம் உறுதிப்படுத்துகிறது. "கள் எடுக்கின்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு தனிக்கள், தோப்பி, நெல்லின் அரியல், நுங்கின்கள் எனவும், முதிர்ச்சி நிலையை அடிப்படையாகக் கொண்டு இளங்கள், நாட்கள், முதுகள் எனவும், சுவையின் தரத்தைக் கொண்டு அருங்கள், இன் கடுங்கள், கடுங்கள், வெங்கள் எனவும், நிலையை அடிப்படையாகக் கொண்டு

கலங்கல், தேறல் எனவும் பிரித்து வழங்கப்பட்டன. இவையன்றி அழங் காப்பால் எனப்படும் சாராயம் தேங்கந்தாரம் எனப்படும் வேற்றுப்புலத்து மது என இவையும் கள்ளின் வகையாக விளங்கின" (பக்கம் 145-46).

உண்ணும் முறையையும், உணவின் அடிப்படையில் அமைந்த பண் பாட்டுத் திறத்தையும் எட்டு, ஒன்பதாவது இயல்கள் விளக்குகின்றன.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (82)

என்னும் திருக்குறளின் கருத்தே, தமிழரின் பண்பாடாக அமைந்துள்ளது என்பதையும், அப் பண்பாட்டுக் கொள்கை ஏனைய சங்க இலக்கியங்களிலும் வலியுறுத்தப்பட்டிருப்பதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

உணவும், தமிழ்ச் சமுதாயமும் என்னும் பத்தாவது இயலில் பல்வேறு வகையான மக்கள் உண்ட உணவின் தன்மை, வீரர் பெண்டிர், செல்வர், வறியவர், கைம்பெண் முதலியோர் உண்ட உணவு வகைகள், உணவு அடிப்படையில் குறிக்கப்பெறும் சாதிகள், உணவு உண்ணும் நேரம் விழாக் காலங்களில் உண்ட உணவு எனப் பல்வேறு உணவு பற்றிய செய்திகளை இவ் இயலில் தொகுத்துத் தருகிறார் ஆசிரியர்.

கலைச்சொற்களை நூலின் இறுதியில் தமிழரின் உணவு பற்றிய நூறு பக்கங்களில் 5,000க்கு மேல் தொகுத்துத் தந்துள்ளார். ஆசிரியரின் அரிய இப்பணி ஆய்வாளர்களின் பாராட்டைப் பெறும்.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இயலில் இயம்பிய உணவு வகைகளை வகுத்தும், தொகுத்தும் அட்டவணைப்படுத்தி அறிவித்திருப்பது அருமை:

'தமிழர் உணவு' என்னும் இந்நூலை எழுதிய ஆய்வாளர் / ஆசிரியர் திரு. செ. நமசிவாயம் அவர்கள் தமது ஆய்வின் எல்லையைச் சங்க இலக்கியங்கள் என வரையறுத்துக் கொண்டுள்ளார். எனவே பழந்தமிழரின் (சங்க காலத் தமிழரின்) உணவுப் பழக்க வழக்கங்களை மட்டுமே இந் நூலின்வழி அறிய இயலும். சங்க இலக்கியங்களை மட்டுமே அடிப்படை யாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளதால்" (முன்னுரை) எனக் கூறும் ஆசிரியர் மூன்று, நான்காவது இயல்களில் பிற்காலச்சோழர், பிற்காலப் பாண்டியர், கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் முதலியோர் கல்வெட்டுக்களிலிருந்தும், பிற்காலத்தவனான சேந்தன், பிங்கலந்தை, சூடாமணி, கயாதர நிகண்டுகளிலிருந்தும் உணவு பற்றிய செய்திகளைத் தொகுத்து வகைப்படுத்தித் தந்திருக்கிறார். சங்காலத் தமிழர்களின் உணவு முறையினை நூல் முழுமையும் எடுத்துக்காட்டும் ஆசிரியர் இடையில் இவ் இரு இயல்களை (3, 4வது இயல்கள்–13 பக்கங்கள்) இணைத்திருப்பதன் நோக்கம் தெளிவாக விளங்கவில்லை.

தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று; அவர்தம் உணவும், உணவுப் பழக்க வழக்கங்களும், அவற்றையொட்டிய நம்பிக்கைகளும், பழந்தமிழரின் பண்பட்ட வளமான வாழ்வை அறிந்து கொள்ள இந்நூல் பயன்படும்.

—அரங்க. இராமலிங்கன்,

7. சைவ சித்தாந்த மகா சமாஜம்: பவழ விழா மலர், தி. கி. நாராயணசாமி, (தயாரிப்பாளர்), சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை-600 004, 1981, பக். 64

திருப்பாதிரிப் புலியூரில் 7-7-1905 அன்று ஞானியார் சுவாமிகளின் முன்னிலையில் மறைமலை அடிகளால் நிறுவப்பெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் எழுபத்தைந்தாம் ஆண்டின் நிறைவையொட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் இடம்பெற்றுள்ள செய்திகள் பொதுவாக ஆராய்ச்சியாளர்களுக்கும், சிறப்பாகச் சைவ சமய வாணர்களுக்கும், சைவ இலக்கிய வாணர்களுக்கும் பெரிதும் பயன்படத்தக்கன.

'பவளம்' என்னும் சொல் பயின்று வரும் திருமுறைப்பாட்டுகள் நன்கு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன; ஆடல் வல்லானின் படமும் அழகுற அச்சிடப்பட்டுள்ளது; இவற்றையடுத்து, ஈழநாட்டுத் தேவாரப்பதிகங்கள் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. இலங்கையின் கடற்கரைத் தலங்களாகிய திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் பற்றிய இப்பதிகங்களை அடுத்து, சம்பந்தர் வரலாற்றுமுறைப்படி, தேவாரப்பதிகங்கள் அடைவு செய்யப் பட்டுள்ளன. இவ்வடைவில், திருமுறை எண், பதிக எண், பாட்டின் எண், பாட்டின் முதற்குறிப்பு, தலத்தின் பெயர் ஆகியன இடம் பெற்றுள்ளன. இம்முறையிலேயே தொடர்ந்து, நாவுக்கரசர் வரலாற்று முறைப்படி, தேவாரப் பதிகங்களின் அடைவு அமைக்கப்பட்டுள்ளது. அப்பர் பதிகம் பாடியதாகச் சேக்கிழாரால் கூறப்பெற்றுக் கிடைக்காத அம்பர், ஆரூர் போன்ற இருபது தலங்கள் அடைவு செய்யப்பட்டுள்ளன. அன்றியும், சேக்கிழாரால் குறிக்கப்படாததும் அப்பர் பதிகத்தில் உள்ளதுமான நாற்பத்தாறு தலங்கள் தனியே அடைவு செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து சுந்தரர் தேவாரத்தின் வரலாற்று முறை அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து, திருத்தொண்டர்கள் தோன்றிய ஊர்கள் அடைவு செய்யப் பட்டுள்ளன. மேலும், முதல் எழு திருமுறைகளில் உள்ள பதிகங்களுக்கு உரிய பண்கள் பட்டியல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து, சம்பந்தர் பதிகம் மட்டும் பெற்ற ஊர்கள்; அப்பர் பதிகம் மட்டும் பெற்ற ஊர்கள்; சம்பந்தர், சுந்தரர் பதிகம் பெற்ற ஊர்கள்; சம்பந்தர், அப்பர் பதிகம் பெற்ற ஊர்கள்; நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இருவர் பதிகங்களே பெற்ற ஊர்கள் அடைவு செய்யப்பட்டுள்ளன. பதிகம் பெற்ற 274 இடங்களில் மூவருள் ஒருவர் பாட்டில் அருளிய ஊர்கள் தனியே அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் தேவாரவைப்புத் தலங்களின் அகரவரிசைப் பட்டியல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றினின்றும், இம்மலர் முழுக்க முழுக்கப் பலவகைத் தொகுப்புகளால் ஆனது என அறியலாம். இத்தகு தொகுப்புப் பணிக்கு மிகுதியான உழைப்பும், காலமும், பொறுமையும் இன்றியமையாதன. இத்தகு தொகுப்பால் விளையும் பயனும் கூடுதலானது. எனவே, இம்மலர் அளவால் மிகவும் சிறியதாயினும், தமிழுக்குப் பயனுள்ள வரவு எனக் கொள்ளலாம். தமிழியல் ஆய்வு, பலவாறு பரந்தும் விரிந்தும் செல்லும் இந்நாளில் அவற்றுக்கு உதவவல்ல இத்தகு தொகுப்பு நூல்கள் மிகவும் தேவையானவையாகும்.

—உ வ ஜெயதேவன்

8. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம் நூன்மரபு

(உரை வளம்) (பதி) ஆ. சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

இந்நூல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினுடைய 'தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின்' இரண்டாவது வெளியீடாகும். தொல்காப்பியத்துக்குக் கிடைக்கும் உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒவ்வோரியலுக்கும் ஒரு நூல் வெளியிடுவது பயன் தரத்தக்க முயற்சியாகும். இந்த வகையில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன் மரபு உரைவளத்தில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர், வே. வேங்கடராசுலு ரெட்டியார், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, க. வெள்ளைவாரணன் ஆகியோரது உரைகள் இந்நூலில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோரின் உரைகளையும் பெயர் அறியப்படாத பழைய உரைகாரரின் உரையையும் தொகுத்து வி. ஐ. சுப்பிரமணியமும், ஆபிரகாம் அருளப்பனும் 1963-இல் தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கோவை (முதற்பாகம்) என்ற பெயரில் வெளியிட்டனர். இதனுள் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய நான்கியல்கள் அடங்கியுள்ளன. இதன் இரண்டாவது பாகம் பின்னர் வெளிவரவில்லை. இந்த வகையில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ள முயற்சி பல வகைகளில் பயன் நல்குவது.

நூன்மரபு உரைவளத்துக்கு வை. இரத்தினசபாபதி ஆராய்ச்சி முன்னுரை வழங்கியுள்ளார். அவரது முன்னுரையைத் தொடர்ந்து சிறப்புப்பாயிரம், நூன்மரபு நூற்பாக்கள் ஆகியவற்றுக்குச் சி. இலக்குவனார், கமில் சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அமைந்துள்ளன. அடுத்து நூன்மரபின் ஒவ்வொரு நூற்பாவும் அவற்றுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர், வே. வேங்கடராசுலு ரெட்டியார், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, க. வெள்ளைவாரணன் என்ற வரிசை முறையில் அவர்களது உரைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மூல பாட வேறுபாடும் இடையில் சுட்டப்பட்டுள்ளது. இவ்வுரைகளைத் தொடர்ந்து பதிப்பாசிரியரின் ஆராய்ச்சி உரையும் சேர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. மாத்திரையின் அளவாக 'நொடித்தலிற் பிறக்கும் ஓசை எழும் கால அளவையே கொள்ளுதல் சிறப்பு' என்பது போன்ற கருத்துகள் சிந்தனைக் குரியன. நூற்பாக்களின் உரைமுடிவில் 'குறிப்பு', 'பிறகுறிப்புகள்' ஆகிய தலைப்புகளில் தரப்படும் செய்திகள் பயன் நல்குவன.

நூலின் இறுதிப் பகுதியில் உள்ள 'உரைச்சொற்றொடர் விளக்கம்' உரையாசிரியர்களின் உரைத்தொடர்களுக்கு விளக்கம் கூறுகிறது. நூன்

ரபு நூற்பாக்களுக்கு ஒப்புமையுள்ள பிற இலக்கண நூல்களின் நூற் பாக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இது ஒப்பு நோக்கிப் பயிலவும் ஆராயவும் விரும்புவார்க்குத் தக்க துணையாகும். பயன்படுத்தப்பட்ட நூல்களும் ஒப்புநோக்கப்பட்ட பதிப்புகளும் பற்றிய குறிப்பு அடுத்துத் தரப்பட்டுள்ளது. இதில் மழவை மகாலிங்கையர் பதிப்பின் ஆண்டு சகாப்தம் 1775 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறப்புப்பாயிரத்தின் உரை வளமும் இவ்வாறே குறிப்பிடுகிறது. சகாப்தம் 1770 என்பதே (கி.பி. 1848) சரியான ஆண்டாகும். 'நூன்மரபு தொடர்பாகக் கிடைக்கும் கட்டுரைகள் ஆய்வாளர்க்குப் பயன்படுவன,' என்னும் தலைப்பில் 15 கட்டுரைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இத்தொகுப்பு முழுமையானது அன்று. சொல்லகராதியும், நூற்பா முதற்குறிப்பகராதியும் குறிப்பு நோக்கீட்டுக் கருவிகளாகப் பயன்படும் வண்ணம் அமைந்துள்ளன.

முழுமையாகப் பார்க்குமிடத்து இந்நூல் ஆராய்ச்சிப் பதிப்பாகவும் ஆராய்ச்சிக்குப் பல நிலைகளில் பயன்படுவதாகவும் அமைந்துள்ளது.

—கோ. கிருட்டிணமூர்த்தி.

9. பாரதியாரும் தமிழ்ப்புலவர்களும்

பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1981, ரூ. 10, பக், 211.

பாரதி திறனாய்வாளராக விளங்கும் திரு. பெ. சு. மணி அவர்கள் இந்நூலில், பாரதியாரோடு தொடர்பு கொண்ட தமிழறிஞர்களைப் பற்றியும் அக்காலத் தமிழ்ச்சூழலைப் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றார். நூலின் தொடக்கத்தில் பாரதிக்கு முன் இருந்த தமிழ்ப்புலவர்களின் நிலையினைத் தொகுத்துக் காட்டியிருப்பது ஒரு வரலாற்றுப் பார்வையாக விளங்குகின்றது. 18 19 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்மொழி பெற்றிருந்த தேக்கத்தை நீக்குவதற்குப் பாடுபட்ட தென்னாட்டுத் தமிழ்ச்சங்கம், திராவிட பாஷா சங்கம், மதுரைத்தமிழ்ச் சங்கம் முதலானவற்றின் தமிழ்ப்பணிகளையும் தமிழ்மொழி வளர்வதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டி அவற்றின் கொள்கைகளையும் நன்கு எடுத்துரைத்துப் பாரதிக்கு முன்னர் விளங்கிய தமிழ் உணர்ச்சியின் நிலையை இந்நூலில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றியும் அதன் பெரும் புலவர்களைப் பற்றியும் அவர்களுடைய பணிகளைப் பற்றியும் பாரதியார் பாராட்டியுள்ளார். 'மிஸ்டர் பாண்டித்துரைத் தேவர் அவர்களும் பிறரும் மதுரையிலே தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று யோசித்தது மிகவும் நேர்த்தியான யோசனை...மதுரைச்சங்கம் ஒரு தமிழ் யூனிவர்சிடியாக வளர்ச்சி பெற வேண்டியதே நமது நோக்கம். அதற்கு ஸயன்ஸ் பகுதி, சரித்திர ஆராய்ச்சிப்

பகுதி, கணிதப்பகுதி முதலிய எத்தனையோ பகுதிகள் ஏற்பட வேண்டும்' என்று 1906-இல் பாரதி கண்ட கனு இப்பொழுது தஞ்சையில் உருவாகி மலர்ந்துள்ளது. பாரதி ஒரு தீர்க்கதரிசி என்பது இதனுலும் புலனுகின்றது.

பழைய மரபினைப் பாரதி போற்றிப் புகழ்ந்திருந்தாலும் தமிழுக்கு இடையில் உற்ற கேட்டினைப் பாரதியார் சுட்டிக் காட்டித் தமிழ்மொழி புதிய உயிர்ப்புச் சக்தியைப் பெறவேண்டும் என்பதில் பேரார்வம் காட்டினர். தமிழுக்கு மறுவாழ்வு அளித்தவர்களுள் தலைசிறந்தவர் பாரதியார். ''புனர் ஜென்மம்'' என்னும் அவருடைய கட்டுரையில் தமிழ்ப்புலவர்கள் பின்பற்ற வேண்டிய நடையினைப்பற்றிக் குறிப்பிடுவார். 'புதிய வழியில்' தமிழின் ஆற்றலை விளக்க வந்த இரு பேரறிஞர்களுக்கும் ஆதரவு கிடைக் காதது குறித்து வருந்துகின்ருர். பி. ஆர். இராஜமையர், மகேசகுமார் சர்மா ஆகிய இருவருக்கும் உரிய ஆதரவு கிடைக்காதது குறித்து வருந்திப் பின்வருமாறு எழுதுகின்ருர். 'காலஞ் சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க்கதை எழுதுவதில் உண்மையான திறமையைக் காட்டியிருக்கிருர். அவருக்குத் தகுந்த சம்மானமில்லை. ஆதலால் அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக்கொண்டு போக இடமில்லாமல், ஆரம்பத்திலேயே கைவிட்டு, இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார்' என்று புதிய முறைகளுக்குத் தமிழ்நாட்டார் ஆதரவு அளிக்காதது குறித்து வருந்துவார்.

அவ்வாறே மகேசகுமார் சர்மா (மாம்பாக்கம் குப்புசாமி)வின் ஆற்றலையும் தமிழ்நாட்டார் பயன்படுத்திக் கொள்ளாதது குறித்து வருந்து கின்ருர். 'இவருடைய கல்வியையும், அறிவுத் தெளிவையும், ரஸிகத் தன்மையையும் தமிழ்நாட்டாருக்குப் பலமுறை நன்கு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டியிருக்கிருர்...இப்படிப்பட்ட பண்டிதர்களைத் தமிழ்நாட்டார் போதியபடி ஆதரவு செய்து அவர்களை வேறு ஸாதாரணப் பிரவிருத்தி களில் மனம் செலுத்தாதபடி காத்துக் கொள்ளவில்லையென்ற குறை என் மனதிலிருக்கிறது'' என்னும் பாரதியின் கூற்ருல் தமிழ்மொழியை வளர்ப்பதற்குரிய நெறிகளில் தமிழர் ஈடுபடாதது குறித்த ஏக்கம் நன்கு புலப்படும்.

பல புதிய சோதனைகளைத் தம்முடைய படைப்புகளால் உண்டாக்கு கின்ருர். 1910-இல் 'கனவு' என்னும் தலைப்பில் அமைந்த சுயசரிதைப் பாடல்கள் நூலுக்கு அவர் தரும் முகவுரை வருமாறு: 'இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்ப மளிக்கக் கூடியதானுலும் பதர் மிகுதியாகக் கலந்திருக்கக்கூடும். இதன் இயல்பு தற்கூற்றெனப்படும். அதாவது கதாநாயகன், தன் சரிதையைத் தானே நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது. இஃது தமிழறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத் தக்கதுதானு என்று பார்க்கும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் பதிப்பிடுகிறேன். இதனைப் பதம் பார்த்து மேலோர்கள் நன்றென்பாராயின் இவ்வழியிலே வேறு பல வெளியாக்குவேன்' என்னும் கூற்று புதிய சோதனைகளில் விழைந்த அவர் தமிழ்உள்ளத்தைக் காட்டும்.

இங்ஙனம் இலக்கிய வடிவத்திலும், பாடுபொருளிலும் பல்வேறு புதுமைகளைக் கொணர்ந்து தமிழுக்குப் புதிய திருப்பத்தை அளித்தவர் பாரதியார் என்பதை மேலும் பல சான்றுகள் மூலம் நிறுவுகின்றார் இந்நூலாசிரியர்.

புதுமை நலம் விழைந்த மரபு வழித் தமிழ்ப்புலவர்களையும் போற்றிப் புகழ்ந்தவர். பாரதியார் வாழ்ந்த காலத்தின் முற்பகுதியில்தான் சங்க நூல்களைப் பற்றிய அறிமுகத்தை அறிஞர்கள் தொடங்கிவைக்கின்றனர். அப்பொழுதே உள்ளந்திறந்து பாராட்டிப் பெருமகிழ்வெய்துகின்றார் பாரதி: "1800 வருஷங்களுக்கு முன்பாகவே இத்தனை பெருங்குணங்கள் வாய்க்கப் பெற்றிருந்த நாகரிக நாட்டிலே, இவ்வளவு உயர்வு கொண்டிருந்த பெரியோரின் சந்ததியிலே, இவர்கள் நடையிலும் செய்கையிலும் நிகரில்லாது கையாண்டு வந்த தமிழ்ப்பாஷையைப் பேசும் பெருங்குடியில் நாம் பிறந்திருக்கிறோம் என்பது அரிய மகிழ்ச்சியுண்டாக்குகிறது' என்று 1907-இல் 'இந்தியா' இதழில் தலையங்கமாகவே எழுதி மகிழ்ந்தவர் பாரதி.

தமிழ்ப்புலவர்களுள் ஔவையாரைப் பெரிதும் போற்றியவர் பாரதியார். 'மற்ற செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீண்டும் சமைத்துக் கொள்ளவல்லது. ஔவைப்பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதப்பட மாட்டோம். அது மட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்' என்று ஔவையார் நூல்களைப் பெருஞ்செல்வமாகக் கருதியவர். பெண்கல்வியில் பெரிதும் ஈடுபாடு கொண்ட பாரதி ஔவையாரைப் போற்றியதில் வியப்பில்லை. பாரதி ஔவையாரின் நூல்களைப் போற்றிய தற்கான காரணங்களையும் இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையும், மகாகவி பாரதியாரும் தமிழ் நாட்டின் வரலாற்றுப் போக்கில் இருவகை நெறிகளில் தமிழகத்தில் விழிப் புணர்ச்சியை ஊட்டியவர்கள் என்னும் கருத்தையும் அவ்விருவரின் அணுகு முறைகளைப் பற்றியும் இந்நூல் நன்கு எடுத்துரைத்துள்ளது. பாரதியார் தொல்காப்பியத்தைப் பற்றிக் கூறிய கருத்தின் அடிப்படையில் நூலாசிரியர் நடுநிலை தவறாது ஆராய்ந்து, 'பாரதியார் தொல்காப்பியப் பயிற்சி பெற முடியாத காரணத்தால் தமிழ் இலக்கணத்தின் தனித்தன்மையை, வட மொழிச்சார்பகன்றதைப் பற்றித் திட்டவட்டமாகத் தெளிவுபடச் சாற்ற முடியாமற்போயிற்று' என்று எழுதுவது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். 'பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்று பெரும்புலவர் அல்லர் பாரதியார்; ஆனால் பாரதியார் கவித்திறம் பேராசிரியரின் பெரும் புலமைக்குமேலே ஒளி வீசுகிறது. சுந்தரம்பிள்ளையின் பெரும்புலமை பழமைக்கும், புதுமைக்கு மிடையே ஓர் எல்லைக்கல்லாகத் திகழ்கிறது. பாரதியார் கவித்திறம் பழமையினின்றும் முற்றிலும் விடுதலை பெற்றது' என இருவர்தம் பெருமையையும் ஒப்பு நோக்குகின்றார் ஆசிரியர்.

தமிழறிஞர் உ. வே. சாமிநாதையரைப் பாராட்டி வாழ்த்துப்பா வழங்கியவர் பாரதியார். சென்னையில் உ. வே. சாமிநாதையரும், பாரதியாரும் ஒருவரோடொருவர் கலந்து பேசித் தமிழின்பம் துய்த்திருக்கின்றனர். 'மகாமகோபாத்தியாய'பட்டம் பெற்ற உ.வே. சாமிநாதையரை உளநிறைவோடு வாழ்த்தியுள்ளார். அவ்வாறே சாமிநாதையரும் பாரதியின் கவிதைகளையும், வசனநடையையும் பாராட்டிப் பேசியுள்ளார். உ. வே. சா. முதன் முதலில் (1894) புறநானூற்றை அச்சிட்டு வெளிக்கொணர்ந்ததும் பாரதியார் புறநானூற்றுச் சிறப்பை எடுத்து விரித்துரைப்பது அவர்தம் இலக்கிய அணுகு முறையைக் காட்டும். அது வருமாறு: 'புறநானூறு' என்னும் அரிய தமிழ் நூல் எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்கு முன் தொகுக்கப்பட்டது. பின்னிட்ட நூல்களைப் போலப் புராணக் கதைகளை விரிக்கும் தன்மையுடைதில்லை. அக்காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலைமையையும், தமிழ் மன்னர்கள் செய்த போர்களையும் இன்னும் பல இலக்கியச் செய்திகளையும் விளக்கிக் கூறுவது' எனப் பாரதி புறநானூற்றில் புதிய செய்தியைக் காண்பார். இக்குறிப்புகளையெல்லாம் நூலாசிரியர் மிக நுட்பமாக எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

பாரதியார் அக்காலத்தில் தமிழ்ப்புலவர்களிடத்து எதிர்பார்த்தவைகள் எவை எவை என்பதை அடுத்த கட்டுரை ஆராய்கின்றது. முதன் முதலாகத் தமிழையும் தேசியத்தையும் ஒன்றுபடுத்த விரும்பிய விழைவு அவருடைய எழுத்துக்களால் புலனாகின்றது. மு கந்தசாமிக் கவிராயர் அவர்கள் 1906-இல் விவேகபாநு' இதழில் 'வந்தே மாதரம்' எனும் தேசிய முழக்கத்தின் பெருமைகளை விளக்கிக் கவிதை ஒன்றினை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து சோழவந்தான் அ. சண்முகம்பிள்ளை அவர்கள் பாரததேவியைப் பாடுகின்றார். சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் சுதேச முயற்சியைப் பற்றி எழுதிய கட்டுரையினைப் பாராட்டி எழுதுகின்றார். அவ்வாறே மறைமலையடிகள், மு. இராகவையங்கார், ம. கோபால கிருஷ்ணையர், விருதை சிவஞானயோகிகள், வையாபுரிப்பிள்ளை, திரு வி. க. பாரதிதாசன் முதலான தமிழறிஞர்கள், பாரதியாரோடு கொண்ட தமிழ்த் தொடர்பையும் நட்புறவையும் காட்டும் அரிய செய்திகள் இந் நூலில் உள. ஆசிரியர் மிக முயன்று பல வரலாற்றுத் தொடர்பான செய்திகளைச் சேகரித்துத் தந்துள்ளார். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்னும் தனி ஆய்விற்குரிய கவிதை பற்றிய தோற்றமும், அது பரிசுபெறத் தவறியதன் காரணம் என்ன என்பதையும் சுவைபடத் தந்துள்ளார் ஆசிரியர். 'பாரதியும் பிற இந்தியக் கவிஞர்களும்' என்னும் பிற்சேர்க்கையும் நூலுக்குத் தனிச்சுவையைச் சேர்க்கின்றது.

தமிழறிஞர்கள் பாரதியாரோடு கொண்ட தொடர்பை இன்று அறிந்து கொள்வதற்குத் தக்கவாறு செய்திகளைப் பழைய நூல்களினின்றும் அரிதின் முயன்று திரட்டி ஆய்வு நடத்திய ஆசிரியரின் முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது. இப்பதிப்பில் ஏற்பட்டுள்ள அச்சுப்பிழைகளை அடுத்த பதிப்பில் தக்கவாறு திருத்திப் பதிப்பிப்பது மிக இன்றிமையாததாகும்.

—இ. சுந்தரமூர்த்தி

10. கந்தர் அலங்காரம்

உரையாசிரியர்: வித்துவான், ச. ரா. கச்சபேசுவரன், எம்.ஏ., முருகன் அருள்பதிப்பகம் 11, சீநிவாசராகவன் ரோடு, சீநிவாசநகர், சென்னை-600 033, விலை ரூ 4-75; பக். 168, 1980.

குன்றுதோறாடும் குமரப்பெருமானின் புகழைச் சந்தப்பாக்களால் பாடிப் பெருமை பெற்றவர் அருணகிரிநாதர். இப்புலவர் பெருமான் அருளிய நூல்களுள் கந்தரலங்காரமும் ஒன்று. இவர்தம் பாடல்களில் உலகியலையும் பிறர் வாக்கிலே காணாத அரிய கருத்துகளையும் காணலாம் என்பர். ஆண்டவனைச் செவிக்கினிய, சிந்தைக்கினிய, வாய்க்கினிய திருப்புகழ்களால் பாடி அவனது பேரருட்டிறத்தை உலகத்திற்கு உணர்த்தியவர் அருணகிரிநாதர்.

அடியார்களால் நாளும் வழிபாட்டில் பயன்படுத்தப்பெறும் கந்தரலங்கார நூலிற்குத் தமிழறிஞரும், முருகனின் பேரருளைப் பெற்றவருமான தமிழ்ப் பேராசிரியர் திரு. ச. ரா. கச்சபேசுவரன் அவர்கள் அரிய உரை விளக்கம் தந்து பதிப்பித்துள்ளார். இதற்கு முன்னர் கந்தர் சஷ்டி, கந்தர் அநுபூதி, திருமுருகாற்றுப்படை, திருச்செந்தூர்க் கலிவெண்பா முதலிய வேறுபல நூல்களையும் தமிழ்ச் சமய உலகிற்கு இவர் உரையோடு வழங்கியுள்ளார்.

கந்தர் அலங்கார உரைவிளக்கத்தில் உரையாசிரியரின் தெளிந்த அறிவும், தோய்ந்த அனுபவநிலையும், சமய நூல்களில் பெற்ற பயிற்சியும் நன்கு புலனாகின்றன. எளிய நடையில் ஒவ்வொரு பாடலுக்கும் பொருளும், பின்னர் உரைவிளக்கமும், அரிய தத்துவ விளக்கங்களும் தந்துள்ளார். 'வள்ளி—நாயகியாரைத் திருமணம் செய்து கொண்டது, சீவான்மா பக்குவ நிலையடையும் காலத்திலே இறைவனே அதனை ஆட்கொள்ளு கின்றான் என்னும் தத்துவத்தைக் குறிப்பது ஆகும்' எனப் பாடலின்கண் உள்ள தத்துவப் பொருளைப் புலப்படுத்துவார் (பக். 11). இவ்வாறு ஏறத்தாழ ஒவ்வொருபாடலுக்கும் தத்துவவிளக்கம்கண்டு பொருளுரைப்பது நூலின் நுட்பத்தைக் காண்பதற்குப் பெருந்துணையாக அமைகின்றது.

ஒவ்வொரு பாடலின் விளக்கவுரையிலும் கருத்து விளக்கத்திற்காகப் பல்வேறு இலக்கியங்களினின்றும் மேற்கோள்கள் காட்டி விளக்குவது உரையினை மேலும் புரிந்துகொள்வதற்குத் துணையாக அமைகின்றது; 'நிலையற்ற மனத்தைத் தடுத்து அடக்கி நிறுத்தலும், கோபமின்மையும் எந்நாளும் தருமஞ் செய்வதும், நன்னெறியில் ஒழுகி அந்நிலையில் திரியாது இருத்தலும் முருகப்பெருமான் திருவருட் பேறு பெறற்கு உபாயமாம்' என்று 16-ஆம் பாடலுக்கு விளக்கவுரை தந்தபின் அதற்கு இணையாகப் பின்வரும் குறட்பாக்களையும் எடுத்துக்காட்டுகின்றார்:

"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்" (360)

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" (124)

என்னும் குறட்பாக்களின் கருத்தும் காண்க" என்று எழுதுவார்.

இங்ஙனம் இவர் உரைவிளக்கத்திற்காக எடுத்துக்காட்டும் நூல்களும், தத்துவ விளக்கங்களும், இறையனுபவம் சார்ந்த உரைகளும், ஆராய்ச்சித் திறன் மிக்கனவாக அமைந்துள்ளன.

இறைத் தொண்டு ஒன்றினையே முதன்மைப் பொருளாகக் கொண்டு எளியவிலையில் கந்தரலங்கார நூலினை ஆய்வு நோக்கில் உரைவிளக்கத் தோடு தந்துள்ள ஆசிரியரின் பணி பெரிதும் பாராட்டிற்குரியது.

—இ சுந்தரமூர்த்தி

11. பேரும் பெருமையும்: பெயராய்வுக் கட்டுரைகள்

மா. நயினர், சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில், 1982, பக். 120, ரூ. 12.

பெயராய்வு என்பது மொழியியல், வரலாறு, சமூகவியல் போன்ற வற்றின் பகுதியாய் அமைந்திருந்தது. இப்போது இது முன்னேறிய மேலை நாடுகளில் தனித்துறையாக வளர்ந்து விளங்குகிறது. தமிழில் இத்துறையில் மிகச் சிலரே ஆர்வம் காட்டியுள்ளனர். அவர்களுள் சேதுப் பிள்ளை, துரைஅரங்கசாமி, வி. ஐ. சுப்பிரமணியம், நாச்சிமுத்து முதலி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வரிசையில் நயினாரும் சேர்க்கத்தக்கவர் என்பதைப் பேரும் பெருமையும் உறுதி செய்கிறது.

இந்நூல், வரலாறு, பெயர் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் பத்தின் தொகுப்பாகும். முதல் இரண்டு கட்டுரைகள் சுசீந்திரம் கல்வெட்டுகள் பற்றியவை. கல்வெட்டுகளின் இன்றியமையாமை, அவற்றின் தோற்றத் திற்கான காரணம், அவை கோயில்களில் பொறிக்கப்பட்டதற்குரிய காரணம், சுசீந்திரம் கோயில் கல்வெட்டுகளின் பதிப்பு, கல்வெட்டுகளின் பொதுவான அமைப்பு, சுசீந்திரம் கல்வெட்டுகள் வாயிலாக அறியப்பெறும் வரலாறு, பண்பாடு, மொழி குறித்த செய்திகள் ஆகியவற்றை முதற் கட்டுரை விளக்குகிறது. இரண்டாம் கட்டுரை, படியெடுக்கப் பெற்ற 125 சுசீந்திரம் கல்வெட்டுகளினின்றும் அறியலாகும் 200 இடப்பெயர்களின் பொது, சிறப்புக் கூறுகளை வகுத்தளிப்பதோடு, இப்பெயர்கள் வாயிலாகப் பெறப்படும் செய்திகளையும் நன்கு விளக்குகிறது.

அந்தணர்களுக்கு அளிக்கப்பெறும் இறையிலி நிலங்கள் பிரம்ம தேயங்கள் எனக் கூறப்பெறும். நாஞ்சில் நாட்டுப் பிரம்மதேயங்கள் பற்றி மூன்றாவது கட்டுரை அமைகிறது. மங்கலம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களில் இப்பிரம்மதேயங்கள் பலவும் விளங்கியமை, அவை கோயில் களுக்கு அண்மையில் அமைந்திருந்தமை, அவற்றின் பெயர் வடிவங்களின் வழக்கு வீழ்ச்சி, அவை அந்தணர்களுக்கே உரியவை என்ற நிலை கால வெள்ளத்தில் மாறியமை ஆகியவற்றை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். ஊர்ப்பெயர்கள் உற்ற மாற்றங்களையும், அம்மாற்றங் களுக்கான காரணங்களையும், பெயர் மாற்றம் குறித்த ஆய்வின் பயனையும் நான்காம் கட்டுரை புலப்படுத்துகிறது.

தமிழகத்தில் குடியேறிய ஆரியர்களின் தாக்குரவால் தமிழக ஊர்ப் பெயர்களில் ஏற்பட்ட மாற்றங்களையும், அப்பெயர்களில் அமைந்த வட மொழிக் கூறுகளையும் ஐந்தாம் கட்டுரை ஆய்ந்து காட்டுகிறது. அரபிக் கடலோரம் கோவளத்தை அடுத்துள்ள விழிஞம் பற்றி ஆறாவது கட்டுரை அமைகிறது. பண்டு ஒரு துறைமுகமாகவும், பின் ஆய் மன்னர்களின் தலைநகரமாகவும், மூவேந்தர்களின் படைக்களமாகவும் விளங்கிய விழிஞம் இன்று ஒரு செயற்கைத் துறைமுகமாக உருப்பெற்று வருவதை வரலாற்றுக் கண்கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது.

இதனைத் தொடர்ந்து ஆட்பெயர் குறித்த ஆய்வு மூன்று கட்டுரை களாக மலர்ந்துள்ளது. இக்கட்டுரைகள் வாயிலாக, ஆட்பெயராய்வின் இன்றியமையாமை, ஆட்பெயர் ஆய்வு முறையியல், ஆட்பெயராய்வின் பயன்கள், ஆட்பெயராய்வின் வரலாறு, ஆட்பெயரின் சிறப்பு, பெயரிடும் நேரம், சடங்கு முறை, பெயர் தேரும் முறை, பெயர் குறித்த நம்பிக்கைகள், பழந்தமிழ்ப் பெயர்கள், இக்காலப் பெயர்கள், அவற்றின் வகைப்பாடு ஆகியவற்றை ஆசிரியர் தெள்ளிதின் விளக்கியுள்ளார். இறுதிக் கட்டுரையில் அவர் தமிழில் நிறுத்தல் அளவைப் பெயர்கள் குறித்து நுண்ணிதின் ஆய்ந்துள்ளார்.

ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் உரிய இடங்களில் பின்னிணைப்புப் பட்டியல்களை அமைத்திருப்பது வரவேற்கத் தக்கது. அணிந்துரை என்பது இப்போதெல்லாம் வெறும் சடங்குரை எனக் கருதத்தக்க வகையில் பயனற்றதாகவே பல நூல்களில் காட்சியளிக்கிறது. இதற்கு விலக்காக, இந்நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள நாச்சி முத்துவின் அறிமுக உரை, நூற்பொருளையும், நூலையும், நூலாசிரி யரையும் படிப்போருக்குச் செவ்விதின் அறிமுகப்படுத்துகிறது.

தமிழ்ப் பெயராய்வுத் துறைக்கு இந்நூல் ஒரு நல்ல வரவு எனலாம். நூலடைவும், பொருளடைவும் இந்நூலின் ஈற்றில் இடம் பெற்றிருந்தால் இந்நூலின் பயன் மேலும் கூடியிருக்கும்.

—உ. வ. ஜெயதேவன்

CONNEMARA PUBLIC LIBRARY
14 FEB 1984

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	23	க. சிவத்தம்பி	கா. சிவத்தம்பி
7	25	,,	,,
29	14	தமிழ்த்தேனி	தமிழ்த்தேனீ
41	5	,,	,,
41	30	கவிரயாயரே	கவிராயரே
42	34	தாரசு	தராசு
45	2	வழக்கிலுள்ளும்	வழக்கினுள்ளும்
45	18	பேரன்ற	போன்ற
50	35	என்றும்	என்னும்
51	4	சேர்த்து	சேர்ந்து
55	8	வலிவுடை	வலிவடை
56	2	வினைவடிங்கள்	வினைவடிவங்கள்
57	12	பெயர்ச் சொற்களுடன் சேர்ந்து	பெயர்ச் சொற்களுடன் படு என்னும் வினைச்சொல் சேர்ந்து
58	26	எனவே	எனவோ
59	14	அமைதியைக்	அமைதியைச்
59	17	என்றும்	என்னும்
61	32	வினைச்சொவ்லும்	வினைச்சொல்லும்
63	34	என்பவற்கு	என்பதற்கு
65	3	ஒலிபரப்பு	ஒளிபரப்பு
65	12	என்றும்	என்னும்
65	28	வழக்குள்	வழக்குகள்
81	பக்கத் தலைப்பு	சிறுகதைகள	சிறுகதைகள்
83	18	மறைத்து	மறைந்து
83	22	இயைபபு	இயைபு
85	33	நோக்குத்	நோக்குந்
86	14	புவிபேணு	புவிபேணி
88	29	விளங்குகின்றார்	விளக்குகின்றார்
88	31	காணேன்	காணோம்
89	20	செய்திடலாமோ	கெய்திடலாமோ
90	4	ஓர்நிறை	ஓர்நிறை
90	4	ஓர்விலை	ஓர்விலை
97	11	அப்படையில்	அடிப்படையில்
108	21	எழுகின்றார்	எழுதுகின்றார்
119	14	இளை பெருமாள்	இளையபெருமாள்
120	4	சிலசிந்தனைகள்	சிலசிந்தனைகள்